# இயேசு கிறிஸ்துவின் மரணமும் உயிர்த்தெழுதலும்

வரலாற்று
அகழ்வாராய்ச்சி
கலாச்சார
மருத்துவ
புகைப்பட
ஆதாரங்களுடன்
வடிவமைக்கப்பட்டுள்ளது

சங்கை. செ. செல்வின் ஜினி

# இயேசு கிறிஸ்துவின்
# மரணமும்
# உயிர்த்தெழுதலும்

# இயேசு கிறிஸ்துவின் மரணமும் உயிர்த்தெழுதலும்

சங்கை. செ.செல்வின் ஜினி

**The Word of Truth Publication**
**Bangalore, India**

# The Death and Resurrection of Jesus Christ

# இயேசு கிறிஸ்துவின் மரணமும் உயிர்த்தெழுதலும்

by

**Rev. C. Selvin Jini**

Ist Print : March 2016 - 3000 Copies

Copy right © 2016 by Selvin Jini

*All rights reserved. No part of this book may be reproduced, distributed or transmitted in any manner whatsoever without the prior written permission of the publisher, except for the use of brief quotations in a book review.*

₹ **199**

Published by
The Word of Truth publication
Bangalore, India


**+ 91 9448928667**

**Rev. C. Selvin Jini**

**selvinjinioffice@gmail.com**

Printed at: **Aradhana Offset Printers,**
Kattathurai, India
Mobile: **09497103673**

# ஆசிரியர் உரை



இயேசு கிறிஸ்துவின் மரணமும் உயிர்த்தெழுதலும் என்ற புத்தகத்தின் மூலமாக உங்களை சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். வேகமாக ஓடிக் கொண்டிருக்கின்ற இந்த உலகத்தில், புத்தகங்களை படிக்க நேரம் இல்லாமல் போகிறதோ? என யோசிக்க தோன்றுகிறது. எதையும் நின்று அமர்ந்து சிந்திக்க நேரமில்லாத ஒரு காலக்கட்டத்தில் நாம் வசிக்கிறோம். ஆனாலும் நல்ல ஆவிக் குரிய புத்தகங்களை வாசிப்பதின் மூலம், நாம் சீரான ஒரு ஆவிக்குரிய வளர்ச்சியை பெற்றுக் கொள்ளலாம் என்பதில் மாற்றுக்கருத்து இல்லை. இன்றைக்கும் கூட பலகோடி ஜனங்கள் புத்தக பிரியராக இருப்பதைக் காணலாம்.

ஆவிக்குரிய புத்தகம் எழுதுவது மிகவும் கடினமான ஒரு ஊழியம் ஆகும். இதற்கு அதிகமான தேவகிருபை தேவைப்படுகிறது. எனது சிறுவயதிலிருந்தே புத்தகம் எழுத வேண்டும் என்ற ஆவல் எனக்குள்ளாக இருந்து வந்தது. இந்த வாஞ்சை தான் கிறிஸ்தவ இலக்கிய பணிக்குள் என்னைக் கொண்டுவந்துள்ளது. என்னுடைய வார்த்தைகள் ஒரு புஸ்தகத்தில் எழுதப்பட்டால் நலமாயிருக்கும் என யோபுவும் கூறியுள்ளார் (யோபு. 19:23, 24). தேவன் எனக்குக் கொடுத்த ஆலோசனையின் அடிப்படையிலும், வேதாகமத்திலிருந்தும் மற்றும் பல புத்தகங்களிலிருந்து தியானித்த செய்திகளையும் சேர்த்து இந்த புத்தகத்தை எழுதியுள்ளேன். இந்த புத்தகத்தை எழுதுகிறதற்கு ஏறக்குறைய 1000 மணி நேரத்துக்கும் அதிகமாக வேதத்தையும், இதர ஆதாரங்களையும் ஆராய்ந்து படிக்க தேவன் கிருபை செய்தார்.

வேதத்தை வெறுமனே படிப்பதற்கும் அதன் வரலாற்று கலாச்சார பின்னணியத்தை அறிந்து படிப்பதற்கும் மிகப்பெரிய வித்தியாசங்கள் உண்டு. ஆகவே இந்த புத்தகத்தில் பல வரலாற்று கலாச்சார அகழ்வாராய்ச்சி மருத்துவ மற்றும் புகைப்பட ஆதாரங்களை குறிப்பிட்டுள்ளேன். இதிலுள்ள செய்திகள் வேத தியானத்திற்கும் வேத பாட வகுப்புகளுக்கும், வேதாகம கல்லூரியில் பயிலும்

மாணவர்களுக்கும் மற்றும் போதகர்களுக்கும் மிகவும் பயனுள்ளதாய் இருக்கும் என நம்புகிறேன்.

எனது 15-வது வயதிலேயே முழுநேர இறைபணிக்காக என்னை முழுவதுமாக ஈடுபடுத்திக் கொண்டேன். தற்பொழுது என்னுடைய 20 வருட ஊழியத்தின் நிறைவில் இப்புத்தகத்தை வெளியிடுவதில் பேரானந்தம் கொள்கிறேன். கடந்த காலங்களில் எல்லாம் தேவன் என்னை அற்புதமாக நடத்தி வந்துள்ளார். Southern Asia Bible College, Bangalore-ல் படிக்கவும், தற்பொழுது Peniel A.G. Church Bangalore-ல் போதகராக சேவை செய்யவும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து என்னை பெலப்படுத்தி வருகிறார்.

தேவன் எனக்கு கொடுத்த மனைவி **Shyni Selvin** மற்றும் எனது மகன்கள் **S.S. Sherwin & S.S. Shelton** ஆகியோருக்காகவும் கர்த்தரைத்துதிக்கிறேன். இந்த புத்தகத்தில் வாழ்த்துரை எழுதிய அருமையான போதகர் **T.J.** பென்னி அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியை தெரிவிக்கிறேன். இந்த புத்தகம் வெளிவருவதற்கு ஜெபித்து உதவிய எனது திருச்சபை விசுவாசிகளுக்கும், நண்பர்களுக்கும் மற்றும் குடும்பத்தினருக்கும் நன்றிகளை தெரிவித்துக்கொண்டு, எனது ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் பொற்பாதங்களில் இந்த புத்தகத்தை அர்ப்பணிக்கிறேன்.

கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

அன்புடன்

**செல்வின் ஜினி**

# வாழ்த்துரை

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே,

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் என் அன்பின் வாழ்த்துக்கள்.

"இயேசு கிறிஸ்துவின் மரணமும் உயிர்த்தெழுதலும்" என்ற புத்தகத்தை வெளியிடும்படி ஆண்டவர் பாஸ்டர். C. செல்வின் ஜினி அவர்களுக்கு கொடுத்த தரிசனத்திற்காக நான் முதலாவது ஆண்டவருக்கு நன்றி கூறுகிறேன். மேலும் பாஸ்டர். C. செல்வின் ஜினி அவர்கள் எடுத்த இந்த முயற்சிக்காக அவரையும் பாராட்டுகிறேன்.

இந்த புத்தகம் அநேக ஊழியர்களுக்கும் விசுவாசிகளுக்கும் மிகவும் பிரயோஜனமுள்ளதாக இருக்குமென்பதில் சந்தேகமில்லை. பல ஊழியர்களும், அது போல விசுவாசிகளும் வேத அறிவு குறைவுடன் வாழும் ஒரு காலத்தில் நாம் வாழ்ந்துக் கொண்டிருக்கிறோம். பல ஊழியர்கள் வேதத்தை குறித்த சரியான அறிவில்லாமல் வியாக்கியானம் செய்து வருகிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு இப்புத்தகத்தின் விளக்கவுரை மிகவும் பிரயோஜனமாக இருக்கும் என நான் நம்புகிறேன்.

இப்புத்தகத்தில் இயேசு கிறிஸ்துவின் மரணமும் உயிர்த்தெழுதலும் என்னும் செய்தி மிகவும் விளக்கமாக விவரிக்கப்பட்டுள்ளது. கிறிஸ்தவத்தின் மிகவும் பிரதானமான உபதேசமும், மனுக்குலத்தின் இரட்சிப்புக்கு காரணமாக இருப்பதும் இந்த செய்தியாகும். ஆதலால் இதை வாசிக்கும் அனைவரும் அறிவுக்காக மட்டுமல்லாமல், ஜெபத்தோடு இப்புத்தகத்தை வாசிப்பார்களாகில் நிச்சயமாக இது தங்களது தனிப்பட்ட இயேசுவோடுள்ள அன்பும் உறவும் பெருகுவதற்கும் காரணமாக இருக்கும் என்னும் நம்பிக்கையுடனும் ஜெபத்துடனும் எனது வார்த்தைகளை சுருக்குகிறேன்.

போதகர் C. செல்வின் ஜினி அவர்களை இன்னும் அநேக இப்படிப்பட்ட நூல்கள் எழுதவும் வெளியிடவும் ஆண்டவர் உதவுவாராக என வாழ்த்துகிறேன்.

**Rev. T.J.Benny**
Asst. Superintendent of **CDSIAG**

# முன்னுரை

நாங்களோ சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறோம் என அப்போஸ்தலனாகிய பவுல் கூறியுள்ளார் (1 கொரி. 1:23). கிறிஸ்தவத்தின் அஸ்திபாரமே இயேசு கிறிஸ்துவின் மரணமும் உயிர்த்தெழுதலும் தான். ஆகவே தான் இயேசு கிறிஸ்துவின் ஊழியத்தின் கடைசி நான்கு நாள்களிலும் நடந்த நிகழ்வுகளை மட்டுமே, அதாவது பஸ்கா முதல் பரமேறுதல் வரையுள்ள நிகழ்வுகளை இந்த புத்தகத்தில் எழுதியுள்ளேன். இயேசு கிறிஸ்துவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதலை குறித்து எத்தனையோ புத்தகங்கள் பல்வேறு எழுத்தாளர்களால் எழுதப்பட்டிருக்கும் நிலையில் இந்த புத்தகம் தேவையான ஒன்றா? என ஒருவேளை கேள்விகள் எழும்பலாம். ஆனால் இந்த புத்தகம் நிச்சயமாக அவைகள் எல்லாவற்றிலும் இருந்து மாறுபட்டதாய் இருக்கும் என நம்புகிறேன். ஏனெனில் இந்த புத்தகம் வரலாற்று ஆதாரங்களுடனும், கலாச்சார பின்னணியத்துடனும், அகழ்வாராட்சி தகவல்களுடனும், மருத்துவ உண்மைகளுடனும் மற்றும் புகைப்பட தொகுப்புகளுடனும் எழுதப்பட்டுள்ளது.

மேலும் "யார் இந்த" என்ற தலைப்பில் இயேசுவின் சிலுவை மரணத்தோடு தொடர்புடைய பத்து முக்கியமான நபர்களுடைய வாழ்க்கை தொகுப்புகள் மிக சுருக்கமாகவும் தெளிவாகவும் எழுதப்பட்டுள்ளது. பல நேரங்களிலும் வேதாகமத்திலுள்ள சிறிய காதாப்பாத்திரங்களை குறித்து நாம் ஆழமாக படிக்காமல் விட்டுவிடுவதுண்டு. ஆனால் இந்த தொகுப்புகள் மூலம் அவர்களது வாழ்க்கையை குறித்தும் அவர்கள் இயேசுவுக்காக எதை செய்தார்கள் என்பதை குறித்தும் அறிந்து கொள்ள முடியும். இந்த புத்தகம் பதிமூன்று அதிகாரங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. வேதத்தில் சிலுவையில் அறையப்பட்ட திருடர்கள், பிலாத்துவின் மனைவி, நூற்றுகதிபதி போன்ற பல கதாபாத்திரங்களின் பெயர்கள் கூறப்படவில்லை. ஆனால் அவைகளை சரித்திர குறிப்புகளில் பார்க்க முடியும். அவர்களின் பெயர்களை தெரிந்துக் கொள்வது நமக்கு நன்மை பயக்கும், எனவே அவைகளை நான் இந்த புத்தகத்தில் எழுதியுள்ளேன்.

இன்று அநேகர் செழிப்பின் உபதேசத்தை குறித்து மட்டுமே பிரசங்கிக்கும் போது, சிலுவையின் உபதேசத்தை குறித்து எழுதுவதற்காக நான் முன்வந்ததற்கான காரணம் என்னவென்றால், இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தின் மூலம் மட்டுமே நாம் சுத்திகரிக்கப்பட முடியும் என்பதேயாகும். நாம் கிறிஸ்துவோடு கூட சிலுவையில் அறையப்பட்டோம், அடக்கம் பண்ணப்பட்டோம், அவரோடு உயிர்த்தெழுந்தோம் என்பதே நமது விசுவாச அறிக்கையாக வேண்டும். இயேசு கிறிஸ்து உயிர்த்தெழவில்லை என சில வேதபுரட்டர்கள் மூலம் தவறான கொள்கைகள் தற்போது பரப்பப்படுகிறது. அப்படிப்பட்ட தவறான கொள்கைகளுக்கு வேதத்திலிருந்து சிறந்த பதிலை 13 ஆம் அத்தியாயத்தில் தொகுத்து எழுதியுள்ளேன்.

இயேசுகிறிஸ்து தமது மரணத்தின் மூலம் பாவத்தை ஜெயித்தார்; தமது உயிர்த்தெழுதல் மூலம் மரணத்தை ஜெயித்தார் என்பது இப்புத்தகத்தின் சாராம்சமாகும். மனிதன் நிலவில் கால்பதித்தது தான் வரலாற்றில் சிறந்த நிகழ்வாக கூறப்படுகிறது, ஆனால் தேவன் இந்த பூமியில் கால் பதித்து நமக்காக மரித்து அடக்கம் பண்ணப்பட்டு உயிரோடு எழுந்தது தான் தலைசிறந்த நிகழ்வாக வேதம் கூறுகிறது. அதை குறித்த ஆழமான மற்றும் தெளிவான விளக்கங்கள் தான் இந்த புத்தகத்தில் தொகுக்கப்பட்டுள்ளது.

இந்த புத்தகத்தை வாசித்து, தியானித்து தேவனுடைய ஆசீர்வாதங்களை பெற்றுக் கொள்ளுங்கள் என நான் உங்களை மனதார வாழ்த்துகிறேன்.

■■■

# பொருளடக்கம்


ஆசிரியர் உரை

வாழ்த்துரை

முன்னுரை

பொருளடக்கம்

1. மேல்வீட்டறை நிகழ்வுகள் [Upper Room events] 1

a) பஸ்காவின் வரலாறு 1

b) தற்கால பஸ்கா 3

c) பஸ்காவுக்கும் கிறிஸ்துவுக்கும் உள்ள ஒற்றுமைகள் 4

d) பஸ்காவுக்கான ஆயத்தம் 6

e) இயேசு கிறிஸ்து பஸ்காவை ஆசரித்தல் 10

(i) யூதாஸ்காரியோத்துக்கு எச்சரிப்பு 10

(ii) பாதம் கழுவுதல் 14

(iii) புதிய உடன்படிக்கையும் 4 திராட்சைரச கோப்பைகளும் 16

f) சீமோன் பேதுருவுக்கு எச்சரிப்பு 19

g) பட்டயத்தை வாங்க வேண்டும்? 20

h) இயேசுவின் கடைசி ஆறுதலின் வார்த்தைகள் (நான் உங்களோடு) 22

2. கெதரோன் பள்ளதாக்கு நிகழ்வுகள் [Events of the valley of Kidron] 25

a) இயேசு பேதுருவை மீண்டும் எச்சரித்தல் 25

b) இயேசுவின் எதிர்பார்ப்பு (நீங்கள் என்னோடு) 26

c) உபத்திரவமும் ஜெயமும் 29

d) இயேசுவின் பிரதான ஆசாரிய ஜெபம் 31

3. கெத்செமனே நிகழ்வுகள் (Gethsemane Events) 35

a) இயேசுவின் உருக்கமான ஜெபம் 36

(i) ஜெபத்தின் முறை 36

(ii) இந்த பாத்திரம் 37

(iii) வேர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாய் 39

(iv) சீஷர்களையும் ஜெபிக்கும்படி கேட்கிறார் 39

b) யூதாசின் கள்ள முத்தம் 40

c) இயேசு தன்னை ஒப்புக்கொடுத்தார் 42

(i) இயேசுவை பிடிக்க வந்தவிதம் 43

(ii) சிறந்த தலைவரின் பண்புகள் 44

d) மல்குசின் காது வெட்டப்படுதல் 45

e) சீஷர்கள் எல்லாரும் ஓடிப்போகுதல் 48

4. மத நீதிமன்ற நிகழ்வுகள்
(Events of the Religious court) 49

a) முன்னாள் பிரதான ஆசாரியனான அன்னா 50

(i) அன்னாவிடம் கொண்டு செல்வதற்கான காரணங்கள் 52

(ii) அன்னாவின் விசாரணை 53

b) பிரதான ஆசாரியனான காய்பா 55

(i) பேதுரு இயேசுவை மறுதலித்தல் 58

(ii) பொய்ச்சாட்சிகள் வரவழைக்கப்படுதல் 60

(iii) காய்பாவின் விசாரணை 61

(iv) பிரதான ஆசாரியன் வஸ்திரத்தை கிழித்தல் 62

(v) இயேசுவுக்கு மரண தண்டனை விதித்தல் 63

c) சனகெரிப் சங்கம் 64

(i) சனகெரிப் சங்க விசாரணை 65

(ii) தோல்வியில் முடிந்த மத விசாரணைகள் 66

d) யூதாசின் மரணம் 67

(i) மனஸ்தாபப்பட்ட யூதாஸ்? 67

(ii) நான்றுகொண்டு செத்தான் 69

(iii) இரத்த நிலம் வாங்கப்படுதல் 69

5. அரசாங்க நீதிமன்ற நிகழ்வுகள் **73**

**(Events in the Political court)**

a) பொந்தியு பிலாத்து 74

(i) யூதர்களின் குற்றச்சாட்டுகள் 75

(ii) பிலாத்துவின் விசாரணை 81

b) ஏரோது அந்திப்பா 83

(i) வேதத்தில் கூறப்பட்டுள்ள ஏரோதுக்கள் 83

(ii) ஏரோது அந்திப்பாவின் விசாரணை 86

c) பொந்தியு பிலாத்து 87

(i) பிலாத்துவின் மனைவி சிபாரிசு செய்தல் 89

(ii) பிலாத்துவின் மறு விசாரணை 90

6. அரண்மனை மாளிகை நிகழ்வுகள் 93

**(Praetorium Court Events)**

a) போர்ச்சேவகரின் கூட்டம் முழுவதையும் அவரிடத்தில் கூடிவரச் செய்தார்கள் 93

b) அவருடைய வஸ்திரங்களை கழற்றினார்கள் 94

c) சிவப்பான மேலங்கியை அவருக்கு உடுத்தினார்கள் 94

d) வாரினால் அடித்தார்கள் 94

e) சிரசின் மேல் முள்கிரீடத்தை ஆழமாக சூட்டினார்கள் 96

f) வலது கையில் ஒரு கோல் கொடுக்கப்பட்டது 98
g) அவரை பரியாசம் செய்தார்கள் 98
h) அவர் மேல் துப்பினார்கள் 99
i) கோலால் அவரது சிரசில் அடித்தார்கள் 100
j) அவருக்கு கொடுத்த மேலங்கியை கழற்றினார்கள் 100

**7. கொல்கொதா நிகழ்வுகள் (Golgotha Events) 103**

a) கொல்கொதா நோக்கி பயணம் 103
b) சிலுவையை சுமந்த சீமோன் 105
c) அழுதுக் கொண்டு பின்சென்ற ஸ்திரீகள் கூட்டம் 108
d) இயேசு சிலுவையில் அறையப்படுதல் 110
(i) வஸ்திரம் கழற்றப்படுதல் 111
(ii) ஆணிகளால் துளைக்கப்பட்டார் 111
(iii) தேதியும் நேரமும் 112
e) கள்ளர் மத்தியில் இயேசு 114
f) வஸ்திரத்தை பங்கு போடுதல் 114
g) நசரேயனாகிய இயேசு யூதருடைய ராஜா (INRI) 116
h) எல்லோராலும் நிந்திக்கப்பட்டார் 118
(i) சாதாரணமான பொது ஜனங்கள் 119
(ii) மதத்தலைவர்கள் 120
(iii) அரசாங்க அதிகாரிகள் 120
(iv) சமுதாயத்தில் இழிவானவர்கள் 121

**8. சிலுவையில் நடந்த நிகழ்வுகள் (ஏழு வார்த்தைகள்)**
**Events in the Cross (Seven words) 123**

a) மன்னிப்பின் வார்த்தை 125
(i) இயேசு பரிந்து பேசி ஜெபிக்கிறார் 125
(ii) இயேசு பாவத்தை மன்னிக்கிறார் 126

(iii) இயேசு முன்மாதிரியாக இருக்கிறார் 127

b) இரட்சிப்பின் வார்த்தை 128

(i) வேதவாக்கியம் நிறைவேறுதல் 129

(ii) விசுவாசத்தினால் இரட்சிப்பு 129

(iii) சிலுவை கள்ளன் இயேசுவிடம் வந்த விதம் 130

(iv) இயேசுவின் வாக்குதத்தம் 134

(v) திருடர்களை குறித்த ஒரு மதிப்பீடு 135

c) பாசத்தின் வார்த்தை 136

(i) இயேசுவின் தாயாகிய மரியாள் 136

(ii) இயேசுவின் சீஷனான யோவான் 138

(iii) சிலுவையின் அடிவாரத்தில் பெண்கள் 139

(iv) பாசத்தில் மலர்ந்த வார்த்தை 140

(v) இயேசுவின் பொறுப்பான செயல் 141

(vi) ஸ்திரீயே 142

(vii) இயேசுவை தேவனாக ஏற்றுக்கொண்ட மரியாள் 142

d) தவிப்பின் வார்த்தை 144

(i) காரிருளில் நடந்தது என்ன? 145

(ii) ஏலீ! ஏலீ! லாமா சபக்தானி 146

(iii) கைவிடப்படுதல் என்றால் என்ன? 146

(iv) எலியா வந்தாரா? 147

e) தாகத்தின் வார்த்தை 148

(i) வேத வாக்கியத்தை நிறைவேற்றுகிறார் 148

(ii) தமது மனித தன்மையை வெளிப்படுத்துகிறார் 149

(iii) தமது ஆத்தும தாகத்தை பிரகடனம் செய்கிறார் 149

(iv) கசப்பு கலந்த காடியா?
கடற்காளான் கலந்த காடியா? 150

f) வெற்றியின் வார்த்தை 151

(i) தேவனுடைய திட்டமான மீட்பின் கிரியையை முடித்தார் 152
(ii) சாத்தானின் கிரியைகளை அழித்து முடித்தார் 153
(iii) பழைய ஏற்பாட்டு சடங்குகளை முடித்தார் 153
(iv) இயேசுவின் பாடுகள் முடிந்தது 154
g) ஒப்புக் கொடுத்தலின் வார்த்தை 154
(i) பிதாவே 155
(ii) இயேசுவே தமது ஜீவனை ஒப்புக்கொடுத்தார் 156
(iii) வேத வாக்கியங்கள் நிறைவேறியது 156

**9. இயேசுவின் மரணத்தினால் நடந்த அற்புத நிகழ்வுகள் (The Miraculous Events by the death of Jerus) 159**

a) தேவாலயத்தின் திரைச்சீலை இரண்டாகக் கிழிந்தது 159
b) பூமி அதிர்ந்தது, கன்மலைகளும் பிளந்தன 161
c) கல்லறைகள் திறந்தன, பரிசுத்தவான்கள உயிர்த் தெழுந்தார்கள் 162
d) ஜனங்களின் உள்ளங்களில் ஏற்பட்ட மாற்றங்கள் 163

**10. கல்லறையின் நிகழ்வுகள் (Events of the Tomb) 165**

a) அடக்கத்துக்கான ஆயத்தங்கள் 165
(i) ஓய்வுநாள் பிரமாணம் 166
(ii) முறிக்கப்படாத காலெலும்புகள் 166
(iii) ஈட்டியால் குத்தப்படுதல் 167
b) இயேசு அடக்கம் பண்ணப்படுதல் 168
(i) இயேசுவின் சரீரத்தை பிலாத்துவிடம் கேட்டு வாங்கினார்கள் 168

(ii) இயேசுவின் சரீரத்தை வாசனை திரவியங்களால் சுற்றினார்கள் 170
(iii) இயேசுவின் சரீரத்தை கல்லறையில் வைத்தார்கள் 171
(iv) ஓய்வுநாளும் ஆரம்பமாயிற்று 173
c) இயேசுவுக்கு எதிரான யூதர்களின கடைசி தந்திரம் 174
(i) தேவாலய காவற்சேவகர்கள் 175
(ii) ரோம காவல் சேவகர்கள் 176
d) காவலில் உள்ள ஆவிகளுக்கு பிரசங்கித்தார் 177
(i) யார் இந்த காவலிலுள்ள ஆவிகள்? 177
(ii) என்ன பிரசங்கித்தார்? 178

11. இயேசுவின் சிலுவை மரணத்தால் உண்டான ஆசீர்வாதங்கள்
**(The Blessings through the Crucifixion of Jesus)** **179**

a) சிலுவையைக்குறித்த ஒரு சிறப்பு கண்ணோட்டம் 179
b) பத்து ஆசீர்வாதங்கள் 180
(i) பாவ மன்னிப்பு 180
(ii) சமாதானம் 182
(iii) நித்திய ஜீவன் 182
(iv) சரீர விடுதலை 184
(v) புத்திர சுவிகாரம் 185
(vi) நீதிமான்களாக்கப்பட்டோம் 185
(vii) தேவனோடு ஒப்புரவாக்கப்பட்டோம் 186
(viii) ஐசுவரியவான்களாக்கப்பட்டோம் 187
(ix) பரிசுத்தம் 187
(x) சாத்தான் மேல் வெற்றி 188

c) இயேசுவின் சிலுவை மரணத்தின் முக்கியத்துவம் 188
(i) தேவனுடைய அன்பு 189
(ii) தானே மனமுவந்து மரித்தார் 190
(iii) இது ஒரு பதிலான மரணம் 190
(iv) இது கிரயம் செலுத்தும் மரணம் 190
(v) கிறிஸ்துவின் மரணம் முழு உலகிற்கானது 191

12. உயிர்த்தெழுதலின் நிகழ்வுகள்
**(Events of the Resurrection)** **193**

a) மூன்று நாட்கள் பூமியின் இருதயத்தில் 193
b) சொன்னப்படியே உயிர்த்தெழுந்தார் 195
c) எப்படி உயிர்த்தெழுந்தார் 196
d) ஸ்திரீகள் இயேசுவின் கல்லறையில் 197
e) கல்லை புரட்டிப்போட்டது யார்? 198
f) இயேசு உயிர்த்தெழுந்தார் என்பதற்கான ஆதாரங்கள் 199
(i) காலியான கல்லறை 199
(ii) முத்திரை உடைக்கப்பட்ட கல் 200
(iii) தூதர்களின் சாட்சி 200
(iv) காவலாளர்களின் வாக்குமூலம் 201
(v) சுருட்டப்பட்ட சீலைகள் கூறும் உண்மைகள் 202
(vi) இயேசுவே சாட்சியாயிருக்கிறார் 204
(vii) இயேசுகிறிஸ்துவை கண்ணால் கண்ட சாட்சிகள் 205
(viii) புதிய ஏற்பாடு கூறும் உண்மை 205
(ix) திருச்சபையும், ஞாயிறு ஆராதனையும் 205
(x) நாம் அவருடைய சாட்சிகள் 206

g) உயிர்த்தெழுந்த இயேசுவின் தரிசனங்கள் 206
(i) மகதலேனா மரியாள் 206
(ii) பெண்கள் 209
(iii) எம்மாவு சீஷர்கள் 209
(iv) சீமோன் பேதுரு 211
(v) பத்து அப்போஸ்தலர்கள் 212
(vi) பதினொரு அப்போஸ்தலர்கள் 214
(vii) ஏழு சீஷர்கள் 216
(viii) பதினொரு அப்போஸ்தலர்கள் 217
(ix) 500 பேருக்கும் அதிகமானோர் 218
(x) யாக்கோபு 218
(xi) சீஷர்களும் பொது ஜனங்களுக்கும் 219
h) உயிர்த்தெழுந்த இயேசு செய்த ஊழியங்கள் 219
i) உயிர்த்தெழுந்த சரீரத்தின் தன்மைகள் 220
j) உயிர்த்தெழுதலின் முக்கியத்துவம் 221
k) இயேசு கிறிஸ்துவின் இரண்டாவது வருகை 221

13. உயிர்த்தெழுதலைக்குறித்த தவறான கொள்கைகள் **(False Theories about the Resurrection)** **223**

a) தவறான கல்லறைக்கொள்கை 223
b) திருட்டு (அ) ஏமாற்றுக் கொள்கை 225
c) மாயக்காட்சி கொள்கை 226
d) மயக்கமடைதல் கொள்கை 227
e) இஸ்லாமியர்களின் கொள்கை 229

**BIBLIOGRAPHY** **233**

## சிறப்புத் தொகுப்புகள்


| | | |
|---|---|---|
| 1. | யார் இந்த மாற்கு? | 8 |
| 2. | யார் இந்த யூதாஸ்காரியோத்து? | 13 |
| 14. | மருத்துவ சான்று Hematidrosis | 39 |
| 12. | லேகியோன் என்றால் என்ன? | 47 |
| 3. | யார் இந்த அன்னா? | 50 |
| 4. | யார் இந்த காய்பா? | 55 |
| 5. | யார் இந்த பிலாத்து? | 74 |
| 11. | ரோமர்கள் மற்றும் யூதர்கள் நாணயங்கள் | 80 |
| 6. | யார் இந்த ஏரோது அந்திப்பா? | 85 |
| 7. | யார் இந்த பரபாஸ்? | 88 |
| 8. | யார் இந்த சிரேனே ஊரானாகிய சீமோன்? | 106 |
| 15. | இயேசுவின் அங்கியை குறித்த தகவல் | 115 |
| 13. | இயேசுவின் இரத்தமும் உடன்படிக்கை பெட்டியும் | 161 |
| 16. | மருத்துவ சான்று Pericardial Effusion | 167 |
| 9. | யார் இந்த அரிமத்தியா ஊர் யோசேப்பு? | 169 |
| 10. | யார் இந்த நிக்கோதேமு? | 173 |
| 17. | சுருட்டப்பட்ட சீலையை குறித்த வரலாற்று உண்மை | 203 |


■■■



## அத்தியாயம் - 1

# மேல் வீட்டறை நிகழ்வுகள்
# (Upper room events)

(மத். 26:14-30; மாற்: 14:10 - 26; லூக்: 22:1-39;
யோவா: 13:1-14:31)

### பஸ்காவின் வரலாறு (History of Passover)

இஸ்ரவேலர் ஆசரித்து வந்த முக்கியமான பண்டிகைகளில் பஸ்காவும் ஒன்று. "பஸ்கா" என்ற சொல்லுக்கு "கடந்து போகுதல்" என்று அர்த்தம். இந்த பண்டிகையானது ஒவ்வொரு நிசான் மாதமும் (மார்ச் - ஏப்ரல்) 14-ம் தேதி தொடங்கி 21-ம் தேதி வரைக் கொண்டாடப்பட்டு வந்தது. இதைக்குறித்து விரிவாக நாம் யாத்திரையாகமம் 12-ம் அதிகாரத்தில் காணமுடியும். இஸ்ரவேலர் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலைப்பெறும் தருணத்தில் ஆசரிக்கும்படி தேவனால் முதன்முதலாக இந்த பஸ்கா ஏற்படுத்தப்பட்டது. ஒவ்வொரு வீட்டாரும் ஒரு ஆட்டுக்குட்டியை தெரிந்தெடுத்து, அடித்து அதின் இரத்தத்தில் கொஞ்சம் எடுத்து வீட்டு வாசலில் உள்ள நிலைகால்கள் இரண்டிலும் மற்றும் நிலையின் மேற்சட்டத்திலும் தெளிக்க வேண்டும். இதன் மூலம் எகிப்தியரின் முதற்பேறனைத்தையும் சங்கரித்த தூதனிடமிருந்து இஸ்ரவேலர் காப்பாற்றப்பட்டார்கள்.



ஈசோப்பு செடி

ஆட்டுக்குட்டியின் இரத்தத்தை ஒரு கிண்ணியில் ஊற்றி, ஈசோப்பு கொழுந்துகளின் கொத்தை எடுத்து அந்த இரத்தத்தில் தோய்த்து வாசலில் தெளிப்பது வழக்கமாய் இருந்தது (யாத்.12:22). ஆகவே தான் தாவீது பின்நாட்களில் தனது பாவபரிகாரத்துக்காக ஜெபிக்கும் போது, ஈசோப்பினால் சுத்திகரியும் என ஜெபிக்கிறார் (சங்.51:7). ஈசோப்பு என்பது ஒரு செடியின் கிளையிலிருந்து எடுக்கப்படும் இலை நிரம்பிய ஒரு கொத்து ஆகும். இங்கு ஈசோப்பு இலைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை, மாறாக தோய்க்கப்படும் இரத்தமே முக்கியமானதாகும். பின்நாட்களில் இந்த பண்டிகையை புளிப்பில்லா அப்பப்பண்டிகையோடு இணைத்துக் கொண்டார்கள். இது தனித்தனி குடும்பங்களால் செலுத்தப்படும் பலியாயிருந்தாலும், எருசலேம் தேவாலயத்தில் செலுத்த வேண்டியதாயிருந்தது.

ஒவ்வொரு நிசான் மாதமும் 10-ம் தேதி எல்லா வீட்டுத்தலைவர்களும் ஒரு ஆட்டுக்குட்டியை தெரிந்தெடுத்து, 13-ம் தேதி சாயங்காலம் வீட்டிலுள்ள புளித்தமாவை அகற்றிவிட்டு, முழுநிலவு தினமான பஸ்கா தினத்துக்குள்ளாக எல்லா வேலைகளையும் முடித்துவிடுவது வழக்கமாயிருந்தது. பகல் சாப்பாட்டிற்கு பிறகு பஸ்காவை புசிப்பது வரை அவர்கள் எதையுமே சாப்பிடுவதில்லை. மறுநாள் சாயங்காலத்தில் வீட்டுத்தலைவர்கள் ஆட்டுக்குட்டிகளை தேவாலயத்துக்கு கொண்டு போய், எக்காளச் சத்தம் கேட்கும் போது ஒவ்வொருவரும் தன் தன் ஆடுகளை அடிப்பார்கள். ஆசாரியர்கள் இரத்தத்தை பலிபீடத்தின் கீழ் தெளித்துக் கொழுப்பைப் பலியிடுவார்கள். அதன்பிறகு வீட்டுத்தலைவன் மாம்சத்தை எடுத்துக்கொண்டு வீட்டுக்கு திரும்புவான். பத்துமணி நேரத்துக்குள்ளாக இந்த மாம்சத்தை மாதுளம் குச்சிகளில் குத்தி, நெருப்பினால் சுட்டு, புளிப்பில்லா அப்பத்தோடும், கசப்பான கீரையோடும் புசித்து பஸ்காவை கொண்டாடி வந்தனர்.

பஸ்காவின் போது அதை ஆசரிக்க தங்களை சுத்திகரித்துக் கொள்ளாதவர்களுக்காகவும், சமய ஒழுங்கின் படி அன்றையதினம் ஆசரிக்க தகுதியற்றவர்களுக்காகவும் ஒரு மாதத்திற்கு பின்பு இரண்டாம் பஸ்கா பண்டிகை கொண்டாடப்பட்டது (எண்.9:1-14). இஸ்ரவேலர் கானானுக்குள் பிரவேசித்த பிறகும் இந்த பண்டிகை கொண்டாடப்பட வேண்டும் என்பது அவர்களுக்கு கொடுக்கப்பட்ட பிரமாணமாயிருந்தது (உபா.16:2-19). ஆனால் கானானுக்குள் பிரவேசித்த பிறகு எசேக்கியாவின் காலம் வரை நெடுநாட்களாக இதை கடைப்பிடிக்காமல் மறந்தே போனார்கள். ஆகவே எசேக்கியா ராஜா தனது ஆட்சியின் போதும் (II நாளா. 30:1-29) யோசியா ராஜா தனது ஆட்சியின் போதும் (II நாள.35:1-19) இந்த பண்டிகையை திரும்ப ஆசரிக்கும்படி மக்களை ஆயத்தம் செய்தார்கள்.

## தற்கால பஸ்கா (Present time Passover)

இந்த பஸ்காவில் இடம் பெறும் முக்கியமான பொருட்கள் என்னவென்றால்: ஒரு வயது நிரம்பிய ஆட்டுக்குட்டி, மூன்று புளிப்பில்லா அப்பங்கள், உப்புநீர், ஈசோப்பு கொழுந்து, ஐந்து விதமான கசப்பான கீரைகள், செரோபோஸஸ் என்னும் ஒரு வித பிசின், நான்கு கோப்பை திராட்சை ரசம் ஆகும். இந்த உணவுப்பொருட்களை சுமார் ஒரு அடி மட்டுமே உயரமுள்ள மேஜையில் வைத்து, யாவரும் அதை சுற்றிலும் சாய்ந்து அமர்ந்த பின்னரே விருந்தை துவங்குவார்கள்.

அப்பொழுது அந்த கூட்டத்திலேயே உள்ள சிறுவன் ஒருவன் கீழ்காணும் கேள்விகளை கேட்பதும் அதற்கு அந்த குடும்ப தலைவர் பொறுமையாக பின்வரும் பதிலை அளிப்பதும் வழக்கமானதா யிருந்தது.

(i) நாம் ஏன் சரியாக வேகவைக்காத இந்த அப்பத்தை சாப்பிட வேண்டும்?

நம் முன்னோர்கள் எகிப்திலிருந்து காப்பாற்றப்பட்டு வந்தப்போது வழியில் சரியாக வேகவைக்க முடியாத அப்பங்களையும், கீரைவகைகளையும் சாப்பிட்டார்கள். அதை நினைவுக் கூறும்படி நாமும் இப்படி செய்கிறோம்.

(ii) நாம் ஏன் இந்த கசப்பான கீரைகளை சாப்பிடுகிறோம்?

நம் முன்னோர்கள் எகிப்தில் அடிமைப்பட்டுக்கிடந்த அந்த

கசப்பான நாட்களை நினைவுக் கூறும்படி நாமும் இப்படி செய்கிறோம்.

(iii) நாம் ஏன் நமது அப்பத்தை உப்புத்தண்ணீரில் தோய்த்து புசிக்கிறோம்?

நம் முன்னோர்கள் எகிப்தில் சிந்திய கண்ணீரின் உப்பு சுவையை நினைவுக்கூறும்படி நாமும் இப்படி செய்கிறோம்.

(iv) நாம் ஏன் நன்றாக சாய்ந்து அமர்ந்து இந்த விருந்தை சாப்பிடுகிறோம்?

நம் முன்னோர்கள் நன்றாக உட்கார்ந்து சாப்பிடும் நிலைமையில் இருக்கவில்லை. ஆனால் நாம் இன்றைக்கு சுதந்திரம் பெற்றிருக்கிறபடியால் அதை நினைவுக்கூறும்படி இப்படி செய்கிறோம்.

இந்த கேள்வி - பதில் பகுதியை எல்லாரும் கண்டிப்பாக பின்பற்ற வேண்டியதாயிருந்தது. (நமது கலாச்சாரத்தில் சாப்பிடும் போது பேசுவதை விரும்பாத காலகட்டங்கள் இருந்தன என்பது வியப்பானதே!)

பஸ்காவை ஆசரிக்கும் போது வீட்டின் முன்புற கதவு திறந்தே வைக்கப்பட்டிருக்கும், நாற்காலிகளில் ஒன்று காலியாக விடப்படும், ஒரு கோப்பையில் திராட்சை ரசம் ஊற்றி தனியாக வைப்பார்கள். இந்த நாற்காலிக்கு "எலியாவின் நாற்காலி" என்று பெயர். உயிருடன் எடுத்துக் கொள்ளப்பட்ட எலியா எப்போது வேண்டுமானாலும் பூமிக்கு திரும்பி வந்து தங்களோடு பஸ்காவில் கலந்துக் கொள்ளலாம் என்ற நம்பிக்கை யூதர்களிடையே இருந்ததே இதற்கு காரணமாகும். பஸ்காவின் முடிவில் "ஹல்லேல்" என்னும் அல்லேலூயா ஸ்தோத்திர பாடல்களை பாடுவதும் வழக்கமாயிருந்தது.

## பஸ்காவுக்கும் கிறிஸ்துவுக்கும் உள்ள ஒற்றுமைகள்
## (The Similarities between passover and Christ)

பஸ்காவின் முக்கிய அம்சமே அடிக்கப்படும் ஆட்டுக்குட்டியே ஆகும். யோவா.1:29-ல் இயேசுவே உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி என யோவான் ஸ்நானன் கூறுகிறார். ஒவ்வொரு நிசான் மாதமும் பஸ்காவுக்கு முன்னரே ஆட்டுக்குட்டியை தெரிந்துக் கொள்வதுபோல, இயேசுவும் தான் அடிக்கப்பட்டு சிலுவையில் அறையப்படுவார் என்பதை பஸ்காவுக்கு முன்னரே

அறிவித்திருந்தார் (மத்.26:2). பஸ்கா அடிக்கப்படும் அதே நேரத்தில், அதாவது காலைப்பலிக்கும் அந்திபலிக்கும் இடையே அவர் சிலுவையில் தொங்கினார். பஸ்காவின் மூலம் இஸ்ரவேலர் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து மீட்கப்பட்டது போல, கிறிஸ்துவின் மரணம் மூலம் நாம் சாத்தானுடைய அடிமைத்தனத்திலிருந்து மீட்கப்பட்டுள்ளோம். கிறிஸ்துவின் மரணம் மூலம் ஏற்பட்ட புதிய உடன்படிக்கையானது ஏதோ தற்செயலாக நடந்தது அல்ல, ஏற்கனவே தீர்க்கதரிசிகள் மூலம் முன்னறிவிக்கப்பட்டவைகள் ஆகும் (ஏசா.53:1-12; எரே. 31:31-34 & எசே. 37: 26 - 28). பஸ்காவுக்கு தெரிந்தெடுக்கப்படும் ஆட்டுக்குட்டியானது பழுதற்றதாகவும் ஆணாகவும் இருக்கவேண்டும் (யாத்.12:5), இயேசுவும் கூட பாவமில்லாத பழுதற்றவராயிருந்தார் (யோவா. 8:46). ஆட்டுக்குட்டியின் எலும்பை முறிக்ககூடாது (யாத்.12:46), பஸ்கா பலியான கிறிஸ்துவின் எலும்புகளும் முறிக்கப்படவில்லை (யோ.19:33).

புளிப்பில்லாத அப்பப்பண்டிகையோடு இஸ்ரவேலர் எருசலேமில் பஸ்கா பண்டிகையை ஆசரிக்கும் தினத்திலே இயேசுவும் எருசலேமில் மனுகுலத்தின் பாவங்களுக்காக பலியானார். இயேசு ஆசரித்த இராப்போஜனத்தை பஸ்கா உணவு என சுவிசேஷங்கள் கூறுகின்றன (மத்.26 :17; மாற். 14:12; லூக். 22:7, 8). மேலும் 1 கொரி. 11:23-31 வரை உள்ள வசனங்களில் பவுல் இதை திருவிருந்தோடு ஒப்பிட்டு பேசுகிறார். பஸ்காவுக்கும் திருவிருந்துக்கும் அனேக வித்தியாசங்கள் இருந்தாலும், திருவிருந்தை பஸ்காவின் இன்னொரு வடிவமாக பார்க்கிறோம். கிறிஸ்துவின் பலியே உண்மையான பஸ்காவாகும். ஆகையால் "கிறிஸ்துவே நமது பஸ்கா" என பவுல் கூறுகிறார் (1 கொரி.5:7).

பஸ்காவின் முந்தைய தினமான புளித்தமாவை அகற்றும் தினத்திலே இயேசு தமது பஸ்காவை ஆசரித்து முடித்துவிட்டார். முதல் மூன்று சுவிசேஷங்களில் புளிப்பில்லா அப்ப பண்டிகை நாளான பஸ்கா பண்டிகை நாளில் இயேசுவும் பஸ்காவை ஆசரித்தார் எனக் காண்கிறோம் (மத்.26:17; மாற். 14:12; லூக். 22:7, 8). ஆனால், யோவான் தெளிவாக, "பஸ்கா பண்டிகைக்கு முன்னே" என கூறுகிறார் (யோ.13:1). பஸ்கா நாளுக்கு முந்தைய நாளே இயேசுவை பிடித்து விசாரிக்க தொடங்கினார்கள் என்பதையும் குறிப்பிடுகிறார்

(யோ.18:28). அப்படியென்றால், யோவான் எழுதிய சுவிசேஷத்திற்கும், பிற சுவிசேஷங்களுக்கும் இடையே முரண்பாடுகள் உள்ளனவா? இல்லவே இல்லை. ஏனென்றால்:

(i) சுவிசேஷ எழுத்தாளர்கள் நடந்த உண்மையை எழுதினார்களேயன்றி, ஒவ்வொரு செயல்களையும் தேதி வாரியாக, வரிசையாக எழுதவில்லை என்ற உண்மையை நாம் அறிந்துக் கொள்ள வேண்டும்.

(ii) பெரும்பான்மையான வேதபண்டிதர்களின் கருத்துப்படி (யோவான் கூறுகிறபடி) பஸ்கா பண்டிகையானது நிசான் 15-ம் தேதியான வெள்ளிக்கிழமை தான் என்றும், இயேசு ஆசரித்த பஸ்காவானது உண்மையிலே அன்றைய யூதர்கள் கொண்டாடும் பஸ்காவாக இருக்கவில்லை என்றும், அது இஸ்ரவேலர் பண்டிகையின் முந்தின நாள் இரவில் உண்ணும் "கித்தூஷ்" என்ற விருந்து என்பதையும் அறிந்துக் கொள்கிறோம். ஏனெனில் அடுத்த நாள் தன்னையே உண்மையான பஸ்கா பலியாக ஒப்புக்கொடுக்க வேண்டியிருந்ததால், முந்தைய நாளிலே பஸ்கா பண்டிகையின் கடமையை இயேசு தமது சீடர்களோடு செய்து முடித்தார்.

(iii) இயேசுவானவர் இந்த பஸ்காவின் போது "கர்த்தருடைய பந்தி" என்கிற புதிய ஒரு ஒழுங்கை ஏற்படுத்தினார் என்பதே இதன் முக்கிய சாராம்சமாகும்.

## பஸ்காவுக்கான ஆயத்தம் (Passover preparation)

இயேசு கிறிஸ்துவின் சீஷர்கள் அவரிடம் வந்து, "நீர் பஸ்காவை புசிப்பதற்கு நாங்கள் எங்கே போய் ஆயத்தம் பண்ணச் சித்தமாயிருக்கிறீர்கள்" என்று கேட்டார்கள். அவர் தம்முடைய சீஷரில் இரண்டு பேரை நோக்கி, "நீங்கள் நகரத்திற்குள்ளே போங்கள், அங்கே தண்ணீர்க்குடம் சுமந்துவருகிற ஒரு மனுஷன் உங்களுக்கு எதிர்ப்படுவான், அவன் பின்னே போங்கள்; அவன் எந்த வீட்டிற்குள் பிரவேசிக்கிறானோ அந்த வீட்டு எஜமானனை நீங்கள் நோக்கி: என் வேளை சமீபமாயிருக்கிறது, நான் என் சீஷரோடு கூடப் பஸ்காவைப் புசிக்கிறதற்குத் தகுதியான இடம் எங்கேயென்று போதகர் கேட்கிறார் என்று சொல்லுங்கள்; அவன் கம்பளம் முதலானவைகள் விரித்து ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற விஸ்தாரமான மேல் வீட்டறையை உங்களுக்கு காண்பிப்பான்; அங்கே நமக்காக ஆயத்தம்

பண்ணுங்கள் "என்று சொல்லி அனுப்பினார். அப்படியே அவரது சீஷர்களான பேதுருவும் யோவானும் (லூக்.22:8) புறப்பட்டு போய் பஸ்காவை ஆயத்தம் பண்ணினார்கள்.

**(a) தண்ணீர்க்குடம் சுமந்து வருகிற ஒரு மனுஷன் உங்களுக்கு எதிர்ப்படுவான் (மாற்.14:13)**

இதை வாசிக்கும் போது குழப்பமாய் இருக்கிறதா? ஏனெனில் ஒவ்வொரு ஊரிலும் அநேகர் தண்ணீர்க்குடம் சுமந்து வருவது வழக்கம். அப்படியிருக்கும் போது இந்த மனிதனை எவ்வாறு அடையாளம் காணமுடியும்? மிக சுலபம். பொதுவாக யூதர்கள் மத்தியில் பெண்கள் தான் தண்ணீர் குடம் சுமந்து வருவது வழக்கமாயிருந்தது.

- ரெபெக்காள் தண்ணீர் மொள்ள குடம் கொண்டு வந்தாள் (ஆதி. 24:45),
- மீதியான் தேசத்து ஆசாரியனான ரெகுவேலின் ஏழு குமாரத்திகளும் தண்ணீர் மொண்டார்கள் (யாத்.2 :16)
- சமாரியாஸ்திரீ தண்ணீர்மொள்ள வந்தாள் (யோவா. 4:8, 28).

இவ்வாறு பெண்கள் "தண்ணீர்க்குடம்" சுமந்து வந்தார்கள். ஆனால் ஆண்கள் நேர்மாறாக "தோலினால் ஆன குவளையில்" தண்ணீர் சுமந்து வருவது வழக்கமாயிருந்தது, அதனை "தோல் பைகள்" எனவும் அழைத்தனர். ஆகவே இங்கு "தண்ணீர்க்குடம்" சுமந்து வருகிற மனுஷன் உங்களுக்கு எதிர்ப்படுவான் என இயேசு கூறினபடியால், பேதுருவும் யோவானும் அவனை எளிதாக அடையாளம் கண்டுக் கொண்டார்கள்.

**(b) அவன் எந்த வீட்டிற்குள் பிரவேசிக்கிறானோ, அந்த வீட்டு எஜமானனை நீங்கள் நோக்கி (மாற்.14:14).**

இதிலிருந்து நாம் கற்றுக்கொள்ளுவது என்னவென்றால், தண்ணீர் சுமந்து வந்தவன் அந்த வீட்டு எஜமானன் அல்ல. மாறாக அவன் அந்த வீட்டு வேலைகாரனாக இருந்திருக்க வேண்டும். ஏனென்றால் யூதர்கள் மத்தியில் அனேகமாக பெண்களும், சில நேரங்களில் அடிமைகள் அல்லது வேலையாட்களும் தண்ணீர் மொண்டு வருவது வழக்கம். இந்த எஜமானன் யாராக இருந்திருக்க கூடும்? இங்கு இயேசு கூறியப்படி, இந்த வீட்டு எஜமானன் தனது மேல்

வீட்டறையை காட்டினான். இந்த "மேல்வீட்டறை" என்பது எருசலேமில் இருந்த யோவான் மாற்கு என்ற மாற்குவின் தகப்பனாருடைய வீடு என்பது பாரம்பரிய நம்பிக்கையாகும்.

## யார் இந்த மாற்கு? Who is this Mark?

மாற்குவின் தாயாகிய மரியாள் எருசலேம் கிறிஸ்தவர்கள் மத்தியில் முக்கியமான ஒருவராக இருந்திருக்க வேண்டும். ஏனென்றால் பிற்காலத்தில் இவர்களது வீட்டில் தான் சீஷர்களும், பிற கிறிஸ்தவர்களும் அடிக்கடி கூடிவந்தார்கள். இயேசு கிறிஸ்துவின் மரணத்துக்கு பிறகு கூட சீஷர்கள் இங்கு தான் கூடிவந்தார்கள் என நம்பப்படுகிறது (யோ. 20:19, 26). இயேசுவானவர் பரமேறிய பிறகு, சீஷர்களோடு கூட 120 பேர் இங்கு தான் கூடி வந்து ஜெபத்தில் தரித்திருந்தார்கள், மற்றும் யூதாசுக்கு பதிலாக இங்கு வைத்து தான் மத்தியாவையும் தெரிந்தெடுத்தார்கள் (அப்.1:13-26). பெந்தேகொஸ்தே நாளிலும் கூட இங்கு தான் கூடியிருந்தார்கள் (அப்.2:1-4). அப்போஸ்தலனாகிய பேதுரு ஏரோதினால் கைது செய்யப்பட்டு சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருக்கும் போது, சபையார் இங்கு தான் கூடி ஜெபித்தார்கள், மேலும் அவன் தேவதூதனால் விடுவிக்கப்பட்ட போது நேராக இங்கு தான் வந்தான் (அப்.12:1-17).

இந்த மாற்கு தான் பின்நாட்களில் பவுலோடு கூட முதலாம் சுவிசேஷ பயணத்தில் பங்கு கொண்டான், சில காரணங்களால் அந்த பயணத்தை முடிக்காமல் திரும்பினான் (அப்.13:13). பின்னர் பவுல் தனது இரண்டாவது சுவிசேஷ பயணத்தை தொடங்கும் போதும் அவர்களோடு இந்த மாற்கு வந்து சேர்ந்தான். அப்பொழுது பவுல் மிகுந்த கோபம் மூண்டவனாகி மாற்குவை அழைத்து செல்வதில்லை என வாக்குவாதம் செய்தபடியால், பர்னபா மாற்குவை அழைத்துக் கொண்டு வேறு மார்க்கமாய் சென்றான் (அப்.15:39). ஏனென்றால் பர்னபாவும் மாற்குவும் உறவினர்களாக இருந்தார்கள் (கொலோ.4:10). எப்படியாயினும் பின்நாட்களில் மாற்கு ஊழியத்தில் மிகுந்த பிரயோஜனம் உள்ளவனாய் மாறினான் என்பதை பவுலே கூறுகிறார் (II தீமோ.4:11). இந்த மாற்குவே பின்நாட்களில் பேதுருவின்

உதவியாளனாக இருந்தபோது, அவரிடம் கேட்டறிந்து "மாற்கு எழுதிய சுவிசேஷத்தை" எழுதியிருக்கிறார் (I பேது. 5:13) என நம்பப்படுகிறது. இந்த சுவிசேஷமே முதலில் எழுதப்பட்ட சுவிசேஷமாகும்.

**(c) என் வேளை சமீபமாயிருக்கிறது (மத்.26:18).**

வேதத்தில் பல இடங்களில் "என் வேளை" (My Hour) என இயேசு குறிப்பிட்டு கூறுவதை காணலாம்.

- யோ. 2:4; 7:6 - என் வேளை இன்னும் வரவில்லை
- யோ. 7:8- என் வேளை இன்னும் வராதபடியால் நான் இந்த பண்டிகைக்கு இப்பொழுது போகிறதில்லை
- யோ. 7:30- அவருடைய வேளை இன்னும் வராதபடியால் ஒருவனும் அவர் மேல் கைபோடவில்லை.
- மத். 26:18 - என் வேளை சமீபமாயிருக்கிறது
- யோ. 13:1 - வேளை வந்த போது
- மத். 26:45 - வேளை வந்தது.

மேற்கூறிய வசனங்களில் பலமுறை தம்முடைய வேளை இன்னும் வரவில்லை எனக்கூறிய இயேசு, இந்த இடத்தில் என் வேளை சமீபமாயிருக்கிறது எனவும், பின்னர் வேளை வந்தது எனவும் கூறியுள்ளார். அப்படியென்றால், "வேளை" என இயேசு தமது "பாடு மரணத்தை" குறிப்பிடுகிறார். இப்போது தமது "வேளை" (பாடு மரணம்) சமீபமாயிற்று, ஆகவே பஸ்காவை ஆயத்தம் பண்ணுங்கள் என்றார்.

**(d) கம்பளம் முதலானவைகள் விரித்து ஆயத்தம் பண்ணப் பட்டிருக்கிற விஸ்தாரமான மேல் வீட்டறை (மாற். 14:15).**

இயேசு தமது உலக வாழ்வின் கடைசி மணிதுளிகளை தமது கட்டுபாட்டில் தான் வைத்திருந்தார் என்றும், ஏற்கனவே பஸ்காவுக்கு உரிய ஆயத்தங்களை செய்து முடித்துவிட்டார் என்பதையும் இது காட்டுகிறது. மேலும் இந்த மேல்வீட்டறையானது "விஸ்தாரமானது" எனக் காண்கிறோம். அப்படியென்றால் இது பெரிய ஒரு அரங்காக (Hall) இருந்துள்ளது. ஆகவே தான் பெந்தேகொஸ்தே நாளின் போது 120 பேர் இங்கு உட்கார்ந்து சுலபமாக ஜெபிக்க முடிந்தது.

பொதுவாக யூதர்கள் தங்கள் வீட்டின் மேலே அவர்கள் வசதிக்கேற்றபடி, வீட்டில் வருகிற விருந்தினர்கள் தங்கும்படி அறைகள் கட்டுவதுண்டு. 2 இராஜா. 4:10-ல் சூனேமியாள் தனது வீட்டின் மேலே எலிசா தீர்க்கதரிசிக்காக ஒரு சிறிய அறையைக் கட்டி தேவையான பொருட்களையும் வைத்ததை பார்க்கிறோம். அவ்வாறு எல்லா யூதர்களுமே இரவு நேரங்களில் தங்கள் வீடுகளில் ஏதாவது விருந்தாளிகள் வந்தால் அவர்களை திருப்பி அனுப்பாமல் தங்களோடு தங்க வைத்து, உணவு பரிமாறுவது வழக்கமாயிருந்தது (லூக். 11:6; 24:29). இங்கு மாற்குவின் வீட்டார் கொஞ்சம் வசதிபடைத்தவர்களாய் இருந்ததாலோ என்னவோ, பெரிய அறையை கட்டி அந்த அறைக்கு தேவையான பொருட்களையும் வாங்கி ஆயத்தம் பண்ணியிருந்தார்கள். என்னதான் வாங்கி அழகுபடுத்தினாலும் பிறருக்கு கொடுக்கும் இருதயம் எல்லாருக்கும் இருக்காது என்பது நிஜம்! ஆனால் மாற்குவின் வீட்டார் கர்த்தருக்காக கொடுப்பதிலும் கொடை வள்ளலாக இருந்துள்ளார்கள்.

## இயேசு கிறிஸ்து பஸ்காவை ஆசரித்தல்
## (Jesus Christ observes the passover)

இயேசுவின் சீஷர்கள் பஸ்காவுக்கு தேவையான ஆயத்தங்களை செய்து வைத்திருந்தார்கள். இது நாம் திருவிருந்தை ஒழுங்கு செய்வது போல சுலபமானது அல்ல, அநேக பொருட்களை வாங்கி ஆயத்தம் செய்திருந்தார்கள். ஆயத்தபணிகள் முடிவடைந்த பின்பு, சாயங்காலமானபோது இயேசு தமது பிற சீஷர்களோடு அங்கு வந்து சேர்ந்தார். இங்கு இயேசுவானவர் பஸ்காவை மட்டும் ஆசரித்துவிட்டு செல்லாமல், தமது இரண்டு சீஷர்களை எச்சரித்து விட்டு, தாழ்மையை வெளிப்படுத்தும் விதமாக சீஷர்களது கால்களை கழுவி விட்டு ஒரு புது உடன்படிக்கையை (திருவிருந்தை) ஏற்படுத்தினார். பின்னர் சோர்ந்து போயிருந்த தமது சீஷர்களுக்கு ஆறுதலின் அருளுரைகளையும் போதித்தார். இவைகளை சுருக்கமாக கீழே காண்போம்.

### 1. யூதாஸ்காரியோத்துக்கு எச்சரிப்பு (Warning to Judas Iscariot)

தமது சீஷர்களில் ஒருவனாகிய யூதாஸ் தம்மைக் காட்டிக்கொடுக்க போகிறான் என்பதை மறைமுகமாகவும், நேரடியாகவும் அவனுக்கு ஐந்து முறை எடுத்துரைத்தார். ஆனாலும் அவன் அந்த எச்சரிப்பின் வார்த்தைகளை உதறித்தள்ளினான்.

(i) உங்களில் ஒருவன் என்னைக் காட்டிக் கொடுப்பான் (மத்.26:21)

இயேசு இந்த வார்த்தைகளை கூறியவுடன் சீஷர்கள் மிகுந்த துக்கமடைந்தவர்களாய், ஆண்டவரே நானோ? நானோ? என ஒவ்வொருவரும் கேட்கத் தொடங்கினார்கள். ஏன் மிகுந்த துக்கமடைந்தவர்களாய் கேட்டார்கள் என்றால், இயேசு இதை அவர்களிடம் கூறும்போது "ஆவியில் கலங்கினவராய் இருந்தார்" (யோ.13:21). அந்த பந்தியில் யோவான் இயேசுவின் மார்போடு சேர்ந்திருந்தான்; பேதுருவோ கொஞ்சம் தள்ளி பந்தியிலிருந்தான். ஆகவே பேதுரு யோவானுக்கு சைகை காட்டி, யார் என்பதை தெரிந்துக் கொள்ளும்படி கேட்டான்.

இயேசு தன்னைக்குறித்து தான் கூறுகிறார் என யூதாசுக்கு நன்றாக தெரியும், ஏனென்றால் பஸ்காவுக்கு வரும் முன்பே யூதாஸ் பிரதான ஆசாரியர்களிடமும், சேனை தலைவர்களுடனும் போய் இயேசுவை காட்டிக் கொடுப்பதாக சம்மதித்து, அதற்கு 30 வெள்ளிகாசுகளையும் பெற்றிருந்தான். ஆனாலும் யூதாஸ் தனது இருதயத்தை கடினப்படுத்தினான். ஏனெனில் அவன் தவறான வழியில் போனவுடனே சாத்தான் அவனை தூண்டிக் கொண்டேயிருந்தான். இப்போது யோவான் இயேசுவின் மார்பிலே சாய்ந்துக் கொண்டே அவரிடம், "காட்டிக் கொடுப்பவன் யார்" எனக் கேட்டான்.

(ii) என்னோடே கூடத் தாலத்தில் கையிடுகிறவனே என்னைக் காட்டிக் கொடுப்பான் (மத்.26:23)

மத்தேயு மேற்கூறியவாறு கூறியிருந்தாலும், யோவான் எழுதிய சுவிசேஷத்தில் இன்னும் ஒருபடி மேலே சென்று, "நான் இந்த துணிக்கையைத் (அப்பத்துண்டை) தோய்த்து எவனுக்குக் கொடுப்பேனோ, அவன் தான்" என்று சொல்லி, துணிக்கையைத் தோய்த்து, யூதாஸ்காரியோத்துக்கு கொடுத்தார் எனக் காண்கிறோம்.

எல்லாருக்குமே இயேசுக் கொடுத்துக் கொண்டு இருந்தபடியாலும், எல்லாருமே தாலத்தில் கைப்போட்டு அப்பத்தை எடுத்தப்படியாலும், அவ்வளவு எளிதாக அவர்களால் அதை உணரமுடியவில்லை. இயேசு துணிக்கையைத் தோய்த்துக் கொடுத்தவுடன், "நீ செய்கிறதை சீக்கிரமாய் செய்" என்றார் இயேசு தம்மைக் காட்டிக் கொடுப்பதை குறித்து கூறியிருந்தாலும், சீஷர்களால் அதை புரிந்துக் கொள்ள இயலவில்லை. ஏனென்றால் அவன் தான் அந்த குழுவின் பொக்கிஷகாரனாய் இருந்தபடியால்,

அவன் போய் பண்டிகைக்குக் தேவையானவைகளைக் கொள்ளும் படிக்கு அல்லது தரித்திரருக்கு ஏதாகிலும் கொடுக்கும்படிக்கு இயேசு அவனுடனே சொல்லியிருப்பார் என நினைத்தார்கள். ஆனால், இயேசு வேறு எதையும் வாங்க தன்னிடம் கூறவில்லை என்பது யூதாசுக்கு நன்றாகவே தெரிந்திருந்தது.

(iii) அவனுக்கு ஐயோ (மத். 26:24)

அவனுக்கு நடக்கபோகும் கொடுமையான மரணத்தை இயேசு நினைவுக்கூர்ந்திருப்பார் போல! அவனுக்கு ஐயோ என கூறியபிறகும் அவன் தன்னை மாற்றிக்கொள்ள முன் வரவில்லை என்பது ஆச்சரியமானது தான்.

(iv) அவன் பிறவாதிருந்தால் நலமாயிருக்கும் (மத்.26:24)

இந்த வார்த்தைகளை கேட்டவுடன் தன்னைக் குறித்து தான் இயேசு கூறுகிறார் என தெரிந்தும் கூட, யூதாஸ் அவரை நோக்கி, "ரபீ நானோ"? எனக் கேட்டான். இயேசு கிறிஸ்துவின் கூட வாழ்ந்தும், போதனைகளை கேட்டும் கூட அவருக்கு எதிராக மாறினான். "என் பிராண சிநேகிதனும், நான் நம்பினவனும், என் அப்பம் புசித்தவனுமாகிய மனுஷனும், என்மேல் தன் குதிகாலைத் தூக்கினான்" (சங்.41:9; அப்.1:16) என்ற வேதவாக்கியம் இங்கு யூதாஸ் மூலம் நிறைவேறிற்று.

(v) நீ சொன்னபடித்தான் (மத்.26:25)

இங்கு நேரடியாகவே "நீ தான்" எனக்குறிப்பிட்டும் கூட மனம்திரும்பி மன்னிப்பைப் பெற்றுக் கொள்ளாமல் அந்த இடத்தைவிட்டு யூதாஸ் புறப்பட்டு சென்றான்.

இதிலிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டிய மூன்று பாடங்கள் என்னவென்றால்: முதலாவதாக: நானும் "இயேசுவோடு" தான் நடக்கிறேன் என்று கூறுபவர்கள் எல்லாருமே "இயேசுவுக்குள்" தான் நடக்கிறார்கள் என சொல்லிவிட முடியாது. ஏனென்றால் அவருக்குள் நிலைத்திருக்கிறேன் என்று சொல்லுகிறவன், அவர் நடந்தபடியே தானும் நடக்க வேண்டும் (I யோ.2:6) என யோவான் கூறுகிறான். மேலும் பவுல் கூறும்போது, "தன்னை நிற்கிறவன் என்று எண்ணுகிறவன் விழாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்கக்கடவன்" (I கொரி: 10:12) என்கிறார். இரண்டாவதாக: பஸ்காவின் போது

சாத்தான் அவனுக்குள் புகுந்தான் என காண்கிறோம் (யோ.13:27). நாம் கர்த்தருடைய பந்தியில் கலந்துக் கொண்டபிறகு, நமக்குள் சாத்தான் புகுந்துக்கொள்ளும் எந்த ஒரு வழியையும் ஏற்படுத்தாமல், கிறிஸ்துவுக்குள் நிலைத்து நிற்கும் வாழ்கையை வாழ வேண்டும்.

மூன்றாவதாக: பரிசுத்தாவியானவர் நமது பாவங்களை சுட்டிக்காட்டும் போது, எந்த ஒரு சாக்குபோக்கும் சொல்லாமல் உடனடியாக பாவங்களை அறிக்கை செய்து, தேவனுடைய மன்னிப்பையும் இரக்கத்தையும் பெற்றுக்கொள்ள வேண்டும் (நீதி.28:13).

**யார் இந்த யூதாஸ்காரியோத்து?**
**Who is this Judas Iscariot?**

இயேசு கிறிஸ்துவின் 12 சீஷர்களிலே, சீமோனின் குமாரனாகிய யூதாஸ் மட்டும் தான் எருசலேம் பட்டணத்தை சேர்ந்தவன், பிற சீஷர்கள் அனைவரும் கலிலேயாவை சேர்ந்தவர்கள். இவன் பட்டணத்திலிருந்து வந்தபடியால் மிகுந்த செல்வாக்கும், கல்வியறிவும் பெற்றிருந்தான். மேலும் இவனது சொந்த ஊர் எருசலேமின் தெற்கே ஏழு கிலோமீட்டர் தொலைவில் அமைந்திருந்த "கீரியோத்" ஆகும். ஆகவே ஊர் பெயரோடு சேர்த்து "யூதாஸ் காரியோத்து" என அழைக்கப்பட்டான். இந்த ஸ்காரியோத் என்பதற்கு "கத்தி வைத்திருப்பன்" என்று அர்த்தம். அக்காலத்தில் எப்படியாவது ரோமர்களை ஆட்சியிலிருந்து துரத்தவேண்டும் என்று யூதர்களுக்குள்ளே இருந்த பல தீவிரவாத அமைப்புகளும் போராடிக் கொண்டிருந்தார்கள். அப்படிப்பட்ட அமைப்புகளில் ஒன்று தான் "ஸ்காரியோத்துக்கள்", இவர்கள் எப்போதும் தங்களிடம் கத்தியை வைத்திருப்பார்கள். யூதாசும் இந்த இயக்கத்தில் முக்கிய பங்குள்ளவனாயிருந்தான். இன்னொரு தீவிரவாத இயக்கமான "செலொத்தேயர்கள்" (Zealots) என்ற இயக்கத்தின் முக்கிய பங்கு வகித்த "பரபாஸ்" இவனது நண்பனாயிருந்தான். இவன் ஏன் இயேசுவைக்காட்டிக் கொடுத்தான் என்பதற்கு வேத பண்டிதர்கள் இரண்டு காரணங்களை கூறுகிறார்கள்:

(i) எப்படியாவது ரோமர்களை வீழ்த்திவிட்டு, யூத சாம்ராஜ்யத்தை நிறுவவேண்டும் என்பதில் இவன் மிகுந்த வைராக்கியம் உள்ளவனாய் இருந்தான். இயேசுவை பின்பற்றுகிற

ஜனங்கள் நாளுக்கு நாள் அதிகமாய் இருந்தபடியாலும், இயேசு ஒரு வித்தியாசமான சிறந்த தலைவராயிருந்த படியாலும், அவர் ஒரு ராஜ்யத்தை நிறுவுவார் என நம்பியிருந்தான். இயேசு 5 அப்பம் 2 மீன்களை வைத்து 5000 புருஷர்கள் நிரம்பியிருந்த கூட்டத்தை போஷித்தவுடன், அவர்கள் இயேசுவை ராஜாவாக்க நினைத்தார்கள், ஆனால் இயேசுவோ அதை அறிந்து விலகி சென்றார் (யோ. 6:15). இவ்வாறு இயேசு பலமுறை விலகி சென்றபடியாலும், வேறு ஒரு ராஜ்யத்தை (தேவ ராஜ்யத்தை) குறித்து பிரசங்கம் பண்ணின படியாலும், அவரைக் காட்டிக் கொடுக்க முடிவெடுத்தான் யூதாஸ். அவன் என்ன நினைத்தான் என்றால், இயேசுவை நிச்சயமாக யாராலும் பிடிக்க முடியாது, ஏனென்றால் அவரே சில நேரம் மறைந்து போயிருக்கிறார். அதையும் மீறி பிடித்தாலாவது அங்கு கலகம் ஏற்படுவதின் மூலம் இயேசு தமது சாம்ராஜ்யத்தை நிறுவுவார் என எதிர்ப்பார்த்தான். ஆகவே தான் காட்டிக் கொடுத்த பிறகு தனது எண்ணம் நிறைவேறாமல் இயேசுவானவர் அடிக்கப்பட்ட போது, அவன் வாங்கின வெள்ளிப்பணத்தை தேவாலயத்தில் வீசி விட்டு நான்றுக் கொண்டு செத்தான். பணத்திற்காக மட்டுமே காட்டிக்கொடுத் திருப்பான் என்றால் இப்படி மரித்திருக்க வேண்டிய அவசியமில்லையே?

(ii) அவன் பிசாசாயிருந்தான் என இயேசுவே கூறுகிறார் (யோ.6:70). அவன் பண ஆசை பிடித்தவனாயிருந்தான் (யோ.12:6). பிசாசுபிடித்தவன், திருடன், பண ஆசை என்ற மூன்றும் இணைந்தவனாய் இருந்த படியால் காட்டிக்கொடுத்திருப்பான் என சிலர் கூறுகிறார்கள்.

மேற்கூறிய இரண்டு கருத்துக்களிலும் முதலாவது கருத்தை தான் அனேகர் ஏற்றுக் கொண்டுள்ளார்கள். ஆனால் எது எப்படியாயினும் சங்.41:9-ல் கூறப்பட்ட வேதவாக்கியம் நிறைவேறும் படியே இப்படி நடந்தது என நான் விசுவாசிக்கிறேன்.

## 2. பாதம் கழுவுதல் (Foot washing)

தம்மை ஒருவன் காட்டிக்கொடுப்பான் என இயேசு கூறியவுடன், சீஷர்களுக்குள்ளே அதை குறித்த விவாதங்களும், தங்களில் எவன் பெரியவனாயிருப்பான் என்ற வாக்குவாதமும் உண்டானது (லூக்.22:23, 24). ஏனெனில், சீஷர்கள் கூட ஒரு இராஜ்யத்தையும், அதின்

அதிகாரத்தையும் இயேசுவிடம் பல நேரங்களிலும் எதிர்ப்பார்த்தனர். ஆகவே தான் ஒருமுறை யோவான் மற்றும் யாக்கோபின் தாய் இயேசுவிடம் வந்து, உம்முடைய ராஜ்யத்திலே என் குமாரராகிய இவ்விரண்டுபேரில் ஒருவன் உமது வலது பாரிசத்திலும், ஒருவன் உமது இடது பாரிசத்திலும் உட்கார்ந்திருக்கும்படி அருள் செய்யவேண்டும் என கேட்டாள் (மத்.20:20-21). இதை கேட்ட மற்ற பத்து சீஷர்களும் அவர்கள் மேல் எரிச்சலானார்கள் (மத்.20:24).

இயேசு அவர்களை வாக்குவாதத்திலிருந்து திசைத்திருப்பி, பெரியவனாக விரும்புகிறவன் எப்படியிருக்க வேண்டும் என்பதை தமது கிரியையின் மூலம் வெளிப்படுத்தினார். அவர் கூறியதாவது, "உங்களில் பெரியவன் சிறியவனைப் போலவும், தலைவன் பணிவிடைக்காரனைப் போலவும் இருக்கக்கடவன்" (லூக். 22:26). வெறும் வார்த்தைகளினால் கூறியதோடு நின்றுவிடாமல், அதை தாமே செயல்படுத்தி காண்பித்தார். "போஜனத்தை விட்டெழுந்து, வஸ்திரங்களைக் கழற்றி வைத்து (மேல் வஸ்திரத்தை), ஒரு சீலையை எடுத்து அரையிலே கட்டிக் கொண்டு, பின்பு பாத்திரத்தில் தண்ணீர் வார்த்து, சீஷர்களுடைய கால்களை கழுவவும், தாம் கட்டிக்கொண்டிருந்த சீலையினால் துடைக்கவும் தொடங்கினார்" (யோ.13:4-5).

பொதுவாக யூதர்களின் வீடுகளில் வருகிற விருந்தினர்களை ஏற்றுக்கொள்ளும்போது அவர்களை வாழ்த்தி முத்தமிட்டு வரவேற்பார்கள் (நாம் கை குலுக்குவதை போல இருக்கலாம்!), பாதங்களை கழுவிட தண்ணீரும், தலையில் பூசிட எண்ணையும் அவர்களுக்கு கொடுக்கப்படும், அதன் பின்பு சிறப்பான உணவு பரிமாறப்படும் (லூக்.7:44). அந்த வேலையை எஜமானன் அல்ல, மாறாக வீட்டிலுள்ள அடிமை அல்லது வேலைக்காரன் தான் செய்துவந்தான். ஆகவே இங்கு எஜமானனாகிய இயேசு அடிமையின் கோலமாகி (பிலி.2:7) சீஷர்களின் பாதங்களை கழுவினார். இது நமது எஜமானில் அடங்கியுள்ள தாழ்மையைக் காட்டுகிறது.

இதன்மூலம் இயேசு சீஷர்களுக்கு கற்றுக்கொடுத்தப்பாடம் என்னவென்றால், பெரியவனாக வேண்டும் என விரும்புகிறவன் முதலில் தாழ்மையை தரித்துக்கொள்ள வேண்டும் என்பதே. ஏனெனில் தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார் (I பேது.5:5, 6)

## 3. புதிய உடன்படிக்கையும் நான்கு திராட்சைரச கோப்பைகளும் (New convenant and Four cups of wine)

எகிப்திலே ஆசரித்த முதல் பஸ்காவில் திராட்சை ரசம் பரிமாறப்படவில்லை. ஆனால் புசிக்க வேண்டிய விதத்தை குறித்து மோசே கூறும்போது, அரையிலே கச்சையை கட்டிக்கொண்டும், கால்களில் பாதரட்சை தொடுத்துக் கொண்டும் தீவிரமாய் புசிக்கவேண்டும் என்றார் (யாத்.12:11). உண்மையிலே, இப்படி புசிக்கும்போது திராட்சைரசம் பருக நேரமோ இடமோ இல்லை என்பது தான் நிஜம்.

எப்படியாயினும், இயேசுவின் காலக்கட்டத்தில் இந்த பஸ்கா இன்னொரு வடிவில் கடைபிடிக்கப்பட்டு வந்தது, அதுவே எல்லா யூத குடும்பங்களிலும் செய்யப்பட்டும் வந்தது. இந்த கூடுகையில் "நான்கு கோப்பை திராட்சை ரசம்" (Four Cups of Wine) பரிமாறப்பட்டன.

**ஏன் நான்கு கோப்பை திராட்சை ரசம்?**

தேவனாகிய கர்த்தர் இஸ்ரவேல் ஜனங்களை எகிப்திலிருந்து மீட்டுக்கொண்டபோது நான்கு வாக்குதத்தங்களை கொடுத்திருந்தார் (யாத்.6:6-8).

- எகிப்தின் சுமைகளை நீக்குவேன் (I shall take you out of Egypt)
- எகிப்திலிருந்து உங்களை விடுவிப்பேன் (I shall rescue you from Egypt)
- எகிப்திலிருந்து உங்களை மீட்டுக்கொள்வேன் (I shall Redeem you from Egypt)
- உங்களுக்கு ஒரு தேசத்தை சுதந்திரமாக கொடுப்பேன் (I shall give you a nation)

மேற்கூறப்பட்ட நான்கு வாக்குதத்தங்களையும் நினைவுக் கூறும் வகையில் நான்கு முறை திராட்சை ரசத்தை பருகுவது வழக்கமாயிருந்தது. எப்படி அவர்கள் நான்கு கோப்பைகளிலிருந்து திராட்சை ரசத்தை பருகினார்கள் என்பதை சுருக்கமாக கீழே காணலாம்.

### (a) ஐக்கியத்தின் பாத்திரம் (Cup of fellowship)

இந்த முதல் கோப்பையை கையில் எடுத்து ஜெபித்துவிட்டு பரிமாறினார்கள். இந்த பாத்திரத்தை தான் இயேசு மறுத்துவிட்டு, பின்வருமாறு கூறினார்: நீங்கள் இதை வாங்கி, உங்களுக்குள்ளே பங்கிட்டுக் கொள்ளுங்கள்; தேவனுடைய ராஜ்யம் வருமளவும் நான் திராட்சப்பழரசத்தைப் பானம் பண்ணுவதில்லையென்று உங்களுக்கு சொல்லுகிறேன்" (லூக்.22:17,18). தேவராஜ்யம் ஸ்தாபிக்கப்படும் போது நடைபெறபோகும் இந்த விருந்தை குறித்து யூதர்களுடைய பாரம்பரியம் கூட பேசுகிறது: "சேனைகளின் கர்த்தர் இந்த மலையிலே சகல ஜனங்களுக்குள்ளும் ஒரு விருந்தை ஆயத்தப்படுத்துவார்; அது கொழுமையான பதார்த்தங்களும், பழமையான திராட்சரசமும், ஊனும் நிணமுள்ள பதார்த்தங்களும், தெளிந்த பழமையான திராட்சரசமும் நிறைந்த விருந்தாயிருக்கும்" (ஏசா. 25:6).

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து இந்த விருந்தை குறிப்பிட்டு பேசுவதால், அவரை பின்பற்றும் அவருடைய ஜனங்களும் கூட, அவருடைய ராஜ்யம் வரும்போது இந்த பரலோக சந்தோஷத்தில் (ஆட்டுகுட்டியானவருடைய கலியாண விருந்தில்) பங்கு பெறுவார்கள் என்பது உறுதியாகிறது (வெளி.19:9).

இயேசு இப்படி சொன்னபிறகு, ஒவ்வொருவரும் கசப்பான கீரையை உப்புதண்ணீரில் அல்லது கசப்பு காடியில் தோய்த்து வழக்கத்தின்படியே புசித்தனர். இந்த நேரத்தில் குடும்பத்தலைவர் தனது கைகளை கழுவுவது வழக்கமாயிருந்தது. ஆகவே அதற்கு பதிலாக தான் இயேசு தமது சீஷர்களின் கால்களை கழுவி தமது சேவை மனப்பான்மையை வெளிப்படுத்தினார். இதன் பிறகு குடும்பத்தலைவர் புளிப்பில்லா அப்பத்தை எடுத்து பிட்கவேண்டும். அங்கே இருக்கும் மூன்று அப்பங்களில் நடுவில் உள்ளதை எடுத்து பிட்டு, நேர்பாதியை பிறகு பயன்படுத்தும்படி ஒதுக்கி வைப்பார்கள். அப்போது அந்த வீட்டில் உள்ள எல்லோரிலும் வயதில் சிறிய நபர், "இதை நாம் ஏன் செய்கிறோம்"? என்ற கேள்வியை கேட்க வேண்டும், அதற்கு குடும்ப தலைவர் பதிலும் கூற வேண்டும் (இதை நாம் ஏற்கனவே பார்த்துவிட்டோம்). முதல் பாத்திரத்தின் முடிவின் போது அவர்கள் சங்கீதம் : 113 மற்றும் 114-யை பாடுவது வழக்கமா யிருந்தது.

**(b) விடுதலையின் பாத்திரம் (Cup of deliverance)**

இந்த இரண்டாவது கோப்பையிலிருந்து பருகும் நேரத்தில் கசப்புக்கலந்த கீரையை உப்புத்தண்ணீரில் அல்லது காடியில் தோய்த்து பரிமாறுவது வழக்கமாயிருந்தது. இயேசு இதை தான் யூதாசுக்கு கொடுப்பதை காண்கிறோம் (யோ. 13:26). இப்போது அனைவரும் தங்கள் கைகளை கழுவி கொள்ள வேண்டும். பரிமாறப்படும் கசப்புக் கீரையை "Maror" என்று அழைத்தனர். இங்கு தான் பஸ்காவின் உச்சக்கட்டத்தை அடைகிறோம், அதாவது நெருப்பினால் சுட்ட மாமிசம் (Roasted in fire) பரிமாறப்படுகிறது. இந்த வகையான உணவு தான் இன்று "Grill Mutton" என அழைக்கப்படுகிறது. ஆகவே இந்த Grill Chicken / Grill Mutton போன்ற உணவு வகைகளின் ஆரம்பம் தேவனால் தான் ஏற்படுத்தப்பட்டது என்பது மிகுந்த ஆச்சரியமாயிருக்கிறதல்லவா? இந்த வகை உணவுகளில் கொழுப்புகள் தகனிக்கப்படுவதால் பலவிதமான தீங்குகள் உடலில் ஏற்படாதவண்ணம் தடுக்கப்படுகிறது. ஆம், நாம் பண்டிகைகளை கொண்டாடி, விருந்தில் கலந்துக் கொள்ளும் போதும் கூட தேவன் நமது உடல்நலனில் அக்கறையுள்ளவராய் இருக்கிறார் என்பதையும் நாம் இதன் மூலம் புரிந்துக் கொள்ள முடிகிறது. இவைகளின் முடிவில் சங்கீதம் 115 & 116-யை பாடுவது வழக்கமாயிருந்தது.

**(c) ஆசீர்வாதத்தின் பாத்திரம் (Cup of Blessing)**

இரவு உணவுக்கு பின்னர் (போஜனம் பண்ணிய பிறகு) இயேசு இந்த மூன்றாவது பாத்திரத்தை பரிமாறுகிறார் (லூக். 22:20; I கொரி: 11:25). முதல் பாத்திரத்தை பரிமாறும் போது, பாதியாக உடைக்கப்பட்டு ஒதுக்கி வைக்கப்பட்ட அப்பம் இப்போது எடுக்கப்படுகிறது. எல்லோரும் இந்த அப்பத்தை சாப்பிட வேண்டும். இங்கு தான் இயேசு ஒரு புதிய பாத்திரத்தை அதாவது "புது உடன்படிக் கையின் பாத்திரத்தை" (Cup of new covenant) தொடங்கினார். இந்த புதிய உடன்படிக்கையின் பாத்திரம் தான் கர்த்தருடைய பந்தி என்றும் திருவிருந்து என்றும் அழைக்கப்படுகிறது. இது எல்லா காலத்திலும் உள்ள, எல்லா சீஷர்களுக்காகவும் இயேசு ஏற்படுத்திய ஒரு புதிய சடங்காகும். பின்பு அவர் அப்பத்தை எடுத்து, ஸ்தோத்திரம் பண்ணி, அதைப்பிட்டு, அவர்களுக்குக் கொடுத்து: இது உங்களுக்காகக் கொடுக்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது; என்னை

நினைவுக்கூரும்படி இதை செய்யுங்கள் என்றார் (லூக்.22:19). போஜனம் பண்ணின பின்பு அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் கொடுத்து: இந்த பாத்திரம் உங்களுக்காகச் சிந்தப்படுகிற என்னுடைய இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது என்றார் (லூக். 22:20). இவ்வாறு நாம் அவர் வருமளவும் செய்யும் படியாக, இயேசு ஒரு புதிய உடன்படிக்கையை ஏற்படுத்தினார்.

இந்த பாத்திரத்தில் பானம்பண்ணும் போது தான் யூதர்கள் பொதுவாக ஒரு சிறுவனை வெளியே அனுப்பி எலியா வந்திருக்கிறாரா என பார்க்க சொல்லுவது வழக்கம் (இதை குறித்த குறிப்பை நாம் எற்கனவே பார்த்தோம்). இந்த பாத்திரத்தை முடிக்கும் போது சங்கீதம் 117 & 118-யை பாடுவது வழக்கமாயிருந்தது.

**(d) ஒப்படைக்கும் பாத்திரம் (Cup of Commitment)**

கடைசியாக பருகபடும் பாத்திரம் இது. ஆனால் இயேசு இந்த நான்காவது பாத்திரத்திலிருந்து பானம்பண்ணவில்லை. ஆனால் கெத்செமனே தோட்டத்தில் வைத்து இதை குடிப்பதை போன்ற உருவக வார்த்தைகளை பயன்படுத்தினார் (லூக். 22:42). இதை தான் இயேசு சீஷர்களிடம் கூறும் போது நான் குடிக்கும் பாத்திரத்தில் நீங்கள் பானம்பண்ணக்கூடுமோ? என்று கேட்டார். இது தியாகமான பாடு மரணத்தை குறிக்கிறது. இந்த பாத்திரத்தை பயன்படுத்தியவுடன் ஏற்கனவே பாடிய அல்லேலூயா பாடல்களான சங்.113 முதல் 118 வரையும், மற்றும் பெரிய அல்லேலூயா பாடல் என அழைக்கப்படும் சங்.136 ஐயும் பாடி முடிப்பது வழக்கம். அநேகமாக இந்த பாடல்களை குறித்து தான் மத்.26:30 குறிப்பிட்டு இருக்க வேண்டும், "அவர்கள் ஸ்தோத்திரப்பாட்டை பாடின பின்பு, ஒலிவமலைக்கு புறப்பட்டு போனார்கள்".

## சீமோன் பேதுருவுக்கு எச்சரிப்பு (Warning to Simon Peter)

இயேசு சீமோன் பேதுருவிடம், "சீமோனே, சீமோனே இதோ, கோதுமையைச் சுளகினால் புடைக்கிறது போலச் சாத்தான் உங்களைப் புடைக்கிறதற்கு உத்தரவு கேட்டுக் கொண்டான். நானோ உன் விசுவாசம் ஒழிந்து போகாதபடிக்கு உனக்காக வேண்டிக்கொண்டேன்; நீ குணப்பட்டபின்பு உன் சகோதரரை ஸ்திரப்படுத்து" என்றார் (லூக்.22:31, 32).

மீண்டும் அவர் சீஷர்களிடம், "பிள்ளைகளே, இன்னும் கொஞ்சக்காலம் நான் உங்களுடனே கூட இருப்பேன், நீங்கள் என்னைத் தேடுவீர்கள்; ஆனாலும் நான் போகிற இடத்துக்கு நீங்கள் வரக்கூடாதென்று நான் யூதரோடே சொன்னதுபோல இப்போது உங்களோடும் சொல்லுகிறேன். நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்; நான் உங்களில் அன்பாயிருந்தது போல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிற புதிதான கட்டயையை உங்களுக்குக் கொடுக்கிறேன். நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லோரும் அறிந்துகொள்வார்கள்" என்றார் (யோ.13:33-35).

இயேசுவின் இந்த உருக்கமான வார்த்தைகளை பேதுரு கேட்டவுடனே, "ஆண்டவரே நீர் எங்கே போகிறீர்" என்றான். இயேசு அவனிடம், "நான் போகிற இடத்துக்கு இப்பொழுது நீ என் பின்னே வரக்கூடாது, பிற்பாடு என்பின்னே வருவாய்" என்றார். இங்கு மறுபடியும் இயேசு தமது மரணத்தைக்குறித்து கூறினார். அப்பொழுது பேதுரு, "உமது நிமித்தம் எல்லாரும் இடறலடைந்தாலும், நான் இடறலடையேன், காவலிலும் சாவிலும் உம்மை பின்பற்றி வர ஆயத்தமாயிருக்கிறேன், உமக்காக என் ஜீவனையும் கொடுப்பேன்" என்றான் (லூக் 22:33, யோ.13:37).

அதற்கு இயேசு அவனை நோக்கி, "பேதுருவே இன்றைக்கு, சேவல் கூவுகிறதற்கு முன்னே, நீ என்னை அறிந்திருக்கிறதை மூன்றுதரம் மறுதலிப்பாய் என்று உனக்கு சொல்லுகிறேன்" என்றார் (லூக்.22:34, யோ.13:38).

## பட்டயத்தை வாங்க வேண்டும்? (Buy sword?)

இயேசு சீஷர்களிடம் தம்முடைய போதனையை நினைவுக் கூரும்படி செய்தார். அதாவது ஆரம்பத்தில் ஊழியத்துக்கு அனுப்பும் போது, "வழிக்கு தடியையாவது, பையையாவது, அப்பத்தையாவது, கச்சையாவது எடுத்துக் கொண்டு போக வேண்டாம்; இரண்டு அங்கிகளைக் கொண்டு போகவும் வேண்டாம்; உங்களை ஏற்றுக்கொள்ளும் வீட்டிலே தானே நீங்கள் தங்கியிருந்து, அவர்கள் கொடுக்கிறவைகளைப் புசித்துக்குடியுங்கள், வேலையாள் தன் கூலிக்குப் பாத்திரவானாயிருக்கிறான்" என கூறியிருந்தார் (லூக். 9:1-6; 10:1-8). ஆனால் இப்போது அதற்கு நேர்மாறாக பணப்பையையும்

(Purse) சாமான் பையையும் (Bag) ஒரு பட்டயத்தையும் (Sword) எடுத்துச் செல்லும்படி கூறுகிறார்.

ஒரு பட்டயத்தை வாங்கி கொள்ளுங்கள் என்று இயேசு கூறியதின் பொருள் என்ன? பிறருக்கு எதிராக அவர்கள் பட்டயத்தை பயன்படுத்த வேண்டும் என்று நிச்சயமாக அவர் கூறவில்லை. ஏனெனில் அது அவருடைய போதனைகளுக்கு எதிரான செயல் என்பதை கீழ்காணும் வசனங்கள் மூலம் அறிந்துக் கொள்ளலாம்.

> "என் ராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதல்ல, என் ராஜ்யம் இவ்வுலகத்திற்கு உரியதானால், என் ஊழியக்காரர் போராடியிருப்பார்களே" (யோ.18:36).
>
> "உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்" (மத்.5:44)
>
> "ஒருவன் உன்னை வலதுகன்னத்தில் அறைந்தால்,
> அவனுக்கு மறுகன்னத்தையும் திருப்பிக்கொடு" (மத்.5:39)
>
> "பட்டயத்தை எடுக்கிற யாவரும் பட்டயத்தால் மடிந்து போவார்கள்" (மத்.26:52).

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து எப்போதும் அகிம்சை முறையை ஆதரிப்பவர் ஆவார். அவர் ஒருபோதும் அகிம்சைக்கு எதிராக கருத்துக்களை கூறியதில்லை ஆகவே தான் இந்தியநாட்டு தலைவர்களில் ஒருவரான "காந்தியடிகள்" கூறும் போது, "நான் இயேசு கிறிஸ்துவின் அகிம்சை முறையை ஏற்றுக்கொள்கிறேன்" என்றார். இயேசு உண்மையிலே பட்டயத்தை பயன்படுத்த கூறியிருந்தால் "ஒன்றை மாத்திரம்" வாங்க சொல்லியிருக்க மாட்டார். ஒரே ஒரு பட்டயத்தை வைத்து எதையும் பெரிதாக செய்யமுடியாது என நமக்கு தெரியும். ஒரே ஒரு பட்டயத்தை தான் இயேசு வாங்க சொன்னார் (லூக். 22:36). அப்பொழுது இரண்டு பட்டயம் இருப்பதாக சீஷர்கள் சொன்னபோது "அது போதும்" என இயேசு கூறினார் (லூக்.22:38). கெத்செமனே தோட்டத்தில் வைத்துக் கூட அவர் கொண்டுவரச் சொன்ன அந்த பட்டயத்தை உறையில் போடச்சொல்லி கடிந்துக் கொள்வதை காணலாம் (மத்.26:52).

அப்படியானால் எதற்காக பட்டயம் வாங்க சொன்னார்? இயேசுவே அதற்குரிய விளக்கத்தை கூறுகிறார், "அக்கிரமகாரரில் ஒருவனாக எண்ணப்பட்டார் என்று எழுதியிருக்கிற வாக்கியம் என்னிடத்தில் நிறைவேறவேண்டியதென்று உங்களுக்குச்

சொல்லுகிறேன். என்னைப்பற்றிய காரியங்கள் முடிவு பெறுங்காலம் வந்திருக்கிறது" என்றார் (லூக். 22:37). ஆகவே ஏசா. 53:12-ல் கூறப்பட்ட வேத வாக்கியம் இயேசுவில் நிறைவேறும்படி இப்படி சொன்னார் என்பது தெளிவாகிறது.

## இயேசுவின் கடைசி ஆறுதலின் வார்த்தைகள் (நான் உங்களோடு)

## The Last consolation words of Jesus [I am with you]

யோவான் 14-ம் அதிகாரம் முழுவதும் இயேசு தமது சீஷர்களுக்கு கூறும் ஆறுதலின் வார்த்தைகளாய் அமைந்துள்ளது. யோவா 13-ம் அதிகாரத்தில், ஒருவன் தன்னைக் காட்டிக் கொடுப்பான் என்றும், இன்னொருவன் தன்னை மறுதலிப்பான் என்றும், நான் போகிறேன் என்றும் இயேசு கூறிய வார்த்தைகள் மூலம் சீஷர்கள் மிகவும் கலங்கி போய் இருந்தார்கள். ஆகவே இயேசு அவர்களை உற்சாகபடுத்தும்படியாக உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக என்று அவர்களை ஆறுதல் படுத்தினார்.

நமது உள்ளங்களிலிருந்து கவலையையும், கலக்கத்தையும் அகற்றுவது எப்படி? விசுவாசிப்பதின் மூலம் மட்டுமே. ஆகவே தான் இயேசு சொன்னார், "தேவனிடத்தில் விசுவாசமாய் இருங்கள், என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள்" (யோ.14:1). பொதுவாக யூதர்கள் எல்லாருமே தேவ விசுவாசம் உள்ளவர்களாய் தான் இருந்தார்கள். சீஷர்களும் யூதர்களாயிருந்தபடியால் தேவனிடம் உள்ள விசுவாசம் அவர்களுக்குள்ளேயும் இருந்தது. ஆனால் இங்கே இயேசு "என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள்" என்று கூறுகிறார். இயேசு தமது சீஷர்களிடம் கூறியது எளிதானது அல்ல. அவர் ஒரு குற்றவாளியைப் போல சிலுவையில் மரிக்க போகிறார். சர்வவல்லவரான தேவனை விசுவாசிப்பது வேறு, ஒரு அடிமையை போல மரிக்கும் இயேசுவை விசுவாசிப்பது வேறு. ஆனாலும் இயேசு தன்னை விசுவாசிக்கும் படி கூறினார். ஏனென்றால் இயேசுவை நம்புவதும், தேவனை நம்புவதும் ஒன்றே. இதை அவர்கள் புரிந்துக் கொள்ளும்படி இவ்வாறு சொன்னார்.

அதுமட்டுமல்ல, "நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணினபின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும்

இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக் கொள்ளுவேன்" என்றார் (யோ.14:3). இந்த வார்த்தையை இயேசு யூதர்களின் கலாச்சார பின்னணியத்திலிருந்து பேசுகிறார். இதை நாம் புரிந்துக் கொள்ள வேண்டுமானால், யூதர்களின் திருமண கலாச்சாரத்தை முதலில் புரிந்துக் கொள்ள வேண்டும். யூதர்களின் திருமணம் மிகவும் எளிமையாக நடக்கும். திருமணத்திற்கு பிந்தின விருந்தும், திருமணத்துக்கு முந்தைய நிச்சயத்தார்த்தமும் மிகவும் பிரமாண்டமாக நடத்துவார்கள். நிச்சயத்தார்த்தத்தின் போது மணமகன், மணமகள் கையில் வெள்ளிக்காசுகளை கொடுப்பது வழக்கம். இதை அவள் மாலையாக அணிந்தோ, அல்லது பத்திரமாகவோ வைத்திருக்க வேண்டும், இதை தொலைத்து போட்டால் திருமணமே நின்றுவிடும். ஆகவே தான் வெள்ளிகாசை தொலைத்த பெண் அதை கவனமாக தேடினாள் என லூக்.15:8-ல் காண்கிறோம். இந்த நிகழ்வுக்கு பிறகு மணமகன் தனது வீட்டிற்கு திரும்பி சென்று தனக்கென்று சொந்தமாக ஒரு வீட்டைக் கட்ட வேண்டும். கட்டிமுடித்தபிறகு தனது தகப்பனாரின் வாக்கின்படி, திடீரென யாருக்கும் தெரியாமல் மணமகளை அழைத்துவரவேண்டும். இந்த நிகழ்ச்சி இரகசியமானதாகவே இருக்கும். எப்போது மணவாளன் வந்தாலும் கூட செல்லும்படி மணமகள் எப்போதும் ஆயத்தமாய் இருக்க வேண்டும். மணமகன் மணமகளின் வீட்டிற்கு அருகில் வரும் போது எக்காள சத்தத்தை தொனிக்கப்பண்ணுவான், உடனடியாக தீவட்டியும் எற்றிக் கொண்டு தான் ஏற்கனவே கொடுத்த வெள்ளிகாசையும் எடுத்து கொண்டு அவள் மணவாளனை எதிர்கொண்டு வரவேண்டும். இவ்வாறு மணமகன் தனது இல்லத்துக்கு மணவாட்டியை அழைத்து செல்வது வழக்கம். அதன்பிறகு தான் எல்லோருக்கும் அழைப்பு விடுத்து ஏழு நாட்கள் விருந்து கொண்டாட்டங்கள் நடைபெறும்.

ஆகவே தான் இயேசு, "நான் போய் ஒரு ஸ்தலத்தை ஆயத்தம் செய்து விட்டு காத்திருக்கும் மணவாட்டியாம் சபையை சேர்த்துக் கொள்ள மீண்டும் வருவேன்" என்றார். இது உண்மையிலே சீஷர்களுக்கு ஆறுதலாய் அமைந்தது.

மூன்று விதங்களில் திரித்துவ தேவன் சீஷர்களோடு இருப்பதை இயேசு உறுதிப்படுத்துகிறார்.


(i) நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாக உங்களோடு இருப்பேன்

(ii) தேற்றரவாளனாகிய பாரிசுத்தாவியானவர் உங்களோடு இருந்து உங்களை போதித்து நடத்துவார்.

(iii) என்னை கண்டவன் பிதாவை கண்டான்; நான் பிதாவிலும், பிதா என்னிலும் இருக்கிறார்; நாங்கள் வந்து அவனிடத்தில் (உங்களிடத்தில்) வாசம் பண்ணுவோம்.

இவைகளை சொன்னவுடன், "எழுந்திருங்கள் இவ்விடம் விட்டு போவோம் வாருங்கள்" என்று இயேசு அவர்களை அழைத்துக் கொண்டு கெதரோன் பள்ளதாக்குக்கு நேராக சென்றார் (யோவா. 14:31).

■■■



## அத்தியாயம் - 2

# கெதரோன் பள்ளதாக்கு நிகழ்வுகள்
# (Events at the valley of Kidron)

(மத். 26:30-35; மாற்: 14:26-31; யோவா: 15:1-17:26)

மேல்வீட்டறையில் இயேசுவும் சீஷர்களும் பஸ்காவை ஆசரித்துவிட்டு, அவர்கள் ஸ்தோத்திரப்பாட்டைப்பாடின பின்பு (115 முதல் 136 வரை உள்ள சங்கீதங்கள்), ஒலிவ மலைக்கு புறப்பட்டு போனார்கள். அவர்கள் போகும் பாதையில் ஒரு பள்ளதாக்கு இருந்தது. அதற்கு கெதரோன் பள்ளத்தாக்கு என்று பெயர். இந்த பள்ளதாக்கை தாண்டி செல்லும் போது இயேசு தமது சீஷர்களுக்கு மறுபடியும் பல அறிவுரைகளையும், எச்சரிப்புகளையும் கொடுத்துக் கொண்டே சென்றதை காண்கிறோம். முடிவிலே அவர்களுக்காக சிறப்பான ஒரு ஜெபத்தையும் ஏறெடுத்தார். இந்த பள்ளத்தாக்கில் வைத்து நடந்த சில நிகழ்வுகளை கீழே காணலாம்.

### இயேசு பேதுருவை மீண்டும் எச்சரித்தல்
### (Jesus' second warning to Peter)

இன்றைக்கு சேவல் கூவுகிறதற்கு முன்னே, நீ மூன்றுதரம் என்னை மறுதலிப்பாய் என இயேசு ஏற்கனவே மேல்வீட்டறையில் வைத்து பேதுருவை எச்சரித்திருந்தார். மறுபடியும் இயேசு இங்கு வைத்து, "மேய்பனை வெட்டுவேன், ஆடுகள் சிதறடிக்கப்படும், நீங்கள்

எல்லாரும் என்னிமித்தம் இடறலடைவீர்கள், ஆகிலும் நான் உயிர்த்தெழுந்த பின்பு, உங்களுக்கு முன்னே கலிலேயாவுக்கு போவேன்" என்ற தீர்கதரிசன வார்த்தைகளை கூறி எச்சரித்தார் (மாற்.14:28, 29; சகரி.13:7). இந்த வார்த்தைகளை கேட்டவுடன் பேதுரு, "நான் உம்மோடு மரிக்க வேண்டியிருந்தாலும் உம்மை மறுதலிக்கமாட்டேன்" என்றான். சீஷர்கள் எல்லோரும் அப்படியே சொன்னார்கள்.

இயேசு அவனுக்கு பிரதியுத்தரமாக, "இன்றைக்கு சேவல் கூவுகிறதற்கு முன்னே, நீ மூன்றுதரம் என்னை மறுதலிப்பாய்" என மீண்டும் சொன்னார். இயேசு அவர்களை மீண்டுமாக எச்சரிப்பதின் மூலம், அவர்கள் மேல் உள்ள அன்பை வெளிப்படுத்துகிறார். நாமும் கூட எத்தனை நெருக்கங்கள் நமது வாழ்வில் வந்தாலும், இயேசுவை மறுதலிக்காமல் இயேசுவுக்காக வாழ வேண்டும் என்பது மீண்டும் இங்கு உறுதிப்படுத்தப்படுகிறது.

## இயேசுவின் எதிர்பார்ப்பு (நீங்கள் என்னோடு)
## The Expectation of Jesus (You are with me)

யோவான் 14-ம் அதிகாரத்தில் "நான் உங்களோடு" இருப்பேன் என்ற இயேசு, யோவான் 15-ம் அதிகாரத்தில் "நீங்கள் என்னோடு" இருக்க வேண்டும் என எதிர்பார்கிறார். இந்த பள்ளதாக்கில் வைத்து இயேசு இதை தமது சீஷர்களுக்கு விளக்கமாக கூறுவதை காணலாம். "என்னில் நிலைத்திருங்கள், நானும் உங்களில் நிலைத்திருப்பேன்; கொடியானது திராட்சைச்செடியில் நிலைத்திராவிட்டால் அது தானாய்க் கனிக்கொடுக்கமாட்டாதது போல, நீங்களும் என்னில் நிலைத்திராவிட்டால், கனிக் கொடுக்க மாட்டீர்கள்" என்றார் (யோ.15:4). நாம் அவரோடு இருந்தால் மட்டுமே அவருக்குள் வளரமுடியும்.

"நான் மெய்யான திராட்சைச்செடி" (I am the True vine) என இயேசு கூறினார் (15:1). இதன் அர்த்தத்தை நம்மால் ஒருவேளை திடீரென விளங்கி கொள்ள முடியாமல் இருக்கலாம். ஆனால் இஸ்ரவேல் தேசத்தில் உள்ள ஒரு சிறுவனை அழைத்துக் கேட்டாலே இதன் அர்த்தத்தை உடனடியாக கூறிவிடுவான். ஏனெனில் "திராட்சைச்செடி" என்பது "இஸ்ரவேலை" குறிக்கும் (ஏசா.5). நானே மெய்யான திராட்சைச் செடி என்றால் "நானே மெய்யான இஸ்ரவேல்"

என இயேசு கூறுகிறார். இஸ்ரவேலர் எதை செய்ய தவறினார்களோ, அதை இயேசு செய்து முடித்தார். ஆகவே அவரே உண்மையான இஸ்ரவேலனாக மாறினார். ஆகவே யாரெல்லாம் இயேசுவோடு சேர்ந்து வாழ விரும்புகிறார்களோ, அவர்கள் மட்டுமே உண்மையான இஸ்ரவேலனாக மாற முடியும், அது புறஜாதியானாக இருந்தால் கூட பரவாயில்லை. ஆகவே நாம் இயேசுவோடு இருக்கும் செயலை தெரிந்துக் கொள்ள வேண்டியது மிகவும் அவசியமானதாகும்.

கிறிஸ்துவோடு உள்ள வாழ்க்கை என்பது ஞாயிற்றுகிழமை ஆராதனைகளில் மட்டுமல்ல, நமது அனுதின வாழ்வில் அதை நாம் பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டியது இன்றியமையாததாகும். ஸ்மித் விக்கிள்ஸ்வர்த் இவ்வாறு கூறியுள்ளார், "நாம் நமது உடல் ஆரோக்கியமாக இருக்கும்படி தினமும் மூன்றுவேளையும் சூடான போஜனத்தை சாப்பிடுகிறோம். ஆனால் வாரத்தில் ஒரே ஒரு ஆவிக்குரிய சாப்பாட்டை சாப்பிட்டு விட்டு, ஏன் என்னால் ஆவிக்குரிய வளர்ச்சியை பெற முடியவில்லை என ஏங்குகிறோம்". இது மிகவும் உண்மையானதாகும். யோவான் 14-ம் அதிகாரத்தில் நான் உங்களோடு இருப்பேன் என்றும், 15-ம் அதிகாரத்தில் நீங்கள் என்னோடு இருக்க வேண்டும் என்றும் இயேசு கூறியுள்ளார். நாம் அவரோடும், அவர் நம்மோடும் இணைந்து வாழும் வாழ்க்கையின் மூலம் தான் நாம் நிலையான வாழ்வை பெறமுடியும். இதை நான் மூன்று உதாரணங்கள் மூலம் விளக்க விரும்புகிறேன்.

(i) பூனை கொள்கை (Cat Theory): சில மார்க்கத்தை சேர்ந்தவர்கள் (Islam) கூறுவது என்னவென்றால், "எல்லாம் அவன் செயல்". அப்படியென்றால் நாம் சும்மா இருந்தால் போதும் எல்லாவற்றையும் அவன் (கடவுள்) பார்த்துக்கொள்வார் என்பதாகும். இது பூனைக்கும் தனது குட்டிகளுக்கும் இடையே உள்ள உறவை போன்றதாகும். புதியதாய் பிறந்த பூனைக் குட்டிகள் எதைக்குறித்தும் கவலைப்படவேண்டிய அவசியமில்லை. தாய் பூனை மிகுந்த அக்கறையோடு குட்டி பூனைகளின் கழுத்து பகுதியை கவ்வி, தான் விரும்பும் பாதுகாப்பான இடத்துக்கு கொண்டு செல்லும் காட்சியை நாம் பார்த்திருக்கிறோம் அல்லவா? இங்கு எல்லாமே தாயின் செயலாய் இருக்கிறது.

(ii) குரங்கு கொள்கை (Monkey Theory): வேறு சில மார்க்கத்தை சேர்ந்தவர்கள் (Hindu) கூறுவது என்னவென்றால், "நமது கர்மங்கள் (புண்ணியங்கள்) மூலம் மட்டுமே நாம் இறைவனை அடைய

முடியும்" என்பதாகும். இங்கு இறைவன் சும்மா இருக்கிறார், மனிதனுடைய கிரியைகள் (deeds) மேலோங்கி நிற்கிறது. ஆகவே தங்களது உடலை வருத்திக்கொள்வதாலும், புண்ணிய ஸ்தலங்களுக்கு செல்வதாலும், பலவிதமான வழிபாடுகளையும் செய்வதின் மூலமும் இறைவனை அடையலாம் என எண்ணுகிறார்கள். சுருக்கமாக கூறினால், மனிதனுடைய கிரியைகளினால் இறைவனை அடையலாம் என்பதாகும். இது குரங்குகளுக்கும் அதன் குட்டிகளுக்கும் உள்ள உறவை போன்றதாகும். குரங்குகள் ஒரு மரத்திலிருந்து இன்னொரு மரத்திற்கு தாவும்போதும், வேறு இடங்களில் ஓடும்போதும், குட்டிகள் தான் தாய் குரங்கை இறுக்கமாக பிடித்துக் கொள்கிறது. தாய் குரங்குக்கு இங்கு எந்தவேலையுமே இல்லை. தன்னைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டுமானால் குட்டிகளே தங்கள் தாயை இறுக்கமாக பிடித்துக் கொள்ள வேண்டும். ஆனால் வேதம் சொல்லுகிறது, "நாங்கள் அனைவரும் தீட்டானவர்கள் போல இருக்கிறோம், எங்களுடைய நீதிகளெல்லாம் அழுக்கான கந்தைபோல இருக்கிறது, நாங்கள் அனைவரும் இலைகளைப்போல் உதிருகிறோம், எங்கள் அக்கிரமங்கள் காற்றைப்போல் எங்களை அடித்துக் கொண்டு போகிறது" (ஏசா.64:6). அதாவது நமது நீதியினால் நாம் எதையும் தேவனிடமிருந்து பெற்றுக்கொள்ள முடியாது.

(iii) கோழி கொள்கை (Hen Theory): நாம் கிறிஸ்தவர்கள் (Christians) கூறுவது என்னவென்றால், "நாம் இயேசுவை விசுவாசித்து, அவரிடம் வரும்போது அவர் தமது கிருபையினால் நம்மை இரட்சிக்கிறார்" என்பதேயாகும். இது கோழி மற்றும் அதன் குஞ்சுகளின் உறவை போன்றதாகும். கோழியும் அதன் குஞ்சுகளும் உணவு சாப்பிடும் போது, கழுகு அல்லது காகம் போன்ற பறவைகள் வந்து குஞ்சுகளை தூக்கி செல்ல முயல்வதுண்டு. அப்போது தாய் கோழியானது மிகவும் சத்தமிட்டு அங்குமிங்கும் ஓடி எச்சரிப்பதை காணமுடியும். இந்த எச்சரிப்பை கேட்டு, ஓடி வந்து தாயின் சிறகுகள் கீழே வந்துசேரும் குஞ்சுகளை தாய் கோழி தனது உயிரைக் கொடுத்தாவது காப்பாற்றும். இந்த எச்சரிப்பின் சத்தத்தை அலட்சியம் செய்து தொலைவில் இருக்கும் குஞ்சுகள் பறவைகளால் தூக்கி செல்லபடுவதுமுண்டு.

"வருத்தப்பட்டு பாரம் சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள் நான் உங்களுக்கு இளைப்பாறுதல்

தருவேன்" (மத்.11:28) என இயேசு சொன்னார். நாம் அவரிடம் வரும்போது அவர் நமக்கு இளைப்பாறுதல் அளிக்கிறார். "தேவன், தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரை தந்தருளி உலகத்தில் அன்புகூர்ந்தார் (யோ.3:16). நாம் இயேசுவை விசுவாசிக்கும்போது, நமக்கு நித்திய ஜீவன் அருளப்படுகிறது.

"இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்; ஒருவன் என் சத்தத்தைக் கேட்டு, கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடே போஜனம் பண்ணுவேன்" (வெளி.3:20) இங்கு நாம் கதவை திறந்தால், அவர் நம்மிடம் வருவார் என காணமுடிகிறது. இவ்வாறு தேவன் கிருபையாய் தரும் ஈவுகளை நாம் பெற்றுக் கொள்ள வேண்டுமானால், நமது விசுவாசம் மற்றும் கீழ்படிதல் போன்றவையும் தேவைப்படுகிறது.

அதாவது யோவான் 15-ல் கூறப்பட்டபடி நாம் தேவனோடும், யோவான் 14-ல் கூறப்பட்டபடி தேவன் நம்மோடும் இணைந்திருந்தால் மட்டுமே, நமது கிறிஸ்தவ வாழ்வில் நாம் வளர்ச்சியை அடைய முடியும்.

## உபத்திரவமும் ஜெயமும்
## (Tribulation and the Victory)

யோவான் 16-ம் அதிகாரத்தில் தமது சீஷர்களுக்கு வரப்போகும் பாடுகளைக்குறித்து இயேசு கூறியுள்ளார். "அவர்கள் உங்களை ஜெப ஆலயங்களுக்குப் புறம்பாக்குவார்கள்; மேலும் உங்களைக் கொலை செய்கிறவன், தான் தேவனுக்குத் தொண்டு செய்கிறவனென்று நினைக்கும் காலம் வரும்" (16:2) என கூறியுள்ளார்.

ஜெப ஆலயங்களிலிருந்து புறம்பே தள்ளப்படுதலை பெரும்பான்மையான யூதர்கள் இழிவான அல்லது கொடுமையான செயலாக எண்ணினார்கள். ஆயினும் யூதர்களாயிருந்த கிறிஸ்துவின் சீஷர்களின் வாழ்க்கையில் அத்தகைய கொடுமைகள் நிகழ்ந்தன. ஜெப ஆலயங்களிலிருந்து மட்டுமல்ல, தங்கள் தொழில்கள், தங்கள் குடும்பங்கள் போன்றவைகளிலிருந்தும் பல கிறிஸ்தவர்கள் வெளியேற்றப்பட்டார்கள் (யோ.9:22; 12:42; மாற்: 13:9-11). இன்றைக்கு கூட நமது இந்தியாவில் அனேக கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவின் நிமித்தம் வீடுகளையும், குடும்பங்களையும்

இழந்துள்ளார்கள். தேவாலயத்துக்கு செல்கிற ஒரே காரணத்திற்காக அனேகர் தங்கள் ஊரைவிட்டு ஒதுக்கப்பட்டுள்ளார்கள். இவைகள் எல்லாம் நடைபெறும் என இயேசுவே நமக்கு தெரிவிப்பது, நமக்கு ஆறுதல் கொடுப்பதாய் அமைந்துள்ளது (மத்.5:11, 12)

மேலும் அவ்வாறு கொடுமை செய்பவர்கள், தங்கள் தேவனுக்குத் தொண்டு செய்வதாக நினைத்துக் கொண்டிருந்தனர் (16:2). அதாவது சில மதத்தை சேர்ந்தவர்கள் கிறிஸ்தவர்களை கொலை செய்வதின் மூலம் தங்கள் தேவனுக்கு தொண்டு செய்ததாக நினைக்கும் அளவிற்கு குருட்டு புத்தி உடையவர்களாய் இருந்தார்கள் என வேதம் கூறுகிறது (அப்.8:1-3; 26:9-11). அப்போஸ்தலனாகிய யோவான் ஒருவன் தவிர, பிற அப்போஸ்தலர்கள் எல்லாருமே கிறிஸ்துவின் நிமித்தம் கொலைச் செய்யப்பட்டதாக வரலாறு கூறுகிறது. வரலாறு முழுவதும் கிறிஸ்தவர்கள் பலதரப்பு ஜனங்களால் மிகுந்த உபத்திரவம் அடைந்துள்ளதை நாம் காண முடியும். ஆகவே நாமும் கூட நமது ஜீவனையே இயேசுவுக்காக இழக்க தயாராக இருக்க வேண்டும் என இயேசு கூறியுள்ளார் (யோவா. 12:24, லூக்.9:23, 24).

இந்தியாவின் அப்போஸ்தலன் என அழைக்கப்படுகிற சாது சுந்தர் சிங் இவ்வாறு கூறியுள்ளார்: கிறிஸ்துவுக்காய் மரிப்பது எளிது, வாழ்வதோ கடினம். ஒருசில மணி துளிகளில் கிறிஸ்துவுக்காய் மரித்து விடலாம், ஆனால் கிறிஸ்துவுக்காய் வாழ வேண்டுமானால் ஒவ்வொரு நாளும் மரிக்க வேண்டும். இந்த வார்த்தைகள் எவ்வளவு உண்மையாயிருக்கிறது! அப்.1:8-ல் பரிசுத்தாவி உங்களிடத்தில் வரும் போது நீங்கள் பெலனடைந்து. . . . எனக்கு சாட்சிகளாயிருப்பீர்கள் என இயேசு சொன்னார். இங்கு "சாட்சிகளாயிருப்பீர்கள்" (you will be my witnessess) என்பது சாட்சி சொல்லுவது அல்ல, சாட்சியாய் வாழுவது ஆகும். இதற்கு "Martyr" என்ற வார்த்தை பயன்படுத் தப்பட்டுள்ளது. அதற்கு "இரத்தசாட்சியாய்" இருக்க வேண்டும் என்று அர்த்தமாகும்.

கடைசியாக யோவான்: 16:33-ல் "உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு, ஆனாலும் திடன்கொள்ளுங்கள்; நான் உலகத்தை ஜெயித்தேன்" என இயேசு கூறியுள்ளார். அதாவது எவ்வளவு தான் உபத்திரவம் வந்தாலும், கிறிஸ்துவுக்குள் நமக்கு

வெற்றி நிச்சயம் என்பது உண்மையாகும். பவுலின் வார்த்தைகளை கூறி இந்த பகுதியை நிறைவு செய்கிறேன். "ஆகிலும், எனக்கு லாபமாயிருந்தவைகளெவைகளோ அவைகளைக் கிறிஸ்துவுக்காக நஷ்டமென்று எண்ணினேன். அதுமாத்திரமல்ல, என் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை அறிகிற அறிவின் மேன்மைக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று எண்ணிக்கொண்டிருக்கிறேன். அவருக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று விட்டேன்; குப்பையுமாக எண்ணுகிறேன்" (பிலி.3:7, 8, 11). அதாவது பவுல் கிறிஸ்துவுக்காக, தனது எல்லாவற்றையும் குப்பையாக எண்ணினான் எனப்பார்க்கிறோம். மேலும் அவர் கூறியதாவது "வாழ்ந்தால் கிறிஸ்துவுக்காக" (For Christ), "மரித்தால் கிறிஸ்துவோடு" (with Christ) (பிலி.1:23, 24). இந்த தீர்மானத்தை நாமும் எடுத்துக் கொள்வோம், அதாவது நாம் உயிரோடிருந்தால் கிறிஸ்துவுக்காக வேலை செய்ய வேண்டும், மரித்தால் கிறிஸ்துவோடு இருக்க வேண்டும். அப்படி செய்வோம் என்றால் நமக்கு வெற்றி நிச்சயம்!

## இயேசுவின் பிரதான ஆசாரிய ஜெபம் (The High Priest Prayer of Jesus)

யோவான் 17-ம் அதிகாரம் முழுவதும் இயேசுவின் உருக்கமான ஜெபமாக அமைந்துள்ளது. இது ஆண்டவராகிய இயேசு ஏறெடுத்த "பிரதான ஆசாரிய ஜெபம்" என்று அழைக்கப்படுகிறது. அவரே நமது பிரதான ஆசாரியராக இருக்கிறார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும் (எபி.4:14 - 5:10). இயேசுவானவர் கெத்செமனே தோட்டத்திற்கு செல்லும் வழியில் உள்ள கெதரோன் பள்ளதாக்கில் வைத்து தான் இந்த ஜெபத்தை ஏறெடுத்ததாக காணமுடிகிறது. இந்த ஜெபத்தில் மூன்று முக்கியமான பிரிவுகளை நாம் பார்க்க முடிகிறது.

### (i) அவருக்காக ஜெபிக்கிறார் (v: 1-5)

முதலாவதாக இயேசுவானவர் தமது பிதாவையும்; பிதாவானவர் தம்மையும் (இயேசுவையும்) மகிமைப்படுத்தும்படி ஜெபிக்கிறார். "உம்முடைய குமாரன் உம்மை மகிமைப் படுத்தும்படிக்கு, நீர் உம்முடைய குமாரனை மகிமைப்படுத்தும்" (V.2).

✸ "குமாரன் உம்மை மகிமைப்படுத்தும்படிக்கு" என்றால் என்ன? குமாரனாகிய இயேசு தமது கிரியைகளின் மூலம் பிதாவை மகிமைப்படுத்தியுள்ளார் (யோவா.11:40, 41). இறுதியாக இயேசு சிலுவையில் வைத்தும் பிதாவை மகிமைப்படுத்தியுள்ளார்.

✹ "நீர் உம்முடைய குமாரனை மகிமைப்படுத்தும்" என்றால் என்ன? "உலகம் உண்டாகிறதற்கு முன்னே உம்மிடத்தில் எனக்கு உண்டாயிருந்த மகிமையினாலே இப்பொழுது நீர் என்னை உம்மிடத்திலே மகிமைப்படுத்தும்" (யோ.17:5) என்றும் இயேசு ஜெபித்தார். அதாவது மனிதனாக இயேசு வெளிப்படுவதற்கு முன்னர் எப்படி மகிமை பொருந்தியவராக இருந்தாரோ, அந்த மகிமையை திருப்பி தன்னோடு பகிர்ந்துக் கொள்ளும்படி பிதாவிடம் கேட்கிறார் (யோ.1:1-2, 14, 18; பிலி.2:6-11).

இரண்டாவதாக, பூமியில் தான் எதற்காக வந்தாரோ, அந்த வேலையை செய்து முடித்ததாக ஜெபத்தில் கூறுகிறார் (v.4).

**(ii) அவருடைய சீஷர்களுக்காக ஜெபிக்கிறார் (v.6-19)**

V.6-ல் "நீர் உலகத்தில் தெரிந்தெடுத்து எனக்கு தந்த மனுஷருக்கு" என தமது சீஷர்களைக்குறித்துக் கூறுகிறார். அதாவது தமது சீஷர்களை "தேவன் தான் தெரிந்தெடுத்தார்" என கூறுகிறார். ஆனால் இயேசுவே அவர்களை தெரிந்தெடுத்ததாக யோ.6:70 மற்றும் 15:16-ல் காணமுடிகிறது. இது நமக்கு கூறும் உண்மை என்னவென்றால், இயேசு எல்லாவற்றையும் தமது பிதாவோடு பகிர்ந்துக் கொள்ளுகிறார் என்பதேயாகும். இதன் மூலம் தமது 12 சீஷர்களும் பிதாவுக்கும், இயேசுவுக்கும் உரியவர்களாக மாறியுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும் (v.10). இயேசு இந்த உலகத்தை விட்டு கடந்து போவதாலும், சீஷர்கள் இந்த உலகத்திலேயே இருக்க வேண்டியிருப்பதாலும் தான் அவர் இந்த விசேஷமான ஜெபத்தை சீஷர்களுக்காக ஏறெடுத்தார் (v.11, 13).

இயேசு தமது சீஷர்களை காத்துக் கொண்டார் என்றும், அவர்களில் ஒரே ஒருவன் மட்டும், அதாவது கேட்டின் மகனான யூதாஸ் மட்டுமே கெட்டுபோனான் என்றும் இயேசு ஜெபிக்கிறார். அதுவும் கூட வேதவாக்கியம் நிறைவேறும் படியாகவே நடந்தது (v.12). தமது சீஷர்களை உலகத்திலிருந்து எடுத்துக் கொள்ளும்படி வேண்டிக்கொள்ளாமல், தீமையிலிருந்து காத்துக் கொள்ளும் படியே இயேசு ஜெபித்தார் (v.15). அப்படியென்றால், பாடுகளும் பிரச்சனைகளும் வரும் போது, ஆண்டவரே என்னை எடுத்துக் கொள்ளும், நான் மரித்தால் போதும் என எலியாவைப் போல நாம் ஜெபிக்காமல்; ஆண்டவரே, இந்த பாடுகளை மேற்கொள்ள கூடிய கிருபையைத் தாரும் என ஜெபிக்க வேண்டியது அவசியமானதாகும். பாடுகளும் பிரட்சனைகளும் வரும்போதெல்லாம் தமது ஜனங்களை

கர்த்தர் தம்மோடு சேர்த்துக் கொள்வாரென்றால், இந்த உலகில் அவரது ஜனமாக யாருமே இருக்க முடியாது என்பது தான் உண்மையாயிருக்கிறது. V.17, 19-ல் தமது சீஷர்கள் இந்த உலகத்தில் பாதுகாக்கப்படவும், தேவனுடைய வார்த்தையான சத்தியத்தால் பரிசுத்தமாக்கப்படவும் ஜெபிக்கிறார். எப்போதோ கேட்ட ஒரு சிறிய உதாரணம் என் நினைவில் வருகிறது, அதாவது உப்புத்தண்ணீர் நிறைந்த கடலில் வாழும் மீன்களைப்பிடித்து சமைக்கும் போது, நாம் அதில் உப்பு போட வேண்டியது அவசியமானதாகும். உப்புதண்ணீரிலே வாழ்ந்த போதும் கூட, அந்த மீன்களுக்குள்ளே உப்பு பிரவேசிக்கவில்லை. அதை போல, நாமும் கூட இந்த பாவ உலகில் வாழும் போது, இந்த உலகில் உள்ள பாவம் நமக்குள் செல்லாதவாறு நம்மை பரிசுத்தப்படுத்தி கொள்ள வேண்டியதும் அவசியமானதாகும்.

**(iii) எல்லா விசுவாசிகளுக்காகவும் ஜெபிக்கிறார் (v:20-26)**

V.20-ல் "இவர்களுடைய வார்த்தையினால் என்னை விசுவாசிக்கிறவர்களுக்காகவும் வேண்டிக் கொள்ளுகிறேன்" என்று ஜெபிப்பதின் மூலம், இயேசு உலகமெங்கிலும் உள்ள தமது விசுவாசிகளுக்காக ஜெபிக்கிறார். இதுவரை பிறந்த ஜனங்களுக்காகவும், இன்னும் பிறக்க போகிறவர்களுக்காகவும் அவர் ஜெபித்திருக்கிறார். இந்த வசனத்தை வாசிக்கும் போது நாமெல்லாரும் மிகவும் மகிழ்ச்சியடைய வேண்டும். ஏனென்றால் நமது ஆண்டவரும் இரட்சகருமான இயேசுகிறிஸ்து நமக்காக ஜெபித்திருக்கிறார், இது எவ்வளவு ஆச்சரியமானது! இன்றைக்கு யார் யாரோ எனக்காக ஜெபிக்க வேண்டும் என அவர்களுக்கு கடிதம் எழுதுகிற பலரும் உண்டு, அல்லது அவர்களை தொலைபேசியில் தொடர்பு கொள்வோரும் உண்டு. அப்படிப்பட்டவர்களுக்கு நான் கூறும் உண்மை என்னவென்றால், இயேசுவே உங்களுக்காக ஜெபித்திருக்கிறார் என்பதேயாகும். இதை கேட்பதற்கே இனிமையாக இருக்கிறதல்லவா? யோவா:10:16-ல் கூறப்பட்டுள்ள, "வேறே ஆடுகள்" என்பவர்கள் இந்த உலகில் உள்ள அனைத்து விசுவாசிகளுமே ஆவர்.

உலகில் உள்ள அனைத்து விசுவாசிகளும் ஒன்றாய் இருக்க வேண்டும் என இயேசு ஜெபிக்கிறார் (v.21) அதுவே அவரது விருப்பமாகும். எனவே விசுவாசிகளுக்கு இடையே வருகிற ஒற்றுமையின்மையை நாம் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளக்கூடாது.

ஏனெனில் அது சாத்தானிடமிருந்து வருகிறது. இதன் அடிப்படையில் தான் பின்நாட்களில், சீஷர்கள் ஒருமனப்பட்டு கூடிவந்தபோது பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்பட்டார்கள் (அப்.2:1-2), ஒரு மனப்பட்டவர்களாய் தேவனை ஆராதித்தார்கள் (அப்.2:46), ஒருமனம் உள்ளவர்களாய் இணைந்து செயல்பட்டபோது கூடியிருந்த இடம் அசைந்தது, தேவ வசனம் தைரியமாய் பிரசங்கிக்கப்பட்டது (அப்.4:24, 32). ஆனால் ஒற்றுமையின்மை வந்தபோது ஜனங்கள் சிதறடிக் கப்பட்டார்கள்.

இயேசுவானவர் மகிமைப்படுத்தப்பட்டது போல, தம்மை பின்பற்றுகிற தமது விசுவாசிகளும் மகிமைப்படுத்தபட வேண்டும் என்பதற்காகவும் இயேசு இங்கு ஜெபிக்கிறார் (v.22-24). சீஷர்கள் தம்மோடு இருக்க வேண்டும் என்பதையே இயேசு எப்போதும் விரும்புகிறார் (மாற்.3:14; யோ.14:3,23). இயேசுவை போல நாமும் மகிமையடைய வேண்டுமானால், அவர் நடந்த பாடுகளின் வழியே நாமும் நடக்க வேண்டும் (யோ.12:23-26; ரோம 8:18; 2கொரி 4:17). சிலுவை (பாடுகள்) இல்லாமல் ஒருபோதும் மகிமையை பெற இயலாது. கிறிஸ்துவுக்காக பாடுகள் அனுபவிப்பது கூட ஒரு வரமாயிருக்கிறது (பிலி.1:29). கிறிஸ்துவுக்காக பாடுகள் அனுபவித்தால், அதனுடைய பிரதிபலன் பரலோகில் மிகுதியாய் இருக்கும் (மத்.5:11, 12). ஆகவே கிறிஸ்துவின் நிமித்தம் வரும் பாடுகளை நாம் துச்சமென நினைத்து, அவருடைய நித்திய மகிமையை பெற்றுக் கொள்ள முன் வருவோம்.



## அத்தியாயம் - 3

# கெத்செமனே நிகழ்வுகள்

# (Gethsemane events)

(மத். 26:36-56; மாற்: 14:32-52; லூக்: 22:39-53; யோவா: 18:1-12)

கெத்செமனே என்ற அரமேயு வார்த்தைக்கு "எண்ணெய் ஆலை" என்று பொருள். இந்த தோட்டமானது கிதரோனுக்குக் கிழக்கில் ஒலிவமலையின் மேற்கு சரிவில் அமைந்துள்ளது. இயேசு கிறிஸ்துவும் அவரது சீஷர்களும் ஒலிவ மலையிலுள்ள இந்த கெத்செமனே தோட்டத்திற்கு ஜெபிக்க செல்வது வழக்கமாயிருந்தது. இந்த மலையில் மிகுதியான ஒலிவமரங்கள் இருக்கிறபடியால் ஒலிவமலை என்ற பெயர் வந்தது. பஸ்காவை முடித்துவிட்டு கெதரோன் ஆறு வழியாக இரவு சுமார் 9 அல்லது 10 மணியளவில் இயேசுவும் அவரது சீஷர்களும் இங்கு வந்திருக்கலாம் என நம்பப்படுகிறது. இந்த கெதரோன் ஆறு பஸ்கா பண்டிகை நாட்களில் இரத்தமாக காட்சியளிக்கும். ஜோசபஸ் என்ற வரலாற்று ஆசிரியர் கூறும்போது ஒவ்வொரு பஸ்காவின் போதும் சுமார் 2 இலட்சத்து 50 ஆயிரம் ஆடுகளுக்கு மேலாக பலி செலுத்தி வந்தார்கள் என்கிறார். ஆகவே அந்த இரத்தம் செல்லும் ஒரு வடிகாலாகவே இந்த ஆறு அமைந்திருந்தது. இயேசுவும் அவரது சீஷர்களும் அன்றைய நாள் காலை முதலே பல நிகழ்சிகளில் ஈடுபட்டிருந்ததாலும், மாலை நேரம்

முழுவதும் பஸ்காவை ஆயத்தம் பண்ணி அதை ஆசரித்தபடியாலும், அதை முடித்துவிட்டு கெதரோன் பள்ளதாக்கு வழியாக கெத்செமனேயில் இரவு வந்து சேர்ந்தபடியாலும் அவர்கள் மிகவும் களைப்புடன் காணப்பட்டார்கள். ஆகவே எப்படியாவது தூங்கினால் போதும் என்ற எண்ணமே மேலோங்கி இருந்தது. இயேசுவானவர் அந்த களைப்பையும் பொருட்படுத்தாமல் ஜெபிக்க ஆயத்தமானார். இயேசு ஜெபித்த இந்த கெத்செமனே தோட்டத்தில் தற்போது தேவாலயம் கட்டப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

## இயேசுவின் உருக்கமான ஜெபம்
## (The Tender prayer of Jesus)

இயேசு தமது சீஷர்களை கெத்செமனே தோட்டத்தின் நுழைவாயிலில் அமர செய்துவிட்டு, பேதுரு, யோவான் மற்றும் யாக்கோபை மட்டும் அழைத்துக்கொண்டு தோட்டத்தின் உட்பகுதிக்கு சென்று ஜெபிக்க ஆயத்தமானார். "பேதுருவையும் யாக்கோபையும் யோவானையும் தம்மோடே கூட்டிக்கொண்டு போய், திகிலடையவும், மிகவும் வியாகுலப்படவும் தொடங்கினார். அப்பொழுது அவர்: என் ஆத்துமா மரணத்துக்கேதுவான துக்கம் கொண்டிருக்கிறது. நீங்கள் இங்கே தங்கி, விழித்திருங்கள்" என்றார் (மாற்.14:33, 34). இயேசுவானவர் இந்த உலகத்தில் ஊழியம் செய்த நாட்களில் 100 சதவீதம் தெய்வீக தன்மையோடும், 100 சதவீதம் மனித தன்மையுள்ளவராகவும் காணப்பட்டார். திகில், வியாகுலம், துக்கம் இவைகள் அவரது மனித தன்மையைக் காட்டுகிறது. எஜமானனின் கட்டளைப்படி விழித்திருக்க கடமைப்பட்டிருந்த அவருடைய சீஷர்கள் தூங்கிவிட்டனர் (மாற்.14:37).

### (i) ஜெபத்தின் முறை

இயேசுவானவர் மூன்று சீஷர்களோடு ஜெபிக்க சென்றபோதிலும், பிதாவோடு தனிமையில் ஜெபிக்க விரும்பினார். ஆகவே ஒரு கல்லை எடுத்து வீசினால் எவ்வளவு தூரம் சென்று கீழே விழுமோ, அவ்வளவு தூரமாய் சென்று ஜெபிக்கத் தொடங்கினார். அவர் முழங்காற்படியிட்டும், முகம் குப்புற விழுந்தும் ஜெபிப்பதை கவனிக்கலாம். அப்படியென்றால் தன்னை சுற்றிலுமுள்ள நபர்களையோ, சூழ்நிலைகளையோ கருத்தில் கொள்ளாமல், தன்னையே மறந்து பிதாவோடு ஜெபிப்பதை இது காட்டுகிறது.

ஜெபத்தின் போது, "அப்பா, பிதாவே" என உரிமையோடு அழைப்பதின் மூலம் பிதாவோடு தனக்கு இருந்த நெருக்கமான உறவை எடுத்துக் காட்டுகிறார். "அப்பா" என்பது இயேசு பேசிய அரமேயுமொழியில் தகப்பனை குறிக்கும் சொல் ஆகும். நமது தமிழ்மொழியிலும் கூட இயேசு பேசிய அதே வார்த்தையை தான் பயன்படுத்துகிறோம் என்பது எவ்வளவு ஆச்சரியமானது!

அவர் ஜெபிக்கும்போது திகிலடைந்தார், வியாகுலப்பட்டார் மற்றும் மரணத்துக்கேதுவான துக்கம் உள்ளவராய் இருந்தார் எனக் காண்கிறோம். இது தம்முடைய உச்சக்கட்ட வேதனையை காட்டுகிறது. இது சரீர வேதனை மட்டுமல்ல, ஆவியிலும் கூட கலங்கி துயரமடைவதாகும். ஏனென்றால் பஸ்காவின் போதே அவர் ஆவியில் கலங்கினவராய் இருந்தார் (யோ.13:21). அடுத்தடுத்து நடக்கபோகும் சம்பவங்களை தமது மனக்கண்களில் கண்டு வேதனைப்பட்டிருப்பார். அதாவது ஒரு சீஷன் தம்மை காட்டிக் கொடுக்க போகிறான், இன்னொரு சீஷன் தம்மை மறுதலிக்க போகிறான், மற்ற சீஷர்களெல்லாரும் தம்மை விட்டு ஓடப் போகிறார்கள், சாட்டை அடி, முள்முடி, சிலுவை மரணம் இவைகளை நினைத்து வியாகுலப்பட்டு துக்கத்தோடு ஜெபிக்கிறார்.

**(ii)** இந்த பாத்திரம்?

"பிதாவே, உமக்கு சித்தமானால் இந்த பாத்திரம் என்னைவிட்டு நீங்கும்படி செய்யும்; ஆயினும் என்னுடைய சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது" என்று ஜெபம் பண்ணினார் (லூக்.22:42). இங்கு இயேசு குறிப்பிடுகிற "இந்தப் பாத்திரம்" என்பதின் உண்மையான அர்த்தம் என்ன? மனுக்குலத்தை இரட்சிக்க வேறு வழியே இல்லையா? எனவும், சிலுவை மரணத்திலிருந்து என்னை நீங்கலாக்கும் எனவும் தனது மனித தன்மையிலிருந்து ஜெபித்தார் என சிலர் கூறுகிறார்கள். அப்படி தமது பாடுகளையும், சிலுவை மரணத்தையும் குறித்து ஜெபிக்கிறாரா? இல்லையென்றே நான் கருதுகிறேன். ஏனென்றால் கீழ்காணும் வசனங்களில் அவர் மரிப்பதற்காகவே இவ்வுலகில் வந்தார் என்பதை தெளிவாக பார்க்க முடிகிறது.

- பிதா எனக்குக் கொடுத்த பாத்திரத்தில் நான் பானம் பண்ணாதிருப்பேனோ? (யோ.18:11)

✸ நான் குடிக்கும் பாத்திரத்தில் நீங்கள் குடிக்கவும், நான் பெறும் ஸ்நானத்தை நீங்கள் பெறவும் உங்களால் கூடுமா? (மத்.20:22)

✸ அப்படியே, மனுஷகுமாரன், அநேகரை மீட்கும் பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்க வந்தார் (மாற்.10:45)

✸ நானே நல்லமேய்ப்பன்: நல்ல மேய்ப்பன் ஆடுகளுக்காக தன் ஜீவனை கொடுக்கிறான் (யோ.10:11).

சிலுவையில் மரிப்பதற்காகவே இயேசுகிறிஸ்து இந்த பூமியில் வந்தார் என மேற்கூறிய வசனங்கள் மூலம் தெரிந்துக் கொள்கிறோம். அதுமட்டுமல்லாமல் இரத்தம் சிந்தி அவர் மரிக்கவில்லை என்றால் மனுக்குலத்துக்கு ஒருபோதும் இரட்சிப்பு வந்திருக்காது. ஆகவே மரணம் அவரைவிட்டு நீங்க வேண்டும் என அவர் ஜெபித்திருக்க வாய்பே இல்லை.

அப்படியென்றால், இயேசு இங்கு "பாத்திரம்" எனக் குறிப்பிடுவது என்ன? மனுகுலத்தின் சகல பாவங்களும் சிலுவையில் வைத்து கிறிஸ்துவின் மேல் சுமத்தப்படும் போது, பிதாவாகிய தேவனோடு அநாதிகாலமாக கொண்டிருக்கும் அந்த ஐக்கியத்தை இழக்க நேரிடும். ஆகவே முடிந்தவரை அந்த ஐக்கியத்தை இழந்துபோகக்கூடாது என்றே ஜெபிக்கிறார். ஏனென்றால் தேவன் பாவத்தை (தீமையை) பார்க்கமாட்டாத சுத்தக்கண்ணன் (ஆப.1:13). இங்கு மனுகுலத்தின் பாவம் தன்மேல் சுமத்தப்படுவதால் கிறிஸ்து பாவமாகிறார் (2 கொரி.5:21), (பாவியாகவில்லை). He became sin for us, not sinner.

இயேசு ஏறெடுத்த இந்த ஜெபத்திற்கு பிதாவிடமிருந்து பதில் வராத காரணத்தினால், "ஆகிலும் என் சித்தப்படி அல்ல, உம்முடைய சித்தத்தின்படி ஆகக்கடவது" என்று கூறி பிதாவின் சித்தத்திற்கு தன்னை முழுமையாக ஒப்புக்கொடுத்தார். பிதாவோடு உள்ள ஐக்கியத்தை சற்று நேரம் பிரிய நேரிட்டதால் தான் சிலுவையில் வைத்துக்கூட "என் தேவனே, என் தேவனே ஏன் என்னைக்கைவிட்டீர்" என கூறினார். உலக தோற்றத்திற்கு முன்பிருந்தே இயேசுவானவர் தமது பிதாவோடு கூட இருந்தார் (யோ.1:1-3). ஆகவே இங்கு சற்று நேரம் அவரது ஐக்கியத்தை பிரிய போவதை நினைத்து தான் அவர்

உச்சக்கட்ட வியாகுலத்தையும் துக்கத்தையும் அனுபவித்தார். அப்பொழுது வானத்திலிருந்து ஒரு தூதன் தோன்றி, அவரைப் பலப்படுத்தினான் (லூக்.22:43).

### (iii) வேர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாய்

"அவர் மிகவும் வியாகுலப்பட்டு, அதிக ஊக்கத்தோடே ஜெபம் பண்ணினார். அவருடைய வேர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாய்த் தரையிலே விழுந்தது" (லூக்.22:44). பரிசுத்த பைபிள் மொழிபெயர்ப்பு இவ்விதமாய் கூறுகிறது. "குருதி கொட்டுவது போல அவரது முகத்திலிருந்து வியர்வை வடிந்தது". பிதாவோடு சதாகாலமும் கொண்டிருந்த அந்த ஒப்பற்ற ஐக்கியத்தின் உறவை பிரிகிற தருணத்தை நினைத்து தமது ஆவியில் வியாகுலமும், திகிலும், துக்கமும் உள்ளவராய் இருந்தபடியால் இது நிகழ்ந்தது (லூக்.22:44). இங்கு மனிதனால் அல்ல, பிதாவாகிய தேவனை நினைத்து அவர் இரத்தம் சிந்தினார். "கர்த்தரோ அவரை நொறுக்கச் சித்தமாகி, அவரை பாடுகளுக்குட்படுத்தினார்" (ஏசா.53:10) என்ற தீர்க்கதரிசன வார்த்தையும் அவரில் நிறைவேறுகிறது.

**மருத்துவ சான்று Medical Proof**

இயேசுவானவரின் முகத்திலிருந்து வழிந்த வியர்வையானது இரத்தம் கலந்து விழுந்தது என்பது மருத்துவரீதியாக நிரூபிக்கப்பட்டிருக்கிறது. நான்கு சுவிசேஷங்கள் இருந்தாலும் மருத்துவராகிய லூக்கா மட்டுமே இதைக்குறிப்பிட்டுள்ளார். இயேசுவானவர் அனுபவித்ததை போன்று அதிகமான உணர்வுபூர்வமான வேதனையை அனுபவிக்கும் போது, வியர்வைச் சுரப்பிகளிலுள்ள மிகச்சிறிய இரத்தக்குழாய் வெடித்து, இரத்தம் வியர்வையோடு சேர்ந்து இரத்தத்துளிகளாக விழுவதுண்டு. மருத்துவத்தில் இது "ஹெமாட்டிடிரோசிஸ்" (Hematidrosis) என்று அழைக்கப்படுகிறது. இது அபூர்வமானதாக இருந்தாலும், நிகழக்கூடிய ஒன்றாகும். இது அதிகமான வேதனையையும், பலவீனத்தையும் உண்டாக்கக்கூடும்.

### (iv) சீஷர்களையும் ஜெபிக்கும்படி கேட்கிறார்

இயேசு திகிலடைந்து வியாகுலமடைந்து துக்கத்தோடு ஜெபிக்கும் போதும், இரத்தம் வியர்வை மூலம் வெளியேறும் போதும், தூதன் வந்து அவரை பலப்படுத்தும்போதும் சீஷர்கள்

நித்திரையாயிருந்தார்கள். இது ஜெபத்தை வெறுத்தப்படியால் அல்ல, மாறாக மிகுந்த களைப்போடு இருந்தப்படியால் அவர்களை அறியாமலேயே தூங்கி விட்டார்கள். இயேசு வந்து பேதுருவை நோக்கி, "நீங்கள் (மூன்று பேரும்) ஒரு மணி நேரமாவது என்னோடே கூட விழித்திருக்கக்கூடாதா? நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள்; ஆவி உற்சாமுள்ளது தான், மாம்சமோ பலவீனமுள்ளது" என்றார் (மத்.26:40, 41). இயேசு தமக்காக ஜெபிக்கும்படி கூறவில்லை. ஆனால் "சோதனைக்குட்படாதபடிக்கு" நீங்கள் விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள் என்று கூறினார். அதாவது சீஷர்களுக்கு வரபோகிற சோதனைகளையும், ஒருவன் மறுதலிக்க போகிறதையும், எல்லாரும் அவரை விட்டு ஓடிபோவதையும் முன்கூட்டியே அறிந்திருந்தபடியால் இயேசு அவர்களை ஜெபிக்கும்படி ஊக்குவித்தார். ஒரே ஒரு மணிநேரம் மட்டுமே ஜெபிக்கும்படி கூறியுள்ளார் என தவறாக நாம் புரிந்துக்கொள்ளக்கூடாது. சோதனைகளிலிருந்து தப்பித்துக்கொள்ளும் படி மட்டுமே, குறைந்தபட்சமாக ஒரு மணி நேரமாவது ஜெபிக்கும்படி கூறினார்.

பின்னர் இயேசு திரும்பவும் பிதாவிடம் தமது ஜெபத்தை ஏறெடுத்து விட்டு, திரும்பவும் சீஷர்களை ஜெபிக்கும்படி கேட்டுக் கொண்டார். இவ்வாறு மூன்றுமுறை தானும் ஜெபித்துவிட்டு, சீஷர்களையும் ஜெபிக்கும்படி உற்சாப்படுத்தினார் (மத்.26:38-44). ஆனால் சீஷர்கள் ஜெபிக்காமல் தூங்கினார்கள். கடைசியாக நான்காவது முறை இயேசு சீஷர்களிடம் வந்து: "இனி நித்திரை பண்ணி இளைப்பாறுங்கள்; இதோ மனுஷகுமாரன் பாவிகளுடைய கைகளில் ஒப்புக் கொடுக்கப்படுகிற வேளை வந்தது. என்னைக்காட்டிக் கொடுக்கிறவன் இதோ வந்து விட்டான், எழுந்திருங்கள், போவோம்" என்றார் (மத்.26:45, 46).

## யூதாசின் கள்ள முத்தம்
## (The counterfeit Kiss of Judas)

யூதாஸ் கெத்செமனே தோட்டத்தை வந்தடைந்தான். அவனோடு கூட பிரதான ஆசாரியரும், ஜனத்தின் மூப்பரும், வேதபாரகரும் அனுப்பிய திரளான ஜனங்கள் பட்டயங்களையும், தடிகளையும் பிடித்துக்கொண்டு வந்தார்கள். ஏனெனில் எக்காரணத்தினாலும் இயேசுவை தப்பவிடக்கூடாது என்பதில்

அவர்கள் மும்முரமாக செயல்பட்டு கொண்டிருந்தார்கள். "நான் எவனை முத்தம் செய்வேனோ அவன் தான் அவனைப்பிடித்துக் கொள்ளுங்கள்" என ஏற்கனவே அவர்களுக்கு அடையாளம் சொல்லியிருந்தான் யூதாஸ்.

ஏன் திரள்கூட்டமாக வரவேண்டும்? ஏன் முத்தம் என்கிற ஒரு அடையாளம் தேவைப்பட்டது? இயேசு மறைமுகமான ஒரு வாழ்க்கை வாழவில்லை; ஜனங்களோடு எப்போதுமே கலந்திருந்தார்; எல்லோரும் அவரை பலமுறை பார்த்திருக்கிறார்கள். அப்படியிருக்கும் போது இந்த முத்தத்தினால் ஆன அடையாளம் தேவையா? இதற்கு இரண்டு விதமான கருத்துக்களை வேதபண்டிதர்கள் கூறுகிறார்கள்.

(i) இயேசுவின் சீஷர்களில் ஒருவனான அல்பேயுவின் குமாரன் யாக்கோபு என்பவன் ஏறக்குறைய இயேசுவின் முகசாயலுக்கு ஒத்தவனாய் காணப்பட்டான். ஆகவே எந்த விதத்திலும் ஆள்மாறாட்டம் நடைபெறுவதை தடுக்கவே இந்த முத்தம் தேவைப்பட்டது.

(ii) பஸ்கா பண்டிகையின் போது, எருசலேமில் உள்ள தங்குமிடங்கள் (Lodge) மற்றும் சத்திரங்கள் (Inn) நிரம்பியிருக்கும். ஆகவே அங்கு தங்க இடம் கிடைக்காத ஜனங்கள் பலரும் இந்த ஒலிவ மலையில் வந்து தங்குவதுண்டு. அவ்வாறு கலிலேயாவிலிருந்து வந்த ஜனங்கள் அதிகமானோர் இந்த கெத்செமனே தோட்டத்தில் இருந்ததால், எந்த ஆள்மாறாட்டமும் அல்லது எந்தவிதமான அசம்பாவித செயல்களும் நடந்து விடக்கூடாது என்பதற்காக முத்தமும், திரள்கூட்டமான ஜனங்களும் தேவைப்பட்டார்கள்.

இயேசு இந்த இடத்திற்கு வழக்கமாக வருகிறபடியால் (லூக்.22:39), இந்த இடம் யூதாசுக்கு நன்றாக தெரிந்திருந்தது. ஆகவே அவன் இயேசுவிடம் வந்து: ரபீ, வாழ்க என்று சொல்லி அவரை முத்தம் செய்தான். "ரபீ" என்றால் போதகர் (Teacher) என்று பொருள்படும். அதற்கு இயேசு, "சிநேகிதனே என்னத்திற்காய் வந்திருக்கிறாய், முத்தத்தினாலேயா மனுஷக்குமாரனைக் காட்டிக் கொடுக்கிறாய்" என்றார். முத்தம் என்கிற அன்பின் அடையாளத்தை யூதாஸ் இங்கு கீழ்தரமான துரோக செயலுக்கு பயன்படுத்துகிறான் (நீதி.27:6). எதிராளியிடம் இருந்து வருகிற இன்னல்களை கூட பலநேரங்களிலும் நாம் வெற்றிக்கொள்ளமுடியும், ஆனால் கூடவே இருந்துக் கொண்டு துரோகம் செய்கிறவர்களை கடைசிவரையும் அடையாளம் காண்பது

அரிதான செயல். ஆகவே நாம் எப்பொழுதும் ஜாக்கிரதை உள்ளவர்களாய் இருக்க வேண்டும்.

எல்லா முத்தங்களும் அன்பின் அடையாளங்கள் அல்ல. ஓர்பாள் தன் மாமியாகிய நகோமியை முத்தமிட்டாள் (ரூத்.1:14), ஆனால் அது பிரிவின் முத்தமாக இருந்தது. வெளியில் இருந்து பார்க்கும் போது, அவள் எவ்வளவு பாசம் உள்ளவளாய் இருக்கிறாள் என்று கேட்க தோன்றும், ஆனால் அது பாசத்தின் முத்தம் அல்ல. இதை வாசிக்கும் வாலிபர்களுக்கு ஒன்றை கூற விரும்புகிறேன். "எல்லா முத்தங்களும் அன்பின் முத்தமல்ல", சில முத்தங்களுக்கு பின்னால் கொடிய பாம்பின் விஷத்தை போன்ற துரோகங்கள் மறைந்திருக்க வாய்புகள் உண்டு. ஆகவே எக்காரணத்தினாலும் நீங்கள் ஏமாந்து போகாதீர்கள்.

பல நூற்றாண்டுகளுக்கு முன்பு ரோம பேரரசுக்கு அடித்தளம் இட்ட ஜுலியஸ் சீசர் (Julius Caesar) என்பவர், அவருடைய எதிராளிகளால் சூழப்பட்டு கொல்லப்படுகையில், அவர்கள் நடுவிலே அவருக்கு மிகவும் நெருக்கமாகவும், அன்பாகவும் இருந்த புரூட்டஸ் என்பவனும் நிற்பதைக்கண்டு, அவரால் நம்ப முடியாமல்: "நீயுமா புரூட்டஸ்?" (You too Brutus?) என்று அதிர்ச்சியோடு கேட்டார். ஆனால் யூதாசை பார்த்த போது இயேசு எந்த அதிர்ச்சியும் அடையவில்லை, ஏனென்றால் இயேசு எல்லாவற்றையும் ஏற்கனவே அறிந்திருந்தார்.

## இயேசு தன்னை ஒப்புக்கொடுத்தார்
## (Jesus delivered Himself)

பிற சுவிசேஷங்களில் கூறப்படாத ஒரு அற்புதமான நிகழ்வை யோவான் மட்டுமே கூறுவதை இங்கே காணலாம்: யூதாஸ் போர்சேவகரின் கூட்டத்தையும், பிரதான ஆசாரியர் பரிசேயர் என்பவர்களால் அனுப்பப்பட்ட ஊழியக்காரரையும் கூட்டிக்கொண்டு, பந்தங்களோடும், தீவட்டிகளோடும், ஆயுதங்களோடும் அவ்விடத்திற்கு வந்தான் (யோ.18:3).

இங்கு இரண்டு விதமான சேவகர்களும் மற்றும் திரளான ஜனங்களும் அவரை பிடிக்க வந்தார்கள் என காணமுடிகிறது.

**(i) ரோம போர்ச்சேவகர்:** போர்சேவகரின் கூட்டம் என்பதற்கு ஆங்கில வேதாகமத்தில் (KJV) "A band of men" எனக்கூறப்பட்டுள்ளது (யோ.18:3). A band of men equaled one tenth

of a Roman Legion. அதாவது ஒரு போர்ச்சேவகரின் கூட்டம் என்பது ரோமர்களின் லேகியோனின் பத்தில் ஒரு பங்காகும். ஒரு லேகியோன் என்றால் 6000 பேர் ஆவர். ஆகவே ரோமர்களின் கணக்கின்படி பார்த்தால் குறைந்தபட்சம் 600 வீரர்களாவது வந்திருக்க வேண்டும்.

**(ii) யூத காவல் சேவகர்கள்:** பிரதான ஆசாரியர், பரிசேயர் என்பவர்களால் அனுப்பப்பட்ட ஊழியக்காரரும் வந்திருந்தார்கள். யூதர்களுக்கும் காவல் சேவகர்கள் இருந்தனர் என்பது குறிப்பிடதக்கதாகும் (மத்.27:65). இந்த காவல் சேவகர்கள் தான் இயேசுவை பிடித்த உடனடியாக பிரதான ஆசாரியனிடம் கொண்டு போய் இருந்திருக்க வேண்டும். ரோம சேவகர்கள் பொதுவாக ரோம ஆளுநரிடம் தாம் குற்றவாளிகளை ஒப்படைப்பார்கள். ஆகவே யூத சேவகர்கள் இயேசுவை பிடிப்பதற்காகவும், ரோம சேவகர்கள் எந்த அசம்பாவிதமும் நடக்காமல் அவர்களுடைய வேண்டுகோளுக்கு இணங்க பாதுகாப்பு கொடுப்பதற்கும் வந்திருப்பார்கள் என நான் கருதுகிறேன். ஒரு சரித்திர குறிப்பு இவ்வாறு கூறுகிறது: 400-க்கும் அதிகமான யூத சேவகர்கள் இருந்தார்கள், அவர்கள் அத்தனை பேருமே இயேசுவை பிடிப்பதற்கு பயன்படுத்தப்பட்டார்கள்.

**(iii) திரளான ஜனங்கள்:** திரளான ஜனங்களும் இயேசுவை பிடிக்கும் படி உதவினார்கள் (மத்.26:47). இந்த ஜனங்கள் இயேசுவை பின்பற்றிய கூட்டம் அல்ல, மாறாக இயேசுவை விரும்பாத யூதர்களுடைய பரிசேய, வேதபாரக கூட்டமாக இருந்திருக்கலாம். சரித்திர குறிப்பில் பார்க்கும் போது 250-க்கும் அதிகமான ஜனங்கள் வந்தார்கள் என காணமுடியும். அடேங்கப்பா! ஒரு மனிதனை பிடிப்பதற்காக ரோமசேவகர் 600 பேர், யூத சேவகர் 400 பேர், ஜனங்கள் 250 என 1250க்கும் அதிகமானோர் வந்தது, சரித்திரத்திலே இதுவே முதலும், கடைசியுமாக இருந்திருக்கும் என கருதுகிறேன்.

**இயேசுவை பிடிக்க வந்த விதம்:** இயேசுவை பிடிப்பதற்காக பந்தங்களோடும், தீவட்டிகளோடும், ஆயுதங்களோடும் (யோ.18:3) பட்டயங்களோடும், தடிகளோடும் (மத்.26:47) வந்திருந்தார்கள். அவர்கள் நடு இரவில் வந்தப்படியாலும், அசம்பாவிதங்கள் நடக்காமலும் தடுக்கவே இப்படி வந்தார்களோ என யோசிக்க தோன்றுகிறது. ஏனென்றால் முன்பு பலமுறை அவரை பிடிக்க முயற்சித்தும் முடியவில்லை (யோ.7:30, 32; 44-46; 8:20). இம்முறை

எப்படியாவது பிடிக்க வேண்டும் என்பதே அவர்கள் பிரதான நோக்கமாயிருந்தது. பெரும்பாலான அரசியல் கைது நடவடிக்கைகள் இன்றும் கூட இரவில் நடைபெறுவது குறிப்பிடதக்கதாகும். யூத சனகெரிப் சங்க விதிமுறைபடி சூரிய அஸ்தமனத்திற்கு பிறகு ஒருவனை கைது செய்யக்கூடாது. அதுமட்டுமல்லாமல் மத சம்மந்தமான காரியங்களுக்காக ஒருவன் பணம் வாங்கிக்கொண்டு வஞ்சனையாக இன்னொருவரை காட்டிக் கொடுக்கக்கூடாது. ஆனால் இந்த இரண்டு சட்டமும் இயேசுவை கைது செய்தபோது பின்பற்றப்படவில்லை.

**சிறந்த தலைவரின் பண்புகள்:**

இயேசு தமக்கு நேரிடப்போகிற எல்லாவற்றையும் அறிந்து, எதிர்கொண்டு போய், அவர்களை நோக்கி: யாரைத் தேடுகிறீர்கள் என்றார். அவருக்கு அவர்கள் பிரதியுத்தரமாக: நசரேயனாகிய இயேசுவைத் தேடுகிறோம் என்றார்கள். அதற்கு இயேசு: நான்தான் என்றார். அவரைக் காட்டிக் கொடுத்த யூதாசும் அவர்களுடனே கூட நின்றான். நான்தான் என்று அவர் அவர்களிடத்தில் சொன்னவுடனே, அவர்கள் பின்னிட்டுத் தரையிலே விழுந்தார்கள். அவர் மறுபடியும் அவர்களை நோக்கி: யாரை தேடுகிறீர்கள் என்றுக் கேட்டார்; அவர்கள்: நசரேயனாகிய இயேசுவைத் தேடுகிறோம் என்றார்கள். இயேசு பிரதியுத்தரமாக: நான்தானென்று உங்களுக்குச் சொன்னேனே; என்னைத் தேடுகிறதுண்டானால், இவர்களைப் போக விடுங்கள் என்றார் (யோ.18:4-8).

இயேசுவே அவர்களுக்கு எதிர்கொண்டு போய் தன்னைக் காண்பித்தார் எனக் காண்கிறோம். இதிலிருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டியது என்னவெனில், இயேசு ஒரு சிறந்த தலைவராக இருந்திருக்கிறார் என்பதேயாகும். இவ்வுலக தலைவர்கள் தங்களுக்கு ஒரு ஆபத்து வருகிறது என்றால், தங்களது தொண்டர்களை முன்னே அனுப்புவார்கள் (யாக்கோபு, ஏசாவிடம் இருந்து தப்பித்துக் கொள்ள தனது வேலையாட்களையும் பிள்ளைகளையும் அனுப்பியது போல இருக்கலாம்). இயேசு அவர்களிடம்; யாரைத் தேடுகிறீர்கள் என கேட்டபோது, நசரேயனாகிய இயேசுவைத் தேடுகிறோம் என்றார்கள். அந்நாட்களில் இயேசு என்ற பெயர் பொதுவான பெயராகவும்,

அநேகருக்கு அந்த பெயர் இருந்த காரணத்தினாலும், சரியான நபரை குறிப்பிடும் படிக்கு அவருடைய ஊர் பெயரையும் சேர்த்து "நசரேயனாகிய இயேசு" என்றார்கள்.

அவரை பிடிக்க வந்த அத்தனை பேரும் தரையிலே விழுந்தார்கள். இந்த நேரத்தில் இயேசு நினைத்திருந்தால் தமது சீஷர்களோடு தப்பி சென்றிருக்க முடியும். ஆனால் அவர் அதை செய்யவில்லை. ஏன் விழுந்தார்கள்? போர்ச் சேவகர்கள் அவரை பிடிக்கவில்லை மாறாக இயேசுவே தம்மை அவர்களிடம் ஒப்புக்கொடுத்தார் என்பதை காட்டுவதற்காகவே விழுந்திருக்கலாம்.

இயேசு மறுபடியும் அவர்களிடம் என்னைத் தேடுகிறதுண்டானால், இவர்களை விட்டு விடுங்கள் என்றார். இங்கு இயேசு தம்முடைய சீஷர்களை பாதுகாக்கிறார். இதுவல்லவோ ஒரு தலைவரது சிறந்த பண்பு! எற்கனவே இயேசு பிதாவோடு ஜெபித்தப்போது, "நீர் எனக்கு தந்தவர்களை காத்துக் கொண்டு வந்தேன்" என்ற வார்த்தையை மீண்டும் நிருபித்து விட்டார் (யோ.6:39; 10:29; 17:12; 18:8,9).

ஆயிரத்துக்கும் அதிகமான போர் சேவகர்கள் வந்த படியாலோ, அல்லது யூதாசுடைய வஞ்சக முத்தத்தினாலோ இயேசு பிடிக்கப்படவில்லை. இயேசுவே தம்மை ஒப்புக்கொடுத்தார் என்பதே உண்மை. இதற்கு முன்பே பலமுறை முயற்சித்தார்கள், அப்பொழுது இயேசுவின் வேளை வரவில்லை. இப்போது அவருடைய வேளை வந்தப்படியால் பிதாவின் சித்தப்படி தன்னையே ஒப்புக் கொடுத்தார். அவ்வாறு ஏறக்குறைய இரவு 11 மணியளவில் அவர்கள் அவரை பிடித்தார்கள்.

## மல்குஸின் காது வெட்டப்படுதல்
## (Malchus' ear was cut off)

இயேசுவை காவலாளர்கள் பிடித்தவுடனே, இயேசுவோடிருந்தவர்கள் "ஆண்டவரே பட்டயத்தால் இவர்களை வெட்டுவோமா" என்று கேட்டார்கள் (லூக்.22:49). இயேசு பதில் கூறுவதற்கு முன்னரே சீமோன் பேதுரு, தன்னிடத்திலிருந்த பட்டயத்தை உருவி, பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரனின் காதை வெட்டினான். அந்த வேலைக்காரனின் பெயர் மல்குஸ் என்பதாகும் (யோ.18:10). நாம் இங்கே நமது பொது அறிவை

பயன்படுத்தி சிந்தித்து பார்த்தால் ஒரு வேடிக்கையான உண்மை புரியும். அதாவது, யாருமே எதிராளியின் காதை வெட்டிய சம்பவத்தை நான் கேள்விப்பட்டது இல்லை. கையையோ காலையோ அல்லது கழுத்தையோ தான் வெட்டுவது இயல்பு. ஆகவே பேதுரு கழுத்தை தான் வெட்ட வந்திருப்பான், ஆனால் அவனது கத்தி தவறுதலாக காதை பதம் பார்த்திருக்கலாம் என கருதுகிறேன். இன்னும் ஒருபடி மேலே போய் சிந்தித்து பார்த்தால் ஒரு கழுத்தைக் கூட சரியாக வெட்ட தெரியாத அப்பாவியாக இருந்திருப்பான் போல! அல்லது பதற்றத்துடன் இருந்தபடியால் அவனது குறிக்கோள் தவறியிருக்கலாம்? எப்படியாயினும் இயேசு இந்த செயலை ஆதரிக்காமல் பேதுருவை கடிந்துக் கொண்டார். "உன்பட்டயத்தை திரும்ப அதின் உறையிலே போடு, பட்டயத்தை எடுக்கிற யாவரும் பட்டயத்தால் மடிந்து போவார்கள்" என்றார் (மத்.26:52).

உடனடியாக இயேசு மல்குஸின் காதை தொட்டு, அவனைச் சொஸ்தப்படுத்தினார் (லூக்.22:51). குணமாக்காமல் இருந்திருந்தால், பேதுருவையும் பிற சீஷர்களையும் பிடித்திருப்பார்களோ என்னவோ? இப்போதும் கூட இயேசு தமது சீஷர்களை பாதுகாத்தார் என்பதே முக்கியமான செயலாகும். இங்கு இயேசு மூன்று காரியங்களை கூறுகிறார்.

(i) பட்டயத்தை எடுக்கிற யாவரும் பட்டயத்தால் மடிந்து போவார்கள் (மத். 26:52) என்றார். இயேசு ஆயுதபலத்தால் தமது ராஜ்யத்தை நிறுவ விரும்பவில்லை என்பதை இதுகாட்டுகிறது, மேலும் அவருடைய ராஜ்யம் பரலோக ராஜ்யம் ஆகும்.

(ii) பிதா எனக்கு கொடுத்த பாத்திரத்தில் நான் பானம் பண்ணாதிருப்போனோ என்றார் (யோ.18:11). பிதாவின் அநாதி தீர்மானப்படி, அதாவது ஆதி.3:15-ல் கூறப்பட்ட "நீ அவர் குதிகாலை நசுக்குவாய்" என்ற வார்த்தை தன்னில் நிறைவேறும் படி பாடுமரணத்தை ஏற்றுக் கொண்டார். ஆகவே, பிதா தனக்கு கொடுத்த பாத்திரத்தை (பாடு, மரணம்) இப்போது குடிக்க தயாராகிறார் (மாற். 10:38).

(iii) நான் இப்பொழுது என் பிதாவை வேண்டிக் கொண்டால், அவர் பன்னிரண்டு லேகியோனுக்கு அதிகமான தூதரை என்னிடத்தில் அனுப்பமாட்டாரென்று நினைக்கிறாயா என்றார் (மத். 26:53).

## லேகியோன் என்றால் என்ன? What is Legion?

ரோமர்களது இராணுவத்தில் உள்ள ஒரு படைபிரிவை ஒரு லேகியோன் என்று கூறுவார்கள். ஆரம்பக் காலக்கட்டத்தில் ஒரு படைபிரிவில் 3000 பேர் இருந்தார்கள், பின்நாட்களில் அதாவது இயேசுவின் காலக்கட்டத்தில் 6000 பேராக விரிவாக்கம் செய்யப்பட்டது. லேகியோன் என்பது ஒரு திரள் கூட்டத்தை தெரிவிக்க பயன்படுத்தப்படும் வார்த்தையாகும். மாற். 5:9-ல் அசுத்த ஆவி, "நாங்கள் அநேகராயிருக்கிறபடியால் என் பேர் லேகியோன்" என்று கூறியது. இங்கு அசுத்த ஆவியின் பெயர் லேகியோன் அல்ல ஆனால் எவ்வளவு அசுத்த ஆவி இருக்கிறது என்ற எண்ணிக்கையை தான் லேகியோன் என்றது. 100 பேருக்கு அதிபதியை நூற்றுக்கதிபதி என்பது போல, 6000 பேர் கொண்ட எண்ணிக்கையை தான் லேகியோன் என்று குறிப்பிட்டனர்.

இயேசு, "நான் கேட்டுக்கொண்டால் 12 லேகியோனுக்கு அதிகமான தூதர்களை என்னிடம் அனுப்புவார்" என்றார். நாம் அதை கணக்கிட்டு பார்த்தால், 12x6000 = 72000 வருகிறது. 12 லேகியோன் என்றால் 72000 பேரை குறிக்கிறது. நான் கேட்டால் 72000-க்கும் அதிகமான தூதர்களை பிதா தந்தருளுவார் என்று இயேசு கூறினார். ஏசாயா. 37:36-ல் ஒரே ஒரு தூதன் வந்து ஆசீரியரின் பாளையத்திலிருந்த ஒரு லட்சத்து எண்பத்தையாயிரம் (1,85,000) பேரை சங்கரித்துப் போட்டான் என பார்க்கிறோம். அங்கே இருந்த அத்தனை பேரையும் சங்கரித்தான் என்பதே நிஜம். இன்னும் அதிகமானோர் இருந்திருந்தால் அத்தனை பேரையும் சேர்த்து சங்கரித்திருப்பான். குறைந்தபட்சமாக இந்த கணக்கை வைத்து பார்த்தால் கூட ஒரு தூதன் இவ்வளவு பேரை சங்கரித்தான் என்றால் 72000 தூதர்களும் சேர்ந்து வந்தால் எத்தனை பேரை சங்கரிக்க முடிந்திருக்கும்! 72000 x 185000 = ??? அடேங்கப்பா! தலை சுத்துகிறது போல் இருக்கிறதல்லவா? ஆம், நம் இயேசு நமக்காக மரிக்கும்படி எல்லா உதவிகளையும் புறந்தள்ளி தன்னையே ஒப்புக்கொடுத்தார்.

## சீஷர்கள் எல்லாரும் ஓடிபோகுதல்
## (All the Disciples fleeaway)

மேய்ப்பனை வெட்டுவேன், ஆடுகள் சிதறடிக்கப்படும் என்று எழுதியிருக்கிறபடி (சக.13:7), இந்த இராத்திரியிலே நீங்களெல்லாரும் என்னிமித்தம் இடறலடைவீர்கள் என்று இயேசு சீஷர்களிடம் கூறியிருந்தார் (மாற்.14:27). "இந்த இராத்திரியிலே" எல்லோரும் தன்னைவிட்டு போவார்கள் என்ற அவரது வார்த்தை, அந்த இரவிலே நிறைவேறியது.

✹ மத்.26:56 - சீஷர்களெல்லாரும் அவரைவிட்டு ஓடிப்போனார்கள்

✹ மாற்.14:50-52 - எல்லாரும் அவரை விட்டு ஓடிப்போனபோது, ஒரு வாலிபன் துப்பட்டியை (போர்த்திக் கொள்கிற போர்வை) மாத்திரம் தன்மேல் போர்த்திக்கொண்டு இயேசுவுக்கு பின்னே போனான் (கொஞ்சம் தைரியமுள்ளவனாய் இருந்திருப்பான் போல) அப்போது அவனையும் காவலாளர்கள் பிடித்தார்கள். உடனே அவனும் பயந்து போய் தனது போர்வையை போட்டுவிட்டு, நிர்வாணமாய் அவர்களை விட்டு ஓடிப்போனான். (அநேகமாக உள்ளாடையை அணிந்திருப்பான், ஆனால் அதைகுறித்து இங்கு குறிப்பிடப்படவில்லை). யார் இந்த வாலிபன்? இந்த சுவிசேஷத்தை எழுதிய "மாற்கு" தான் என்று அநேக வேதப்பண்டிதர்களால் கருதப்படுகிறது. இயேசுவும் சீஷர்களும் இந்த மாற்குவின் வீட்டில் வைத்து பஸ்காவை ஆசரித்தவுடன், கெத்செமனே தோட்டத்திற்கு சென்றார்கள். மாற்கு தனது வீட்டிலிருந்து நேரடியாக அங்கு சென்ற படியாலும், இரவு நேரமாயிருந்தபடியாலும் ஒரு போர்வையை மட்டும் போர்த்திக் கொண்டு போயிருப்பான் என கருதுகிறேன்.

■■■



அத்தியாயம் - 4

# மத நீதிமன்ற நிகழ்வுகள்
# (Events in the Religious court)

(மத். 26:57-75; மாற்: 14:53-72; லூக்: 22:54-71;
யோவா: 18:12-27)

கெத்செமனே தோட்டத்தில் வைத்து ஏறக்குறைய இரவு 11 மணியளவில் இயேசுவானவர் கைது செய்யப்பட்டார். அவரை பிடித்தவுடன் அவரது இரண்டு கைகளையும் சேர்த்துக்கட்டி எருசலேமுக்கு கொண்டு வந்தார்கள். எருசலேம் பட்டணத்தில் 12 வாசல்கள் இருந்தன என்பது குறிப்பிடதக்கதாகும். அதில் ஒன்றான ஆட்டுவாசல் (Sheep gate) வழியாக தான் பலியிடுவதற்கு கொண்டுவரப்படுகிற ஆடுகளை எல்லாம் கொண்டுவருவது வழக்கமாயிருந்தது. இந்த ஆட்டுவாசல் வழியாக தான் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவையும் அழைத்துக்கொண்டு வந்தார்கள். தெரிந்தோ? தெரியாமலோ? இயேசுவே உண்மையான பஸ்கா ஆட்டுக்குட்டியாய் இருக்கிறார் என்பதை இது மறைமுகமாக பறைசாற்றியது.

இயேசுவை பிடித்தவுடன் முதலில் மத நீதிமன்றங்களில் விசாரணையை மேற்கொண்டனர். ஏனென்றால் இரவு 11 மணியளவில் விதிமுறைக்கு மாறாக கைது செய்தபடியினால் அப்போது அரசாங்க நீதிமன்றங்களில் கொண்டு செல்ல இயலாமல் இருந்தார்கள்.

அரசாங்க நீதிமன்றங்களில் அடுத்த நாள் காலையில் தான் கொண்டு செல்லமுடியும் என்ற நிலை இருந்தபடியினால் அந்த இரவு முழுவதும் சட்டத்துக்கு புறம்பான நிலையில் மூன்று மத நீதிமன்றங்களில் அவர் விசாரிக்கப்பட்டார்.

## 1. முன்னாள் பிரதான ஆசாரியனான அன்னா (Former High Priest Annas)

ஆயிரத்துக்கும் மேற்பட்ட ரோம மற்றும் யூத போர்ச் சேவகர்கள் படைசூழ கட்டப்பட்ட நிலையில் இயேசுவானவர் பிரதான ஆசாரியனான அன்னாவிடம் ஏறக்குறைய இரவு 11.30 மணியளவில் அழைத்து செல்லப்பட்டார். உண்மையாக சொல்ல வேண்டுமானால், இயேசுவை விசாரித்த காலத்தில் இருந்த அங்கீகரிக்கப்பட்ட பிரதான ஆசாரியன் அல்ல இந்த அன்னா என்பவன். அப்போதைய பிரதான ஆசாரியனாயிருந்த காய்பாவின் மாமனாயிருந்தான் இந்த அன்னா. அப்படியென்றால் ஏன் அன்னாவை பிரதான ஆசாரியன் என வேதம் கூறுகிறது எனக் கேட்பீர்கள்? இந்த அன்னாவும் பிரதான ஆசாரியனாக இருந்திருந்தான் என்பதும் உண்மையே. பொதுவாக ஒரு பிரதான ஆசாரியனுடைய மரணத்துக்கு பிறகு தான் வேறு ஒரு பிரதான ஆசாரியனை ஏற்படுத்துவது நடைமுறையிலிருந்த சட்டமாகும். ரோமர்களுடைய எழுச்சிக்கு பிறகு இந்த பிரதான ஆசாரியர்களை அவர்கள் தான் நியமித்து வந்தார்கள், என்பது அவர்களது சர்வாதிகாரத்தின் உச்சமாக இருந்தது. அன்னா பிரதான ஆசாரியனாக இருந்த போது ரோமர்களால் அவர் பதவிநீக்கம் (dismiss) செய்யப்பட்டார். அவருக்கு பதிலாக அவரது மருமகனான காய்பா என்பவனை பிரதான ஆசாரியனாக நியமித்தார்கள். ஆகவே காய்பா தான் அதிகாரப்பூர்வமான பிரதான ஆசாரியனாக இருந்தான். ஆனாலும் யூதர்கள் தங்களது நியமத்தின் படி அன்னாவின் மரணம் வரை அவனையும் பிரதான ஆசாரியனாகவே கருதினார்கள். எப்படியாயினும் அன்னா என்பவன் முன்னாள் பிரதான ஆசாரியனாயிருந்த படியால் இந்த முதல் விசாரணை அதிகாரபூர்வமற்றதாகவும், சட்டத்துக்கு புறம்பானதாகவும் இருந்தது.

**யார் இந்த அன்னா? Who is this Annas?**

அன்னா கி.பி.6 முதல் 15 வரை பிரதான ஆசாரியனாக இருந்தான் என குறிப்புகள் கூறுகின்றன. அவன் பல தவறான வழியில் ஈடுபடுவதில் புகழ்பெற்றவனாய் இருந்தான் என்று

சரித்திரம் கூறுகிறது. அவனுடைய ஐந்து மகன்களுமே பிரதான ஆசாரியனாயிருந்திருக்கிறார்கள். இவனது மகன்கள் தான் எருசலேமில் உள்ள வணிக மையங்களை கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர். ஆகவே எருசலேமின் எல்லா விதமான பொருளாதார இலாபங் களையும் இவர்கள் தான் பெற்று வந்தார்கள். எருசலேம் தேவாலயத்துக்கு வரும் ஜனங்கள் பலி செலுத்தும்படி ஆட்டுக் குட்டிகளை கொண்டு வர வேண்டும் என்பது எல்லோருக்கும் தெரிந்த உண்மையாகும். பிரதான ஆசாரியனான அன்னாவின் குடும்பத்தினர் செய்துவந்த அட்டூழியம் என்னவென்றால், ஜனங்கள் கொண்டு வரும் பலி மிருகங்களை அங்கீகரிக்காமல் தள்ளிவிட்டார்கள். ஆகவே பிரதான ஆசாரியனின் கட்டுபாட்டில் இருந்த தேவாலய கடைகளில் இருந்து வேறு ஆட்டுக்குட்டிகளை வாங்க வேண்டிய கட்டாயத்திற்குள்ளாக ஜனங்கள் தள்ளப்பட்டார்கள். தேவாலய கடைகளில் இருந்து வாங்கியதற்கான முத்திரையை காண்பித்தால் மட்டுமே ஆசாரியர்களும் பலிமிருகத்தை அங்கீகரித்து பலி செலுத்த சம்மதித்து வந்தனர். இவ்வாறு ஜனங்கள் தங்களது மிருகங்களை குறைந்த விலையில் விற்றுவிட்டு, தேவாலய கடைகளிலிருந்து அதிக விலைக்கொடுத்து வேறு மிருகங்களை வாங்க வேண்டிய அவல நிலைக்குள்ளானார்கள்.

இப்படிப்பட்ட அவலநிலை நீடித்தப்படியால் ஓரளவு வசதிபடைத்த ஜனங்கள் வரும்போது, ஆட்டுகுட்டிகளையே கொண்டுவராமல் முழுமையான பணத்தையும் செலுத்தி தங்கள் பலிக்கு ஆடுகளை வாங்கி வந்தார்கள். மேற்கூறிய எந்த வழியில் வாங்கினாலும் அதனுடைய இலாபம் அனைத்துமே பிரதான ஆசாரியனுடைய குடும்பத்துக்கு தான் சென்றடைந்தது. ஒவ்வொரு பஸ்கா பண்டிகையின் போதும் இரண்டு லட்சத்து ஐம்பதாயிரம் (2, 50,000) ஆடுகளுக்கு மேல் விற்பனையாகி வந்தன என ஜோசப்பஸ் என்ற வரலாற்று ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில் தான் இயேசு தேவாலயத்தில் பிரவேசித்து, பிரகாரத்தை சுற்றிலும் வைக்கப்பட்டிருந்த கடைகளில் வந்து, விற்கிறவர்களும், கொள்ளுகிறவர்களுமாகிய யாவரையும் வெளியே துரத்திவிட்டு; கயிற்றினால் ஒரு சவுக்கை உண்டுபண்ணி அவர்கள் யாவரையும், ஆடுமாடுகளையும்

தேவாலயத்தின் புறம்பே துரத்திவிட்டு காசுக்காரருடைய காசுகளைக் கொட்டி, பலகைகளைக் கவிழ்த்துப் போட்டு, புறாவிற்கிறவர்களை நோக்கி: இவைகளை இவ்விடத்திலிருந்து எடுத்துக் கொண்டு போங்கள்; என் பிதாவின் வீட்டை வியாபார வீடாக்காதிருங்கள்; என்னுடைய வீடு எல்லா ஜனங்களுக்கும் ஜெபவீடு என்னப்படும், நீங்களோ அதை கள்ளர் குகையாக் கினீர்கள் என்றார் (மத்.21:12-13; மாற்.11:15-17; யோ.2:13-17).

இவ்வாறு, அன்னாவின் குடும்பத்துக்கு வரவேண்டிய வருமானம் முழுவதும் இயேசுவின் திடீர் நடவடிக்கையால் நின்று போனது. பல வழிகளில் வந்துக் கொண்டிருந்த பொருளாதார இலாபங்கள் நின்று போனதால் அப்போதே அவரை கொலைசெய்யும்படி வகை தேடினார்கள். ஆனால் ஜனங்களுடைய ஆதரவு மிக அதிகமாய் அவருக்கு இருந்ததால் பயந்துபோய் இருந்தார்கள் (மாற்.11:18).

**அன்னாவிடம் கொண்டு செல்வதற்கான காரணங்கள்**

(i) இயேசு தேவாலயத்தில் செய்த சீர்திருத்தத்தின் விளைவாக அன்னாவின் பொருளாதாரம் அடியோடு அழிந்து போனது. ஆகவே அவன் இயேசுவின் மேல் மிகுந்த கோபமுடன் காணப்பட்டான். ஆகவே இயேசுவை அன்னாவிடம் கொண்டு செல்லுவதின் மூலம் எளிதாக மரணதண்டனையை கொடுத்துவிடலாம் என்று எண்ணினார்கள்.

(ii) பிரதான ஆசாரியனை தலைமையாக கொண்ட சனகெரிப் என்கிற ஆலோசனை சங்கத்தில் தான் ஒருவரை முறையாக விசாரிக்க வேண்டும். இந்த சங்கத்தில் பிரதான ஆசாரியனை தவிர வேறு 70 பேர் உறுப்பினர்களாக இருந்தனர். அந்த உறுப்பினர்களில் பெரும்பான்மையோர் வந்து சேர கால அவகாசம் தேவைப்பட்டது. ஆகவே அதுவரையிலும் இயேசுவை அன்னாவின் வீட்டில் வைத்து விசாரித்து ஏதாவது குற்றம் கண்டுபிடித்து விடலாம் என எண்ணினார்கள்.

(iii) யூத சட்டப்படி ஒருமனிதனை ஒரே நாளில் விசாரித்து மரணத்தண்டனைக் கொடுப்பது நியாயமற்றதாகும். ஒருவனுக்கு தண்டனை வழங்கும் முன்பு, அவனை விசாரித்து விட்டு ஒருநாள் கால அவகாசம் கொடுக்க வேண்டும். ஆகவே மேலும் ஒரு நாள்

காத்திருக்க விரும்பாததால், இரவோடு இரவாக அன்னாவின் முன்பு அவரை நிறுத்தி விசாரிக்கத் தொடங்கினார்கள். அடுத்த நாள் காலையில் சனகெரிப் சங்கம் முன் நிறுத்தி, குற்றவாளி என்று தீர்ப்பு வழங்க இது வசதியாயிருக்கும் என எண்ணினார்கள்.

**அன்னாவின் விசாரணை**

அன்னா இயேசுவை விசாரணை செய்ததே சட்டத்துக்கு புறம்பானது ஆகும். யூதர்களின் சட்டப்படி ஒரு நீதிபதியோ அல்லது விசாரணை மன்ற தலைவனோ பிரதிவாதியை நேரடியாகக் கேள்வி கேட்டு விசாரணை செய்யக்கூடாது. மாறாக பிரதிவாதிக்கு ஆதரவான சாட்சிகள் சிலரும், எதிரான சாட்சிகள் சிலரும் அழைக்கப்பட வேண்டும். (நமது இந்திய சட்டத்திற்கு ஒப்பானது போல தெரிகிறது) ஆனால் இந்த இரண்டு விதிமுறைகளும் இங்கு மீறப்பட்டது.

**கேள்வி.1** அன்னா இயேசுவிடம், அவருடைய சீஷரைக்குறித்தும், போதகத்தை குறித்தும் கேள்விகளைக் கேட்டு விசாரணையைத் தொடங்கினான் (யோ.18:19).

சரியாக என்னக்கேள்வியை கேட்டார் என கூறப்படவில்லை. ஆனாலும் சில யூகங்களின்படி சீஷரைக்குறித்து விசாரித்தவைகள் இவைகள் தான் என நம்புகிறோம். இயேசுவுக்கு அவருடைய 12 சீடர்களை தவிர (மத்.10:1-4) வேறு 70 சீஷர்களும் இருந்தார்கள் (லூக்.10:1). வேறு அநேக இரகசிய சீஷர்களும் இருந்தார்கள். யூதர்களுடைய ஆலோசனை சங்க நிர்வாகிகள் சிலரும், மற்றும் பல பரிசேயர்களும், வேதபாரகரும் இதில் அடங்குவார்கள். ஆகவே அவர்களை குறித்து ஒருவேளை விசாரித்திருக்கலாம்!

போதகத்தை குறித்து சொல்லவேண்டுமானால், யூதர்கள் கூட கிறிஸ்துவுக்காக தான் காத்திருந்தார்கள். ஆனால் அவர் ஒரு ராஜாவாக வருவார் என எதிர்பார்த்திருந்தனர். இயேசுவின் போதகத்தில் அவர் தன்னை கிறிஸ்து என கூறியிருந்தபடியால் அதை யூதர்களால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. ஆகவே அவைகளை குறித்தும் விசாரித்திருந்திருப்பான் போல!

**பதில் 1:** அன்னா சட்டத்துக்கு புறம்பான விதத்தில் செயல்பட்டதால், இயேசுவும் அவனுடைய கேள்விகளுக்கு நேரடியாக பதில் கூறாமல் நான்கு கருத்துக்களை கூறினார் (யோ.18:20, 21).

(i) நான் வெளியரங்கமாய் உலகத்தாருடன் பேசினேன்

(ii) ஜெப ஆலயங்களிலேயும், யூதர்களெல்லாரும் கூடிவருகிற தேவாலயத்திலேயும் எப்பொழுதும் உபதேசித்தேன்.

(iii) அந்தரங்கத்திலே நான் ஒன்றும் பேசவில்லை.

(iv) நீர் என்னிடத்தில் விசாரிக்க வேண்டியதென்ன? நான் சொன்னவைகளைக் கேட்டவர்களிடத்தில் விசாரியும்; நான் பேசினவைகளை அவர்கள் அறிந்திருக்கிறார்களே. அதாவது அவரது பேச்சைக்கேட்ட சாட்சிகளை சட்டப்படி அழைத்து விசாரிக்க கூறினார். ஆனால் அதற்கு அவர்கள் ஒப்புக்கொள்ளவில்லை.

**கேள்வி 2:** இயேசுவின் வித்தியாசமான பதிலைக் கேட்டு ஆத்திரமடைந்த சேவகரில் ஒருவன்: பிரதான ஆசாரியனுக்கு இப்படியா பதில் கூறவேண்டும் என்று கேள்விக் கேட்டதோடு நின்றுவிடாமல், கோபத்தோடு அவரை அறைந்தான் (யோ.18:22)

விசாரணை நடந்துக்கொண்டிருக்கும் போது யாரும் பிரதிவாதியை அடிக்கக்கூடாது. ஒருவேளை அடிக்கப்பட்டால், அடித்தவனை பிரதான ஆசாரியன் தண்டிக்க வேண்டும் என்பது சட்டம். அந்த சட்டமும் இங்கே மீறப்பட்டது.

**பதில் 2:** இங்கு இயேசு இரண்டு கருத்துக்களை முன் வைத்தார்.

(i) நான் தகாதவிதமாய் பேசினேன் என்றால், என்ன தவறாக பேசினேன் என்று சொல்

(ii) நான் சரியாய் பேசினேன் என்றால், ஏன் என்னை அடிக்கிறாய்? என்று பதிலுரைத்தார் (யோ.18:23).

இங்கு இயேசு அமைதியான முறையில் பதில் சொன்னாரே தவிர, யாரையும் திருப்பி தாக்கவில்லை. ஏனென்றால் "உன்னை ஒரு கன்னத்தில் அறைகிறவனுக்கு மறுகன்னத்தையும் கொடு" (லூக்.6:29) என்பது தான் இயேசுவின் போதனையாய் இருந்தது. தோபித் (Tobit) என்பவன் தான் இயேசுவை கன்னத்தில் அறைந்தான் என பல குறிப்புகளில் காண முடிகிறது.

தொடர்ந்து விசாரிப்பதில் எந்த பயனுமில்லை என்பதை உணர்ந்த அன்னா, இயேசுவை அந்த வருஷத்து உண்மையான பிரதான ஆசாரியனாயிருந்த காய்பாவிடம் கட்டுண்டவராக அனுப்பினான் (யோ.18:24). அதாவது கெத்செமனே தோட்டத்தில்

வைத்து கையில் போட்ட கட்டை இன்னும் அவிழ்க்காமல் அப்படியே காய்பாவிடம் அனுப்பி வைக்கப்பட்டார். அன்னா மற்றும் காய்பா என்பவர்களுடன் நடைபெற்ற விசாரணைகள் தேவாலயத்து வளாகத்திலிருந்த இரு வேறு கட்டடங்களில் நடைபெற்றிருக்க கூடும் என நம்பப்படுகிறது.

## 2. பிரதான ஆசாரியனான காய்பா (Caiaphas the High priest)

ஆண்டவராகிய இயேசுவை ஏறக்குறைய நடு இரவு 12 மணியளவில் கட்டுண்டவராக பிரதான ஆசாரியனான காய்பாவிடம் கொண்டு வந்ததாக கூறப்படுகிறது. "ஜனங்களுக்காக ஒரே மனுஷன் (இயேசு) சாகிறது நலமாயிருக்குமென்று யூதருக்கு ஆலோசனை சொன்னவன் இந்த காய்பாவே" (யோ.18:4) என கூறப்பட்டுள்ளது. காய்பா என்ன ஆலோசனையை கூறினார்? எப்போது கூறினார்? என்ற கேள்விகளுக்கு விடைகாண வேண்டுமென்றால், கீழேயுள்ள காய்பாவை குறித்த செய்தி தொகுப்பை நாம் அறிந்துக்கொள்ள வேண்டும்.

### யார் இந்த காய்பா? Who is the Caiaphas?

பிரதான ஆசாரியனான காய்பாவின் முழு பெயர் "யோசேப்பு காய்பா" (Joseph Caiaphas) என்பதாகும். யோசேப்பு என்பது அவனது பெயரும் காய்பா என்பது அவனது குடும்ப பெயரும் ஆகும். இவன் கி.பி.18 முதல் 36 வரை பிரதான ஆசாரியனாக இருந்தான் என குறிப்புகள் கூறுகின்றன. இயேசு லாசருவை உயிரோடு எழுப்பியதன் விளைவாக, அநேக யூதர்கள் அவர்மேல் விசுவாசம் வைத்தார்கள் (யோ.11:45). இதை கேள்விப்பட்ட யூத தலைவர்களில் அனேகர் எரிச்சல் அடைந்தார்கள். அப்பொழுது சனகெரிப் என்னப்பட்ட ஆலோசனை சங்கம் பிரதான ஆசாரியனாயிருந்த காய்பாவின் தலைமையில் கூடி இதை விவாதித்தது. இயேசுவானவர் அற்புதங்கள் மேல் அற்புதங்களை செய்துவருவதால், நமது யூதர்களில் அநேகர் அவரை பின்பற்றுகிறார்கள், ஆகவே இதை எப்படியாவது தடுத்து நிறுத்த வேண்டும் என ஒருவருக்கொருவர் கூறினார்கள். அவர்களில் சிலர் இயேசுவை கைது செய்ய எவ்வளவோ முயற்சி செய்த போதிலும் அது முடியாமல் போனது (யோ.7:30; 10:39), சிலர் அவரை கொலை செய்யவும் முயற்சிசெய்து தோற்றுபோனார்கள் (யோ.8:59; 10:31).

ஜனங்கள் இயேசுவை இப்போது மேசியா என்று நம்ப ஆரம்பித்துவிட்டார்கள். இப்படியே விட்டுவிடுவோமானால் அவர்கள் இயேசுவைப் பிடித்து யூதர்களின் இராஜாவாக்கி விடுவார்கள் என அந்த சங்கத்தினர் பயந்தார்கள். அப்படி நடந்தால் ரோமர்கள் அதை தங்களுக்கு எதிரான மதபுரட்சி என கருதி யூதர்களின் தேவாலயத்தை இடித்து விட்டு, அவர்களையும் நாடு கடத்தி விடுவார்கள் என்றும் பயந்தனர். இதன் மூலம் யூதர்கள் தங்கள் மதசுதந்திரத்தை இழப்பதோடு, யூத மதத்தலைவர்களின் பதவியும் அதிகாரமும் பறிக்கப்படும்.

ஆகவே அப்போதைய பிரதான ஆசாரியனாயிருந்த காய்பா, என்பவன் சனகெரிப் சங்கத்திடம், "நமது நாடு முழுவதும் அழிந்து போவதை விட, இயேசு என்ற இந்த ஒரு மனிதன் அழிந்து போவது நல்லது; நாம் இயேசுவை கொல்லாவிட்டால், ரோமர்கள் நம்மைக் கொன்று விடுவார்கள்" என்றான். காய்பா உலகபிரகாரமான கண்ணோட்டத்திலிருந்து இதை கூறியிருந்தாலும், ஆவிக்குரிய நிலையில் பார்த்தால் இயேசு உண்மையிலே ஜனங்களுக்காக தான் மரித்தார் என்றும், அவரது மரணத்தினால் அநேகர் இரட்சிக்கப்பட்டார்கள் என்பதும் உண்மையே. மேலும் இதை அவன் சுயமாக கூறாமல் தீர்க்கதரிசனமாக கூறினான் என்று கூறப்பட்டுள்ளது. அது எப்படி என்றால், அவன் அந்த வருடத்தின் பிரதான ஆசாரியனாய் இருந்தபடியால், தேவனே அவன் மூலம் இதை சொல்ல வைத்தார் என்ற உண்மையும் புலப்படுகிறது. ஆனால் அவன் தேவனுக்காக தான் தீர்க்கதரிசனம் உரைக்கிறேன் என்பதை உணராமல் போனான்.



காய்பாவின் எலும்புகள்
வைக்கப்பட்டிருந்த பெட்டி

அன்று முதல் யூத தலைவர்கள் யாவரும் கூடி, இயேசுவைக் கொலை செய்ய சதி திட்டம் தீட்ட ஆரம்பித்தார்கள். இயேசுவைக் கொல்ல வேண்டும் என

சனகெரிப் சங்கத்தில் தீர்மானம் நிறைவேற்றினார்கள். இப்படி செய்வதினால் தங்கள் பதவியையும், நாட்டையும் காப்பாற்றிக் கொள்ளலாம் என தப்புக் கணக்கு போட்டார்கள். ஆனால் அவர்கள் இயேசுவை கொலை செய்ததின் பலனாக, நாற்பது ஆண்டுகள் தாண்டி கி.பி.70-ல் ரோமர்களால் அவர்களது தேவாலயமும், எருசலேம் நகரமும் தரைமட்டமாக இடிக்கப்பட்டது. ஆகவே யூதர்கள் தங்கள் பதவியையும், ஜனங்களையும் இழந்துப் போனார்கள். இவ்வுலகில் தங்கள் இருப்பிடத்தை இழந்ததுடன், பரலோகில் தங்கள் இரட்சிப்பையும் இழந்து போனார்கள்.

இந்த யோசேப்பு காய்பா தான் ஸ்தேவானைக் கொல்ல காரணமாயிருந்தான் (அப்.7:1). இந்த காய்பா சதுசேய பிரிவை சார்ந்தவன் என நம்பப்படுகிறது (அப்.5:17). இவனது கல்லறைப்பெட்டி எருசலேமுக்கு தெற்கே கி.பி.1990 ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டது. அழகிய வேலைப்பாடுகள் நிறைந்த ஒரு பெட்டியில் (Ossuary) அவனது குடும்பத்தில் உள்ள எல்லாருடைய எலும்புகளும் அடக்கம் செய்யப்பட்டிருந்தன. இந்த பெட்டியில் யோசேப்பு காய்பா என்ற பெயரும் பொறிக்கப்பட்டிருந்தது.

இயேசுவானவர் பிரதான ஆசாரியனான காய்பாவிடம் விசாரணைக்கு அழைத்துவரப்பட்ட போது, பேதுருவும் இன்னொரு சீஷன் என கூறப்பட்ட யோவானும் அரண்மனைக்குள் வந்தார்கள் (யோ.18:15, 16). கெத்செமனே தோட்டத்தில் வைத்து எல்லோரும் ஓடிப்போனார்கள். ஆனாலும் தைரியமடைந்து இவர்கள் இருவரும் இங்கே வந்திருப்பது பாராட்டுக்குரியது ஆகும். இவர்களால் எப்படி அரண்மனைக்குள்ளே நுழைய முடிந்தது? பாரம்பரியம் கூறுவது என்னவென்றால்: யோவானுடைய தகப்பன் வீட்டார், கலிலேயாவில் கருவாடு (Dry fish) விற்கும் தொழிலை செய்துவந்தார்கள். அவர்கள் பிரதான ஆசாரியனின் அரண்மனைக்குள்ளாகவும் அதை விற்று வந்தார்கள். ஆகவே அங்கு உள்ள வாசல் காப்பாளன் தொடங்கி பிரதான ஆசாரியன் வரை எல்லோரையும் தெரிந்து வைத்திருந்தான். அந்த அறிமுகத்தினால் யோவானாலும் சுலபமாக உள்ளே செல்ல முடிந்தது, ஆகவே அந்த செல்வாக்கை பயன்படுத்தி பேதுருவையும் உள்ளே அழைத்து சென்றான்.

## பேதுரு இயேசுவை மறுதலித்தல்

இயேசு ஏற்கனவே பேதுருவிடம், இன்றைக்கு இந்த இராத்திரியிலே சேவல் இரண்டுதரம் கூவுகிறதற்கு முன்னே, நீ மூன்றுதரம் என்னை மறுதலிப்பாய் என்று கூறியிருந்தார் (மத்.26:69-75; மாற்.14:66-72; லூக்.22:55-62; யோ.18:17, 25, 26). நம்மில் பலரும் தெரிந்து வைத்திருப்பது என்னவென்றால், சேவல் இரண்டு தரம் கூவுகிறதற்கு முன்னே பேதுரு மூன்று முறை மறுதலித்தான் என்பதாகும். ஆனால் நாம் இங்கே இரண்டு விதமான கருத்துக்களை ஆராயப் போகிறோம். **முதல் கருத்தானது:** சேவல் முதல்முறை கூவுகிறதற்கு முன்பு மூன்று முறையும், இரண்டாவது முறை கூவுகிறதற்கு முன்பு மூன்று முறையுமாக, மொத்தம் ஆறு முறை மறுதலித்தான் என்பதாகும். **இரண்டாவது கருத்தானது:** சேவல் இரண்டு தரம் கூவுகிறதற்கு முன்பு பேதுரு மூன்று முறை மறுதலித்தான் என்பதாகும். ஒருவேளை நீங்கள் இதை முதன்முறையாக கேள்விபடலாம்! சிலர் ஏற்கனவே இதை படித்திருப்பீர்கள். எதுவானாலும் பதற்றபடாமல் நாம் ஒருமித்து வேதத்திலிருந்து தெளிவை பெறலாம்!

### 1. முதல் கருத்தின் படி ஆறுமுறை மறுதலித்தல்

### (a) முதல் மூன்று முறை மறுதலித்தல்

(i) வாசல் காக்கிற வேலைகாரி அவனிடம்: நீயும் அந்த மனுஷனுடைய சீஷரில் ஒருவனல்லவா? என கேட்டபோது "நான் அல்ல" என பேதுரு பதிலளித்தான் (யோ.18:17; மத்.27:69, 70; லூக்.22:56, 57).

(ii) வேறொருவன் வந்து, "நீயும் அவர்களில் ஒருவன்" என்று கூறியபோது, பேதுரு "நான் அல்ல" என்றான் (லூக்.22:58).

(iii) பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரி வந்து, "நீயும் நசரேயனாகிய இயேசுவோடு இருந்தாய்" என்று கூறியப்போது, பேதுரு "நான் அறியேன்" என்றான் (மாற்.14:66-68; மத்.26:71, 72).

இவைகளை கூறிய உடன் தன்னைக் காப்பாற்றிக்கொள்ள, வெளியே வாசல் மண்டபத்துக்கு போனான். வாசல் மண்டபம் (Porch) என்பது பிரகாரத்துக்கும், சாலைக்கும் இடைப்பட்ட பகுதியாகும். சாலையில் செல்பவர்கள் பிரகாரத்தில் நடக்கும் நிகழ்வுகளை பார்க்காமல் இருக்கும்படி பலமான ஒரு வாசல் அமைக்கப்பட்டிருந்தது.

பேதுரு இந்த இடைப்பட்ட பகுதியில் தான் போய் நின்றான். **(அப்போது சேவல் கூவிற்று)**

**(b) இரண்டாவது மூன்று முறை மறுதலித்தல்**

(i) பிரதான ஆசாரியனின் வேலைக்காரி மறுபடியும், "இவன் அவர்களில் ஒருவன்" என்ற போது பேதுரு மறுபடியும் மறுதலித்தான் (மாற்.14:69, 70)

(ii) மல்குஸின் இனத்தான் வந்து, "நான் உன்னை அவனுடனே கூடத் தோட்டத்தில் காணவில்லையா?" என்ற போதும், பேதுரு மறுபடியும் மறுதலித்தான் (யோ.18:26, 27; லூக்.22:59, 60)

(iii) ஜனக்கூட்டத்தார் அவனிடம், "மெய்யாகவே நீ அவர்களில் ஒருவன், நீ கலிலேயன், உன் பேச்சு அதற்கு ஒத்திருக்கிறது" என்றார்கள். அதற்கு பேதுரு, "நீங்கள் சொல்கிற மனுஷனை அறியேன் என்று கூறி சபிக்கவும் சத்தியம் பண்ணவும் தொடங்கினான். **(அப்போது சேவல் மறுபடியும் கூவிற்று)**

இந்த முதல் கருத்துப்படி ஐந்து பேரால் ஆறுமுறை மறுதலித்திருக்கிறான் என தெளிவாக காணமுடியும். வாசல்காக்கிற வேலைக்காரி, வேறொருவன், பிரதான ஆசாரியனின் வேலைகாரி, மறுபடியும் பிரதான ஆசாரியனின் வேலைக்காரி, மல்குஸின் இனத்தான், ஜனக்கூட்டத்தார் என ஆறுமுறை மறுதலித்திருக்கிறான்.

**2. இரண்டாவது கருத்துபடி மூன்று முறை மறுதலித்தல்**

(i) வாசல்காக்கிற வேலைகாரிதான், பிரதான ஆசாரியனின் வேலைகாரி என்கிறார்கள் இந்த கருத்தை ஆதரிப்பவர்கள்.

(ii) வேறொருவன் என்பவன் தான் மல்குஸின் இனத்தான் என்றும் இவர்கள் கூறுகிறார்கள்

(iii) ஜனக்கூட்டத்தார்.

இப்படிபார்க்கும் போது பிரதான ஆசாரியனின் வேலைக்காரி மறுபடியும் வந்து போவது இங்கு குறிப்பிடப்படவில்லை. ஆனால் வேதத்தில் அவள் மறுபடியும் வந்ததை குறித்து நாம் காணமுடியும். முதல் கருத்தின்படி பேதுரு முதல்முறை சேவல் கூவுகிறதற்கு முன்பு மூன்று முறையும், இரண்டாவது முறை சேவல் கூவுகிறதற்கு முன்பு மூன்றுமுறையுமாக மொத்தம் ஆறு முறை இயேசுவை மறுதலித்தான் என்பதையே அநேக வேத பண்டிதர்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

எது எப்படியிருந்தாலும், பேதுரு இயேசுவை மறுதலித்தான் என்பது மட்டும் மறுக்கமுடியாத உண்மையாகும்.

பேதுரு மறுதலித்தவுடன், இயேசு திரும்பி, பேதுருவை பார்த்தார். உடனடியாக பேதுரு இயேசுவின் வார்த்தைகளை நினைவுக்கூர்ந்து வெளியே போய், மனங்கசந்து அழுதான் (லூக்.22:61, 62). பாரம்பரியம் கூறுவது என்னவென்றால், பின்நாட்களில் எங்கே கோழி கூவுகிற சத்தத்தை கேட்டாலும், பேதுரு மனங்கசந்து அழுவது வழக்கமாயிருந்தபடியால், அவனது இரு கண்களில் இருந்து வழிந்தோடிய கண்ணீரினால் அங்கு ஒரு தழும்பையே ஏற்படுத்திவிட்டதாம். என்ன ஒரு ஆழமான மனந்திரும்புதல்! தவறு செய்வது மனித இயல்புதான், ஆனால் அதை விட்டு விட்டு தேவனிடம் ஒப்புரவாகிறது தான் சிறந்த மனந்திரும்புதலாகும்.

"சேவல் கூவியது" என்பதை குறித்து சில அறிஞர்கள் மாறுபட்ட கருத்தை கொண்டுள்ளார்கள். எருசலேம் நகர எல்லைக்குள் கோழிகள் அனுமதிக்கப்படுவதில்லை. அதுவும் பிரதான ஆசாரியனின் அரண்மனை முற்றத்தில் அறவே கோழிகள் தவிர்க்கப்பட்டன. அப்படியிருக்கும் போது எப்படி சேவல் கூவமுடியும்? என்கிறார்கள். ரோம ஆட்சிக்கு உட்பட்ட நகரங்களில் நேரத்தை அறிவிப்பதற்கு எக்காளம் ஊதப்பட்டு வந்தது. இந்த எக்காள சத்தத்தை பொதுவாக "சேவல் கூவுகிறது" (Cock Crows) என்று அழைத்தனர் எனவும் கூறுகிறார்கள். இந்த கருத்தை மறுப்போர் கூறுவதாவது, "ஒரு வேளை ஒரு ரோம இராணுவ வீரனின் வீட்டில் சேவல் இருந்திருக்கலாம்" என்கிறார்கள்.

### பொய்ச்சாட்சிகள் வரவழைக்கப்படுதல்

அன்னாவின் விசாரணையின் போது, சாட்சிகளை கேட்டு தெரிந்துக்கொள்ளும்படி இயேசு கூறியதாலோ என்னவோ, இங்கே முதலிலே பொய்சாட்சிகளை அழைத்து வந்திருந்தார்கள். பிரதான ஆசாரியனுடைய அரண்மனையிலே மூப்பர்களும், சங்கத்தாரும் கூட வந்திருந்தார்கள். அவர்கள் கொண்டுவந்த சாட்சிகளின் வாக்குமூலங்கள் ஒன்றுக்கொன்று முரண்பாடாக இருந்தப்படியால், அந்த சாட்சிகளை தள்ளுபடி செய்தார்கள். ஏனென்றால், யூதச்சட்டப்படி ஒரு மனிதன் குற்றவாளி என தீர்க்கப்படுகிறதற்கு குறைந்தது இரண்டு சாட்சிகளாவது வேண்டும் என்பது கட்டாயமாகும் (உபா.17:6; 19:15).

கடைசியாக இரண்டு பொய்ச்சாட்சிகள் வந்து, "தேவனுடைய ஆலயத்தை இடித்துப்போடவும், மூன்று நாளைக்குள்ளே அதைக்கட்டவும் என்னாலே ஆகும் என்று இவன் சொன்னான்" என்றார்கள். தேவாலயத்தை இடித்துப்போடுவேன் என மிரட்டுவது யூதர்கள் பார்வையில் பெரிய குற்றமாயிருந்தது (அப்.6:12-14). தேவாலயம் மீது அவர்கள் அதீத பற்றுள்ளவர்களாய் இருந்தார்கள். மேற்கூறிய வார்த்தைகளை இயேசு கூறியது உண்மை தான், ஆனால் அவர் தமது சரீரமாகிய ஆலயத்தை குறித்து (அவருடைய மரணத்தை குறித்து) பேசினார் என்பது குறிப்பிடத்தக்கதாகும் (யோ.2:19-21).

**காய்பாவின் விசாரணை**

**கேள்வி. 1:** பிரதான ஆசாரியன் எழுந்திருந்து அவரை நோக்கி: இவர்கள் உனக்கு விரோதமாய்ச் சாட்சி சொல்லுகிறதைக் குறித்து நீ ஒன்றும் சொல்லுகிறதில்லையா? எனக்கேட்டான் (மத்.26:62).

பதில் 1: (மௌனம்) இயேசுவோ பேசாமலிருந்தார் (மத்.26:63). அவர் நெருக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் இருந்தார், ஆனாலும் தம்முடைய வாயை அவர் திறக்கவில்லை; அடிக்கப்படும் படி கொண்டு போகப்படுகிற ஒரு ஆட்டுக்குட்டியைப் போலவும், தன்னை மயிர்கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டைப் போலவும், அவர் தம்முடைய வாயைத் திறவாதிருந்தார் (ஏசா.53:7) என்ற வேத வாக்கியம் இங்கு நிறைவேறுகிறது.

**கேள்வி 2:** மறுபடியும் பிரதான ஆசாரியன் அவரை நோக்கி: நீ ஸ்தோத்தரிக்கப்பட்ட தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து தானா? அதை எங்களுக்குச் சொல்லும்படி ஜீவனுள்ள தேவன் பேரில் உன்னை ஆணையிட்டுக் கேட்கிறேன் என்றான் (மத்.26:63).

இங்கு பிரதான ஆசாரியனே நியாயப்பிரமாணத்தை மீறுவதை காணலாம். அதாவது தேவனுடைய பெயரில் ஆணையிடக்கூடாது என்பது பத்து கட்டளைகளில் ஒன்றாகும். (யாத்.20:7).

பதில் 2: அதற்கு இயேசு: நீர் சொன்னபடி தான்; அன்றியும் மனுஷக்குமாரன் சர்வவல்லவருடைய வலதுபாரிசத்தில் வீற்றிருப்பதையும் வானத்தின் மேகங்கள் மேல் வருவதையும் இது முதல் காண்பீர்கள் என்று உங்களுக்கு சொல்லுகிறேன் என்றார் (மத்.26:64).

உண்மையை தெரிவிக்காமல் இருப்பது பாவமாக கருதப்பட்டது (லேவி.5:1) ஆகவே தான் "நீர் சொன்னப்படி தான்" என்று இயேசு உண்மையை கூறினார். இயேசு தாம் மேசியா என்பதை ஒப்புக் கொள்கிறார், தான் மீண்டும் வரபோகிற ராஜா என்பதையும் கூறுகிறார். கிறிஸ்து என்பதற்கு அபிஷேகம் செய்யப்பட்டவர் என்று பொருள்.

யூத சட்டப்படி ஒரு மனிதன் தன்னை தேவன் என்றோ தேவனுடைய குமாரன் என்றோ கூறினால் மரண தண்டனைக்கு பாத்திரவானாயிருப்பான் (யோ.5:18; உபா.24:15, 16). யூதர்களை பொறுத்தவரை அவ்வாறு கூறுவது பயங்கரமான தேவ தூஷணமாக கருதப்பட்டது. ஒருவன் தன்னை தேவன் என்று கூறினால், அந்த தேவனுக்கே இழுக்கு என கருதினார்கள். ஆகவே இந்த வார்த்தைகளால் அவரைக் கொலைச் செய்ய முடிவு செய்தார்கள்.

**பிரதான ஆசாரியன் வஸ்திரத்தை கிழித்தல்**

இந்த வார்த்தைகளை கேட்டவுடன் பிரதான ஆசாரியன் தன் வஸ்திரங்களை கிழித்துக் கொண்டு: இவன் தேவ தூஷணம் சொன்னான்; இனிச்சாட்சிகள் நமக்கு வேண்டியதென்ன? இதோ இவன் தூஷணத்தை இப்பொழுது கேட்டீர்களே என்றான் (மத்.26:65). பிரதான ஆசாரியன் எக்காரணம் கொண்டும் தனது வஸ்திரத்தை கிழிக்கக்கூடாது (லேவி.21:10) ஆனால் அந்த சட்டத்தையும் காய்பா மீறினான்.

பொதுவாக யூதர்கள் கோபமாகவோ அல்லது துக்கமாகவோ இருந்தால் தங்களது வஸ்திரங்களை கிழிப்பதின் மூலமும், சாம்பலை அல்லது மண்ணை அள்ளி தங்கள் தலைமேல் போட்டுக் கொள்வதின் மூலமும் தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்தி வந்தார்கள்.

**வேதத்தில் தங்கள் வஸ்திரங்களை கிழித்தவர்களில் சிலர்:**

ஆதி. 37:34 - யாக்கோபு துக்கமாய் இருக்கும் போது

எண்.14:6; யோசு.7:6 - யோசுவாவும் காலேபும் துக்கமாய் இருந்த போது

நியா. 11:35 - யெப்தா கவலையடைந்த போது

II சாமு. 1:11 - தாவீது கவலையடைந்த போது

II சாமு.15:32 - ஊசாய் துக்கமாக இருந்த போது

I இரா. 21:27 - ஆகாப் வேதனையடைந்த போது

II இரா.19:1 - எசேக்கியா துக்கமடைந்த போது

எஸ்த.4:1 - மொர்தெக்காய் துயரமடைந்த போது

யோபு.1:20 - யோபு எல்லாவற்றையும் இழந்த போது

அப்.14:14 - பவுலும் பர்னபாவும் துயரமடைந்த போது

ஆகவே தான் தேவனாகிய கர்த்தர் யோவேல் தீர்க்கதரிசி மூலம் "நீங்கள் உங்கள் வஸ்திரங்களையல்ல, உங்கள் இருதயங்களை கிழித்து உங்கள் தேவனிடம் திரும்புங்கள்" என்று கூறினார் (யோவே.2:13).

இன்றைக்கு இந்த பழக்கம் நம்மிடையே இருந்திருக்குமேயானால், நமக்கு எந்த வஸ்திரமும் மீதமிருந்திருக்க வாய்பே இல்லை!?

**இயேசுவுக்கு மரண தண்டனை விதித்தல்**

பிரதான ஆசாரியன் அங்கு வந்திருந்த அதிகாரிகள் மற்றும் ஜனங்களிடம், "உங்கள் விருப்பம் என்ன" என்று கேட்டப்போது, "மரணத்துக்குப் பாத்திரனாயிருக்கிறான்" என்றார்கள் (மத்.26:66). இயேசு கூறியவற்றையும், கூறாத சிலதையும் சேர்த்து பொய்யாக பிணைத்து அவருக்கு மரணதண்டனையை வழங்கினார்கள்.

மரணத்தண்டனைக் கொடுக்கப்பட்டவுடன் அவரை கேலியும் கிண்டலும் செய்யத் தொடங்கினார்கள் (மத்.26:67-68; மாற்.14:65; லூக். 22:63).

- அவருடைய முகத்தில் துப்பினார்கள்
- அவரை குட்டினார்கள் (செல்லமாக அல்ல; ஓங்கி முர்க்க வெறியோடு குட்டினார்கள்)
- அவருடைய கன்னத்தில் அறைந்தார்கள்
- அவருடைய கண்களை கட்டிவிட்டு, உன்னை அடித்தவன் யார்? அதை ஞான திருஷ்டியினால் சொல் என பரியாசம் செய்தார்கள்.
- கெட்ட வார்த்தைகளை அவருக்கு விரோதமாக பேசினார்கள்.
- வேலைக்காரரும் கூட அவருடைய கன்னத்தில் அறைந்தார்கள்.

"அடிக்கிறவர்களுக்கு என் முதுகையும் தாடைமயிரைப் பிடுங்குகிறவர்களுக்கு என் தாடைகளையும் ஒப்புக் கொடுத்தேன்; அவமானத்துக்கும் உமிழ்நீருக்கும் என் முகத்தை மறைக்கவில்லை" (ஏசா.50:6) என்கிற வேத வாக்கியம் நிறைவேறியது.

அவருக்கு மரணதண்டனையை காய்பா அளித்தப்போது ஏறக்குறைய அதிகாலை 2 மணியாக இருந்தது என கூறப்படுகிறது. அப்போதிலிருந்து விடியற்காலை 6 மணியளவில் சனகெரிப் சங்கத்திற்கு கொண்டுவரும் வரை அங்கிருந்த பாதாள அறையில் இயேசுவை அடைத்து வைத்து துன்புறுத்தினார்கள் என பாரம்பரியம் கூறுகிறது.

## 3. சனகெரிப் சங்கம் (Sanhedrin)

சனகெரிப் சங்கம் என்பது யூதர்களின் ஆட்சிமன்றம் ஆகும். இந்த சங்கத்தை தான் ஆலோசனை சங்கம் என கூறுகிறோம். இந்த சங்கத்தில் 70 பேர் உறுப்பினராக இருந்தனர், பிரதான ஆசாரியன் தான் இந்த சங்கத்துக்கு தலைவனாய் இருந்தான். அவனையும் சேர்த்து 71 பேர் உறுப்பினராக இருந்தனர் (சிலர் 72 எனவும் கூறுகிறார்கள்). யூதர்களுடைய சமயம் சார்பான எந்தவொரு முடிவும் இங்கு தான் தீர்மானிக்கப்பட்டு வந்தது (நமது இந்தியாவில் கூட தலைவர்கள் எந்த ஒரு திட்டத்தை அறிவித்தாலும், அதை பாராளமன்றம் அல்லது சட்டமன்றத்தில் விவாதித்து அங்கீகரிக்க வேண்டும். அதை போன்றதாய் தான் இந்த சங்கமும் இருந்து வந்தது). ஏற்கனவே பிரதான ஆசாரியன் இயேசுவுக்கு மரணத்தண்டனை வழங்கின பிறகும் ஏன் இந்த சனகெரிப் சங்கத்தில் கொண்டு வந்து விசாரிக்க வேண்டும்?

ஒருபோதும் ஒரு பிரதிவாதியை இரவில் விசாரிக்கக்கூடாது என்பது சட்டம். ஆகவே தான் இப்போது சட்டப்படி விடியற்காலையிலே சுமார் 6 மணியளவில் எல்லோருக்கும் முன்பதாக வைத்து விசாரிக்கிறார்கள். எருசலேம் தேவாலயத்துக்கு அருகிலே, பாறை மீது இந்த சங்கம் கட்டப்பட்டிருந்தது. இந்த சங்கத்தின் மையப்பகுதி அரை வட்டவடிவில் இருந்துள்ளது. ஆகவே அந்த அரைவட்ட பகுதியின் மையப்பகுதியில் இயேசுவை நிறுத்தி சங்கத்தினர் கேள்வி கேட்க ஆரம்பித்தார்கள். எல்லா உறுப்பினர்களும் இல்லாமல் இருந்த

போதே விசாரணையை மேற்கொண்டார்கள். ஏனென்றால் இந்த சங்கத்தின் உறுப்பினராய் இருந்த இயேசுவின் இரகசிய சீஷர்கள் நிக்கொதேமு என்பவனும் அரிமத்தியா ஊரை சேர்ந்த யோசேப்பும் அன்றைய மாலைப் பொழுது தான் வந்து சேர்ந்தார்கள் என்பதையும் காண முடிகிறது.

**சனகெரிப் சங்க விசாரணை**

கடைசியாக இயேசுவிடம் நேரடியாகவே இரண்டுக் கேள்விகளை முன்வைக்கிறார்கள். இயேசுவும் உடனடியான பதிலை கொடுத்தார்.

**கேள்வி 1:** நீ கிறிஸ்துவா? அதை எங்களுக்கு சொல் (லூக்.22:67)

**பதில் 1:** நான் உங்களுக்கு சொன்னாலும் நம்பமாட்டீர்கள், நான் உங்களிடத்தில் வினவினாலும் எனக்கு மாறுத்தரம் சொல்லமாட்டீர்கள், என்னை விடுதலை பண்ணவுமாட்டீர்கள். இது முதல் மனுஷகுமாரன் சர்வ வல்லமையுள்ள தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருப்பார் (லூக்.22:67-69).

**கேள்வி. 2:** அப்படியானால் நீ தேவனுடைய குமாரனா? (லூக். 22:70)

**பதில் 2:** நீங்கள் சொல்லுகிறபடியே நான் அவர்தான் (லூக். 22:70).

இவைகளை கேட்டவுடன் இனி வேறு சாட்சி நமக்கு தேவையில்லை, நாம் இவனுடைய வாயினாலே கேட்டோமே என்று சொல்லி சங்க விசாரணையை முடித்தார்கள்.

மரணத்தண்டனை வழங்கினாலும் கூட அதை நிறைவேற்ற கூடிய அதிகாரம் ரோமர்களுக்கு தான் இருந்தது. ஆகவே இவர்களால் அந்த தண்டனையை செயல்படுத்த முடியவில்லை. பல ஆண்டுகளுக்கு முன்னர் மரணத்தண்டனையை நிறைவேற்றும் அதிகாரம் இவர்களிடம் இருந்தது உண்மைத்தான். ஆனால் ரோமர்களுடைய எழுச்சிக்கு பிறகு ரோம தளபதியான "போம்பே" (Pompey) என்கிறவனுடைய ஆதிக்கம் மேலோங்கி நின்றது. அப்போதிலிருந்து யூதர்களுடைய பல உரிமைகளும் பறிக்கப்பட்டது. இப்போது சனகெரிப் சங்கத்தார் விசாரித்து, மரணத்தண்டனையை

சிபாரிசு மட்டுமே செய்ய முடிந்தது. அந்த தண்டனையை நிறைவேற்றுவது அல்லது நிறுத்தி வைப்பது என்பது ரோமர்களுடைய அதிகாரத்துக்குட்பட்டதாய் இருந்தது.

ஆகவே இயேசுவை பிலாத்துவிடம் அழைத்து செல்ல தயார் ஆனார்கள். ஆனால் பிலாத்து மத சம்மந்தமான விஷயங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கமாட்டான் என அவர்களுக்கு நன்றாக தெரியும். ஆகவே அரசியல் சம்மந்தமான ஒரு குற்றசாட்டை கூறுவதற்கு ஆயத்தமானார்கள். அவ்வாறு "இயேசு தன்னை ராஜா என்கிறார்" என்று கூறும்படி தீர்மானித்தார்கள்.

**தோல்வியில் முடிந்த மத விசாரணைகள்**

மூன்று விதமான மத விசாரணைகளை மேற்க்கொண்ட போதும் எந்தவொரு குற்றத்தையும் அவரிடத்தில் கண்டுபிடிக்க முடியவில்லை. ஆனால் கீழ்காணும் பொய்யான நான்கு குற்றசாட்டுகளை மட்டுமே சுமத்த முடிந்தது.

(i) தேவாலயத்தை இடிப்பதாக கூறினான்

(ii) தன்னை தேவகுமாரனாகிய கிறிஸ்து என்று கூறினான்

(iii) ஓய்வு நாளை மீறி நடந்தான்

(iv) பாவிகளோடு சேர்ந்து நடந்தான்

ஆனால் இயேசுவை விசாரித்த போது விசாரணையை மேற்க்கொண்டவர்கள் பல தவறான சட்டத்துக்கு புறம்பான வழிமுறைகளை கையாண்டார்கள் என்பதும் வேதனைக்குரியதாய் இருக்கிறது.

(i) இரவில் முன்னறிவிப்பு இல்லாமல் கைது செய்தார்கள்

(ii) பொய் சாட்சிகளை ஏற்படுத்தினார்கள்

(iii) பிரதான ஆசாரியன் நேரடியாக விசாரணை செய்தான்

(iv) சாட்சிகளை ஏற்படுத்த அனுமதியளிக்கவில்லை

(v) பதில் கூறிய போதும் அடிக்கப்பட்டார்

(vi) கைது செய்யப்பட்ட அதே நாளில் தண்டனை யளித்தார்கள்

(vii) விதிமுறையை மீறி சனகெரிப் சங்க கூட்டம் நடந்தது.

(viii) முன்னாள் பிரதான ஆசாரியனிடம் விசாரிக்கப்பட்டார்

(ix) அவரை அடித்தவர்கள் தண்டிக்கப்படவில்லை

(x) இரவு முழுவதும் காரணமில்லாமல் அடிக்கப்பட்டார்

## யூதாசின் மரணம் Death of Judas Iscariot

மத நீதிமன்றங்களில் உள்ள விசாரணையை முடித்துவிட்டு இயேசுவுக்கு மரணத்தண்டனையை அளித்து, அவரை பிலாத்துவிடம் கொண்டு போனபோது யூதாஸ் மிகவும் அதிர்ச்சியடைந்தான். நாம் ஏற்கனவே இந்த புத்தகத்தில் பார்த்தது போல, யூதாஸ் வஞ்சகத்தால் இயேசுவை காட்டிக் கொடுக்கவில்லை, மாறாக ஒரு அரசியல் மாற்றத்தை எதிர்பார்த்து தான் இப்படி செய்தான். அவன் பணத்திற்காக கூட இப்படி செய்யவில்லை, பணம் தான் குறிக்கோளாக இருந்திருக்கும் என்றால், பணத்தை தேவாலயத்தில் வீசிவிட்டு மரித்திருக்கமாட்டானே!

யூதாஸ் இயேசுவை காட்டிக்கொடுப்பதாக கூறி 30 வெள்ளிக்காசுகளை பெற்றிருந்தான் (மத்.26:15). இது ஒரு அடிமைக்கு கொடுக்கப்படும் விலையாக இருந்தது. தேவன் மோசே மூலம் கொடுத்த பிரமாணங்களில், ஒரு அடிமையானவனின் உயிர் பறிக்கப்படும்போது, அவனுடைய எஜமானனுக்கு 30 சேக்கல் நிறையான வெள்ளிக் கொடுக்கப்பட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது (யாத்.21:32). மேலும் சகரியா மூலம் சொல்லப்பட்ட தீர்க்கதரிசனமும் யூதாஸ் மூலம் நிறைவேறியது (சகரி.11:12).

### மனஸ்தாபப்பட்ட யூதாஸ்?

யூதாஸ் "மனஸ்தாபப்பட்டு" பிரதான ஆசாரியனிடத்திலும், மூப்பரிடத்திலும் திரும்பி வந்தான் (மத்.27:3). இந்த மனஸ்தாபமானது உண்மையான மனம் வருந்துதல் அல்ல, குற்றமுள்ள மனசாட்சியிலிருந்து வரும் ஒருவிதமான வருத்தம் மட்டுமே. ஏனெனில் தான் வாங்கிய பணத்தை பிரதான ஆசாரியனிடம் திருப்பிக் கொடுப்பதன் மூலம் தன் மனசாட்சியைத் தூய்மைப்படுத்தி விடலாம் என நினைத்தான். ஆனால் உண்மையான மனந்திரும்புதல் இல்லாமல்

எந்த மனிதனும் சுத்திகரிக்கப்பட முடியாது. "தேவனுக்கேற்ற துக்கம் பின்பு மனஸ்தாபப்படுகிறதற்கு இடமில்லாமல் இரட்சிப்புக்கேதுவான மனந்திரும்புதலை உண்டாக்குகிறது" (IIகொரி.7:10). அதாவது நாம் மனஸ்தாபம் அடைவதால் எந்த பயனும் இல்லை, மாறாக மனந்திரும்ப வேண்டும் என்பதே முக்கியமானதாகும்.

யூதாஸ் பிரதான ஆசாரியனிடமும் மூப்பர்களிடமும் திரும்பி வந்து, "குற்றமில்லாத இரத்தத்தை நான் காட்டிக்கொடுத்ததினால் பாவம் செய்தேன்" என்றான் (மத்.27:4). இங்கு நாம் பேதுருவையும் நினைவில் கொள்ள வேண்டும். யூதாசும் பேதுருவும் ஒரே பாவத்தை தான் செய்தார்கள் என நான் கருதுகிறேன். ஒருவன் காட்டிக்கொடுத்தான் இன்னொருவன் மறுதலித்தான். யூதாசும் மனஸ்தாபப்பட்டான்; பேதுருவும் மனங்கசந்து அழுதான். ஆனால் யூதாஸ் மன்னிக்கப்படவில்லை; பேதுரு மன்னிக்கப்பட்டான். இது வியப்பாக இருக்கிறதல்லவா? ஆம். உண்மைதான்.

யூதாஸ் மனிதர்களிடத்தில் (பிரதான ஆசாரியனிடமும், மூப்பர்களிடமும்) போய் தன் பாவத்தை அறிக்கையிட்டான்; ஆனால் பேதுருவோ இயேசுவிடம் திரும்பி வந்து அறிக்கையிட்டான். நம்முடைய பாவங்களை நாம் இயேசுவிடம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயங்களையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார் (Iயோ.1:9). நாம் இயேசுவிடம் மட்டுமே மன்னிப்பை பெற்றுக்கொள்ள முடியும். எந்தவிதமான மத தலைவர்களிடமும், சபை பாதிரியார்களிடமும் இருந்து நாம் மன்னிப்பை பெற இயலாது என்பதை இது காட்டுகிறது.

பிரதான ஆசாரியனிடமிருந்து "எங்களுக்கு என்ன, அது உன்பாடு" என்ற பதில் தான் யூதாசுக்கு கிடைத்தது (மத்.27:4). அவர்கள் அவனை மதிக்கவில்லை. ஒரு துரோகியை யாருமே மதிக்கமாட்டார்கள். நாம் வாழும் இவ்வுலகில் கூட எதிராளிகளை எளிதாக மன்னித்துவிடுவார்கள். ஆனால் துரோகியை மன்னிப்பது கடினமானதாக உள்ளது. அவன் இயேசுவிடம் வந்திருந்தால், நிச்சயமாக மன்னிப்பை பெற்றிருந்திருப்பான். ஆனால் அவன் வரவில்லையே!

### நான்றுகொண்டு செத்தான்

அப்பொழுது, அவன் அந்த வெள்ளிக்காசை தேவாலயத்திலே எறிந்துவிட்டு, புறப்பட்டு போய் நான்றுகொண்டு செத்தான் (மத்.27:5). லூக்கா கூறும்போது, "தலைகீழாக விழுந்தான்; அவன் வயிறு வெடித்து, குடல்களெல்லாம் சரிந்து போயிற்று" என்றான் (அப்.1:18). தன் ஜீவனை இரட்சிக்க விரும்புகிறவன், அதை இழந்து போவான் (மாற்.8:35) என இயேசு கூறியிருந்தது எவ்வளவு உண்மையானது! குற்றமில்லாதவனைக் கொலை செய்யும்படி பரிதானம் (லஞ்சம்) வாங்குகிறவன் சபிக்கப்பட்டவன் (உபா.27:25) என்ற வசனத்தின்படி, யூதாசின் வாழ்க்கை சாபமாக மாறியது. அந்தோ! பரிதாபம்!!

யூதாஸ் எப்படி மரித்திருப்பான் என இரண்டுவிதமான கருத்துக்கள் வேத பண்டிதர்களால் கூறப்படுகிறது.

(i) மத்.27:5-ன் படி அவன் நான்றுக்கொண்டு (தூக்கில் தொங்கி) மரித்தான் என பார்க்கிறோம். பாரம்பரியம் பின்வருமாறு கூறுகிறது: தனது இடுப்பில் கட்டியிருந்த அரைக்கச்சையாலே மரத்தில் தூக்குப்போட்டு மரணத்தை தேடிக்கொண்டான். பின்னர் அந்த மரக்கிளை முறிந்ததால், கீழே இருந்த கூர்மையான கற்களின் மேல் விழுந்து குடல்வெடித்து செத்துப் போனான்.

(ii) இரண்டாவது கருத்துப்படி, அவன் கீழே நாட்டப்பட்ட, கூர்மையான கோலின் மீது அல்லது ஈட்டியின் மீது விழுந்து செத்திருப்பான், ஏனெனில் அந்நாட்களில் நான்றுக்கொண்டு சாகுதல் என்பது சிலுவையில் அறைவதையோ (தொங்கவிடுவதால் இருக்கலாம்) அல்லது கூர்மையான ஈட்டி போன்ற ஆயுதத்தின் மேல் விழுந்து சாவதை தான் குறிப்பிடுவதாய் இருந்தது. மேலும் இப்படி குத்தப்பட்டு மரித்ததால் தான் வயிறு வெடித்து, குடல்கள் சரிந்து போயிருக்க வேண்டும் என கூறுகிறார்கள் (Iசாமு.31:4,5). எப்படியாயினும் அவனது முடிவு பயங்கரமாயிருந்தது என்பதே உண்மையாகும்.

### இரத்த நிலம் வாங்கப்படுதல்

யூதாஸ் தேவாலயத்தில் வீசிய வெள்ளிக்காசுகளை பிரதான ஆசாரியன் எடுத்து: இது இரத்தக்கிரயமானதால், காணிக்கைப் பெட்டியிலே இதைப் போடலாகாதென்று சொல்லி, ஆலோசனை பண்ணினபின்பு, அந்நியரை அடக்கம் பண்ணுவதற்குக் குயவனுடைய

நிலத்தை அதினாலே கொண்டார்கள். இதினிமித்தம் அந்த நிலம் இந்நாள் வரைக்கும் இரத்தநிலம் எனப்படுகிறது (மத்.27:6-8). இங்கு பிரதான ஆசாரியர் வந்து வெள்ளிக்காசை எடுத்து மிகவும் ஆலோசனை செய்வதை பார்க்கிறோம். வெள்ளிக்காசை குறித்து மிகுந்த அக்கறையோடு ஆலோசனை செய்யும் இந்த கூட்டத்தார், இயேசுவை அக்கறையோடு விசாரிக்காமல் தண்டித்துவிட்டார்கள். வெள்ளிக்காசுக்கு கொடுக்கும் முக்கியத்துவத்தை கூட என் இயேசுவுக்கு கொடுக்கவில்லையே இந்த பாவிகள்!!


கருப்புபணம் மற்றும் வெள்ளைப்பணம் பற்றி நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால் இரத்தப்பணம் குறித்து கேள்விப்பட்டிருக்கிறீர்களா? தவறாக யாரையாவது கொலை செய்துவிட்டால், அதற்கு ஈடாக கொடுக்கப்படும் பணமே இரத்தப்பணம். யூதாஸ் தேவாலயத்தில் வீசியெறிந்த வெள்ளிக்காசுகளை தேவாலய கஜானாவில் வைக்கவில்லை. ஏனென்றால் அது இரத்தத்துக்கு கிடைத்த விலை. அவ்வாறு தோன்றியது தான் இரத்தப்பணம் (Blood money) என்ற வார்த்தை. இரத்தகிரயம் என்று கூறுவதிலிருந்து இயேசுவின் இரத்தம் குற்றமில்லாதது என்பதை அவர்களே மறைமுகமாக ஒப்புக்கொள்ளுகிறார்கள். ஆகவே அதை காணிக்கை பெட்டியில் கூட போடவில்லை. நாமும் நமது உழைப்பினால் வருகிற பணத்தை மட்டுமே கர்த்தருக்கு கொடுக்க வேண்டும். அநியாயமாய் பிறரை ஏமாற்றி சம்பாதிக்கிற பணத்தை கர்த்தருக்கு கொடுத்தால் அதுவே சாபமாகும்.

எருசலேமில் பஸ்கா பண்டிகையின் போதும், மற்ற நேரங்களிலும் வருகிற புறஜாதிகளின் மரணத்தின்போது, அவர்களை அடக்கம் செய்ய சரியான ஒரு இடம் இல்லாதிருந்தது. ஆகவே இந்த பணத்தை வைத்து அதற்கு நிலம் வாங்கப்பட்டது. இதன் மூலம் எரேமியா மற்றும் சகரியா மூலம் சொல்லப்பட்ட தீர்க்கதரிசன வார்த்தை நிறைவேறியது (எரே.19:1-13; 32:6-9; சகரி.11:12-13). இயேசுவின் மரணத்தின் மூலம் புறஜாதிகளுக்கு ஒரு கல்லறை தோட்டம் கிடைத்தது என்பதும் ஒரு ஆச்சரியம் தான்! இது எருசலேமில் உள்ள குடிகள் யாவருக்கும் தெரிந்திருக்கிறது; அதினாலே அந்த நிலம் அவர்களுடைய பாஷையிலே இரத்தநிலம் என்று அர்த்தம் கொள்ளும் "அக்கெல்தமா" எனப்பட்டது (அப்.1:19).

சங்கீத புஸ்தகத்திலே, அவனுடைய வாசஸ்தலம் பாழகக்கடவது, ஒருவனும் அதில் வாசம் பண்ணாதிருப்பானாக என்று எழுதப்பட்டதும் நிறைவேறியிருக்கிறது (சங்.69:25; அப்.1:20).

கி.பி.19 ஆம் நூற்றாண்டு வரை புறஜாதிகளை மட்டுமே அடக்கம் செய்யும்படிக்கு இந்த நிலம் பயன்படுத்தப்பட்டது என்பதை உறுதி செய்திருக்கிறார்கள். இன்னும்கூட அப்படியே தான் இருக்கிறது என கருதுகிறேன்.

■■■



# அத்தியாயம் - 5

## அரசாங்க நீதிமன்ற நிகழ்வுகள்

## Events in the Political Court

(மத். 27:2-26; மாற். 15:1-15; லூக். 23:1-25; யோவா. 18:28-19:16)

இராயன் (caesar) என்பவருக்கும், தேசாதிபதி (Governor) என்பவருக்கும் இடையே பெரிய மலைக்கும், சிறிய கல்லுக்கும் இடையே உள்ள வித்தியாசம் இருந்தது. பிலாத்து என்பவன் தேசாதிபதியாவான். இராயன் என்பவர் ரோம சாம்ராஜ்யத்தின் அதிபதியாவார். இயேசு பிறந்த போது அகஸ்து (Augustus) என்பவன் இராயனாக இருந்தார் (லூக். 2:1). ஏறக்குறைய சுமார் 30 வருடங்களுக்கு பிறகு இயேசுவின் ஊழியத்தின் போது திபேரியு (Tiberius) என்பவன் கி.பி.14 முதல் 37 வரை இராயனாக இருந்தான் (லூக். 3:1). இந்த இராயனுக்கு கீழே உள்ள ஒவ்வொரு தேசங்களையும் ஆளுகை செய்பவர்கள் தான் தேசாதிபதி என அழைக்கப்பட்டனர். இந்த இராயனுக்கு கீழே இருந்த பல தேசங்களில் யூதேயாவுக்கு பொந்தியு பிலாத்தும்; காற்பங்கு தேசமாகிய கலிலேயாவுக்கு ஏரோதுவும் தேசாதிபதிகளாய் இருந்தார்கள் (லூக். 3:1). இந்த தேசாதிபதிகள் எல்லாம் இராயனுக்கு கணக்கு கொடுக்க வேண்டும். ஆகவே, பிலாத்து என்பவன் இராயன் அல்ல; மாறாக இராயனுக்கு கீழேயுள்ள யூதேயா தேசத்துக்கு மட்டுமே அதிபதியாய் இருந்தான் என்பதை நாம் முதலில் புரிந்துகொள்ள வேண்டும் (நமது இந்தியாவின் ஜனாதிபதிக்கும் மாநில ஆளுநர்களுக்கும் இடையே உள்ள வித்தியாசத்தை போன்றதாகும்).

## 1. பொந்தியு பிலாத்து (Pontius Pilate)

ரோமர்களின் வழக்கப்படி இயேசுவானவர் கரங்களில் சங்கிலிகளினால் கட்டப்பட்டவராய் பிலாத்துவிடம் அழைத்து வரப்பட்டார். "அவர் புறஜாதியாரிடத்தில் ஒப்புக் கொடுக்கப்பட்டு, பரியாசமும் நிந்தையும் அடைந்து, துப்பப்படுவார்" (லூக். 18:32) என்ற இயேசுவின் வார்த்தை நிறைவேறும்படியாக புறஜாதியான பிலாத்துவிடம் (ரோமன்) ஒப்புக்கொடுக்கப்பட்டார். அப்போது அந்தோனியா என்பவனால் எருசலேம் தேவாலயத்துக்கு அருகாமையிலே கட்டப்பட்ட கோட்டையிலே பிலாத்து தங்கியிருந்தான்.

### யார் இந்த பிலாத்து? Who is this Pilate?

பிலாத்துவின் முழுபெயர் பொந்தியு பிலாத்து ஆகும். இவன் திபேரியு ராயனால் யூதேயாவின் தேசாதிபதியாக கி.பி.25-ல் நியமிக்கப்பட்டான் என்றும் கி.பி.36 வரை தேசாதிபதியாக இருந்தான் என்றும் கி.பி.41-ல் வாழ்ந்த பிலோ என்ற யூத தத்துவஞானி குறிப்பிட்டுள்ளார். மிகவும் கொடியவனாக இருந்தான் என்பதை கீழ்காணும் நிகழ்வுகளிலிருந்து காணலாம்:

(i) இவன் வசித்து வந்த செசரியாவிலிருந்து எருசலேமுக்கு வரும்போது, இராயனுடைய உருவ சிலையையும், ரோமர்களுடைய கழுகு சின்னத்தையும் கொண்டுவந்து எருசலேமில் வைத்தான். இந்த விக்கிரங்கள் யூதர்களுக்கு வெறுப்பாய் இருந்தபடியால் இதை எதிர்த்தனர். பிலாத்து திரும்ப செசரியா சென்ற போது யூதர்களும் அங்கு சென்று தங்கள் எதிர்ப்பை காட்டினார்கள். இரண்டு வாரத்துக்கு பிறகு பிலாத்து யூதர்களை உள்ளே அழைத்து எல்லோரையும் வெட்டி கொன்றான்.

(ii) எருசலேமுக்கு பலியிட வந்த கலிலேயர்களை கொன்று அவர்களின் இரத்தத்தை பலிகளோடு கலந்தான் (லூக். 13:1).

(iii) எருசலேமில் மிகுந்த தண்ணீர் தட்டுப்பாடு இருந்து வந்ததால், தண்ணீர் கிணறுகளை வெட்டும்படி எருசலேம் தேவாலயத்தின் பணத்தை எடுத்தான். யூதர்கள் இதை எதிர்த்த படியால் அவர்களை கொன்றுப்போட்டான்.

(iv) திபேரியு ராயனை மகிழ்விக்கும்படி ஒரு கப்பல் நிறைய அவரது உருவசிலைகளை கொண்டு வந்து, எருசலேமிலும் தேவாலயத்திலும் நிறுவினான். இம்முறை யூதர்கள் ஏரோது ராஜா மூலம் இராயனிடம் நேரடியாக இதை எதிர்த்து முறையிட்டார்கள். ஆகவே இராயன் பிலாத்துவை கடுமையாக எச்சரித்ததுடன் சிலைகளை அகற்றும்படி உத்தரவிட்டான். இது பிலாத்துவுக்கு மிகுந்த கோபத்தை ஏற்படுத்தியது. இதன் மூலமாகதான் பிலாத்துவும் ஏரோதுவும் ஒருவருக்கொருவர் பகைவர்களாக மாறியிருப்பார்கள் என கருதுகிறேன் (லூக். 23:12)

பின்நாட்களில் இவன் சமாரியாவில் கெர்சீம் மலையில் அநேக எபிரேயர்களை கொன்று குவித்ததின் விளைவாக கி.பி.37-ல் இராயனால் ரோமாபுரிக்கு திரும்ப அழைக்கப்பட்டான். அவனது பதவியும் பறிபோனது. அங்கே அவனது சொந்த தேசத்தில் பிறரால் துரத்தப்பட்டு தற்கொலை செய்து கொண்டான் எனவும், அவனுடைய பிரேதம் மலையில் இருந்து ஒரு குளத்தில் வீசப்பட்டதாகவும் பாரம்பரிய நம்பிக்கைகள் உள்ளன. இன்றைக்கும் அந்த மலையை பிலாத்து மலை என்று அழைக்கின்றனர்.

## யூதர்களின் குற்றச்சாட்டுகள்

பிரதான ஆசாரியரும், மூப்பரும், வேதபாரகரும், ஆலோசனை சங்கத்தார் அனைவரும் கூடி இயேசுவை கட்டிக் கொண்டுபோய் விடியற்காலத்தில் பிலாத்துவிடம் ஒப்படைத்தனர் (மாற்.15:1). அது ஏறக்குறைய 6.45 மணியாயிருந்தது என கருதப்படுகிறது. தீட்டுப்படாமல் பஸ்காவைப் புசிக்கத்தக்கதாக, அவர்கள் தேசாதிபதியின் அரண்மனைக்குள் பிரவேசிக்கவில்லை (யோ. 18:28). அது பஸ்கா பண்டிகையின் வாரமாக இருந்தபடியால் யூதர்கள், புறஜாதியானாகிய பிலாத்துவின் அரண்மனைக்குள் பிரவேசிக் கவில்லை. ஒரு யூதன் புறஜாதியின் வீட்டிற்குள் செல்வான் என்றால், ஏழு நாட்களுக்குத் தீட்டுப்பட்டவனாயிருப்பான். அந்நாட்களில் நடைபெறும் எந்தவிதமான மதச்சடங்குகளிலும், பண்டிகையிலும் அவன் பங்கு பெறமுடியாது. பஸ்கா விருந்தானது தொடர்ச்சியாக ஒருவாரம் நடைபெறும் விருந்தாகும்; இயேசு முந்தின இரவே அதை புசித்துவிட்டார்; யூதர்கள் பிலாத்துவின் அரண்மனைக்குள் நுழைந்தால், இந்த ஒருவார விருந்திலும் பங்கேற்க முடியாமல் போய்விடுவார்கள்.

தீட்டுப்பட்டுவிடக்கூடாது என்று சடங்காசாரத்தைக் குறித்து கவலைப்பட்ட யூதர்களுக்கு, ஒரு பாவமும் செய்யாத, ஒரு நீதிமானைக் கொலை செய்வது குறித்து சற்றும் கவலையில்லை என்பதை கவனியுங்கள்! என்னவொரு குருட்டு பக்தி! அவர்கள் தங்கள் சரீரங்களை தீட்டுபடாமல் காத்துக்கொண்டனர், ஆனால் அவர்கள் இருதயங்களோ தீட்டுப்பட்டிருந்தன. ஆகவே தான் இயேசு இவ்வாறு கூறியிருந்தார், "நீங்களும் மனுஷருக்கு நீதிமான்கள் என்று புறம்பே காணப்படுகிறீர்கள்; உள்ளத்திலோ மாயத்தினாலும், அக்கிரமத்தினாலும் நிறைந்திருக்கிறீர்கள்" (மத். 23:28).

இதைக்குறித்து, திருவாளர் ஹால் எழுதுவதாவது: மாயக்காரராகிய ஆசாரியரே, வேதபாரகரே, மூப்பரே உங்களுக்கு ஐயோ! உங்களுடைய நெஞ்சைப்போல அழுக்கு நிறைந்த மேற்கூரை எங்காவது இருக்குமா? பிலாத்துவினுடைய சுவர்களல்ல; உங்களுடைய இருதயங்களே தூய்மையற்றவை. கொலை செய்வதற்காகப் பயணம் மேற்கொண்ட நீங்கள், ஒரு சிறு கறை ஏற்படுமென்று பயணம் செய்யாமல் நின்றுவிடப் போகிறீர்களா? வெள்ளையடிக்கப்பட்ட சுவர்களே, தேவன் உங்களை அடிப்பார். இரத்தத்தினால் கறைபட ஆவல்கொண்டு அலைகிறீர்கள். அதுவும் தேவனுடைய இரத்தம். ஆனால் பிலாத்துவின் மாளிகையின் தளம் உங்களைக் கறைப்படுத்திவிடும் என அஞ்சுகிறீர்கள். அக்கிரமம் நிறைந்த கோர மனிதர்களே, உங்களுடைய சமூகத்தால் தனது அரண்மனை தீட்டுப்பட்டுவிடும் என்று பிலாத்து தான் அச்சம் கொள்ள வேண்டும்.

யூதர்கள் எப்படியாவது பிலாத்துவை தங்கள் கோரிக்கை களுக்கு இணங்க வைக்கும்படி முயற்சி செய்து கொண்டிருந்தார்கள்; ஏனெனில் ஏற்கனவே பல கசப்பான சம்பவங்கள் பிலாத்து மூலம் அவர்களுக்கு ஏற்பட்டிருந்தபடியால், இம்முறை சமாதானமாய் பேச ஆரம்பித்தார்கள். அந்தபடியே, பிலாத்துவும் கூட யூதர்களின் ஆதரவை திரட்டும்படி அரண்மனையின் வெளியே அவர்களிடம் வந்து, "இந்த மனுஷன் மேல் என்ன குற்றஞ்சாட்டுகிறீர்கள்?" என்று கேட்டான். பொதுவாக யூதர்களின் மதவிஷயங்களில் ரோமர்கள் தலையிட்டு விசாரிப்பதில்லை; ஆனாலும் கலகங்கள் ஏற்படாமல் அமைதி காக்கவேண்டும் என்பதில் தீவிரமாய் இருந்தார்கள் (அப்.18:12-16).

இயேசுவின் மேல் எந்த ஒரு நியாயமான முறைகேடுகளும் இல்லை என அறிந்த பிலாத்து இயேசுவை விடுவிக்க எண்ணினான். அப்பொழுது யூதர்கள்: "இவன் குற்றம் செய்யவில்லை என்றால் இவனை உம்மிடத்தில் ஒப்படைத்திருக்கமாட்டோமே" என்றார்கள். பிலாத்து ஏழுமுறை இயேசுவை விடுவிக்க முயற்சி பண்ணினான் என்று காணமுடிகிறது.

**பிலாத்துவின் முதல் முயற்சி:** இவனை நீங்களே கொண்டு போய், உங்கள் நியாயப் பிரமாணத்தின் படி நீயாயந்தீருங்கள் என்றான்.

உடனடியாக யூதர்கள்: ஒருவனையும் மரண ஆக்கினை செய்ய எங்களுக்கு அதிகாரமிலலை என்றார்கள். இது எதை சுட்டிக்காட்டுகிறது என்றால், விசாரணை நடக்கிறதோ இல்லையோ என்பதை குறித்து துளிக்கூட கவலைப்படாமல், அவருக்கு மரணத்தண்டனைக் கொடுக்க வேண்டும் என்பதில் மட்டுமே உறுதியாய் இருந்தார்கள். ஆனால், உண்மையிலேயே "தாம் இன்னவிதமான மரணமாய் மரிக்கப் போகிறாரென்பதைக் குறித்து இயேசு சொல்லியிருந்த வார்த்தை நிறைவேறும்படி இப்படி சொன்னார்கள்" (யோ.18:32). அதாவது இயேசு தமது சிலுவை மரணத்தை குறித்து ஏற்கனவே சொல்லியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும் (மத்.20:19; யோ.12:32).

பிலாத்து இயேசுவை தண்டிக்க விரும்பவில்லை யென்பதையும், அவரை விடுதலையாக்க விரும்புகிறார் என்பதையும் புரிந்துக்கொண்ட யூதர்கள், அவர் தங்களை மீண்டும் சீண்டுகிறார் என நினைத்து உடனடியாக சில பொய்சாட்சிகளை வரவழைத்து மூன்று விதமான குற்றச்சாட்டுகளை இயேசுவுக்கு எதிராக கூறினார்கள்.

**குற்றச்சாட்டு # 1: ஜனங்களை கலகப்படுத்த தூண்டினார்**

எவ்வளவு அபாண்டமான பொய்! இயேசு ஒருபோதும் ஜனங்களை அரசுக்கு எதிராக திருப்பவில்லை என்று அவரது போதனைகளை கேட்ட திரள்கூட்டமான ஜனங்களுக்கு தெரியும். ஏனென்றால், "நியாயப்பிரமாணத்தையானாலும், தீர்க்கதரிசனங் களையானாலும் அழிக்கிறதற்கு வந்தேன் என்று எண்ணிக் கொள்ளாதேயுங்கள்; அழிக்கிறதற்கு அல்ல, நிறைவேற்றுகிறதற்கே வந்தேன்" என்று இயேசு கூறியுள்ளார் (மத்.5:17). அதுமட்டுமல்லாமல்,

எல்லோரையும் நேசியுங்கள் என்ற அன்பின் போதகத்தை தான் இயேசு ஜனங்களுக்கு போதித்தாரேயன்றி, கலகத்தை ஏற்படுத்தும் போதனைகளை அவர் ஒருபோதும் போதிக்கவில்லை. அவ்வாறு போதித்திருந்தால், அந்நேரமே ரோமர்களது உளவுத்துறை அந்த செய்தியை பிலாத்துவுக்கு கொண்டு சென்றிருப்பார்கள் அல்லவா? அந்நாட்களில் பிலாத்துவுக்கு தேசமெங்கும் உளவுபார்க்கும் படி 500 சிறந்த உளவாளிகள் இருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. ஆகவே இந்த குற்றச்சாட்டு பொய்யானது என பிலாத்து அறிந்திருந்தான்.

**குற்றச்சாட்டு # 2 : இராயனுக்கு வரிக்கொடுக்க வேண்டியதில்லை என்றார்**

இயேசு ஒருபோதும் வரிக்கொடுப்பதற்கு எதிராக பேசவே இல்லை என்பதும் ஜனங்களுக்கு நன்றாக தெரியும். அதற்கு வேதத்திலிருந்து இரண்டு ஆதாரங்களை பார்க்கலாம்.

(i) இயேசுவும் சீஷர்களும் கப்பர்நகூமில் இருந்தபோது, வரிப்பணம் வாங்குகிறவர்கள் பேதுருவிடம் வந்து: உங்கள் போதகர் வரிப்பணம் செலுத்துகிறதில்லையா என்றுக் கேட்டார்கள்; அதற்கு பேதுரு: செலுத்துகிறார் என்றான். பேதுரு உள்ளே வந்தவுடன், இயேசு அவனிடம்: நாம் அவர்களுக்கு இடறலாயிராதபடிக்கு, நீ கடலுக்குப்போய் தூண்டில்போட்டு, முதலாவது அகப்படுகிற மீனைப்பிடித்து, அதின் வாயைத் திறந்துபார்; ஒரு வெள்ளிப் பணத்தைக் காண்பாய்; அதை எடுத்து எனக்காகவும் உனக்காகவும் அவர்களிடத்தில் கொடு என்றார் (மத்.17:24-27). இயேசுவானவர் ஏற்கனவே வரிக்கட்டி வருகிறார் என்பதை பேதுருவின் வார்த்தையிலிருந்தும், அப்போதும் அவர்கள் வரிக்கட்டினார்கள் என்பதை இயேசுவின் செயலிலிருந்தும் காணமுடிகிறது.

(ii) ஒருமுறை பரிசேயர் போய், அவரை பேச்சிலே அகப்படுத்தும்படி அவரிடம் ஒரு கேள்வியைக் கேட்டார்கள். இராயனுக்கு வரிகொடுக்கிறது நியாயமோ அல்லவோ? அதை எங்களுக்கு சொல்லும்? என்றுக் கேட்டார்கள். இயேசு அவர்கள் துர்க்குணத்தை அறிந்து: மாயக்காரரே, நீங்கள் என்னை ஏன் சோதிக்கிறீர்கள்? வரிக்காசை எனக்குக் காண்பியுங்கள் என்றார்; அவர்கள் ஒரு பணத்தை அவரிடத்தில் கொண்டு வந்தார்கள். அப்பொழுது அவர்: (அந்த பணத்தைக்காட்டி) இந்த சுரூபமும்

மேலெழுத்தும் யாருடையது என்று கேட்டார். அதற்கு அவர்கள்: இராயனுடையது என்றார்கள். அதற்கு இயேசு: இராயனுடையதை இராயனுக்கும், தேவனுடையதை தேவனுக்கும் செலுத்துங்கள் என்றார் (மத்.22:15-22).

அந்த நாணயத்திற்கு திநாரியம் (Tinauriam) என்று பெயர். இந்த நாணயம் வெள்ளியினால் ஆனது. இதன் எடை 10 கிராம் வரை இருந்தது.

மேற்கூறிய இந்த இரண்டு வெவ்வேறு நிகழ்வுகளின் மூலம் இயேசு அரசாங்கத்துக்கும், வரி செலுத்துவதற்கும் எதிரானவர் அல்ல என்பதை நாம் காணமுடியும். ஆகவே அவர்களது இந்தக் குற்றச்சாட்டும் பொய்யே என பிலாத்து நன்றாக அறிந்திருந்தான்.

தங்கள் ஆளுகைக்கு உட்பட்ட தேசங்களில் பலவிதமான வரி விதிப்பில் ரோமர்கள் ரொம்பக் கில்லாடிகளாய் இருந்தார்கள். அவர்கள் எதற்கெடுத் தாலும் வரி விதித்துக் கொண்டிருந் தார்கள். தலைவரி என்ற வரியை ஏற்படுத்தி ஒவ் வொரு மனிதனும் வரி செலுத் தும்படி செய்தனர். இந்த வரிக்கான காசைதான் இயேசு மீனின் வாயிலி ருந்து எடுத்துக் கொடுக் கும்படி பேதுருவிடம் கூறியிருப்பார் எனக் கருதுகிறேன். மீன்பிடிப்பவர்கள் கூட, அவர்கள் பிடிக்கும் மீன்களின் அளவுக்கேற்ப வரி செலுத்த வேண்டியிருந்தது. மீனவர்கள் மீன்களை பிடித்துவரும் போது அவைகளை கடற்கரையில் இருக்கும் ஆயத்துறையில் கொண்டுவர வேண்டும். அங்குள்ள அதிகாரி மீன்களின் எடை மற்றும் தரம் இவற்றை கருத்தில் கொண்டு அதற்கேற்றப்படி வரி விதித்து வந்தனர். இதை செலுத்திய பிறகு மீன்களை விற்பனைக்கு கொண்டு செல்ல முடியும் என்ற நிலை இருந்தது. இயேசுவின் சீஷனான மத்தேயு இந்த வகையான வரி வசூல் செய்யும் அதிகாரியாக தான் பணியாற்றி வந்தான். இன்றைக்கு கூட நாம் வாங்கும் அத்தனை பொருட்களுக்கும் நேரடியாகவும், மறைமுகமாகவும் வரி (Tax) செலுத்திக்கொண்டு வருகிறோம் என்பது தான் உண்மை.



ரோமர்களின் நாணயம்

## ரோமர்கள் மற்றும் யூதர்கள் நாணயங்கள்
## Romans and Jewish Coins

புதிய ஏற்பாடு காலத்தில் யூத, கிரேக்க மற்றும் ரோம நாணயங்கள் புழக்கத்தில் இருந்தன. யூதர்கள் மற்றும் ரோமர்கள் நாணயங்கள் முக்கியமான பயன்பாடாக இருந்தது. ரோம அரசாங்கம் வெளியிட்டிருந்த நாணயங்களில், ரோம ராயனுடைய உருவம் பொறிக்கப்பட்டிருந்தது, எனவே இதை விக்கிரகமாக யூதர்கள் கருதினபடியால், தேவாலயத்தில் காணிக்கை செலுத்துவதற்கு இதை பயன்படுத்தாமல் அவர்கள் ஒரு சிறப்பு நாணயத்தை வெளியிட்டிருந்தார்கள். இதற்கு தேவாலய நாணயம் என்று பெயர்.

எருசலேம் தேவாலயம் வாரம் ஒருமுறை மட்டும் செயல்படும் ஒரு ஆராதனைக்கூடம் அல்ல; நித்தமும் பல்லாயிரக்கணக்கான ஜனங்கள் வந்து பலிசெலுத்தி வந்தனர். பண்டிகைகளுக்கு என சிறப்பு வரிகளும் விதிக்கப்பட்டிருந்தன. அரசாங்க வரியை தவிர, 12 வயதுக்கு மேலான ஒவ்வொரு யூதனும் அரைச்சேக்கல் வெள்ளியை ஆள்வரியாக தேவாலயத்துக்கு செலுத்த வேண்டியிருந்தது. இவைதவிர தசமபாகம், வருடாந்திர வரியாக ஐந்து சேக்கல், பாவநிவாரண பலிக்கு வருடம் இருமுறை 5 சேக்கல், போஜனபலிக்கு வருடம் இருமுறை 5 சேக்கல் மற்றும் இதர மனபூர்வமான காணிக்கைகளை செலுத்த வேண்டும் (நாம் காணிக்கைகளையும் தசமபாகத்தையும் கொடுக்கவே பலமுறை யோசிக்கிறோம்!). இவை அனைத்திற்கும் தேவாலய காசுகளை கொடுக்கவேண்டிய நிர்பந்தமும் இருந்து வந்தது. எனவே ஜனங்கள் கொண்டு வரும் ரோம அரசாங்க நாணயங்களை வெளியேயிருக்கும் காசுக்காரர்களிடம் கொடுத்து மாற்றி, தேவாலயக்காசுகளை பெறுவது வழக்கமாயிருந்தது. பிரதான ஆசாரியனின் கீழ் இயங்கிவந்த தேவாலய வணிகர் சங்கத்தினர், தேவாலய காசுகளை பதுக்கி வைத்துக்கொண்டு, அதற்கு தட்டுப்பாட்டை ஏற்படுத்தி, அவற்றின் விலையை அதிகரிக்க செய்தனர். ஒரு தேவாலய நாணயத்தை வாங்குவதற்கு ஏராளமான ரோம அரசாங்க நாணயங்களை கொடுக்க வேண்டிய நிர்பந்தத்திற்குள்ளாக ஜனங்கள் தள்ளப்பட்டார்கள். இதைக்கண்டித்துதான் இயேசு தேவாலயத்தை கள்ளர் குகையாக மாற்றிவிட்டதாக கூறி அவர்களைத் துரத்தினார்.

**குற்றச்சாட்டு # 3: இவன் தன்னைக் கிறிஸ்து எனப்பட்ட ராஜா என்றான்**

ஆம். இயேசு தன்னை கிறிஸ்து எனப்படுகிற மேசியா என்று கூறியிருந்தார் (யோவா.4:25,26). உண்மையும் அது தானே! இயேசு பிறந்த போது ஞானிகள் வந்து, "யூதருக்கு ராஜாவாகப் பிறந்திருக்கிறவர் எங்கே?" என்று அவரைக்குறித்து விசாரித்தார்கள். அவர்களுக்கு கிடைத்த வெளிப்பாடு கூட இந்த யூதர்களுக்கு கிடைக்கவில்லையே! தமது ராஜ்யம் இவ்வுலகத்துக்குரியது அல்ல எனவும் இயேசு கூறியிருந்தார் (யோவா.18:36). ஆனாலும் இயேசு ஒரு நாளில் இந்த உலகத்தின் ராஜாவாக இருப்பார் என அறிகிறோம் (எண்.24:17-19; சங்.2:2; லூக்.1:33; வெளி.1:5; 19:16). இயேசு இந்த உலகத்தில் அவதரித்தப்போது ராஜாவாக வரவில்லையென்றாலும், இனி அவர் இந்த உலகத்தை அரசாட்சி செய்யும் ராஜாதி ராஜாவாக வருவார் என்பது உண்மையாகும்.

மேற்கூறப்பட்ட மூன்று குற்றச்சாட்டுகளும் பொய்யானவை என பிலாத்து அறிந்திருந்தான்.

**பிலாத்துவின் விசாரணை**

பிலாத்து இயேசுவை தன்னுடைய அரண்மனைக்குள்ளாக அழைத்துக்கொண்டு போய் விசாரிக்க தொடங்கினான். மேற்கூறிய குற்றச்சாட்டுகளில் "ராஜா" என்ற குற்றச்சாட்டு மட்டுமே பிலாத்துவுக்கு ஒரு நெருடலாக இருந்தது. ஆகவே அதைக்குறித்து மட்டுமே இயேசுவிடம் ஒரு கேள்வியை கேட்டான்.

**கேள்வி.1** "நீ யூதருடைய ராஜாவா? (யோவா.18:33)

பதில்.1 நீராய் இப்படி சொல்லுகிறீரோ? அல்லது மற்றவர்கள் என்னைக் குறித்து இப்படி உமக்குச் சொன்னார்களோ? (யோ.18:34)

**கேள்வி.2** நான் யூதனா? உன் ஜனங்களும் பிரதான ஆசாரியரும் உன்னை என்னிடத்தில் ஒப்புக்கொடுத்தார்கள். நீ என்ன செய்தாய்? (யோ.18:35)

பதில்.2 (இயேசு பிலாத்துவுக்கு தெளிவுபடுத்துகிறார்) என் ராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதல்ல, என் ராஜ்யம் இவ்வுலகத் திற்குரியதானால் நான் யூதரிடத்தில் ஒப்புக் கொடுக்கப்படாதபடிக்கு என் ஊழியக்காரர் போராடியிருப்பார்களே; இப்படியிருக்க என் ராஜ்யம் இவ்விடத்திற்குரியதல்ல. (யோ.18:36)

**கேள்வி.3** அப்படியானால் நீ ராஜாவோ? (யோ.18:37)

**பதில்.3** நீர் சொல்லுகிறப்படி நான் ராஜா தான்: சத்தியத்தைக் குறித்து சாட்சிக்கொடுக்க நான் பிறந்தேன், இதற்காகவே இந்த உலகத்தில் வந்தேன்; சத்தியவான் எவனும் என் சத்தம் கேட்கிறான் (யோ.18:37)

**கேள்வி.4** சத்தியமாவது என்ன? (யோ.18:38)

**பதில்.4** ........... (இயேசு பதில் கூறுவதற்கு முன்பு, பிலாத்து வெளியே சென்று விட்டான்). அவனுக்கு முன்பாக கட்டப்பட்டவராக நிற்கும் இயேசுவே அந்த சத்தியமாய் இருந்தார் என்ற உண்மையைக் கூட உணரமுடியாமல் இருந்தான் பிலாத்து (யோ.14:6)

**பிலாத்துவின் இரண்டாவது முயற்சி:** பிலாத்து வெளியே வந்து! நான் அவனிடத்தில் ஒரு குற்றமும் காணேன் என்று பிரதான ஆசாரியரிடமும் ஜனங்களிடமும் கூறினான்.

பிலாத்துவின் இந்த பதிலைக்கேட்டு அதிர்ச்சியடைந்த அவர்கள், எப்படியாவது இயேசுவைக் கொலைசெய்ய வேண்டும் என தீர்மானித்து ஒரு தந்திரத்தை தேடிக்கொண்டார்கள். அப்படி அவர்கள்: இவன் கலிலேயா நாடு தொடங்கி இவ்விடம் வரைக்கும், யூதேயா தேசமெங்கும் உபதேசம் பண்ணி, ஜனங்களை கலகப்படுத்துகிறான் என்று வைராக்கியத்தோடே சொன்னார்கள்.

**பிலாத்துவின் மூன்றாவது முயற்சி:** இயேசு கலிலேயாவை சேர்ந்தவர் என பிலாத்து கேள்விப்பட்டவுடனே, அவன் வேறொரு தந்திரத்தை கையாண்டான். அதன்படி அவர் ஏரோதின் அதிகாரத்துக்கு உள்ளானவர் என்றறிந்து, அவரை ஏரோதுவிடம் அனுப்பினான். இங்கு பிலாத்து நியாயாதிபதியை மாற்றினான், அதாவது அவரை வேறொரு நியாயாதிபதியான ஏரோதுவிடம் அனுப்பினான். இந்த செயலினால் ஜனங்களும், பிரதான ஆசாரியரும் கடுங்கோபமடைந்தனர். ஏனென்றால் ஏரோதுவுக்கு மரணதண்டனை அளிக்கும் அதிகாரம் இல்லை என்பது எல்லோருக்கும் தெரிந்திருந்தது. யோவான் ஸ்நானனுடைய தலையை வெட்டிக் கொலை செய்ததை அறிந்த, ரோமப் பேரரசன் ஏரோதுவுக்கு இருந்த அந்த அதிகாரத்தை பறித்துக் கொண்டான் என்பதே அதற்கு காரணம் ஆகும்.

## 2. ஏரோது அந்திப்பா (Herod the Antipas)

ஏரோது என்பது தனி ஒரு மனிதனை குறிப்பிடும் பெயர் அல்ல. ரோமர்களால் யூதேயாவை ஆளும்படி நியமிக்கப்பட்ட இதுமேய சந்ததியை சேர்ந்த ஆட்சியாளர்களுக்கு தான் ஏரோதுக்கள் என்று பெயர் வந்தது. யார் இந்த இதுமேய ஆட்சியாளர்கள்? ஏசாவின் வழிவந்த ஏதோமியர்களுக்கு வழங்கப்பட்ட கிரேக்கப்பெயர் தான் இதுமேயர்கள் என்ற சொல் ஆகும். இதுமேயர்களும், இஸ்ரவேலரும் சொந்த சகோதரர்களின் வழி தோன்றல்களாக இருந்தபடியால் பழக்க வழக்கங்களிலும், பாரம்பரியங்களிலும் இவர்கள் ஒருவரையொருவர் ஒத்திருந்தார்கள். கி.மு. 587-ல் எருசலேம் பிடிக்கப்பட்ட பின்பு இவர்கள் எபிரோனை தலைநகரமாக கொண்டு, யூதேயாவில் குடியேறிய பகுதிதான் இதுமேயா என்று அழைக்கப்பட்டது (மாற். 3:8). இங்கு குடியேறிய இதுமேயர்கள் யூதப் பாரம்பரியங்களையே கடைப்பிடித்து, யூத மார்க்கத்தையே தங்கள் மதமாகவும் ஏற்றுக் கொண்டார்கள். ஆகவே இவர்களும் யூதர்களில் ஒரு இனமாக கருதப்பட்டார்கள். இந்த இதுமேயர்களை தான் எருசலேமை ஆளுகை செய்யும் ஆளுநர்களாக ரோமர்கள் நியமித்தார்கள். ஆனால் யூதர்கள் தங்களை அந்நியர்கள் ஆளக்கூடாது என்று விரும்பினபடியால், இந்த ஏரோதுக்களுக்கு விரோதமானபோக்கை கடைப்பிடித்தார்கள்.

**வேதத்தில் கூறப்பட்டுள்ள ஏரோதுக்கள்**

**(i)** பெரிய ஏரோது **(Herod the great):** இயேசு பிறந்தபோது இரண்டு வயதுக்குட்பட்ட எல்லா ஆண் குழந்தைகளையும் கொலைச் செய்யும்படி கட்டளையிட்டவன் இவனே. இவன் கி.மு. 37 முதல் கி.பி. 4 வரை ஆட்சி செய்தான். இவர்கள் தங்களை ராஜா என்று அழைக்கும் உரிமையை ரோம சக்கரவர்த்தி கொடுத்திருந்தார். ஆகவே தான் ஏரோது ராஜா என குறிப்பிடப்பட்டுள்ளனர். இவனுடைய மரணத்தை மத். 2:19 கூறுகிறது. இவனது உயிலின்படி இவனுக்கு பிறகு தேசம் பிரிக்கப்பட்டது.

**(ii)** ஏரோது அர்கெலாயு **(Herod the Archealus):** மகா ஏரோதுவின் மரணத்துக்கு பிறகு, அவனுடைய மகனான ஏரோது அர்கெலாயு என்பவன் கி.பி. 4 முதல் கி.பி. 6 வரை பிரிக்கப்பட்ட யூதேயாவில் ஆட்சி செய்தான். இவனுடைய சகோதரர்களின் பெயர்கள் ஏரோது ஆண்டிபஸ் (Herod Antipas) மற்றும் ஏரோது பிலிப்பு (Herod Philip) என்பவைகள் ஆகும். இவனும் கொடியவனாய்

இருந்தபடியால் இயேசுவின் வளர்ப்பு தகப்பனான யோசேப்பு அங்கு போக பயந்தான் (மத். 2:22). பின்நாட்களில் இவனது கொடுமைகளை யூதர்கள் போய் இராயனிடம் கூறினபடியால் இவன் பதவி நீக்கம் செய்யப்பட்டான்.

**(iii)** ஏரோது பிலிப்பு **(Herod Philip):** ஏரோது பிலிப்பு என்பவன் கி.பி. 4 முதல் கி.பி. 34 வரை பிரிக்கப்பட்ட பகுதியான காற்பங்கு தேசமாகிய இத்துரேயாவுக்கும், திராகொனித்தி நாட்டிற்கும் அதிபதியானான் (லூக். 3:1). மகா ஏரோதுவின் மகன்களிலே நேர்மையாக ஆட்சி செய்தவன் இவன் மட்டுமே. இவனது மனைவியின் பெயர் சலோமி என்பதாகும்.

**(iv)** ஏரோது அந்திப்பா **(Herod the Antipas):** இவன் கலிலேயா மகாணத்துக்கு ராஜாவாக இருந்தான் (லூக். 3:1). இவன் கி.பி. 4 முதல் கி.பி. 39 வரை ஆட்சி செய்தான். இயேசு கிறிஸ்துவின் ஊழிய நாட்களிலும், சிலுவை மரணத்தின் போதும் இவனே கலிலேயாவுக்கு ராஜாவாக இருந்தான். இவனை குறித்து மேலும் தெரிந்துகொள்ள, "யார் இந்த ஏரோது அந்திப்பா" என்ற பகுதியை படிக்கவும்.

**(v)** ஏரோது அகிரிப்பா - **I (Herod Agrippa - I):** இவன் பெரிய ஏரோதுவின் பேரனும், அரிஸ்டோபுலுஸ் (Aristobulus) என்பவனது மகனும், ஏரோதியாளின் சகோதரனுமாவான். கி.பி. 39-ல் ஏரோது பிலிப்பு மரித்தபடியால், அவன் ஆட்சிசெய்த பகுதிக்கும், பிறகு கி.பி.41 முதல் இவன் யூதேயாவுக்கும் சேர்ந்து ராஜாவாயிருந்தான். இவன் கிறிஸ்தவர்களை மிகவும் கொடுமைப்படுத்தினான். யோவானுடைய சகோதரனான யாக்கோபை பட்டயத்தினாலே கொலை செய்தான் (அப். 12:2), பேதுருவை சிறைச்சாலையிலே போட்டான் (அப். 12:3-5), பேதுரு விடுதலையாக்கப்பட்டபோது சிறைச்சாலை காவல்காரராய் இருந்தவர்களையும் கொலை செய்தான் (அப். 12:19). பின்பு கி.பி.44 -ல் இவன் ராஜவஸ்திரம் தரித்துக்கொண்டு சிங்காசனத்தின்மேல் உட்கார்ந்து பிரசங்கம் பண்ணியபோது, கர்த்தருடைய தூதனால் அடிக்கப்பட்டு புழுபுழுத்து செத்துப்போனான் (அப். 12:21-23).

**(vi)** ஏரோது அகிரிப்பா - **II (Herod Agrippa - II):** இவன் முதலாம் ஏரோது அகிரிப்பாவின் மகன் ஆவான். அப்போஸ்தலர் : 25, 26 அதிகாரங்களில் கூறப்படும் அகிரிப்பா ராஜன் இவனே ஆவான்.

## யார் இந்த ஏரோது அந்திப்பா?
## Who is this Herod Anthipas?

இவன் பெரிய ஏரோதுவின் மகனும், கலிலேயா மாகாணத்துக்கு ராஜாவுமாவான் (லூக். 3:1). இவன் கி.பி. 4 முதல் கி.பி. 39 வரை ராஜாவாக இருந்தான்.

(i) இவன் தனது சகோதரனான ஏரோது பிலிப்புவின் மனைவியை தன்னுடைய மனைவியாக்கினான். இந்த தவறை யோவான்ஸ்நானன் சுட்டிக்காட்டியபோது அவனை சிறையில் அடைத்தான் (மத். 14:3; மாற். 6:17,18; லூக். 3:19,20). இவன் தனது வாழ்நாள் முழுவதும் பெண் பைத்தியமாக இருந்தான் என சரித்திரம் கூறுகிறது.

(ii) இவனுடைய பிறந்தநாள் கொண்டாட்டத்தின்போது, இவன் தனக்கு மனைவியாக்கிக் கொண்ட ஏரோதியாளின் மகள் எல்லார் முன்பாகவும் நடனமாடி ஏரோதை சந்தோஷப்படுத்தினாள். அப்போது இந்த ஏரோது அந்திப்பா: நீ எதைக் கேட்டாலும் தருவேன் என்று கூறினான். அந்த பெண் ஏரோதியாளான தனது தாய் சலோமியின் அறிவுரைப்படி யோவான் ஸ்நானனுடைய தலையைக்கேட்டாள். ராஜா துக்கமடைந்தான், ஆனாலும் தனது ஆணையினிமித்தமும், பந்தியில் கூட இருந்தவர்களினிமித்தமும் அதை கொடுக்கக் கட்டளையிட்டு, யோவான்ஸ்நானனை சிரச்சேதம் பண்ணுவித்தான் (மத். 14:6-11).

(iii) இயேசு செய்துவரும் அற்புதங்களை இவன் அறிந்தபடியால், தன்னால் கொலைசெய்யப்பட்ட யோவான்ஸ்நானன் தான் மரித்தோரிலிருந்து இயேசுவாக எழுந்திருக்கிறான் என்று கூறி, அவரை பார்க்க விரும்பினான் (மத். 14:1-2; லூக். 9:7-9).

(iv) சில பரிசேயர்கள் இயேசுவிடம் வந்து: நீர் இவ்விடத்தை விட்டு போய்விடும்; ஏரோது உம்மைக் கொலைசெய்ய மனதாய் இருக்கிறான் என்று கூறியபோது, இயேசு அவ்விடம் விட்டு போகாமல் ஏரோதுவை "நரி" என்று குறிப்பிட்டார் (லூக். 13:31-33).

(v) இவன் இயேசுவை விசாரித்தபோது, அவரை பரியாசம் பண்ணி, நிந்தித்து மினுக்கான வஸ்திரத்தை உடுத்தி, அவரை திரும்ப அனுப்பினான் (லூக்.23:8-12).

## ஏரோது அந்திப்பாவின் விசாரணை

இயேசுவானவர் கட்டுண்டவராக ஏரோது அந்திப்பாவிடம் காலையில் சுமார் 8 மணியளவில் அழைத்துவரப்பட்டார் என கருதப்படுகிறது. பஸ்கா நாட்களின் தினமாயிருந்தபடியால், இந்த ஏரோதுவும் அந்நாட்களில் எருசலேமில் தங்கியிருந்தான். பிலாத்துவின் அரண்மனையிலிருந்து, ஏரோது தங்கியிருந்த மாளிகை ஏறக்குறைய ஒரு கிலோமீட்டர் தொலைவில் தான் இருந்தது. இயேசுவின் ஊழியத்தைக் குறித்தும், அவர் செய்துவந்த அற்புதங்களைக் குறித்தும் இந்த ஏரோது கேள்விப்பட்டிருந்தபடியினால், எப்படியாவது அவரை பார்க்க வேண்டும் என்று வெகுநாளாய் ஆவல் கொண்டிருந்தான். தற்பொழுது அவனுக்கு அந்த வாய்ப்பும் கிடைத்தது.

அந்தப்படி அவரைக் கண்டபோது, மிகவும் சந்தோஷப்பட்டு, அநேக காரியங்களைக் குறித்து அவரிடம் கேட்டான் என்றும் அவர் எதுவுமே பதில் கூறவில்லை எனவும் காண்கிறோம் (லூக். 23:8,9). ஏரோது எந்தவொரு விசாரணையும் மேற்கொள்ளாமல், தனது மனதில் இருந்த பிற காரியங்களைக் குறித்து மட்டுமே கேட்டுக்கொண்டிருந்தபடியால், கூடியிருந்த பிரதான ஆசாரியரும், வேதபாரகரும் அவர்மேல் குற்றஞ்சாட்டிக் கொண்டே நின்றார்கள். இயேசு தாம் முன் செய்துவந்தபடியே இங்கேயும் தன்முன்னால் ஒரு அற்புதம் செய்தால் நலமாய் இருக்கும் என எண்ணினான். தனக்கு முன்னேக் கொண்டு வரப்பட்ட நபரை விசாரிக்காமல், அற்புதத்தை எதிர்ப்பார்ப்பது எவ்வளவு அபத்தமான செயல்! இயேசு இங்கு அற்புதம் செய்பவராக வரவில்லை, என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இயேசு அவனுக்கு எந்த பதிலுமே சொல்லவில்லை. இதற்கு முன்பு இயேசுவை விசாரித்த நான்கு இடங்களிலும், இயேசு தமது வாயைத்திறந்து, சில பதில்களை கூறியிருந்தார். ஆனால் ஏரோதுவுக்கு முன்பாக அவர் எதையுமே பேசவில்லை. ஏசா. 53:7-ல் கூறப்பட்டபடி "அவர் நெருக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் இருந்தார், ஆனாலும் தம்முடைய வாயை அவர் திறக்கவில்லை" என்ற வார்த்தை இங்கேயும் நிறைவேறியது. எதாவது கேள்விகளை கேட்டிருந்தால், இயேசுவும் பதிலளித்திருப்பார், ஆனால் ஏரோது அற்புதங்களை அல்லவா எதிர்பார்த்தான்!

இயேசுவின் மௌனத்தைப் பார்த்து ஏரோது மிகுந்த கோபமடைந்து, போர்ச்சேவகரோடு கூட சேர்ந்துக்கொண்டு அவரை நிந்தித்துப் பரியாசம்பண்ணி, மினுக்கான வஸ்திரத்தை அவருக்கு உடுத்தி, அவரை திரும்ப பிலாத்துவிடம் அனுப்பினான். இதன் மூலம் முன்னே ஒருவருக்கொருவர் பகைவராயிருந்த பிலாத்துவும் ஏரோதுவும் அன்றையத்தினம் சிநேகிதரானார்கள். இயேசுவின் மரணம் பகைவரையும் நண்பர்களாக மாற்றிவிட்டது!

## 3. பொந்தியு பிலாத்து (Pontius Pilate)

பிலாத்து முதலில் இயேசுவை விசாரித்தபோது மூன்று முறை இயேசுவை விடுவிக்க முயற்சி செய்ததையும், பின்னர் ஏரோதுவிடம் அவரை அனுப்பியதையும் நாம் ஏற்கனவே பார்த்தோம். இப்போது மறுபடியும் காலை 9 மணியளவில் இயேசுவானவர் பிலாத்துவிடம் அழைத்து வரப்பட்டார். இப்போது மறுபடியும் இயேசுவை விடுவிக்கும்படி தனது முயற்சிகளை தொடர்ந்தான்.

**பிலாத்துவின் நான்காவது முயற்சி:** இயேசுவா? பரபாஸா?

பிலாத்து எப்படியாவது இயேசுவை விடுதலை செய்யும் நோக்கத்தில் வேறு ஒரு திட்டம் வகுத்தான். அதாவது, ஒவ்வொரு பஸ்கா பண்டிகையின் போதும் காவலில் உள்ள ஒரு கைதியை விடுதலை செய்வது அவர்கள் வழக்கமாயிருந்தது (நமது தேசத்தில் கூட நன்னடத்தை காரணமாக, சுதந்திர தினத்தின்போது கைதிகளை விடுதலை செய்வதுண்டு). இயேசுவை விடுதலை செய்யும் நோக்கத்தில் பிலாத்து மறுபடியும் அரண்மனையின் வெளியே வந்து பிரதான ஆசாரியரிடமும் மூப்பரிடமும் ஜனங்களிடத்திலும் தனது விருப்பத்தைக் கூறினான். இவ்விருவரில் நான் எவனை உங்களுக்கு விடுதலையாக்க வேண்டும்? பரபாசையோ? கிறிஸ்து என்னப்படுகிற இயேசுவையோ? என்றான். அப்பொழுது அவர்கள் எல்லோரும் மிகுந்த சத்தமிட்டும், ஜனங்களை ஏவி விட்டும்; பரபாசை விட்டுவிடுங்கள் என்றும் இயேசுவை சிலுவையில் அறையும் என்றும் சத்தமிட்டார்கள். பிலாத்துவுக்கு இந்த வார்த்தைகள் மிகவும் அதிர்ச்சியைக் கொடுத்தது.

## யார் இந்த பரபாஸ்? Who is this Barabbas?

இந்த பரபாஸின் முழு பெயர் இயேசு பரபாஸ் (Jesus Barabbas) என்பதாகும். இவனது பெயர் நமது இயேசுவின் பெயரோடு ஒத்திருப்பதை கவனியுங்கள். இயேசு என்றால் இரட்சகர் என்று அர்த்தம். நமது இயேசு கிறிஸ்து மனிதர்களின் இரட்சகர் ஆவார். ஆனால் இயேசு பரபாஸ் யாருடைய இரட்சகராக இருந்தான்? ஒருவேளை அவனும் ரோமர்களுக்கு எதிரான தீவிரவாத குழுவில் சேர்ந்துக்கொண்டு யூதர்களின் விடுதலைக்காக போராடியதால் இந்த பெயர் வந்திருக்கலாம். அந்நாட்களில் ரோமர்களுக்கு எதிராக போராடிய அநேக இயக்கங்கள் இருந்தன. அதில் ஒன்று தான் செலோத்தியர்கள் (Zealots). இந்த இயக்கம் யூதாஸ் என்பவனால் ஆரம்பிக்கப்பட்டது (அப். 5:37) (இது இயேசுவின் சீஷனான யூதாஸ்காரியோத் அல்ல). முதன் முதலில் பிலாத்து எருசலேமுக்கு வந்தபோது யாரும் எதிர்பாராதவிதத்தில் இந்த இயக்கத்தினர் அவனை எதிர்த்தார்கள். அப்பொழுது பிலாத்து நூலிழையில் தப்பித்துக்கொண்டான் என்பது வரலாறு. பரபாஸ் இந்த இயக்கத்தின் தலைவராகவோ அல்லது முக்கிய பொறுப்பு வகித்தவனாக இருந்திருக்கலாம். வேதாகமம் இவனை கலகக்காரன் (புரட்சியாளன்); கொலைக்காரன் மற்றும் கள்ளன் என்று சித்தரிக்கிறது (லூக். 23:19; யோ. 18:40). இவன் தன்னுடைய இயக்கத்துக்கு நிதி சேர்க்க கொள்ளையிலும் கொலையிலும் ஈடுபட்டிருப்பான். இயேசு எனப்பட்ட பரபாசையும், இயேசு என்னப்பட்ட கிறிஸ்துவையும் வித்தியாசப்படுத்தி கூறுவதற்காகவே இயேசு என்று கூறும்போது, "கிறிஸ்து என்னப்பட்ட இயேசு" என பிலாத்து அழுத்தமாக இரண்டு முறை கூறினான் (மத். 27:18,22).

இந்த பரபாஸ் அவன் செய்த குற்றத்திற்காக, விசாரிக்கப்பட்டு மரணத்தண்டனை அளிக்கப்பட்டிருந்த ஒரு குற்றவாளி ஆவான். அவன் எருசலேம் சிறையில் தனது தண்டனையை எதிர்நோக்கி காத்திருந்தான். வெளியே அவனது பெயர் கூப்பிடப்படுகிற சத்தத்தை கேட்டு அதிகமாய் நொந்து போயிருப்பான். தனது மரண நேரம் நெருங்கிவிட்டது என்று

நினைத்து புலம்பியிருப்பான். ஆனால் யூதர்களது பிடிவாதத்தினால் அவன் விடுவிக்கப்பட்ட செய்தியை அவனால் கூட நம்பமுடியாமல் அசைவற்றவனாய் நின்றிருப்பான். உண்மையிலேயே இங்கு இயேசு பரபாஸ் என்ற தவறான நபர் விடுவிக்கப்பட்டான்; இயேசு கிறிஸ்து என்ற தவறான நபர் தண்டிக்கப்பட்டார்.

**பிலாத்துவின் மனைவி சிபாரிசு செய்தல்**

இயேசுவை சிலுவையில் அறையும் என்ற வார்த்தையால், என்ன செய்வது என்று தெரியாமல் பிலாத்து தவித்துக் கொண்டிருக்கையில் அவனுடைய மனைவியிடமிருந்து ஒரு செய்தி வந்தது.

கிளவ்டியா புரக்குலா (Claudia Procula) என்பது தான் பிலாத்துவின் மனைவியின் பெயர். இவள் ரோம சக்கரவர்த்தியான திபேரியுவின் மனைவியும், அகஸ்துராயனின் மகளுமான ஜூலியாவின் மகள் ஆவாள். பிலாத்து நியாசனத்தில் உட்கார்ந்திருக்கையில், அவனுடைய மனைவி அவனிடத்தில் ஆள் அனுப்பி: நீர் அந்த நீதிமானை ஒன்றும் செய்யவேண்டாம்; அவர் நிமித்தம் இன்றைக்கு சொப்பனத்தில் வெகு பாடுபட்டேன் என்று சொல்ல சொன்னாள் (மத். 27:19). இங்கு "சொல்ல சொன்னாள்" என்று கூறப்பட்டிருந்தாலும், உண்மையிலே அவள் ஒரு கடிதத்தை அனுப்பினாள் என்றே கூறவேண்டும். ஏனென்றால் ரஷ்யாவை சேர்ந்த ஒரு அகழ்வாராட்சி நிபுணர் 1887-ம் ஆண்டு இந்த கிளவ்டியா எழுதிய கடிதத்தை கண்டுபிடித்துள்ளார். இந்த கடிதத்தை கண்டு மேலும் அதிர்ச்சியடைந்த பிலாத்து, எப்படியாவது இயேசுவை விடுதலை செய்ய எண்ணினான்.

யூதர்களோ இயேசுவை கொலைசெய்ய துணிந்தபோது ஒரு புறஜாதி பெண் ஒருத்தி இயேசுவுக்காக பரிந்து பேசுவது வியப்பானதே! ரோம வரலாற்று ஆசிரியர் சிசிரோ கூறியதாவது: நியாசனத்தில் தேசாதிபதி அமர்ந்துக் கொண்டு நியாயம் விசாரிக்கும்போது, யாராவது குறுக்கிட்டாலோ, இடையூறு செய்தாலோ அவர்கள் சிங்கத்தின் குகையில் தள்ளப்படுவார்கள். இதையெல்லாம் தெரிந்தும் கூட அவள் இயேசுவுக்காக செயல்பட்டது ஆச்சரியமானதே!

**பிலாத்துவின் ஐந்தாவது முயற்சி: தண்டித்து விடுதலை யாக்குவேன்**

பிலாத்து மறுபடியும் அவர்களை நோக்கி: ஏன், இவன் என்னப் பொல்லாப்பு செய்தான்? மரணத்துக்கேதுவான குற்றம் ஒன்றும் இவனிடத்தில் காணவில்லையே; ஆகையால் நான் இவனை தண்டித்து, விடுதலையாக்குவேன் என்றான் (லூக். 23:22).

இயேசுவிடம் அவர்களால் எந்த தவறையும் கண்டுபிடிக்க முடியவில்லை. என்னிடத்தில் பாவம் உண்டென்று உங்களில் யார் என்னைக் குற்றப்படுத்தக்கூடும்? (யோ.8:46) என இயேசு கூறிய வார்த்தைகள் எவ்வளவு உண்மையிருக்கிறது. குற்றமில்லாத இயேசுவிடம் குற்றத்தை கண்டுபிடிக்கும்படி 6 அல்ல 60 விசாரணைகள் மேற்கொண்டாலும் பலனளிக்காது. ஆகவே பிலாத்து இப்போது இயேசுவை தண்டிக்கும்படி கூறினான். அங்கே அவருக்கு கசையடிகள் கொடுக்கப்பட்டது. அப்படியிருந்தும் அவரை சிலுவையில் அறையவேண்டும் என்று அவர்கள் மிகுந்த சத்தத்தோடு முறையிட்டார்கள் (லூக். 23:23).

**பிலாத்துவின் ஆறாவது முயற்சி: இவனிடத்தில் ஒரு குற்றமும் காணேன்**

இயேசு குற்றமற்றவர் என பிலாத்துவே கூறிவிட்டான். இந்த வார்த்தையை கேட்டவுடன் பிரதான ஆசாரியரும், ஜனங்களும் பிலாத்து அவரை விடுதலை செய்ய முயற்சிக்கிறான் என்பதை அறிந்து, எங்களுக்கு ஒரு நியாயப்பிரமாணம் உண்டு, இவன் தன்னை தேவனுடைய குமாரனென்று சொன்னபடியால், அந்த நியாயப பிரமாணத்தின்படி இவன் சாகவேண்டும் என்றார்கள். இந்த வார்த்தை யைக்கேட்டு பிலாத்து மிகவும் பயந்துபோனான் (யோ. 19:7,8).

**பிலாத்துவின் மறுவிசாரணை**

**கேள்வி.1** நீ எங்கேயிருந்து வந்தவன்? (யோ. 19:9)

**பதில்.1** ......... (பதில் கூறவில்லை) (யோ. 19:9)

**கேள்வி.2** நீ என்னோடே பேசுகிறதில்லையா? உன்னைச் சிலுவையில் அறைய எனக்கு அதிகாரமுண்டென்றும், உன்னை விடுதலை பண்ண எனக்கு அதிகாரமுண்டென்றும் உனக்குத் தெரியாதா? (யோ. 19:10)

பதில்.2 பரத்திலிருந்து உமக்குக் கொடுக்கப்படாதிருந்தால், என்மேல் உமக்கு ஒரு அதிகாரமுமிராது; ஆனபடியினாலே என்னை உம்மிடத்தில் ஒப்புக்கொடுத்தவனுக்கு அதிக பாவமுண்டு (யோ. 19:11).

**பிலாத்துவின் ஏழாவது முயற்சி:** இதோ உங்கள் ராஜா, உங்கள் ராஜாவை நான் சிலுவையில் அறையலாமா? என்றான்.

இயேசு கிறிஸ்துவின் பதிலை கேட்டவுடன், பிலாத்து அவரை எப்படியாவது விடுதலை பண்ண வகை தேடினான் (யோ.19 :12). இதை அறிந்த பிரதான ஆசாரியரின் கூட்டம் மிகுந்த சத்தமிட்டு, "இவனை விடுதலை பண்ணினால் நீர் இராயனுக்குச் சிநேகிதனல்ல; தன்னை ராஜாவென்கிறவனெவனோ அவன் இராயனுக்கு விரோதி" என்றார்கள் (யோ. 19:12). இதை கேட்டவுடன் பிலாத்து ஆடிப்போனான். இந்த யூதர்கள் தான் ரோம இராயனை மிகவும் எதிர்த்வர்கள். பிலாத்து அவனுடைய சிலைகளை நிறுவியதை கண்டித்து போராடினார்கள்; வரி செலுத்தாமல் போராட்டம் நடத்தினார்கள். தங்கள் மேல் இருக்கும் ரோம அதிகாரத்தை முழுமையாக எதிர்த்தவர்கள் ஆவர். ஆனால் இப்போது திடீரென்று பல்டி அடித்து, இராயனே எங்கள் ராஜன் என்ற முடிவுக்கு வந்தனர். ஏன் இப்படி ஒரு முடிவு? எப்படியாவது இயேசு சிலுவையில் அறைப்பட வேண்டும் என்பதே ஆகும்.

கடைசியாக பிலாத்து இயேசுவை வெளியே அழைத்துக் கொண்டுவந்து, தளவரிசைப் படுத்தின மேடையென்றும், எபிரெயு பாஷையிலே கபத்தா என்றும் சொல்லப்பட்ட இடத்தில் உள்ள நியாயாசனத்தின் மேல் உட்கார்ந்தான். அப்பொழுது கூட "இயேசுவை சிலுவையில் அறையும்" என்ற சத்தம் உயர்ந்தபடியால், உங்கள் ராஜாவை நான் சிலுவையில் அறையலாமா? என்றுக் கேட்டான். இவ்வாறு கூறியதின் நிமித்தம் உண்மையிலே அவன் யூதர்களை மிகவும் கொச்சைப்படுத்தினான். ஏனெனில் இயேசு கிறிஸ்து யூதருடைய ராஜா என்பது அவர்களுக்கு அருவருப்பாய் இருந்தது. பிலாத்து உட்கார்ந்த நியாயாசனம் இன்றும் கூட கண்ணாடியில் மூடி பாதுகாத்து வருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

கலகம் அதிகமாகிறதேயல்லாமல் தன்னுடைய முயற்சிகளினால் எந்த பயனும் இல்லை என்பதை பிலாத்துக்கண்டு, இராயனிடம் கெட்டபெயர் இனியும் வாங்க கூடாது என்பதை எண்ணி, தனது பதவியை காப்பாற்றிக் கொள்ளும்படி, தனது சேவகரிடம்

தண்ணீர் கொண்டுவரச் சொன்னான். பிலாத்து, தண்ணீரை அள்ளி, ஜனங்களுக்கு முன்பாக கைகளைக் கழுவி: இந்த நீதிமானுடைய இரத்தப்பழிக்கு நான் குற்றமற்றவன், நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள் என்றான் (மத். 27:24). தண்ணீரினால் கையை கழுவுவது தங்களது பாவ குற்றம் அகற்றப்பட்டதற்கு அடையாளமான ஒரு செயலாகும் (உபா. 21:6-7). ரோமர்களும் இந்த யூத முறையை கையாளுவது வியப்பானதே! இவ்வுலகில் உள்ள அத்தனை நதிகளின் தண்ணீரையும் எடுத்து தனது கைகளை கழுவினாலும் தனது கைகளில் ஒட்டியிருக்கும் பாவக்கறைகள் மறையுமா என்பது கேள்விக்குறியே!

அதற்கு ஜனங்களெல்லாரும்: இவனுடைய இரத்தப்பழி எங்கள் மேலும், எங்கள் பிள்ளைகள் மேலும் இருப்பதாக என்று சொன்னார்கள் (மத். 27:25). அவர்கள் வாயிலிருந்து வந்த வார்த்தையின்படியே சுமார் 40 ஆண்டுகளுக்கு பிறகு கி.பி. 70-ல் ரோமர்களால் எருசலேம் நகரம் முற்றுகையிடப்பட்டு அழிக்கப்பட்டபோது, அனைத்து யூதர்களும் கொல்லப்பட்டார்கள். கிறிஸ்துவின் இரத்தப்பழி அவர்கள் மேல் வந்தது.

அவர்களுடைய இந்த பதிலை கேட்டவுடன், பிலாத்து ஜனங்களை பிரியப்படுத்த மனதுள்ளவனாய், பரபாசை அவர்களுக்கு விடுதலையாக்கி, இயேசுவையோ வாரியினால் அடிப்பித்து, சிலுவையில் அறையும்படிக்கு ஒப்புக்கொடுத்தான் (மாற். 15:15). தேவனுடைய அநாதி திட்டத்தை எந்தவொரு ராஜா நினைத்தாலும் தடுத்து நிறுத்த முடியாது. இது எல்லாமே தேவனுடைய திட்டமாய் இருந்தது. விசாரிக்கப்பட்ட எல்லா நீதிமன்றங்களாலும் குற்றமற்றவர் என அறிவிக்கப்பட்ட ஒருவர் தண்டிக்கப்பட்டது இதுவே முதல் முறையாகவும், இறுதியாகவும் இருந்திருக்கும் என நான் கருதுகிறேன். நூறு குற்றவாளிகள் தப்பித்துக் கொண்டாலும், ஒரு நிரபராதி தண்டிக்கப்படக்கூடாது என்பது நமது இந்தியாவின் நடைமுறை, ஆனால் இயேசுவின் விசாரணையின்போது எருசலேமில் பல்வேறு குற்றவாளிகளை விடுவித்துவிட்டு, ஒரு நிரபராதியை தண்டித்துவிட்டார்கள்.

■■■



# அத்தியாயம் - 6

# அரண்மனை மாளிகை நிகழ்வுகள்

# (Praetorium Court events)

(மத். 27:27-31; மாற். 15:16-20; யோவா. 19:1-3)

பிலாத்து இயேசுவுக்கு மரணத்தண்டனை அளித்தவுடன் அவரை மிகவும் கொடுமைப்படுத்தி துன்புறுத்தினார்கள் என மத்தேயுவும் மாற்குவும் கூறியுள்ளார்கள். ஆனால் யோவான் தனது சுவிசேஷத்தில் பிலாத்துவால் இயேசு விசாரிக்கப்பட்டபோதே துன்புறுத்தப்பட்டார் என கூறுகிறார். எப்படியாயினும் அவர் துன்புறுத்தப்பட்டது உண்மையே. சிலுவையில் அறையும்படிக்கு இயேசுவானவர் ஒப்புக்கொடுக்கப்பட்டவுடனே, அவர் தேசாதிபதியின் அரண்மனையாகிய மாளிகையில் கொண்டு செல்லப்பட்டார் (மாற். 15:16). எப்படியெல்லாம் ஒருவரை துன்புறுத்த முடியுமோ, அதைவிடவும் அதிகமாகவே இயேசுவை துன்புறுத்தினார்கள் அந்த கொடிய கயவர்கள். நான் இங்கே இயேசுவை குறைந்தபட்சமாக பத்து வழிகளில் துன்புறுத்தியதை எழுதியிருக்கிறேன்.

## 1. போர்ச்சேவகரின் கூட்டம் முழுவதையும் அவரிடத்தில் கூடிவரச்செய்தார்கள்

## [The whole garrison was gathered around Him]

போர்ச்சேவகரின் கூட்டம் முழுவதையும் (The whole band of Soldiers) கூடிவரச் செய்தார்கள் எனப்பார்க்கிறோம். ரோமர்களது

கணக்கின்படி ஒரு போர்ச்சேவகரின் கூட்டத்தில் (A band) 600 போர்ச்சேவகர்கள் இருந்தார்கள். குற்றமில்லாத ஒரு பரிசுத்தரை அடிப்பதற்கு 600 பராக்கிரமசாலிகளா? நினைக்கும்போதே நெஞ்சம் துடிக்குதல்லவா? எதற்காக 600 வீரர்களை கூட்டி வரவேண்டும் என தெரியவில்லை. ஆனால் இயேசுவை மிகவும் துன்புறுத்துவதில் உறுதியாய் இருந்திருக்கிறார்கள்.

## 2. அவருடைய வஸ்திரங்களை கழற்றினார்கள் [Removed His garments]

ரோமர்களது வழக்கப்படி ஒரு குற்றவாளியை அடிப்பதற்கு முன்பு அவனுடைய வஸ்திரத்தை கழட்டுவது வழக்கமான ஒன்றாக இருந்தது. நம்மை இரட்சிப்பின் வஸ்திரத்தினால் உடுத்துவிக்கும்படி அவர் தமது வஸ்திரத்தை இழந்தார். அவரை மிகவும் அடித்து துன்புறுத்திய பிறகு இறுதியில் அந்த வஸ்திரத்தை மீண்டும் அவருக்கு அணிவித்ததையும் காண்கிறோம்.


## 3.சிவப்பான மேலங்கியை அவருக்கு உடுத்தினார்கள் [Put a Scarlet Robe on Him]

ரோம சக்கரவர்த்தியின் ஆடையின் நிறம் சிவப்பாயிருந்தது. ஆகவே இயேசுவும் யூதருக்கு ராஜா என்று கூறப்பட்டபடியால், அவரை பரியாசம் செய்யும்படியாக அவருக்கும் சிவப்பான ஆடையை அணிவித்தனர். அதன்பிறகு இதோ, யூதருடைய ராஜா என்று கூறி அவரை மிகவும் ஏளனம் செய்தார்கள். அந்த நிகழ்வு மறைமுகமாக இன்னொரு உண்மையையும் கூறுகிறது. அதாவது, இரத்தாம்பரம் பாவத்தை குறிப்பதால் (ஏசா. 1:18), நமது பாவங்கள் இயேசுவின் மேல் சுமத்தப்பட்டது. அதற்கு பதிலாக நமக்கு நீதியின் ஆடை அணிவிக்கப்பட்டது (IIகொரி. 5:21). இந்த இயேசுவின் அன்புக்கு ஈடு இணையே இல்லை!

## 4.வாரினால் அடித்தார்கள் [Stripped Him]

ரோமர்களுடைய இரண்டு கடுமையான தண்டனைகளில் ஒன்று வாரினால் அடித்தல், இன்னொன்று சிலுவையில் அறைந்து கொலை செய்தல் என்பவை ஆகும். ஒருபோதும் இந்த இரண்டு தண்டனைகளையும் சேர்த்து ஒரு மனிதனுக்கு கொடுப்பதில்லை.

ஆனால் இயேசுவுக்கு இரண்டு தண்டனைகளும் கொடுக்கப் பட்டது கொடுமையின் உச்சக் கட்டம் ஆகும்.





சாட்டையின் மாதிரி

யூதர்களின் முறைப்படி ஒன்றுக்குறைய நாற்பது அடி (39 அடிகள்) கொடுப்பது வழக்க மாயிருந்தது. ஏனென்றால் 40 அடிகள் கொடுக்கப்பட்டால், மீண்டும் அவனை ஒருபோதும் அடிக்கக்கூடாது என்பது பிரமாணமாகும். ஆகவே மிகுந்த கவனத்தோடு எண்ணிக் கொண்டே அடிப்பார்கள். ஒரு மனிதனை மீண்டும் அடிக்க வேண்டுமானால், 39 அடிகளோடு நிறுத்திவிடுவார்கள். பிறகு சற்று நேரம் ஓய்வெடுத்து விட்டு மீண்டும் முதலிலிருந்தே அடிப்பார்கள். அப்படி பலமுறை அடித்து துன்புறுத்துவதும் வழக்கமாயிருந்தது. ஆகவே தான் அப்போஸ்தலனாகிய பவுல் கூறும்போது, யூதர்களால் ஒன்றுக்குறைய நாற்பதடியாக ஐந்து தரம் அடிப்பட்டேன் என்றார் (2கொரி. 11:24). ஆனால் கருத்தில் கொள்ளவேண்டிய முக்கியமான விஷயம் என்னவென்றால், இந்த சட்டம் யூதர்கள் அடிக்கும்போது மட்டுமே பொருந்தும். இயேசுவை ரோம சேவகர்கள் அடித்தார்கள், அவர்களுக்கு இந்த சட்டம் பொருந்தாது. ஆகவே எத்தனை முறை அவர்கள் இயேசுவை அடித்தார்கள் என தெரியவில்லை. எப்படியாயினும் கொடூரமாக அடித்து சிதைத்தார்கள் என்பதே உண்மை.

ரோமர்கள் பயன்படுத்திய சாட்டையில், கைபிடிக்கிற பகுதியானது ஒரு அடி நீளமுள்ளதாகவும், இரும்பினால் செய்யப்பட்டதுமாயிருந்தது. இந்த சாட்டையில் நான்கு தோல் வார்கள் மிகவும் இறுக்கமாக கட்டப்பட்டிருக்கும். ஒவ்வொரு தோல் வார்களின் இடைப்பட்ட பகுதியில் மிருகத்தின் உடைக்கப்பட்ட எலும்பு துண்டுகளும், அதின் முனைப்பகுதியில் உலோக குண்டுகளும், ஒரு தூண்டிலும் கட்டப்பட்டிருக்கும். ஒவ்வொரு முறை அடிக்கும் போதும் உலோக குண்டுகள் சரீரத்தில் பதிந்து மாம்சத்தை சிதைத்துவிடும், எலும்பு துண்டுகள் மாம்சத்தை கீறிவிடும், தூண்டில்கள் மாம்சத்தை

கிழித்துவிடும், தோல் வார்கள் வேகத்தை அதிகரிக்க உதவும். இந்த அடிகளை தாங்கமுடியாமல், அங்கேயே அநேகர் மரித்துப்போனார்கள் என்பதும் உண்மை. இந்த சாட்டையை இன்றும் கூட வாடிகன் நகர கண்காட்சி மையத்தில் பாதுகாத்து வருகிறார்கள்.



குட்டையான கம்பம்

ஒரு குற்றவாளியை அடிப்பதற்கு முன்பாக அவரது இரண்டு கைகளையும் சேர்த்து மூன்று அடி உயரமுள்ள குட்டையான ஒரு கம்பத்தில் கட்டுவது வழக்கம். இயேசுவையும் அவ்வாறே கட்டிவைத்து, தங்களது வழக்கபடியே அவருக்கு வலதுபக்கத்தில் ஒருவனும், இடது பக்கத்தில் ஒருவனுமாக இரண்டு பேர் நின்று மாறி மாறி முதுகிலும், காலிலும் அடித்தார்கள். சவுக்கின் முனையில் கட்டப்பட்ட உலோகத்துண்டுகளாலும், தூண்டிலினாலும் அவரது முதுகு பிளந்து, இரத்தக் குழாய்கள் உடைந்து இரத்தம் பீறிட்டு பாய்ந்தது, தசைகள் கிழிக்கப்பட்டு உடலின் உள் உறுப்புகள் கூட வெளியே தெரிந்தது. தோலின் கீழேயுள்ள திசுக்களும் கிழிக்கப்பட்டு அடியிலுள்ள இரத்த தமனிகள் உடைக்கப்பட்டு அதிகளவில் இரத்தம் வெளியேறியது. என் முதுகின் மேல் உழுது, தங்கள் படைச்சால்களை நீளமாக்கினார்கள் (சங். 129:3) என்கிற வசனம் நிறைவேறும்படி அவரது முதுகும் சரீரமும் அடையாளம் காண முடியாத வகையில் உழவுச்சாலை போல கிழிக்கப்பட்டது. இயேசுவை கட்டி வைத்து அடித்ததாக கூறப்படும் அந்த குட்டையான கம்பம் இன்றும் எருசலேமில் உள்ள பரிசுத்த கல்லறை திருச்சபையில் பாதுகாக்கப்பட்டுள்ளது.

## 5.சிரசின்மேல் முள்கிரீடத்தை ஆழமாக சூட்டினார்கள் [Twisted a crown of Thorns on His head]

முள்ளுகளால் ஒரு முடியைப் பின்னி, அவர் சிரசின் மேல் வைத்தார்கள் (மத். 27:29). நமது கால்களில் முள் குத்தினாலே நாம் வலியால் துடித்து போவோம். எப்படிதான் என் நேசர் தமது தலைமேல்

முள்முடியை தாங்கினாரோ? நமது எண்ணங்களால் நாம் செய்த பாவங்களுக்காக அவரது தலையில் முள்முடி சூட்டப்பட்டது. ஏற்கனவே சரீரம் முழுவதும் அடித்து நொறுக்கப்பட்டிருக்கும் இயேசுவின் தலையில், முள்முடியை பதிப்பது என்பது கொடுமை மேல் கொடுமையாகும். இரக்கமே இல்லாத பாவிகள் கையினால் இயேசு முழுவதுமாக சிதைக்கப்பட்டார். இந்த முள்கிரீடத்தை ஆழமாக வைத்ததின் விளைவாக, அவரது தலையிலுள்ள இரத்த நாளங்களும் கிழிக்கப்பட்டு தலையிலிருந்து சரீரம் முழுவதும் இரத்தமானது. அந்த முள்ளின் ஒரு முனை இயேசுவின் கண்களில் வந்து பதிந்தது என வரலாறு கூறுகிறது.

## இரண்டு விதமான முள்கள்

இயேசுவின் தலையில் முள்ளால் உண்டுபண்ணப்பட்ட கிரீடத்தை வைத்து பரியாசம் பண்ணி சித்திரவதை செய்தார்கள் என வேதம் கூறுகிறது. பாலஸ்தீன தேசத்தில், குறிப்பாக இயேசுவை சிலுவையில் அறைந்த கொல்கொதா மலை மேடுகளில் இரண்டுவிதமான முள்செடிகள் பரவலாக காணப்படுகின்றன.

**(i)** **சிரியன் கிறிஸ்து முள்** (Syrian Christ thorn): இது 12 அங்குலம் நீளமுடையது, மற்றும் ஒவ்வொரு இலைக்கு கீழாகவும் கூர்மையான இரண்டு நீளமுள்கள், பின்னோக்கி வளைந்தும் காணப்படுகிறது.

**(ii)** **கிறிஸ்து முள்** (Christ thorn): இந்த முள் 4 முதல் 8 அங்குலம் நீளமுடையது. இது எளிதாக எடுக்கக்கூடியதாகவும், எளிதாக வளைக்கக் கூடியதாகவும் உள்ளது. இதுவும் ஆணி போல கூர்மையானதாகும்.

இதில் எந்தவகையான முள்முடியை இயேசுவுக்கு அணிவித்தனர் என தெரியவில்லை. இயேசுவை பரியாசமும் கேலியும் பண்ணும் விதத்தில் அந்த முள்முடியை அணிவித்தாலும், இயேசு ஒரு நாளில் ராஜாதி ராஜாவாக மகிமையோடு இந்த பூமியில் வருவார் என்பது சத்தியமாகும். அவருடைய கண்கள் அக்கினி ஜுவாலையைப் போலிருந்தன, அவருடைய சிரசின் மேல் அநேக கிரீடங்கள் இருந்தன (வெளி. 19:12).

## 6.வலது கையில் ஒரு கோல் கொடுக்கப்பட்டது [Given a reed in His right hand]

இயேசுவின் வலது கையில் ஒரு கோலை கொடுத்து அவரை கேலி செய்தார்கள். ஆங்கில மொழி பெயர்ப்பான KJV வேதாகமத்தில் A Reed in His right hand என கூறப்பட்டுள்ளது. அதாவது அவரது வலது கையில் நாணல் கோல் ஒன்றை கொடுத்தார்கள் என்பதாகும். சிறிய நாணல் குச்சி அல்ல, மாறாக மூங்கிலினால் செய்யப்பட்ட ஒரு தடி என கருதப்படுகிறது. அந்த குச்சியை அவர் கையில் கொடுத்துவிட்டு அவரை மிகவும் ஏளனம் செய்தார்கள். நாணல் குச்சியை பிடித்திருக்கும் அந்த கரமே இந்த உலகத்தை படைத்த கரம் என்பதை நினையாமற்போனார்கள். எவ்வளவு வல்லமையான கரத்தில் நாணல் குச்சியைக் கொடுத்து கேலி செய்திருக்கிறார்கள்! ஏழு நட்சத்திரங்களை ஏந்தும் கரம் இப்போது பரியாசத்தின் கோலை ஏந்தும் நிலைக்கு தள்ளப்பட்டிருக்கிறது. தேவகுமாரனாகிய இயேசுவைக் குறித்து வேதம் இப்படி கூறுகிறது, "இருப்புக்கோலால் அவர்களை நொறுக்கி, குயக்கலத்தைப்போல் அவர்களை உடைத்துப் போடுவீர்" (சங். 2:9; வெளி. 19:15). இருப்புக்கோலால் ஆளுகை செய்யவேண்டிய ராஜாவின் கரத்தில் நாணல் கோலைக் கொடுத்து கிண்டல் செய்வது எவ்வளவு முட்டாள்தனமான செயல்!

## 7. அவரை பரியாசம் செய்தார்கள் [They Mocked Him]

"அவர் முன்பாக முழங்காற்படியிட்டு: யூதருடைய ராஜாவே, வாழ்க என்று அவரைப் பரியாசம் பண்ணினார்கள்" (மத். 27:29). அறிந்தோ, அறியாமலோ தேவகுமாரனாகிய கிறிஸ்துவுக்கு முன்பாக அவர்கள் முழங்காற்படியிட்டிருக்கிறார்கள். ஆனால் இன்னும் ஒரு நாள் வரப்போகிறது, அன்று அறிந்தே அவர் முன்பாக முழங்காற்படியிடுவார்கள் என்பது நிச்சயம் (பிலி. 2:10). யூதருடைய ராஜாவே வாழ்க என்று பரியாச வார்த்தைகளை கூறினாலும், அவர்கள் பரியாசம் செய்யும்படி கூறிய வார்த்தைகள் சத்தியமானது தான். இன்றும் அவர் யூதர்களுக்கு மட்டுமல்ல, அகில உலகத்துக்கும் ராஜா ஆவார் (வெளி. 19:16). அநேக கெட்டவார்த்தைகளை கூறி அவரை பரியாசம் செய்திருப்பார்கள் என கருதப்படுகிறது. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இந்த உலகத்தையே நியாயம் தீர்க்கும் நியாயாதிபதியாக சிங்காசனத்தின் மேல் உட்கார்ந்திருக்கும் போது, இந்த போர்ச்சேவகர்களும் ஜனங்களும் அவருக்கு முன்பாக

முழங்காற்படியிடுவார்கள். ஆனால் அது பரியாசம் செய்வதற்காக அல்ல, மாறாக வெட்கப்பட்டு தலையை குனித்து நின்று, தண்டனையை பெற்றுக் கொள்வார்கள்.

## 8. அவர் மேல் துப்பினார்கள் [They spat on Him]

இது எவ்வளவு கீழ்தரமான செயல்! "அடிக்கிறவர்களுக்கு என் முதுகையும், தாடை மயிரைப் பிடுங்குகிறவர்களுக்கு என் தாடைகளையும் ஒப்புக்கொடுத்தேன்; அவமானத்துக்கும் உமிழ்நீருக்கும் என் முகத்தை மறைக்கவில்லை" (ஏசா. 50:6) என்கிற வேதவாக்கியம் இங்கு நிறைவேறுகிறது. ஒரு மனிதனை கேவலப்படுத்துவதின் உச்சக்கட்டம் தான் அவனை துப்புவதும், வஸ்திரங்களை களைந்து போடுவதும் ஆகும். இங்கே இயேசு இவற்றையெல்லாம் நமக்காக சகித்துக் கொண்டார். ஒருவன் மேல் மற்றொருவன் துப்பும்போது, அவன் வெறுப்படைவதற்கும், கோபமடைவதற்கும் அது காரணமாக மாறிவிடும். ஆனால் இயேசுவின் மீது அவர்கள் துப்பியபோது அவர் வெறுப்படையாமலும், கோபமடையாமலும் எல்லாவற்றையும் மிகவும் பொறுமையாகவும், சாந்தமாகவும் ஏற்றுக்கொண்டார். இந்த பாடுகள் யாவும் நம்மை மீட்கும்படியாகவே என்பதை யோசிக்கும்போது நமது சரீரம் புல்லரிக்கவில்லையா?

ஒருமுறை நோபல் பரிசை பெற்ற அன்னை தெரசா அவர்கள், தெருவோரம் நின்ற ஒரு மனிதனிடம் அனாதை குழந்தைகளுக்கு உதவி செய்யும் விதத்தில் ஏதாவது கொடுங்கள் என்று தனது கைகளை நீட்டிய போது, அந்த மனிதன் அவள்மேல் காரி உமிழ்ந்தானாம். அவர்கள் கோபப்படாமல் மிகவும் சாந்தமாய், நன்றி! நீங்கள் கொடுத்ததை நான் எனக்காக வைத்துக் கொள்கிறேன், என் பிள்ளைகளுக்கு எதாவது கொடுங்கள் என்றுக் கேட்டபோது அவன் அதிர்ச்சியடைந்தானாம். ஆம் எவ்வளவு பெரிய தியாகம்!

அவருடைய தாடை மயிரை பிடுங்கினார்கள் என்பதை ஏசாயா பல நூறு ஆண்டுகளுக்கு முன்னரே தீர்க்கதரிசனமாக உரைத்திருக்கிறார். யூதர்கள் பெரும்பாலும் மீசையும், தாடியும் வைத்துக் கொள்வது வழக்கமானது. இயேசுவின் தாடி மயிரை பிடித்து இழுத்தபோது அவர் எவ்வளவு வேதனைப்பட்டிருப்பார்? அவருடைய தலை முதல் பாதம் வரை வேதனைகளையும் பாடுகளையும் நமக்காக அனுபவித்தார் என்பது மிகவும் போற்றக் கூடியதாகும்.

## 9. கோலால் அவரது சிரசில் அடித்தார்கள் [Took the reed and struck Him on the head]


அவரது கையில் கொடுக்கப்பட்டிருந்த நாணல் (மூங்கில்) கோலை வாங்கி அவரது தலைமேல் வைக்கப்பட்டிருந்த முள்கிரீடம் மேல் ஓங்கி அடித்தார்கள். என்ன ஒரு பரிதாபம்! கேள்வி கேட்க யாருமே இல்லையா? அந்த மூங்கில் கோலினால் அவர் அடிக்கப்பட்ட உடனடியாக முள்ளால் ஆன கிரீடம் அவரது தலைக்குள்ளே ஆழமாக சென்று அவரது மூளையையும் கண்களையும் தாக்கியது. நாம் நமது எண்ணங்களிலும் கண்களிலும் செய்யும் பாவத்துக்கு தண்டனையை, அவர் தமது மூளையிலும் கண்களிலும் ஏற்றுக்கொண்டார். இப்போது அவருடைய முகத்தை பார்க்க முடியாத அளவில் சிதைக்கப்பட்டிருந்தார். "அவர் அசட்டை பண்ணப்பட்டவரும், மனுஷரால் புறக்கணிக்கப்பட்டவரும், துக்கம் நிறைந்தவரும், பாடு அநுபவித்தவருமாயிருந்தார்; அவரை விட்டு, நம்முடைய முகங்களை மறைத்துக் கொண்டோம்; அவர் அசட்டை பண்ணப்பட்டிருந்தார்; அவரை எண்ணாமற்போனோம்" (ஏசா. 53:3) என்ற வார்த்தை அப்படியே அவர் வாழ்வில் நிறைவேறியது.

## 10. அவருக்கு கொடுத்த மேலங்கியை கழற்றினார்கள் [Took off the Robe]

அவரை பரியாசம் பண்ணினபின்பு, அவருக்கு உடுத்தின மேலங்கியைக் கழற்றி, அவருடைய வஸ்திரங்களை அவருக்கு உடுத்தி, அவரைச் சிலுவையில் அறையும்படி கொண்டு போனார்கள் (மத். 27:31). ஏற்கனவே போர்ச்சேவர்கள் இயேசுவுக்கு ஒரு சிவப்பு அங்கியை அணிவித்து பரியாசம் பண்ணினார்கள் அல்லவா? அந்த அங்கி அவருடைய சரீரத்தில் உள்ள காயங்களோடு சேர்ந்து அவரது சரீரத்தில் ஒட்டியிருந்தது. இப்போது அந்த மேலங்கியை வேகமாக உரிந்து கொண்டார்கள். ஐயோ! அது எவ்வளவு வேதனையைக் கொடுத்திருக்கும்! அவரது மாம்சம் எல்லாம் கழன்று வெளியே வந்தது. அவருடைய தோல் எல்லாம் உரிக்கப்பட்டிருந்தது, இந்நிலையில் காற்று அல்லது தூசு பட்டாலே எரிச்சலையும் வேதனையையும் ஏற்படுத்தும் என நமக்கு நன்றாக தெரியும். ஆனாலும் மேல் வஸ்திரத்தை கழற்றிவிட்டு, அவருடைய சொந்த வஸ்திரங்களை அவருக்கு மீண்டும் உடுத்தினார்கள். இதன் மூலம் அவருடைய சரீர வேதனை மீண்டுமாக அதிகரித்தது. ரோமர்களின்

சட்டப்படி சிலுவையில் அறையப்படும் குற்றவாளி தனது சொந்த ஆடை அணிவிக்கப்பட்டவனாய் அழைத்து செல்லப்பட வேண்டும். ஏனென்றால் அப்பொழுது தான் சரியான நபர் தண்டிக்கப்பட்டுள்ளார் என ஜனங்கள் அறிந்து கொள்ள வசதியாய் இருக்கும். இவைகளுக்கு பின்னர் சிலுவையில் அறையும்படி அவரைக் கொல்கொதா மேட்டிற்கு அழைத்து சென்றார்கள். இயேசு ஏற்கனவே தமது சிலுவை மரணத்தை முன்னறிவித்து உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது (யோவா. 3:14-15; 12:32,33).

■■■




# அத்தியாயம் - 7

# கொல்கொதா நிகழ்வுகள்
# Golgotha Events

(மத். 27:31-44; மாற். 15:20-32; லூக். 23:26-39; யோவா. 19:16-24)

## கொல்கொதா நோக்கி பயணம் [Journey towards Golgotha]

இயேசுவை மிகவும் அதிகமாக அடித்து துன்புறுத்திவிட்டு, அவரை சிலுவையில் அறையும்படிக்கு கொல்கொதாவுக்கு அழைத்து சென்றார்கள். இது ஒரு மேடான பகுதியாகும்; இதை கொல்கொதா குன்று எனவும் அழைத்தனர். கொல்கொதா என்றால் கபாலஸ்தலம் (மண்டைஓடு) என்று அர்த்தமாம். இந்த இடத்திற்கு கல்வாரிமலை, மண்டைஓடு, கபாலஸ்தலம், கொல்கொதா என பல பெயர்கள் இருந்தன. எபிரெயு பாஷையில் கொல்கொதா என்றும், கிரேக்க மொழியில் கபாலஸ்தலம் என்பதின், லத்தீன் மொழிபெயர்ப்பு கல்வாரி எனவும் கூறப்பட்டுள்ளது. இந்த குன்று எருசலேமுக்கு வெளியே அமைந்திருந்தது. ஏனெனில் பரிசுத்த நகரமாகிய எருசலேமின் எல்லைக்குள் இரத்தம் சிந்தும்படியாக யாரும் கொல்லப்படுவதில்லை (எண். 15:35; Iஇரா. 21:13; அப். 7: 58). இந்த குன்றுக்கு கபாலஸ்தலம் (மண்டைஓடு) என பெயர் வருவதற்கு மூன்று காரணங்கள் கூறப்படுகிறது:



கொல்கொதா மலை

(i) இந்த மலையை பக்கவாட்டிலிருந்து பார்க்கும்போது, ஒரு மண்டை ஓடு போல காட்சியளித்தது. ஆகவே இதற்கு இந்த பெயர் வந்தது.

(ii) அநேக கொலைக் குற்றவாளிகளை இந்த இடத்தில் சிலுவையில் அறைந்தபடியால், அவர்கள் மண்டைஓடுகள் சிதறுண்டு காணப்பட்டது. ஆகவே இந்த பெயர் வந்திருக்கலாம்.

(iii) பாரம்பரிய நம்பிக்கைப்படி ஆதாம் இந்த இடத்தில் தான் புதைக்கப்பட்டான் என நம்பப்படுகிறது. இயேசுவை சிலுவையில் அறையும்படி குழி தோண்டும் போது பல ஆயிர வருடங்களுக்கு முன்பாக உள்ள அவனின் மண்டைஓடு கண்டுபிடிக்க பட்டதாகவும், அந்த மண்டைஓட்டின் மேலேயும் அவரது இரத்தம் சிந்தப்பட்டது எனவும் நம்பப்படுகிறது. ஆகவே இந்த இடம் மண்டை ஓடு என அழைக்கப்படுகிறது.

கி.பி.70-ல் யூதர்கள் அழிக்கப்பட்டபிறகு, யாரும் இந்த இடத்தை உபயோகிக்கவில்லை. ஆனாலும் தற்போது இந்த மலையில் பரிசுத்த கல்லறை தேவாலயம் அமைந்துள்ளது.

கற்களும் முட்களும் நிரம்பிய இந்த குறுகலான பாதையில் இயேசு சிலுவையை சுமந்து சென்றார். நாம் பழைய சித்திரங்களில் பார்ப்பது போல குற்றவாளிகள் முழுசிலுவையையும் சுமப்பதில்லை. ரோமர்களது வழக்கத்தின்படி, சிலுவையில் செங்குத்தாக நிறுத்தப்படும் நேரான தூணை, சிலுவையில் அறையப்படும் அதே இடத்தில் நிறுத்தி வைப்பார்கள். குறுக்கே அறையப்படும் குறுக்கு கட்டையை மட்டுமே சிலுவையில் அறையப்படும் நபர் சுமந்து செல்ல வேண்டும். பொதுவாக ஒரு சிலுவையின் மொத்த எடை 136 முதல் 150 கிலோவாக இருந்தது. குற்றவாளி சுமக்கிற சிலுவையின் குறுக்கு கட்டையின் எடை 34 முதல் 57 கிலோ எடையாக இருந்தது. ஆனால் இயேசுவை விசாரித்தபோது எல்லா விதிமுறைகளையும் மீறியது

போல, சிலுவையின் குறுக்குகட்டையை மட்டுமே கொடுத்து நடக்க வைத்தனரா அல்லது இங்கேயும் விதிமுறையை மீறி முழு சிலுவையையும் தோள்மேல் சுமத்தினரா என தெரியவில்லை. முழு சிலுவையையும் ஒரு பலசாலியான நபரால் கூட சுமக்க முடியாததாய் இருந்ததால், குறுக்கு கட்டையை மட்டுமே சுமந்திருக்க அதிக வாய்ப்புகள் உள்ளன. இயேசு தம்முடைய சிலுவையை சுமந்து சென்றார் (யோ. 19:17) என வேதம் கூறுகிறது.

ஏற்கனவே அனுபவித்த பாடுகளின் விளைவாக அவரது தலை, முகம், முதுகு என சரீரத்தின் ஒவ்வொரு பாகமும் பலத்த சேதமடைந்திருந்தபடியாலும், சரீரம் முழுவதும் கிழிக்கப்பட்டிருந்த படியாலும் அந்த பாரமான சிலுவையை சுமக்க முடியாமல் தடுமாறினார். ஆனாலும் அவரோடு கூட சென்ற ரோம போர்ச் சேவகர்கள் அவரை அடித்துக்கொண்டே சென்றார்கள். இயேசுவை சிலுவையில் அறையும்படி ஒப்புக்கொடுத்தபோது, நான்கு நூற்றுக்க திபதிகளிடம் பிலாத்து அந்த பொறுப்பை வழங்கினான் என பல குறிப்புகள் மூலம் நாம் அறிகிறோம். ஒரு நூற்றுக்கதிபதியின் கீழ் 100 சேவகர்கள் என மொத்தம் 400 போர்ச்சேவகர்களும், மற்றும் அவரை நிந்திக்கிற யூத ஜனங்களின் படையும் சூழ அவர் அழைத்து செல்லப்பட்டார். அவர் சிலுவையை சுமந்து சென்றபோது மூன்று முறை தடுமாறி கீழே விழுந்ததாக வேத அறிஞர்கள் கூறுகிறார்கள். அப்போது அவரது தலையில் இருந்த முள்கிரீடம் அவருக்கு எவ்வளவு வேதனையைக் கொடுத்திருக்கும்! அவரது கிழிக்கப்பட்ட சரீரம் எவ்வளவு வேதனையை அனுபவித்திருக்கும்!

## சிலுவையை சுமந்த சீமோன்
## [Simon carried the cross]

இயேசு தமது சிலுவையை சுமந்து வரும்போது தடுமாறி விழுந்தப்படியாலும், சிலுவையை தூக்கமுடியாமல் தவித்தபோது அந்த வழியே நடந்து சென்ற சீமோன் என்பவனை போர்ச்சேவகர்கள் கட்டாயப்படுத்தி இயேசுவின் சிலுவையை சுமந்து வரும்படி கூறினார்கள். சிலுவையின் பாரத்தோடு கூட இந்த முழு உலகத்தின் பாவமும் அவர்மேல் சுமத்தபட்டபடியால் தான் அந்த பாவ பாரத்தினால் இயேசு தடுமாறி விழுந்திருக்கலாம்.

இயேசுவின் சிலுவையை சுமக்கும்படி கூறியவுடன் எல்லாரையும் போல ஒருவேளை இவனும் விலகி சென்றிருக்க கூடும். ஏனென்றால் யூத பாரம்பரியத்தின்படி சிலுவையை சுமப்பவனும், சிலுவையை தொட்டவனும் சபிக்கப்பட்டவர்களாய் இருந்தார்கள். மேலும் அவர்கள் மிகவும் ஆவலோடு எதிர்ப்பார்த்து கொண்டிருந்த பஸ்கா பண்டிகையிலும் கூட கலந்துக்கொள்ள முடியாது. ஆகவே யாரும் அவருடைய சிலுவையை சுமக்கும்படி முன்வரவில்லை. சிலுவையை சுமந்து சென்றால் அவர்கள் தீட்டுப்பட்டவர்களாய் மட்டுமல்ல, ஜனங்களின் வெறுப்புக்கும் உள்ளாக மாறுவார்கள். ஆகவே தான் சீமோனை போர்ச்சேவகர்கள் பலவந்தம் பண்ணி சுமக்க வைத்தனர்.

அந்நாட்களில் ரோமர்களுடைய ஆதிக்கத்தில் யூதர்கள் இருந்தபடியால், பல காரியங்களை செய்யும்படி அவர்கள் கட்டாயப்படுத்தப்பட்டார்கள். ஈட்டி முனையினால் ஒரு யூதனின் தோளைத்தட்டி, ரோம அதிகாரிகள் என்ன சொன்னாலும், அவர்கள் கேட்க வேண்டும், பணிய வேண்டும் என்பது சட்டம். சிரேனே ஊரான சீமோனும் இந்த சட்டத்திற்கு கட்டுப்பட்டு தான் இயேசுவின் சிலுவையை சுமந்தான். அந்நாட்களில் எந்த நேரத்திலும், எந்த யூதனுக்கும், ரோம அதிகாரிகளால் எப்படிப்பட்ட இழிவான வேலையும் வரலாம் என்ற நிலை இருந்தது. சுமைகளை தூக்கிக்கொண்டு பல மைல் தூரம் நடக்க வைத்தார்கள். ஆகவே தான் இயேசு, "ஒருவன் உன்னை ஒரு மைல் தூரம் வரப் பலவந்தம் பண்ணினால் அவனோடு இரண்டு மைல் தூரம் போ" என்றார் (மத்.5:41)

## யார் இந்த சிரேனே ஊரானாகிய சீமோன்?
## Who is this Simon a Cyrenian?

முதலாவதாக இந்த சீமோன் சிரேனே ஊரை சேர்ந்தவன். இந்த ஊர் ஆப்பிரிக்கா கண்டத்தில், லிபியாவில் உள்ள ஒரு பகுதியாகும். ஒருவேளை இவன் கறுப்பினத்தை சேர்ந்தவனாக இருந்திருக்கலாம் எனவும் அல்லது கிரேக்க யூதனாக இருந்திருக்கலாம் எனவும் கருதுகிறார்கள். நோவாவின் இளைய குமாரனான காமின் சந்ததியினரே ஆப்பிரிக்காவை சேர்ந்த கறுப்பின மக்கள் என கருதப்படுகிறார்கள். அப்படியென்றால் இயேசுவின் சிலுவையை சுமக்க எந்த யூதனும் முன்வராத

நேரத்தில் தேவன் ஒருவனை சபிக்கப்பட்ட பரம்பரையிலிருந்து தெரிந்து கொண்டார் என்பதையும், சிலுவையை சுமந்த காரணத்தினால் பின்நாட்களில் அவனது குடும்பம் ஆசீர்வதிக்கப்பட்டது என்பதையும் காணலாம். நாமும் கூட எந்த சமுதாயத்தை சேர்ந்தவர்களானாலும் சரி, இயேசுவை பின்பற்ற ஆயத்தமாவோம் என்றால் அவர் நம்மையும் ஆசீர்வதிப்பார் என்பது நிச்சயமே. பின்நாட்களில் இவன் மூலம் சிரேனே பட்டணத்தார் இயேசுவை அறிந்து கொண்டார்கள் என்றும், அந்த பட்டணத்தை சேர்ந்தவர்கள் ஊழியக்காரராக மாறினார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும் (அப்.13:1).

இரண்டாவதாக இவன் நாட்டிலிருந்து வரும்போது அவனை பலவந்தம் செய்து சிலுவையை சுமக்க செய்தார்கள் என பார்க்கிறோம் (மாற்.15:21). ஆங்கிலத்தில் நாடு என்பதற்கு Country என கூறப்பட்டுள்ளது. Country என்பதற்கு இரண்டு அர்த்தங்கள் உண்டு. முதலாவதாக, ஒரு குறிப்பிட்ட இடத்தை குறிக்கிறது. இரண்டாவதாக உழவன் அல்லது விவசாயி என்பதை குறிக்கிறது. ஆகவே இந்த சீமோன் சிரேனே என்னும் தனது நாட்டிலிருந்து வந்தானா? அல்லது தனது விவசாய வேலையை முடித்துக்கொண்டு வந்தானா? பெரும்பாலான வேத பண்டிதர்களின் கருத்துப்படி இவன் சிரேனே என்னும் நாட்டிலிருந்து, எருசலேமில் நடைபெறுகிற பஸ்கா பண்டிகையை ஆசரிக்கும்படி வந்தவன் என நம்பப்படுகிறது. ஏனென்றால் முழுமையான யூதர்கள் அல்லாதோரும், புறஜாதியாரும் கூட பஸ்காவை கொண்டாடலாம் (யாத்.12:48) என்ற விதிமுறை இருந்தது. மேலும் பஸ்கா பண்டிகை நாட்களிலும், பெந்தேகொஸ்தே நாட்களிலும், பல சிரேனே பட்டணத்தாரும் எருசலேமில் இருந்தார்கள் (அப்.2:10). ஆகவே பஸ்கா பண்டிகைக்காக வந்தவன், உண்மையான பஸ்காவாகிய கிறிஸ்துவின் மரணத்தில் பங்குள்ளவனாக மாறிவிட்டான்.

மூன்றாவதாக இவன் அலெக்சாந்தர் மற்றும் ரூப்புக்கு தகப்பன் என காண்கிறோம். இவன் தனது இரண்டு பிள்ளைகளோடு வந்தபோது, சிலுவையை சுமக்கும்படி நிர்பந்திக்கப்பட்டபடியால், தனது பிள்ளைகளை விட்டு சிலுவையை சுமந்து சென்றான். அந்த பிள்ளைகளும் அவன் பின்னே கரடுமுரடான பாதையில் சென்றார்கள். ஆகவே தேவன் அவர்களை ஆசீர்வதித்தார். பின்நாட்களில் பவுல் சீமோனின் மகனான ரூப்பை குறித்து "அவன்

கர்த்தருக்குள் தெரிந்துகொள் ளப்பட்டவன்" என்றார் (ரோம.16:13). அவனது தாயையும், அதாவது சீமோனின் மனைவியையும் பவுல் வாழ்த்துகிறான். அப்படி யென்றால் சீமோனும் அவனது குடும்பத்தாரும் இரட்சிக்கப்பட்டு இயேசுவின் ஊழியத்தை செய்தார்கள் என்பதை காண்கிறோம். சீமோன் இயேசுவின் சிலுவையை சற்று நேரமும், இயேசுவை வாழ்நாள் முழுவதும் சுமந்திருக்கிறான் என்பது ஆச்சரியமா னதுதான். சீமோனின் இன்னொரு மகனான அலெக்சாந்தர் கூட ஒரு சுவிசேஷகனாக இருந்தான் என்று கூறப்படுகிறது (அப்.11:20). கி.பி.1941-ல் இஸ்ரவேலை சேர்ந்த அகழ்வாராட்சி நிபுணர் ஒருவர் கிதரோன் பள்ளத்தாக்கில் வைத்து, முதல் நூற்றாண்டை சேர்ந்த ஒரு எலும்புபெட்டியை கண்டுபிடித்தார். அதில் சிரேனே ஊரை சேர்ந்த சீமோனின் மகனான அலெக்சாந்தர் என குறிப்பிடப்பட் டிருந்தது. ஆகவே இந்த அலெக்சாந்தர் என்பவன் தன் தகப்பனாகிய சீமோன் சிலுவையை சுமந்த பகுதியிலேயே அடக்கம் பண்ணப்பட்டிருந்தார் என்பது ஆச்சரியமானதே.

## அழுதுகொண்டு பின்சென்ற ஸ்திரீகள் கூட்டம் [Weeping Women]

"திரள்கூட்டமான ஜனங்களும், அவருக்காக புலம்பி அழுகிற ஸ்திரீகளும் அவருக்கு பின் சென்றார்கள்" (லூக்.23:27)

இயேசுவை நியாயம் விசாரித்து, மரணத்தண்டனையைக் கொடுக்கும் போது இவர்கள் எல்லோரும் எங்கே போயிருந்தார்கள்? ஓடிவிட்டார்களா? இல்லவே இல்லை. அந்த நேரத்தில் பிரதான ஆசாரியரும், மூப்பர்களும் அவர்களுடைய ஜனங்களுக்கு லஞ்சம் கொடுத்து அவர்களை திரளாய் கூட்டி அரண்மனைக்குள்ளாக அழைத்து வந்தபடியால், இந்த சாதாரண ஜனங்களால் உள்ளே பிரவேசித்து இயேசுவுக்கு ஆதரவாக பேச முடியவில்லை. எல்லாம் தேவனுடைய அநாதி தீர்மானமாய் இருக்கிறது! இந்த ஸ்திரீகள் ஏற்கனவே இயேசுவை பின்பற்றியவர்களாய் இருந்தனர். இயேசுவோடு கூட இருந்த பல சீஷர்களும் அவரை விட்டு ஓடி மறைந்தபோது, ஸ்திரீகள் அழுதுக்கொண்டு வந்தது பாராட்டுக்குரிய விஷயம் தான்.

ஒருக்கூட்டத்தினர் அவரை சிலுவையில் அறையுங்கள் என சத்தமிடும்போது, இன்னொரு கூட்டத்தினர் அவருக்காக அழுதுக்கொண்டு வருகிறார்கள். இங்கு லூக்கா யாருடைய

பெயரையும் குறிப்பிடவில்லை. ஆனாலும் இவர்கள்தான் இயேசுவை சிலுவையில் அறையும்போது தூரமாய் நின்று கவனித்தார்கள் என்றும், பின்பு கல்லறை வரை போய் அடக்கத்தில் கலந்து கொண்டார்கள் என்றும் அறிகிறோம் (லூக்.23:49,55).

இயேசு சிலுவையை சுமந்து சென்றபோது தடுமாறி மூன்று முறை விழுந்தார் என பாரம்பரியமாக கூறப்பட்டு வருகிறது. அந்த நேரத்தில் "பெரோனிக்கா" என்ற ஸ்திரீ தன் கையில் இருந்த துணியால் அவருடைய முகத்தை துடைத்தாள் என்றும், அந்த துணியில் இயேசுவின் முகத்தில் இருந்த இரத்தத்தின் காரணமாக அவருடைய முகம் பதிந்ததாகவும், அந்த துணியை விசேஷமாக கருதி, ரோமில் உள்ள தூய பேதுரு தேவாலயத்தில் பல நூற்றாண்டுகளாக பாதுகாக்கப்பட்டு வருவதாகவும் பாரம்பரியம் கூறுகிறது. இயேசுவின் வஸ்திரத்தை தொட்டவுடன் தனது உதிரப்போக்கிலிருந்து குணமடைந்த பெரும்பாடுள்ள ஸ்திரீ தான் இந்த பெரோனிக்கா என்றும் கருதப்படுகிறது.

இயேசு அவர்கள் முகமாய் திரும்பி: "எருசலேமின் குமாரத்திகளே, நீங்கள் எனக்காக அழாமல், உங்களுக்காகவும் உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கள்" என்றார் (லூக்.23:28).

பிலாத்துவின் அரண்மனையில் இயேசுவானவர் விசாரிக்கப்படும்போது பேசிய வார்த்தைக்கு பிறகு, இப்போது தான் தனது வாயை திறந்து எனக்காக அழாமல் உங்களுக்காக அழுங்கள் என்று கூறியுள்ளார். அழுகிற கூட்டத்தை பார்த்தபோது இயேசுவால் பேசாமல் இருக்க முடியவில்லை. ஆம், இன்றைக்குகூட நமது கண்ணீரை பார்த்து மௌனமாக இருப்பவர் அல்ல நமது ஆண்டவர் இயேசு. ஆறுதலின் வார்த்தைகளால் தேற்றப்படவேண்டிய இயேசு, அழுகிற ஸ்திரீகளை தேற்றுவதை பார்க்கும்போது, நமது நெஞ்சமும் அவரது அன்புக்காக ஏங்குகிறதல்லவா? உங்களுக்காகவும் உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கள் என ஏன் கூறினார்? 40 ஆண்டுகளுக்கு பிறகு நடைபெற போகிற சம்பவங்கள் அவர்முன்னே வந்து சென்றிருக்கும். கி.பி.70-ல் ரோமர்கள் வந்து எருசலேம் நகரை முற்றுகையிட்டு, தேவாலயத்தை அழித்துவிட்டு சுமார் 11 இலட்சம் யூதர்களை கொன்று குவித்தார்கள். பின்பு, 9 இலட்சத்து 70 ஆயிரம் இளைஞர்களை ரோமாபுரிக்கு அடிமைகளாக பிடித்து சென்று,

உலகமெங்கிலும் உள்ள அடிமை சந்தைகளில் அவர்களை விற்றுப்போட்டார்கள். இந்த கொடிய சம்பவத்தை தமது வேதனையின் மத்தியிலும் நினைவுக் கூர்ந்தார். ஆகவே அவருடைய சரீர வேதனையை போல, ஆத்தும பாரமும் அதிகமாய் இருந்தது.

"இதோ, மலடிகள் பாக்கியவதிகளென்றும், பிள்ளை பெறாத கர்ப்பங்களும் பால்கொடாத முலைகளும் பாக்கியமுள்ளவைகளென்றும் சொல்லப்படும் நாட்கள் வரும். அப்பொழுது மலைகளை நோக்கி: எங்கள் மேல் விழுங்கள் என்றும் சொல்லத்தொடங்குவார்கள். பச்சை மரத்துக்கு இவைகளை செய்தால், பட்டமரத்துக்கு என்ன செய்ய மாட்டார்கள்" என்றார் (லூக்.23:29-31).

அந்நாட்களில் பிள்ளைகள் இல்லாதவர்கள் பாக்கியவதிகள் என்று எண்ணப்படுவார்கள். ஏனெனில் தங்கள் பிள்ளைகள் வேதனைப்படுவதை காணும் வாய்ப்பு அவர்களுக்கு இருக்காது. அவர்கள் ஓடி தப்பித்துக்கொள்வதும் எளிதாயிருக்கும். ஓசியா 10:8 கூறுகிறபடி மலைகளும் குன்றுகளும் அப்படியே தங்கள் மேல் விழுந்து, நசுக்கி கொன்றுபோட்டால் நலமாயிருக்குமே என்று மக்கள் கூறும் அளவிற்கு ரோமர்களுடைய கொடுமை மிகுதியாயிருக்கும். பச்சைமரம் என இயேசு தன்னையும், பட்டமரம் என இயேசு யூத ஜனங்களையும் குறிப்பிட்டு பேசினார். அதாவது ஒரு பாவமும் செய்யாத எனக்கே இந்த நிலை வந்தது என்றால், உங்களுக்கு அதைவிட அதிகமான தண்டனைகள் வரும். ஆகவே உங்களுக்காக கதறி அழுங்கள் என்றார்.

## இயேசு சிலுவையில் அறையப்படுதல்
## [Crucifixion of Jesus]

சிலுவையில் அறையும் பழக்கம் கிரேக்கர்களால் கண்டுப்பிடிக்கப்பட்டது. பெர்சியர்கள் அதை அறிமுகப்படுத்தினார்கள். ரோமர்கள் அதை கடைப்பிடித்தார்கள். ரோமர்கள் ஒருபோதும் தங்கள் குடிமக்களை சிலுவையில் அறைவதில்லை, மாறாக கலகத்தில் ஈடுபடுவோருக்கும் தேசத் துரோகிகள், மற்றும் கொள்ளைக்காரர் போன்றோருக்கு மட்டுமே இந்த தண்டனையை அளித்து வந்தனர். மனித வரலாற்றில் கண்டுபிடிக்கப்பட்ட மரணத்தண்டனைகளில், சிலுவையில் அறைந்து கொலை செய்வது தான் மிகவும் கொடியதாய் இருந்தது.

**(i) வஸ்திரம் கழற்றப்படுதல்**

சிலுவையின் அருகில் வைத்து இயேசுவின் ஆடைகளை களைந்தனர். தமது ஆடை சரீரத்தின் காயங்களோடு ஒட்டியிருந்தது. அதை கழட்டும்போது அவரது சரீரத்தில் உள்ள தோல் உரிக்கப்பட்டு வெளியே வந்தது. அது மிகவும் கொடுமையாய் இருந்தது. இயேசுவின் ஆடை தையலில்லாமல் மிகவும் பெரியதாய் இருந்தபடியால், அவரது சரீரம் முழுவதும் உள்ள தோல் கழன்று போனது.


பொதுவாக சிலுவையில் அறையப்படும் குற்றவாளிகளை நிர்வாணமாக தான் அறைந்து வந்தனர். இயேசுவையும் அந்த விதமாகவே அறைந்திருக்க வேண்டும் என கருதப்படுகிறது. ஆனால் சிலர் இயேசுவுக்கு அவரது சிறிய உள்ளாடை மட்டும் கொடுக்கப்பட்டது என்றும் கூறுகிறார்கள். ஆனால் யோவானின் வார்த்தைப்படி, அவரது இரண்டு அங்கிகளையும் எடுத்து விட்டார்கள் என பார்க்கிறோம் (யோ.19:23). ஆகவே தான் ஸ்திரீகள் பக்கத்தில் வர தயங்கினவர்களாய், தூரமாய் நின்றார்கள் என கருதுகிறேன் (லூக்.23:49). ஆனால் இயேசுவின் தாயும், தாயின் சகோதரியும், மகதலேனா மரியாளும் சிலுவையின் அருகாமையில் நிற்பதையும் காணமுடிகிறது (யோ.19:25).



**(ii) ஆணிகளால் துளைக்கப்பட்டார்**

ரோமர்கள் மூன்று விதமான சிலுவைகளை பயன் படுத்தி வந்தனர். ✞, T, X போன்ற வடிவுகளில் அவைகள் இருந்தன. இயேசுவை சிலுவை யில் அறையும்போது ✞ வடிவு சிலுவையைப் பயன்படுத் தினார்கள். அந்த சிலுவையின் மேல் இயேசுவை படுக்க வைத்தனர். அவரது இரண்டு கைகளையும் விரித்து சிலுவை மரத்தோடு சேர்த்து ஆணிகளால் அடித்தார்கள். ரோமர்களது வழக்கத்தின்படி அவர்கள் உள்ளங்கையில் ஆணிகளை அறைவது இல்லை. அவ்வாறு அறைந்தால் சிலுவையில் தொங்கும் போது, அந்த உடலின் எடைக் காரணமாக கைகள் கிழிக்கப்பட்டு, சிலுவை

யிலிருந்து கீழே விழ வாய்ப்புகள் இருந்தன. ஆகவே உள்ளங் கையிலிருந்து சற்று மேலே ஆணிகளை அடித்தார்கள்.



சிலுவையில் அறைய பயன்படுத்தப்பட்ட ஆணிகள்

ரோம முறைகளின்படி குறுக்கு கட்டையை சிலுவையின் மேல் வைத்து சீராக்கிய பிறகு, சிலுவையின் இன்னொரு துண்டோடு இணைத் துவிட்டு கால்களிலும் ஆணிகளை அடிப்பார்கள். ஆனால் இயேசுவை எப்படி அறைந்தார்கள் என தெரியவில்லை. எப்படியாயினும் அவரது கால்களையும் சிலுவையில் சேர்த்து அடித்தார்கள். பொருட்கள் மேலே ஆணிகளால் அடிப்பது போல அவரது சரீரம் ஆணிகளால் துளைக்கப்பட்டது. எவ்வளவு பெரிய கொடுமை இது? இப்போது அவருடைய சரீரத்தின் தசைகள் எல்லாம் கீழ்நோக்கி இழுக்கப்பட்டன.

கொடியவர்களால் மிகுந்த துன்பத்திற்குள்ளாக்கப்பட்டார் இயேசு. "நாய்கள் என்னைச் சூழ்ந்திருக்கிறது; பொல்லாதவர்களின் கூட்டம் என்னை வளைந்துக் கொண்டது; என் கைகளையும் கால்களையும் உருவக் குத்தினார்கள்" (சங்.22:16) என்ற வசனமும் நிறைவேறியது. தோமா தனது விரல்களை இயேசுவின் கைகளில் போட்டுப்பார்த்தபடியால், இயேசுவின் உள்ளங்கையில் தான் ஆணிகள் அடிக்கப்பட்டிருக்க வேண்டும் என்பது சிலரது வாதம். ஆனால் இயேசு தோமாவிடம் "என் கைகளை பார்" என்று சொன்னாரேயன்றி, என் உள்ளங்கையைப் பார் என்று கூறவில்லை (யோ.20:27).

இயேசு கிறிஸ்துவை சிலுவையில் அறையப் பயன்படுத்திய ஆணியின் நீளம் 8 அங்குலமும் அதன் அகலம் $^3/_4$ அங்குலமுமாக இருந்தது என கண்டறியப்பட்டுள்ளது. தொல்பொருள் அகழ்வாராட்சி நிபுணர்கள் இயேசு கிறிஸ்துவை சிலுவையில் அறைய பயன்படுத்திய ஆணிகளில் இரண்டை 1990-ம் ஆண்டு கண்டுபிடித்துள்ளனர். அது தற்போது மிகவும் வளைந்து காணப்படுகிறது.

### (iii) தேதியும் நேரமும்

டிஸ்கவரி செய்தி நிறுவனம் நடத்திய ஆய்வின் முடிவில் கி.பி.33-வது வருடம் ஏப்ரல் 3-ஆம் தேதி வெள்ளிக்கிழமை இயேசு சிலுவையில் அறையப்பட்டார் எனக் கூறுகிறார்கள். அதற்கு முக்கிய

ஆதாரமாக அவர்கள் கூறுவது என்னவென்றால், அன்றைய தினம் பூமி அதிர்ச்சி ஏற்பட்டுள்ளதையும் கணித்துள்ளார்கள். ஆனால் பெரும்பான்மையான வேத பண்டிதர்கள் கி.பி.30-வது வருடம் ஏப்ரல் 7-ம் தேதி வெள்ளிக்கிழமை தான் இயேசு சிலுவையில் அறையப்பட்டார் என கூறுகிறார்கள். ஏனெனில் அந்த தேதியில் தான் பஸ்கா தினமான நிசான் மாதம் 15-ம் தேதி வருகிறது.

இயேசு சிலுவையில் அறையப்பட்ட நேரம் மூன்றாம் மணி நேரமாயிருந்தது என மாற்கு கூறுகிறார் (மாற்.15:25). யூதர்களின் தினம் காலை 6 மணிக்கு தான் தொடங்குகிறது. அதன்படி பார்க்கும் போது மூன்றாம் மணிநேரம் என்பது காலை 9 மணியை குறிக்கிறது.

யோவான் கூறும்போது ஆறுமணி நேரமாயிருந்தது என்கிறார் (யோ.19:14). ஆறுமணி நேரம் என்பது நண்பகல் 12 மணியை குறிக்கிறது. யோவான் மட்டுமே இயேசுவானவர் நண்பகல் 12 மணிக்கும் பிலாத்துவின் முன்பாக நின்றார் என கூறுகிறார். ஆனால் மத்தேயு, மாற்கு, லூக்கா மூவருமே நண்பகல் 12 முதல் பிற்பகல் 3 வரை காரிருள் ஏற்பட்டதாக கூறியுள்ளனர். ஆகவே இயேசு காலையில் 9 மணியளவில் சிலுவையில் அறையப்பட்டு பிற்பகல் 3 மணியளவில் மரித்திருக்க வேண்டும் என்றே பெரும்பாலான வேத பண்டிதர்கள் கருதுகிறார்கள்.

இன்னும் சற்று விளக்கமாக கூறினால், யூதர்களுடைய இரவு 3 யாமங்களாக பிரிக்கப்பட்டுள்ளது போல, யூதர்களின் பகல் 4 பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. காலை 6 முதல் 9 வரை முதல் பிரிவும், 9 முதல் 12 வரை இரண்டாவது பிரிவும், 12 முதல் 3 வரை மூன்றாவது பிரிவும், 3 முதல் 6 வரை நான்காவது பிரிவுமாக வருகிறது. இவ்வாறு பார்த்தால் மாற்குவும், யோவானும் இயேசுவை 2-வது பிரிவில்தான் சிலுவையில் அறைந்தார்கள் என கூறுகிறார்கள். மாற்கு 2-வது பிரிவின் ஆரம்பத்தில் எனவும், யோவான் 2-வது பிரிவின் முடிவிலே என்றும் கூறுகிறார்கள். எப்படியாயினும் இயேசுவானவர் இந்த 2-வது பிரிவில் தான் (அதாவது காலை 9 மணியிலிருந்து 12 மணிக்குள்ளாக) சிலுவையில் அறையப்பட்டார் என்பதை எல்லோரும் ஒப்புக் கொள்கிறார்கள்.

காலையில் 9 மணிக்கு கூட இயேசு பிலாத்துவிடம் கடைசியாக விசாரிக்கப்பட்டார் எனவும், பின்னர் கொஞ்சம் தாமதமாக சுமார் 10:30 மணியளவில் இயேசு சிலுவையில் அறையப்பட்டிருக்க வேண்டும் என நான் கருதுகிறேன்.

## கள்ளர் மத்தியில் இயேசு [Jesus between thieves]

இயேசுவின் வலது பக்கத்தில் ஒருவனும், அவருடைய இடது பக்கத்தில் ஒருவனுமாக, இரண்டு கள்ளரை அவரோடுக் கூட சிலுவையில் அறைந்தார்கள் (மாற்.15:27). அக்கிரமக்காரரில் ஒருவனாக எண்ணப்பட்டார் என்கிற வேதவாக்கியம் அதனாலே நிறைவேறிற்று (மாற்.15:28; ஏசா.53:12). இயேசுவோடு கூட சிலுவையில் அறையப்பட்ட இரண்டு கள்ளர்களும், ரோம அரசாங்கத்துக்கு விரோதமாக குற்றம் செய்து, மரண தண்டனை பெற்றவர்களாய் இருந்த படியால் அவர்களும் சிலுவையில் அறையப்பட்டார்கள். இரண்டு குற்றவாளிகளின் மத்தியில் ஒரு குற்றமற்றவரும் தண்டிக்கப்பட்டார். இந்த இரண்டு திருடர்களும் பரபாசின் கூட்டாளிகள் ஆவர். இயேசுவின் மூலம் ஒரு கள்ளன் (பரபாஸ்) விடுதலையாக்கப்பட்டான், இயேசுவின் மூலம் இன்னொரு கள்ளன் (சிலுவையில்) இரட்சிக்கப்பட்டான், விசுவாசியாத வேறொரு கள்ளன் (சிலுவையில்) கைவிடப்பட்டான். இந்த இரண்டு கள்ளரின் பெயர்கள் வேதத்தில் இல்லையென்றாலும், வரலாற்றில் பதிவாகியிருக்கிறது. "திஸ்மாஸ்" (Dismas) என்பவனுக்கு பரதீசு வாக்களிக்கப்பட்டது. "கெஸ்டாஸ்" (Gestas) என்பவன் இரட்சிப்பை இழந்த கள்ளன்.

## வஸ்திரத்தை பங்கு போடுதல் [Dividing the Garments]


போர்ச்சேவகர் இயேசுவைச் சிலுவையில் அறைந்தபின்பு, அவருடைய வஸ்திரங்களை எடுத்து, ஒவ்வொரு சேவகனுக்கு ஒவ்வொரு பங்காக நாலு பங்காக்கினார்கள்; அங்கியையும் எடுத்தார்கள், அந்த அங்கி தையலில்லாமல் மேலே தொடங்கி முழுவதும் நெய்யப்பட்டதாயிருந்தது. அவர்கள்: இதை நாம் கிழியாமல், யாருக்கு வருமோ என்று இதைக்குறித்துச் சீட்டுப்போடுவோம் என்றார்கள் (யோ.19:23,24).

சிலுவையில் அறையப்படும் குற்றவாளியிடம் இருக்கும் பொருட்கள் அனைத்தையும், சிலுவையில் அறையும் போர்சேவகர்கள் எடுத்துக்கொள்ளலாம் என்பது நடைமுறையில் இருந்த செயல்தான். இயேசுவோடு சிலுவையின் அருகில் இருந்த யோவான் மிகவும் உன்னிப்பாக இதை கவனித்து கூறுவது என்னவென்றால்: இயேசுவின் இரண்டு ஆடைகளுமே கழட்டப்பட்டது. அவரது வஸ்திரத்தை நான்கு சேவகர்களும் ஆளுக்கு ஒரு பகுதியாக பிரித்துக் கொண்டனர்.

அப்புறமாக அவரது அங்கியையும் எடுத்தார்கள். அந்த அங்கி தையலில்லாமல், மேலே தொடங்கி கீழே வரை நெய்யப்பட்டிருந்தது. ஆகவே அதை கிழிக்காமல், நான்கு பேரும் தங்களுக்குள்ளாகவே சீட்டுப் போட்டார்கள். "என் வஸ்திரங்களைத் தங்களுக்குள்ளே பங்கிட்டு, என் உடையின் பேரில் சீட்டுப் போடுகிறார்கள்" (சங்.22:18) என்கிற வேதவாக்கியம் நிறைவேறும்படி இப்படியாயிற்று.

பொதுவாக பிரதான ஆசாரியன் தான் தையலில்லாத ஆடையை அணிவது வழக்கம் (யாத்.28:8,32). இயேசுவும் நமது பிரதான ஆசாரியர் தானே! இந்த வஸ்திரம் அவரது தாயாரால் கொடுக்கப்பட்டது என நம்பப்படுகிறது.

**இயேசுவின் அங்கியை குறித்த தகவல்**



ஜெர்மனியிலுள்ள பழமையான தூய பேதுரு ஆலயத்தில் ஒரு பழமையான ஆடை பாதுகாக்கப்படுகிறது. அது தையல் இல்லாமல் முழுவதும் நெய்யப்பட்ட அங்கியாயிருக்கிறது. பாரம்பரியம் கூறுவது என்னவென்றால், இயேசுவின் அங்கியை சீட்டுப்போட்டு எடுத்த போர்ச்சேவகன் "வெசாலா" என்பவன் அதை பின்னர் அதிக விலைக்கு விற்றிருக்க வேண்டும். யாராவது ஒரு சீஷன் அதை வாங்கியிருக்க வேண்டும். ரோம பேரரசின் அரசன் கான்ஸ்டான்டையின் கிறிஸ்தவனாக மாறிய பிறகு அவன் தனது தேசத்தை கிறிஸ்தவ நாடாக பிரகடனம் செய்தான். அவனது தாய் ஹெலினா கூட கிறிஸ்தவ விசுவாசியாக மாறினாள். இந்த ஹெலினா தான் கி.பி.327 அல்லது 328-ல் இந்த அங்கியை எருசலேமில் கண்டெடுத்ததாகவும், கான்ஸ்டான்டையின் பேரரசன் ஜெர்மனியில் உள்ள ட்ரையர் நகரில் சிலக்காலம் தங்கியிருந்தான் எனவும் கூறப்படுகிறது. அப்போது அங்கு இருந்த கிறிஸ்தவ தேவாலயத்தில், கான்ஸ்டான்டையின் மற்றும் இவரது தாய் ஹெலினாவால் அந்த ஆடை ஒப்படைக்கப்பட்டதாக நம்பப் படுகிறது.

ஆனாலும் இந்த ஆடையில் "கார்பன் டேட்டிங்" பரிசோதனை செய்யப்படவில்லை, செய்யும் அளவிற்கு அந்த துணி தாங்காது. இந்த அங்கி முதல் முறையாக 12-ம் நூற்றாண்டில், அதாவது 1196, மேய் 1-ம் தேதியில் தான் வரலாற்றில் இடம் பெற்றது. பின்னர் 1512 முதல் மக்கள் பார்வைக்கு அனுமதிக்கப்பட்டது. ஒருவித இரப்பர் திரவத்தினால் இதை பாதுகாக்கின்றனர். பலரும் இதை மத்திய நூற்றாண்டுகளில் பரப்பிவிட்ட பொய் என்று கூறுகின்றனர். ஆனாலும் லட்ச கணக்கானோர் இதை இயேசுவின் அங்கி என பக்தியுடன் பார்வையிடுகின்றார்கள். தற்போது புரட்டஸ்தாந்து (Protestant) சபையினரும் இதை அங்கீகரித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## Jesus of Nazareth, the King of the Jews (INRI)
## நசரேயனாகிய இயேசு யூதருடைய ராஜா (INRI)




பொதுவாக சிலுவையில் அறையப்போகிற குற்றவாளிகளை கொல்கொதாவுக்கு, அழைத்து செல்லும்போது, அவர்களுடைய பெயர் மற்றும் அவர்கள் செய்த குற்றத்தை எழுதி அதை அவர்கள் கழுத்தில் தொங்கவிடுவது வழக்கம். பின்னர் அதை அவர்கள் சிலுவையின் மேல் மாட்டிவிடுவதும் வழக்கமான ஒன்றாயிருந்தது. இங்கு இயேசுவின் கழுத்தில் அந்த பலகை மாட்டப்படவில்லை, ஆனால் அவரது சிலுவையின் மேல் அது மாட்டப்பட்டது. அதில் "நசரேயனாகிய இயேசு யூதருடைய ராஜா" என்று எபிரெயு, கிரேக்கு மற்றும் லத்தீன் பாஷைகளில் எழுதப்பட்டிருந்தது. அதை பார்த்து கோபமும் எரிச்சலும் அடைந்த பிரதான ஆசாரியர் பிலாத்துவிடம்

வந்து: யூதருடைய ராஜா என்று நீர் எழுதாமல், தான் யூதருடைய ராஜா என்று அவன் சொன்னதாக எழுதும் என்றார்கள். பிலாத்து பிரதியுத்தரமாக: நான் எழுதினது எழுதினது தான் என்றுகூறி அவர்கள் கோரிக்கையை நிராகரித்தான் (யோ.19:19-22). கொல்கொதாவுக்கு வரும் வழியிலேயே அவரது கழுத்தில் இந்த பலகையை மாட்டியிருந்தார்கள் என்றால், அங்கே வைத்தே இதை வாசித்துவிட்டு, பிலாத்துவிடம் முறையிட்டு இதில் திருத்தம் செய்ய வாய்ப்பு இருந்தது. ஆனால் அந்த பலகையை நேரடியாக சிலுவையின் மேல் மாட்டியபடியால் அதற்கான வாய்ப்புகள் நிராகரிக்கப்பட்டன. இது யூதர்களை இழிவுப்படுத்தும் படிக்கு பிலாத்துவால் எழுதப்பட்டது, ஆகவே அவர்களால் இதை ஏற்றுக் கொள்ள முடியவில்லை. ஆனாலும் வேறு வழியில்லாமல் அடங்கி போனார்கள்.

பொதுவாக குற்றவாளி செய்த குற்றத்தை தான் மேல் விலாசமாக எழுதி சிலுவையில் தொங்க விடுவார்கள். இங்கு, "நசரேயனாகிய இயேசு யூதருடைய ராஜா" என்று எழுதியிருப்பதின் மூலம், ரோமர்களின் பார்வையில் அவர் செய்த ஒரே குற்றம், "தம்மை ராஜா என்று கூறியது" மட்டுமே என்பது தெளிவாகிறது. இந்த வாசகம் மூலம் ரோமர்கள் மறைமுகமாக ஒரு எச்சரிப்பையும் கொடுத்துள்ளார்கள்; அது என்னவென்றால், "ரோமர்களுக்கு எதிராக எழும்பும் யாரானாலும் அவர்களுக்கும் இதே கதி தான்" என்பதாகும். இதிலிருந்து நாம் கற்றுக்கொள்ளும் இரண்டு பாடங்கள் என்னவெனில்:

(i) ஒருவன் தன்னை ராஜா என்று கூறுவது கூட கொலைக் குற்றமாக கருதப்பட்டது. "இயேசு தன்னை ராஜா என்று கூறினார்" என எழுதி மாட்டியிருப்பார்கள் என்றால், அவர் செய்த குற்றத்துக்குரிய தண்டனையாக அது அமைந்திருக்கும். ஆனால் அந்த வாய்ப்பு தவிர்க்கப்பட்டது கூட தேவனுடைய திட்டமாயிருந்தது.

(ii) அந்நாட்களிலே எபிரெயு மொழி யூதர்களுடைய பாஷையாக இருந்தது, அவர்கள் ஆன்மீகவாதிகள் என அழைக்கப்பட்டார்கள்; கிரேக்க மொழி தத்துவ ஞானிகள் மற்றும் கல்விமான்களின் பாஷையாக இருந்தது; லத்தீன் மொழி ரோமர்களின் பாஷையாக இருந்தபடியால், அது பலவான்களின் பாஷை என அழைக்கப்பட்டது. அந்த நாட்களில் வழக்கத்தில் இருந்த மூன்று முக்கியமான மொழிகளிலும், இதை எழுதியிருந்தபடியால் எல்லா

தரப்பு மக்களாலும் இதை எளிதாக படிக்க முடிந்தது. பிலாத்து யூதர்களை இழிவுபடுத்தும்படி எழுதினாலும் கூட, அவனை அறியாமலே, இயேசு யூதர்களுக்கு மட்டுமல்ல அகில உலகத்துக்கும் ராஜா என்பதை மறைமுகமாக எடுத்துக் கூறுவதாக இது அமைந்துள்ளது. ஆம் இயேசு இந்த உலகத்தின் பாவத்தையை சுமந்து தீர்த்த ராஜாதி ராஜா தான்.

**அதுசரி, அது என்ன? INRI என்று கேட்கிறீர்களா?**

இது ரோமர்களுடைய லத்தீன் மொழியில் "நசரேயனாகிய இயேசு யூதருடைய ராஜா" என்பதின் சுருக்கமே ஆகும். நாம் சேர்ந்து லத்தீன் மொழியை கற்றுக்கொள்வோமா?

I - Iesus (இயேசு); N - Nazarine (நசரேயன்)

R - Rex (ராஜா); I - Idoneus (யூதர்)

கிறிஸ்தவ மார்க்கத்தில் ரோமன் கத்தோலிக்க சபையினர் தான் அதிகமாக உருவ வழிபாட்டை செய்கிறவர்களாய் இருக்கிறபடியால், இயேசு கிறிஸ்து என சித்தரிக்கபட்ட அந்த புகைப்படத்தை அதிகமாக பயன்படுத்தி வந்தார்கள். அந்த புகைப்படத்தின் மேல் லத்தீன் மொழியில் சிலுவையில் எழுதப்பட்ட வாசகத்தை சுருக்கமாக INRI என குறித்துக் கொண்டனர். ஏனெனில் அவர்கள் தலைமை செயலகம் ரோம் பட்டணத்தில் இருப்பதால் அவர்கள் லத்தீன் மொழிக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தார்கள். இந்த விளக்கமே போதுமானது என நினைக்கிறேன்.

## எல்லோராலும் நிந்திக்கப்பட்டார்
## [Profaned by all]

சிலுவையில் அறையப்பட்டிருப்பவர்கள் ஒருவேளை கொடியக் குற்றவாளிகளாய் இருந்திருந்தால் கூட, அவர்கள் நிலைமையை பார்க்கும்போது, பரியாசம் பண்ண யாருக்குமே மனம் வராது. ஆனால் இங்கு நேர் மாறான செயலை காண்கிறோம், குற்றமே செய்யாத நீதிமான் சிலுவையில் துடித்துக் கொண்டிருக்கும்போது, மனசாட்சியே இல்லாத வகையில் அவருக்கு எதிராக கடுமையான வார்த்தைகளை பேசுகிறார்கள். ஆனாலும் இயேசு அவைகளை நமது இரட்சிப்புக்காக சகித்துக் கொண்டார்.

ஒரு முறை சாத்தான் வனாந்திரத்தில் வைத்து இயேசுவை சோதித்தான், அப்பொழுது இயேசு அவனை தோற்கடித்தார். ஆகவே எப்படியாவது அவரை வீழ்த்திவிட வேண்டும் என்ற எண்ணத்தால் தான் நேரடியாக வராமல், பிற மனிதர்கள் மூலம் பரியாசம் பண்ணி சிலுவையில் இருந்து கீழே இறக்கிவிடலாம் என நினைத்திருப்பான் போல! ஆனால் அப்படி நடந்திருந்தால், நம்மை மீட்கும் தமது மீட்பின் கிரியை முடிந்திருக்காதே! ஆகவே நமக்காக அவர் எல்லா பரியாச வார்த்தைகளையும் சகித்துக்கொண்டு சிலுவையில் இருந்தார். பரியாசம் செய்தவர்கள் ஒருவேளை மகிழ்ந்திருக்கலாம்; ஆனால் இயேசு பதில் எதுவும் கூறாமல், எல்லா பரியாசத்தையும் சகித்துக்கொண்டது சாத்தானுக்கு பேரிடியாக அமைந்தது. இயேசு மனிதர்களுக்கு பதில் கூற வரவில்லை, மாறாக சாத்தானை சிலுவையில் வைத்து ஜெயிக்கவே வந்தார்.

இயேசு சிலுவையில் வைத்து கூறிய வார்த்தைகள் நமக்கு தெரியும். ஆனால் சிலுவையின் அடிவாரத்தில் ஜனங்களால் கூறப்பட்ட வார்த்தைகளை இங்கே காணலாம். இயேசுவானவர் நான்கு பிரிவுகளின் கீழ், ஏழு விதமான ஜனங்கள் மூலம் நிந்திக்கப்படுவதை கீழே காணலாம்.

பிரிவு - 1: சாதாரணமான பொது ஜனங்கள்

1) வழிப்போக்கர்கள் : அந்த வழியாய் நடந்து போகிறவர்கள் தங்கள் தலைகளை துலுக்கி: ஆ! ஆ! தேவாலயத்தை இடித்து, மூன்று நாளைக்குள்ளே கட்டுகிறவனே, உன்னை நீயே ரட்சித்துக் கொள்; நீ தேவனுடைய குமாரனேயானால் சிலுவையிலிருந்து இறங்கி வா என்று அவரைத் தூஷித்தார்கள். இந்த கேலி மற்றும் கிண்டல் மூலம் சில வேதவசனங்கள் நிறைவேறுவதை நாம் காணலாம்.

* நான் அவர்களுக்கு நிந்தையானேன்; அவர்கள் என்னைப் பார்த்து, தங்கள் தலையைத் துலுக்குகிறார்கள் (சங்.109:25)

* நானோ ஒரு புழு, மனுஷனல்ல, மனுஷரால் நிந்திக்கப்பட்டும், ஜனங்களால் அவமதிக்கப்பட்டும் இருக்கிறேன். என்னைப் பரியாசம் பண்ணி, உதட்டைப்பிதுக்கி, தலையைத் துலுக்கி (சங். 22 : 6 - 7).

உண்மையிலேயே இயேசு தேவாலயத்தை இடித்து, மூன்று நாளைக்குள்ளே அதைக் கட்டுவேன் என்று கூறியது தமது சரீரமாகிய

ஆலயத்தை குறித்தேயன்றி, அங்கு இருந்த எருசலேம் தேவாலய கட்டடத்தை அல்ல என்பதை ஜனங்கள் புரிந்துக் கொள்ளாமல் நிந்தித்தார்கள் என்பது வேதனையான செயலாகும் (யோ. 2:19-21). மேலும், அவ்வழியாக சென்று இயேசுவை நிந்தித்த வழிப்போக்கர்கள், நகரத்தில் பஸ்காவை ஆசரிக்க ஆயத்தமாயிருந்த யூதர்களேயாவர். அவர்கள் உண்மையான பஸ்கா ஆட்டுக்குட்டியாக மாறிய கிறிஸ்துவை உணராமல் போனார்கள்.

பிரிவு - 2 மதத்தலைவர்கள்

2. பிரதான ஆசாரியர்

3. வேதபாரகர்

4. மூப்பர்கள்

இந்த மூன்றுவிதமான மதத்தலைவர்களும் ஒன்று சேர்ந்து, மற்றவர்களை இரட்சித்தான்; தன்னைத்தான் இரட்சித்துக்கொள்ளத் திராணியில்லை; இவன் இஸ்ரவேலின் ராஜாவானால், இப்பொழுது சிலுவையிலிருந்து இறங்கி வரட்டும், அப்பொழுது இவனை விசுவாசிப்போம். தன்னை தேவனுடைய குமாரனென்று சொல்லி; தேவன் மேல் நம்பிக்கையாயிருந்தானே; அவர் இவன் மேல் பிரியமாயிருந்தால் இப்பொழுது இவனை இரட்சிக்கட்டும் என்று கூறி நிந்தித்தார்கள்.

இந்த பரியாச வார்த்தையின் மூலம், சங். 22:8-ல் கூறப்பட்ட தீர்க்கதரிசனம் நிறைவேறியது. "கர்த்தர் மேல் நம்பிக்கையாய் இருந்தானே, அவர் இவனை விடுவிக்கட்டும்; இவர் மேல் பிரியமாய் இருக்கிறாரே, இப்பொழுது இவனை மீட்டுவிடட்டும் என்கிறார்கள்". இவன் இறங்கி வந்தால் விசுவாசிப்போம் என்று கூறியது சுத்த பொய் ஆகும். ஏனென்றால் தாம் முன்னறிவித்தப்படி இயேசு மூன்றாம் நாளில் உயிரோடு எழுந்தப்போது அவர்கள் அதை விசுவாசிக்கவில்லையே! இன்னும் காவல் சேவகருக்கு லஞ்சம் கொடுத்து உண்மைக்கு மாறான காரியங்களை அல்லவா செய்தார்கள்?

பிரிவு - 3 அரசாங்க அதிகாரிகள்

5. அதிகாரிகள்

"இவன் மற்றவர்களை இரட்சித்தான்; இவன் தேவனால்

தெரிந்து கொள்ளப்பட்ட கிறிஸ்துவானால், தன்னைத்தானே இரட்சித்துக் கொள்ளட்டும்" என்றார்கள்.

6. போர்ச்சேவகர்கள்

"நீ யூதரின் ராஜாவானால், உன்னை இரட்சித்துக் கொள்" என்று கூறி அவரை பரியாசம் செய்தார்கள்.

இயேசு தம்மை இரட்சித்துக் கொள்ளும்படி இந்த உலகத்துக்கு வரவில்லை; அவர் ஜனங்களை இரட்சிக்கும் இரட்சகராக அவதரித்தார் என்பதே உண்மையாகும். ஆகவே ஜனங்களை இரட்சிக்க வேண்டுமானால், அவர் சிலுவையில் மரிக்க வேண்டும் என்பதே அநாதி தீர்மானமாயிருந்தது. இயேசுவே இதை கூறியிருந்தார். மனுஷகுமாரன் ஊழியம் கொள்ளும்படி வராமல், ஊழியஞ்செய்யவும், அநேகரை மீட்கும் பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார் என்றார் (மாற்.10:45).


## பிரிவு - 4 சமுதாயத்தில் இழிவானவர்கள்

7. சிலுவை கள்ளன்

அன்றியும் சிலுவையில் அறையப்பட்டிருந்த குற்றவாளிகளில் ஒருவன்: நீ கிறிஸ்துவானால் உன்னையும் எங்களையும் இரட்சித்துக்கொள் என்று அவரை இகழ்ந்தான்.

சாத்தான் தனது கடைசி முயற்சியாக சிலுவையில் அறையப்பட்ட திருடன் மூலம் பேசுகிறான். அதன் மூலமாவது இயேசு வெகுண்டெழுந்து கீழே வருவார் என நினைத்திருப்பான் போல! ஆனால் இயேசு எல்லாருடைய பரியாச வார்த்தைகளையும் புறம் தள்ளினவராய், தமது மீட்பின் திட்டத்தின் மேல் மட்டுமே நோக்கமாயிருந்தார். இயேசுவே! நீர் பதில் ஏதும் கூறாமல் எங்களுக்காக சிலுவையில் மரித்து, எங்களை மீட்டுக் கொண்டபடியால் நன்றி!

■■■



## அத்தியாயம் - 8

# சிலுவையில் நடந்த நிகழ்வுகள் (ஏழு வார்த்தைகள்)

# Events in the Cross (Seven words)

(மத். 27:45-50; மாற். 15:33-37; லூக். 23:34-46; யோவா. 19:25-30)

டாக்டர் சி. ட்ரூமன் டேவிஸ் என்பவர் இயேசு சிலுவையில் எப்படி சுவாசித்தார் என்பதை பின்வருமாறு விளக்குகிறார்: சிலுவையில் அறையப்பட்டிருப்பவர்கள், தங்கள் கைகளில் அறையப்பட்ட ஆணிகளில் தொங்கிக் கொண்டிருக்கிறபடியால், அவர்களால் இயல்பாக சுவாசிக்கமுடியாது. இயேசுவும் இந்த வேதனையை அனுபவித்தார். வழக்கத்துக்கு மாறாக அவர் வாரியினால் அடிக்கப்பட்டிருந்தபடியால், அவருடைய வேதனை விவரிக்க முடியாத ஒன்றாக இருந்தது. இயேசு சுவாசிக்க வேண்டுமானால், ஆணிகளால் அடிக்கப்பட்டிருக்கும் தமது கால்களை நிமிர்த்தி, தமது சரீரத்தை உயர்த்த வேண்டும். அப்பொழுது அவருடைய சரீரம் அவரது கால்களின் பலத்தின் மீது நிற்கும். ஏற்கனவே கால்களில் ஆணி அடிக்கப்பட்டிருந்தபடியால் இது அதிகமான வேதனையைக் கொடுக்கும். சரீரத்தை மேலே உயர்த்தும்போது, வாரியினால் அடிக்கப்பட்டு கிழிக்கப்பட்டிருந்த அவரது முதுகு சிலுவையில் உரசுவதால் இன்னும் அதிக

வேதனையை உண்டாக்கும். இப்படி செய்யும் போது மட்டுமே அவரால் சுவாசிக்க முடியும்.

ஆனால் அதிக நேரம் இப்படி காலை அழுத்திக்கொண்டு நிற்க முடியாது. காலில் அதிகமான வேதனை உண்டாகிறபடியால், தமது காலிலுள்ள பாரத்தை குறைக்கும்படி, மறுபடியும் தமது சரீரத்தை கீழே இறக்க வேண்டும். அவ்வாறு செய்யும்போது அவரது சரீரம் மீண்டுமாக ஆணிகள் அடிக்கப்பட்ட கைகளின் பலத்தில் தொங்க ஆரம்பிக்கும். இதுவும் கடுமையான வேதனையை உண்டாக்கும். மறுபடியுமாக முதுகு சிலுவை மரத்தில் உரசி, காயங்கள் திறக்கப்பட்டு வேதனையை அதிகரிக்க செய்யும். இப்படி ஒவ்வொரு சுவாசத்திற்கும் அவர் தமது சரீரத்தை மிகவும் சிரமப்பட்டு உயர்த்தி, பின்னர் இறக்க வேண்டியதாயிருந்தது. இப்படி செய்யும் போது விலாவிலும், மார்பிலுமுள்ள எல்லா தசைகளையும் வேதனையோடு அசைக்க வேண்டியதாயிருந்தது. அடிக்கடி தசைகள் சோர்ந்து போனபடியினால், இதையும் தொடர்ந்து செய்ய முடியவில்லை. இதனால் போதுமான அளவு பிராணவாயுவாகிய ஆக்ஸிஜன் கிடைப்பதில்லை. ஆகையினால் நுரையீரலிலும், இரத்த நாளங்களிலும் கரியமில வாயுவின் அளவு படிப்படியாக அதிகரித்தது.

மேலும் இரத்த வாசனையை முகர்ந்துக்கொண்டு அந்த கொல்கொதா மேட்டிலே அநேக பறவைகள் வருவதுண்டு. பறவைகள் வந்து சிலுவையில் அறைப்பட்டிருப்பவரை கொத்தி சாப்பிடுவதும் வழக்கமானதாய் இருந்தது. ஈக்களும், எறும்புகளும் இரத்தத்தை உறிஞ்சும் படி சரீரத்திலும் முகத்திலும் ஊர்ந்து சென்றன. இவைகளை விரட்ட கூட முடியாமல் கைகளிலும், கால்களிலும் ஆணிகள் துளாவபட்டவராக இயேசு சித்திரவதையை அனுபவித்தார்.

இப்படிப்பட்ட கடினமான சூழ்நிலையில் தான் இயேசு ஏழு வார்த்தைகளை கூறினார். இது அவருடைய அன்பையும் கரிசனையையும் காட்டுகிறது. இயேசு சிலுவையில் கூறிய ஏழு வார்த்தைகளில், முதல் மூன்று வார்த்தைகளையும் பிறருக்காக பேசினார்; கடைசி நான்கு வார்த்தைகளையும் தனக்காக கூறினார். அப்படியென்றால் அந்த கொடுமையான தருணத்தில் கூட அவர் பிறருக்கு ஆறுதலையும் முக்கியத்துவத்தையும் கொடுத்தார் என்பது அவரது தியாகத்தையும் அன்பையும் வெளிப்படுத்துகிறது.

## 1. மன்னிப்பின் வார்த்தை [Word of Forgiveness]

"பிதாவே, இவர்களுக்கு மன்னியும் தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே" லூக்.23:34.

இஸ்ரவேலர் கூறும் ஒரு முக்கியமான காரியம் என்ன வென்றால், சிலுவையில் தூக்கப்பட்டவர்கள், அதற்கு காரணமான நீதிபதியையும், சாட்சியளித்தவர்களையும், ரோம போர்ச் சேவகர்களையும், கூடியிருந்து வேடிக்கை பார்க்கிற ஜனங்களையும் கெட்ட வார்த்தையினால் திட்டி, சபித்து தங்கள் கோபத்தை தீர்த்துக் கொள்வார்களாம். ஆனால் முதன் முறையாக ஒரு வித்தியாசமான மன்னிப்பின் குரல் சிலுவையில் ஒலித்தது. ஆம், ஒரு மன்னிப்பின் வார்த்தை மலர்ந்தது. "பிதாவே இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே" என்று இயேசு கூறினார். இயேசு கூறியது உண்மைதான், ஏனெனில் அவர்கள் பூர்வகாலம் முதல் எதிர்பார்த்து காத்துக் கொண்டிருக்கும் மேசியாவை தான் சிலுவையில் அறைந்துள்ளார்கள் என்பதை உணராமலே இப்படி செய்தார்கள். இதையே பேதுருவும், பவுலும் கூட எடுத்துரைத் துள்ளார்கள்.

* **பேதுரு :** பரிசுத்தமும் நீதியுமுள்ளவரை நீங்கள் மறுதலித்து, கொலைப்பாதகனை உங்களுக்காக விடுதலை பண்ண வேண்டுமென்று கேட்டு, ஜீவாதிபதியைக் கொலை செய்தீர்கள்; நீங்களும் உங்கள் அதிகாரிகளும் **அறியாமையினாலே** இதை செய்தீர்களென்று அறிந்திருக்கிறேன் (அப்: 2:14-17).

* **பவுல் :** அதை இப்பிரபஞ்சத்துப் பிரபுக்களில் ஒருவனும் **அறியவில்லை;** அறிந்தார்களானால் மகிமையின் கர்த்தரை அவர்கள் சிலுவையில் அறையமாட்டார்களே (1கொரி. 2 : 8).

இயேசு கூறிய வார்த்தைகளிலே சிறந்த போதனை யாயிருக்கிற இந்த மன்னிப்பின் வார்த்தையிலிருந்து நாம் மூன்று பாடங்களை கற்றுக் கொள்கிறோம்.

### (a) இயேசு பரிந்து பேசி ஜெபிக்கிறார்

"பிதாவே" என்று கூறி அவர் தமது சிலுவையின் வார்த்தையை தொடங்குகிறார். ஆகவே இது இயேசு ஏறெடுத்த ஒரு ஜெபமாக இருப்பதை காணமுடிகிறது. இயேசு ஜெபத்திற்கு மிகுந்த

முக்கியத்துவம் கொடுத்திருந்தார் என்பதை அவருடைய ஜெப வாழ்க்கையின் மூலம் நாம் கற்றுக்கொள்கிறோம் (மாற். 1:35; லூக். 3:21; 22:42). அவர் சீஷர்களுக்கு ஜெபிக்க கற்றுக்கொடுத்த போதும் "பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே" (மத். 6:9) என தொடங்கியுள்ளார். சிலுவையில் வைத்துக்கூட தமது முதல் மற்றும் கடைசி வார்த்தைகளில் "பிதாவே" என்று கூறி ஜெபத்தோடு தொடங்கி, ஜெபத்தோடு முடிப்பதை காணலாம். தமது வாழ்க்கையே ஜெபம் நிறைந்ததாக இருந்தது.

இது ஒரு பரிந்துபேசும் ஜெபமாக இருந்தது (Intercession of Prayer). இயேசு கிறிஸ்து ஏறெடுத்த இந்த பரிந்துபேசும் ஜெபத்தைக் குறித்து ஏசாயா ஏற்கனவே தீர்க்கதரிசனம் உரைத்திருக்கிறார். "அநேகருடைய பாவத்தை தாமே சுமந்து, அக்கிரமக்காரருக்காக வேண்டிக் கொண்டதினிமித்தம்" (ஏசா. 53:12) என குறிப்பிட்டுள்ளார். இயேசு சிலுவையில் வைத்து பரிந்துபேசி ஜெபித்ததை போல, இன்றும் கூட அவர் நமக்காக பரிந்துபேசி ஜெபித்து வருகிறார் என்பது எவ்வளவு ஆறுதலாய் இருக்கிறது (I தீமோ. 2:5). மேலும் எபி. 7:25-ல் "தமது மூலமாய் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக வேண்டுதல் செய்யும்படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறார்" என பார்க்கிறோம். தமிழ் வேதாகமத்தில் வேண்டுதல் செய்கிறார் என கூறும்போது, ஆங்கில வேதாகமம் Intercede for them என்று கூறுகிறது. அதற்கு பரிந்து பேசுகிறார் என்று அர்த்தமாகும்.

### (b) இயேசு பாவத்தை மன்னிக்கிறார்

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கு மட்டுமே பாவத்தை மன்னிக்கும் அதிகாரம் உண்டு. "பூமியிலே பாவங்களை மன்னிக்க மனுஷகுமாரனுக்கு அதிகாரம் உண்டென்பதை நீங்கள் அறியவேண்டும்" (மத். 9:6) என இயேசு கூறினார். அவர் அனேகருடைய பாவங்களை மன்னித்தும் இருக்கிறார்.

- திமிர்வாதக்காரனின் பாவத்தை மன்னித்தார் (மத். 9:2)
- பாவியான ஸ்திரீயின் பாவத்தை மன்னித்தார் (லூக். 7:48)
- விபச்சாரத்தில் பிடிக்கப்பட்ட பெண்ணை மன்னித்தார் (யோ. 8:11)
- தேவனே பாவத்தை மன்னிக்கிறவர் (யாத். 34:7) (சங். 103:3,12)
- பாவிகளை இரட்சிக்கும் கிறிஸ்து (மத். 1:21 & I தீமோ. 1:15)

இயேசு கிறிஸ்துவே நமது பாவத்தை மன்னிக்கும் ஆண்டவராயிருப்பதால், நாமும் கூட நமது பாவங்களை அவரிடம் அறிக்கையிட்டால், நமது பாவத்தை நமக்கு மன்னித்து, எல்லா அநியாயத்தையும் சுத்திகரித்து நம்மை மீட்டுக்கொள்வார் (I யோ. 1:9). இவ்வாறு, நாம் கிறிஸ்துவுக்குள் மன்னிக்கப்பட்டவர்களாய் இருந்தால் தான் தண்டனையிலிருந்து தப்பித்துக் கொள்ளலாம் (ரோ. 8:1).

"நான் உங்களை மன்னிக்கிறேன்" என்று கூறாமல், "பிதாவே இவர்களுக்கு மன்னியும்" என்று இயேசு ஏன் கூறினார்? ஏனென்றால் இயேசுவானவர் மனுக்குலத்தின் பாவத்தை சுமந்த தேவ ஆட்டுக்குட்டியாக சிலுவையின் மேல் அறையப்பட்டிருந்தார். மனுக்குலத்தின் பாவம் அவர்மேல் சுமத்தப்பட்டதால், அவர் பாவமானார். ஆகவே சிலுவையில் அவர் அற்புதம் செய்கிற வராகவோ, மன்னித்து இரட்சிக்கிறவராகவோ இருக்கவில்லை. பாவத்தை தன்மேல் சுமந்து நின்றபடியால், அவர் அவர்களை மன்னிக்கும்படி பிதாவிடம் வேண்டுதல் செய்கிறார்.

"பிதாவே என்னை மன்னியும்" என்று இயேசு கூறாமல், "பிதாவே இவர்களுக்கு மன்னியும்" என்று கூறுவதின் மூலம், அவர் பாவமில்லாதவர் என்றும், அவருக்கு மன்னிப்பு தேவையில்லை என்பதையும் நாம் அறியமுடிகிறது. அவர் மேல் பாவம் சுமத்தப்பட்டதேயன்றி, அவருக்குள் பாவம் இல்லை. ஆனால் ஜனங்கள் பாவிகளாயிருந்தபடியால் அவர்களுக்கு மன்னிப்பு தேவைப்பட்டது.

### (c) இயேசு முன்மாதிரியாக இருக்கிறார்

ஒருவன் பேரில் யாதொரு குறை உங்களுக்கு உண்டா யிருக்குமானால், அந்த குறையை அவனுக்கு மன்னியுங்கள் என்று அவர் ஜனங்களுக்கு போதித்திருந்தார் (மாற். 11:25). இயேசு எதை போதித்தாரோ, அதை தனது வாழ்விலும் கடைபிடித்து நமக்கு ஒரு சிறந்த முன்மாதிரியாக திகழ்கிறார். ஏற்கனவே நாம் பார்த்தது போல, இயேசு சிலுவையில் தொங்கி கொண்டிருக்கும் போது ஏழு விதமான மனிதர்கள் வந்து அவரை பரியாசம் செய்தார்கள். அந்த பரியாச வார்த்தைகளை கேட்டுதான், பிதாவே இவர்களை மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்கள் என்று ஜெபித்தார்.

இயேசுவே போதகராகவும் பாடமாகவும் இருக்கிறார் (Jesus is the Teacher and the Subject). இயேசு தனது வாழ்க்கையை தான் போதித்தார். எதை போதித்தாரோ அதை செயல்படுத்தியும் காட்டினார். நமக்கு கூட இயேசு அதைதான் கூறியிருக்கிறார். "நீங்கள் மன்னியாதிருப்பீர்களானால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவும் உங்கள் தப்பிதங்களை மன்னியாதிருப்பார்" (மாற். 11:26). நாம் பிறரை மன்னித்தால் தான், நாமும் மன்னிக்கப்படுவோம் என்பதை இந்த வசனம் நமக்கு சுட்டிக்காட்டுகிறது. ஒருமுறை ஒரு மருத்துவர் இவ்வாறு கூறினார், "மனிதர்களிடையே இருக்கும் மிக சிறந்த மருந்து என்பது அன்பாகும்"; அப்பொழுது ஒருவர், "இந்த மருந்து சரியாக வேலை செய்யவில்லை என்றால், என்ன செய்வது" என்று கேட்டார்; அதற்கு அவர், "அதின் அளவைக் கூட்டுங்கள்" என்றார். ஆபேலின் இரத்தம், தன்னை கொலை செய்தவர்களை தண்டியுங்கள் என கதறியபோது, இயேசு தம்மை சிலுவையில் அறைந்தவர்களை மன்னித்தார் (ஆதி. 4:10; எபி. 12:24). நாமும் கூட பிறரை மன்னித்து, தேவனுடைய மன்னிப்பை பெற்றுக் கொள்வோம். தங்களது செயல்களுக்கு வருத்தம் தெரிவிக்காதவர்களையும் நாம் மன்னிக்க வேண்டும், ஏனெனில் கோபத்தை அடக்கி வைத்திருப்பதின் மூலம் அவர்கள் அல்ல நாமே காயப்படுகிறோம். ஆகவே மன்னிப்பு என்பது மனிதனுக்கு தேவைப்படுகிற அடிப்படை தேவையாகும். ஆகவே தான் "எவனுடைய மீறுதல் மன்னிக்கப்பட்டதோ, எவனுடைய பாவம் மூடப்பட்டதோ, அவன் பாக்கியவான்" என பார்க்கிறோம் (சங். 32:1).

## 2. இரட்சிப்பின் வார்த்தை [Word of Salvation]

"இன்றைக்கு நீ என்னுடனே கூடப் பரதீசிலிருப்பாய் என்று மெய்யாகவே உனக்கு சொல்லுகிறேன்" லூக். 23:43.

இயேசுவை இரண்டு கள்ளர் மத்தியில் சிலுவையில் அறைந்தார்கள். இந்த இரண்டு திருடர்களும் பரபாசின் கூட்டாளிகள் ஆவர். பரபாஸ் ஏற்கனவே இயேசுவுக்கு பதிலாக விடுவிக்கப்பட்டான். இந்த கள்ளர்களில் ஒருவன் இரக்கமற்றவனாகவும், இன்னொருவன் கனிவுள்ளவனாகவும் இருப்பதை காணலாம். வரலாற்றுக் குறிப்புகளிலும், பாரம்பரிய நம்பிக்கைகளிலும் இவர்கள் பெயர்களை காணமுடிகிறது. வலப்பக்கத்தில் அறையப்பட்டு இரட்சிப்பை

பெற்றவன் "திஸ்மாஸ்" (Dismas) என்றும், இடப்பக்கத்தில் அறையப்பட்டு இரட்சிப்பை இழந்தவன் "கெஸ்டாஸ்" (Gestas) எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

**வேதவாக்கியம் நிறைவேறுதல்**

இயேசு கிறிஸ்துவின் வலது பக்கத்தில் ஒரு கள்ளனையும், இடது பக்கத்தில் வேறொரு கள்ளனையும் சிலுவையில் அறைவதால், அவருக்கு மிகுந்த அவமானத்தையும், நிந்தையையும் ஏற்படுத்தி விடலாம் என நினைத்தனர். ஆனால் இந்த நிகழ்வு பல நூறு ஆண்டுகளுக்கு முன்பாகவே தீர்க்கதரிசியினால் உரைக்கப்பட்டது. அக்கிரமகாரரில் ஒருவராக எண்ணப்பட்டார்" (ஏசா.53:12) என்ற வார்த்தை நிறைவேறும் படியாகவே இப்படி நடந்தது. இயேசு தமது ஊழிய நாட்களில் கூட பாவிகளோடும், சமுதாயத்தால் வெறுக்கப்பட்டவர்களோடும் இருந்தார் என்பதை நாம் காண முடியும். ஆகவே இந்த கள்ளர்களோடு சிலுவையில் தொங்குவதை, அவர் ஒருபோதும் அவமானமாக கருதாமல் நமக்காக அந்த அவமானத்தை ஏற்றுக் கொண்டார்.

**விசுவாசத்தினால் இரட்சிப்பு**

நாம் தேவனுடைய கிருபையினாலே இரட்சிக்கப்படுகிறோம் என வேதம் கூறுகிறது (எபே.2:7; ரோம.5:15-17; தீத்.2:11). தேவனுடைய கிருபையில்லையெனில் நமக்கு இரட்சிப்பு இல்லை என்பது உண்மையாகும். ஆனால் "விசுவாசம்" என்ற நமது பங்கும் அவசியமானதாகும். அவரை விசுவாசித்தால் நித்திய ஜீவனையும், விசுவாசிக்கவில்லையென்றால், நித்திய தண்டனையையும் பெறுவோம் (யோவா. 3:16-18). எல்லோரும் இரட்சிக்கப்பட வேண்டும் என்பதே தேவனுடைய சித்தமாய் இருக்கிறது. அப்படியென்றால் ஏன் அனைவராலும் அந்த இரட்சிப்பை அடைய முடியவில்லை? விசுவாசம் இல்லாததே காரணம் ஆகும். எவன் ஒருவன் அவரை விசுவாசித்து ஏற்றுக் கொள்கிறானோ, அவனே தேவனுடைய இரக்கத்தை பெற்று அவருடைய பிள்ளைகள் ஆக முடியும் (யோவா. 1:12).

நோவாவுக்கு கர்த்தருடைய கண்களில் கிருபை கிடைத்தது என்பது உண்மை தான் (ஆதி.6:8), ஆனால் பேழைக்குள் பிரவேசிப்பதற்கு அவனுடைய கீழ்ப்படிதல் தேவைப்பட்டது (ஆதி. 7:5).

புகழ்பெற்ற தேவனுடைய ஊழியக்காரன் C.H. ஸ்பர்ஜன் என்பவர் ஒருமுறை 1தீமோ. 2:3-4 லிருந்து பிரசங்கம் செய்தாராம்; "எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும், அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார்" என்பதே அந்த பிரசங்கமாயிருந்தது. அவர் கூறியதாவது, எல்லோரும் இரட்சிக்கப்பட வேண்டும் என்பது தேவனுடைய சித்தம் தான், ஆனால் நாம் அவரை விசுவாசிக்க வேண்டும்; நாம் நமது பாவங்களை அவரிடத்தில் அறிக்கை செய்ய வேண்டும்; அப்பொழுது தான் தேவன் நம்மை இரட்சிக்கிறார் என்றார்.

ரெயின்ஹார்ட்டு போங்கே என்ற பிரசித்தமான ஊழியக்காரர் கூறியதாவது, "இயேசு கிறிஸ்துவின் இரத்தம் இந்த உலகத்தில் வாழ்ந்த, வாழ்கிற, வாழபோகிற எல்லோருடைய பாவங்களையும் நீக்கி சுத்திகரிக்க வல்லமையுள்ளதாய் இருக்கிறது. ஆனால் பாவியான அந்த மனிதன் இயேசுவிடம் வரவேண்டியது அவனுடைய பொறுப்பாகும்" என்றார்.

### சிலுவை கள்ளன் இயேசுவிடம் வந்த விதம்

லூக். 23:39-43 வரை உள்ள வசனங்களில் எப்படி சிலுவை கள்ளன் இயேசுவிடம் வந்தான் என்பதையும், அவன் எப்படி இயேசுவை விசுவாசித்தான் என்பதையும் இந்த பகுதியில் நாம் பார்க்க போகிறோம்.

**i) தேவ பயம் உள்ளவனாயிருந்தான் :**

சிலுவையில் அறையப்பட்டிருந்த குற்றவாளிகளில் ஒருவன்: நீ கிறிஸ்துவானால் உன்னையும் எங்களையும் இரட்சித்துக் கொள் என்று அவரை இழந்தான். ஆனால் மற்றொருவன் அவனை நோக்கி நீ இந்த ஆக்கினைக்குட்பட்டவனாயிருந்தும் தேவனுக்குப் பயப்படுகிறதில்லையா? என்று அவனுடைய தேவபயத்தை வெளிப்படுத்தினான். அவன் கள்ளனாய் இருந்தாலும் கூட மனசாட்சியுள்ள, தேவபயம் உள்ள கள்ளனாய் இருந்தான்.

"நீ கிறிஸ்துவானால்" என ஒருவன் இயேசுவை இகழ்ந்தான். இந்த வார்த்தை சாத்தானுடைய தந்திரமாய் இருந்தது.

* மத்.4:3- நீர் தேவனுடைய குமாரனேயானால், இந்த கல்லுகளை அப்பமாக மாற்றும்

* மத்.27:40 - நீர் தேவனுடைய குமாரனானால் சிலுவையிலிருந்து இறங்கி வா

* லூக்.23:39 - நீ கிறிஸ்துவானால் உன்னையும் எங்களையும் இரட்சித்துக் கொள்

அவருடைய தெய்வீகத்தை கேள்வி கேட்பதினால் அவர் அதை நிரூபித்து காட்டுவார் என சாத்தான் கருதி, இந்த கேள்விகளை இயேசுவுக்கு நேராக தொடுத்தான். ஆனால் இயேசு பதில் ஏதும் கூறாமல், தன்னை பிதாவின் சித்தத்துக்கு ஒப்புக் கொடுத்தார்.

**(ii) தனது பாவங்களை அறிக்கையிட்டான்**

"நாமோ நியாயப்படி தண்டிக்கப்படுகிறோம், நாம் நடப்பித்தவைகளுக்குத்தக்க பலனை அடைகிறோம்" என்றான். அதாவது தன்னுடைய தவறை அவன் ஒத்துக் கொண்டான். எல்லோருமே பாவம் செய்து, தேவ மகிமையற்றவர்களாக மாறினார்கள் என பவுல் கூறுகிறார் (ரோ.3:23). மேலும், தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடைய மாட்டான், அவைகளை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவனோ இரக்கம் பெறுவான் (நீதி.28:13).

**(iii) இயேசு பாவம் இல்லாதவர் என்பதை அறிக்கையிட்டான்**

இவரோ தகாததொன்றையும் நடப்பிக்கவில்லையே என இயேசுவை குறித்து கூறினான். இயேசு தவறு செய்யாதவர் என்பதையும், பாவம் இல்லாதவர் என்பதையும் (யோவா.8:46), தான் ஒரு பாவி என்பதையும் அவன் தனது வாயினால் அறிக்கையிட்டான். இரட்சிப்புண்டாக வேண்டுமானால் வாயினாலே அறிக்கை செய்ய வேண்டும் என பவுல் கூறுகிறார் (ரோம.10:10). இயேசுவை குறித்த வேறு சில சாட்சிகளையும் பார்ப்போமா?

* பிசாசு பிடித்த மனிதன் - இயேசுவே, உன்னதமான தேவனுடைய குமாரனே (லூக்.8:28)

* யூதாஸ் - இயேசு குற்றமில்லாத இரத்தத்தையுடையவர் (மத்.27:4)

* பிலாத்துவின் மனைவி - அவர் நீதிமான் (மத்.27:19)

* பிலாத்து - இவனிடம் நான் எந்த குற்றத்தையும் காணவில்லை (லூக். 23:14)

* நூற்றுக்கதிபதி - மெய்யாகவே இவர் நீதிபரன் (லூக்.23:47)

* சிலுவை கள்ளன் -இவர் தகாததொன்றையும் செய்யவில்லை (லூக்.23:41)

**(iv) இயேசுவை ஆண்டவர் என அறிக்கையிட்டான்**

இயேசுவை நோக்கி "ஆண்டவரே" என அழைத்தான். கல்விமான்களுக்கும், பிரதான ஆசாரியருக்கும், வேதபாரகருக்கும், மூப்பருக்கும், வேறுபல ஜனங்களுக்கும், அதிகாரிகளுக்கும், அரசியல் தலைவர்களுக்கும் கிடைக்காத மாபெரும் வெளிப்பாட்டை இவன் பெற்றுக் கொண்டான். ஏனென்றால் மேற்கூறப்பட்ட பலரும் இயேசுவை தேவனாக அங்கீகரிக்கவில்லை. ஆனால் இந்த கள்ளன் அங்கீகரித்தான். இந்தக்கள்ளன் தனது விசுவாசத்தை, சிலுவையின் மேல் குற்றவாளியைப் போல தொங்குகிற ஒரு இயேசுவின் மேல் வைக்காமல், அவனது ஆழமான நம்பிக்கையை ஆண்டவராகிய இயேசுவின் மேல் வைத்தான். அவரே மனுக்குலத்தை இரட்சிப்பவர் என்பதையும் நம்பினான்.

* ஒரு முறை பேதுரு இதை போல அறிக்கையிட்டான் (மத். 16:16)
* இன்னொரு முறை தோமா இதை போல அறிக்கையிட்டான் (யோவா. 20:28)

இவ்வுலக வாழ்க்கையில் இயேசுவை ஆண்டவர் என அறிக்கை செய்து அவரை ஏற்றுக் கொள்கிறவர்கள் பாக்கியவான்கள். ஏனெனில் ஒரு பயங்கரமான நாள் வரப்போகிறது, அந்நாளில் எல்லா முழங்காலும் அவருக்கு முன்பாக முடங்கும், எல்லா நாவும் இயேசு கிறிஸ்து கர்த்தரென்று அறிக்கை செய்வார்கள் (பிலி.2:10, 11).

**(v) தேவனுடைய ராஜ்யத்தை நம்பினான்**

நீர் உம்முடைய ராஜ்யத்தில் வரும் போது எனக்கூறின படியால், இயேசுவே தேவன் என்பதையும், அவருக்கு ஒரு ராஜ்யம் உண்டென்பதையும் விசுவாசித்தான். அதாவது மரணத்தோடு வாழ்க்கை முடியபோவதில்லை என்றும், அதன் பிறகு ஒரு நித்திய ராஜ்யம் உண்டென்பதையும் நம்பினான். மேலும் உம்முடைய ராஜ்யத்தில் வரும் போது என கூறுவதிலிருந்து, இயேசுவின் இரண்டாவது வருகையை கூட அவன் நம்புவதை காணலாம். "நீர் உம்முடைய ராஜ்யத்தில் வந்தால்" (If you come into your kingdom)

என அவன் கூறவில்லை, மாறாக, "நீர் உம்முடைய ராஜ்யத்தில் வரும் போது" (When you come into your kingdom) என்று கூறுகிறான். இது தேவ ராஜ்யத்தின் மேல் அவன் கொண்ட தீவிர நம்பிக்கையை காட்டுகிறது.

பிரதான ஆசாரியனாகிய காய்பாவிடம் இயேசு விசாரிக்கப்பட்ட போது, இயேசு தன்னை மேசியா என கூறினபடியால் அவர்கள் அதை நம்பாமல், பிரதான ஆசாரியன் தனது வஸ்திரத்தை கிழித்து விட்டான். சனகெரிப் சங்க விசாரணையின் போதும், இயேசு தம்மை தேவக்குமாரன் என்று கூறியப்போது அவர்கள் அதை நம்பவில்லை. ஆனால் இந்த குற்றவாளியான கள்ளன் அவரை நம்பியது ஆச்சரியமானதே! மேலும் நான் உம்மை நம்புகிற படியால் என்னை சிலுவையிலிருந்து காப்பாற்றும் என அவன் கேட்கவில்லை. மாறாக தேவ ராஜ்யத்தில் ஒரு இடத்தை மட்டுமே கேட்டான். அப்படியென்றால் சிலுவையிலிருந்து தப்பித்துக் கொள்ளும்படி அவன் கிறிஸ்துவை நம்பவில்லை. அவனுடைய எதிர்ப்பார்ப்பு இவ்வுலகத்தில் ஒரு விடுதலை அல்ல, மறு உலகத்தில் ஒரு இடமாக தான் இருந்தது.

### (vi) என்னை நினைத்தருளும் என ஜெபித்தான்

நான் உம்மை பாவமில்லாதவர் என அறிக்கை செய்ததாலோ, உம்மை நம்பியபடியாலோ அல்ல; நீர் என்னை தயவாய் நினைத்தருளும் என்று ஜெபிக்கிறான். வேறு வார்த்தையில் கூறினால், "என்மேல் கிருபையாயிரும் ஆண்டவரே" என்று ஜெபிக்கிறான். ஏனென்றால் நாம் முதலில் பார்த்தது போல, நாம் தேவனுடைய கிருபையினால் தான் இரட்சிக்கப்படுகிறோம். இதே ஜெபத்தை தான் பாவியான ஆயக்காரனும் செய்தான், நீதிமானாய் தன் வீட்டிற்கும் சென்றான் (லூக். 18:13, 14). அவ்வாறே இந்த கள்ளனும் தேவனுடைய கிருபைக்காக வேண்டிக் கொண்டபடியால், இரட்சிப்படைந்து தேவ ராஜ்யத்தில் பிரவேசிக்கும் பாக்கியம் பெற்றான். இவன் எந்தவொரு அற்புதங்களையும் பார்த்து விசுவாசிக்கவில்லை, ஏனெனில் இயேசுவின் சிலுவை மரணத்தின் போது நடந்த அற்புதங்கள், இவனுடைய இந்த பேச்சுக்கு பிறகு தான் நடந்தது. ஆகவே இவன் சிலுவையில் தொங்கும் இயேசுவின் மேல் வைத்த ஆழமான நம்பிக்கையினாலே இரட்சிப்பை பெற்றான். புகழ்பெற்ற

ஊழியக்காரரான பில்லி கிரஹாம் இவ்வாறு கூறியுள்ளார்: நான் மிகபெரிய கூட்டத்தில் பிரசங்கித்தபடியாலோ அல்லது அனேகமுறை வேதத்தை வாசித்திருக்கிற படியாலோ பரலோகம் செல்வதில்லை; மாறாக தனது கடைசி நிமிடத்தில் சிலுவையின் கள்ளன் கூறியதுபோல "தேவனே என்னை நினைத்தருளும்" என்று ஜெபிப்பதாலே மட்டுமே பரலோகம் போகிறேன்.

நண்பனே நீ யாராக இருந்தாலும் சரி. இயேசுவே என் தேவன் என்பதையும், அவர் ஒருவரே உன்னை இரட்சிக்க வல்லவர் என்பதையும் நீ விசுவாசித்து, உனது பாவங்களை அவரிடத்தில் அறிக்கையிட்டு, கிறிஸ்துவை உனது இரட்சகராக ஏற்றுக் கொள்வாயானால் உனக்கும் அந்த நித்திய ராஜ்யத்தை தேவன் அளிப்பார்.

**இயேசுவின் வாக்குதத்தம்**

இன்றைக்கு நீ என்னுடனே கூடப் பரதீசிலிருப்பாய் என இயேசு அவனுக்கு வாக்குதத்தம் அருளினார். வரபோகிற தேவனுடைய ராஜ்யத்தில் ஒரு இடத்தை கேட்ட திருடனுக்கு, அன்றைக்கே பரதீசில் இருக்கும் பாக்கியத்தைக் கொடுத்தார் என்பது ஆச்சரியமாக இருக்கிறதல்லவா? ஆம், அவனது நம்பிக்கையை தேவன் கனப்படுத்தினார்.

வேதத்தின் படி பார்க்கும் போது மரித்து போன பரிசுத்த வான்கள் எல்லாரும் கர்த்தருக்குள் இளைப்பாறும் இடமே பரதீசு என பார்க்கிறோம். எல்லா மரித்து போனவர்களும் இங்கே தான் இளைப்பாறுகிறார்கள். அந்த படியே மரித்து போகும் பாவிகள் அனைவரும் பாதாளத்துக்கு செல்வார்கள். இயேசு கிறிஸ்துவின் வருகைக்கு பிறகே பரதீசுவில் இருப்பவர்கள் கிறிஸ்துவோடு பரலோகிலும், பாதாளத்திலிருப்போர் பிசாசோடு நரகத்திலும் தள்ளப்படுவார்கள்.

* லூக். 16:19-31 - லாசரு, ஆபிரகாம் போன்றோர் தேற்றப்படுகிற இடத்தில் (பரதீசு) இளைப்பாறுகிறார்கள்
* 2 கொரி. 12:3 - பவுல் பரதீசுவுக்குள் எடுத்துக் கொள்ளப்பட்டான்
* வெளி. 2:7 - ஜெயங் கொள்ளுகிறவன் பரதீசின் ஜீவ விருட்சத்தின் கனியை புசிப்பான்

* 1 தெச. 4:16, 17 - இயேசுவின் வருகையின் போது, கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் எழுந்து (பரதீசுவிலிருந்து) ஆகாயத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டு எப்பொழுதும் கர்த்தருடனே கூட இருப்பார்கள்.

**திருடர்களை குறித்த ஒரு மதிப்பீடு**

சிலுவையில் அறையப்பட்ட மூன்று பேரின் வாழ்க்கையில் உள்ள வேற்றுமைகள்

**(i) இயேசு கிறிஸ்து :** மனுக்குலத்தின் நம்பிக்கையாய் இருந்தார். அவருக்குள் பாவமில்லை; ஆனால் மனுக்குலத்தின் பாவத்தை சுமந்து நிற்பதால், அவர் மேல் பாவம் இருந்தது. Sin on Him but not in Him. (ஏசா.53:6; 2 கொரி. 5:21; யோவா. 8:46)

**(ii) இரட்சிக்கப்பட்ட கள்ளன்:** நம்பிக்கையை எதிர் நோக்கி இருந்தான். அவனுக்குள் பாவம் இருந்தது; ஆனால் இயேசுவை ஏற்றுக் கொண்டபடியால், அவன் மேல் பாவமில்லை. Sin in him but not on him.

**(iii) இரட்சிப்பை இழந்த கள்ளன்:** நம்பிக்கையற்றவனாக இருந்தான். அவனுக்கு உள்ளேயும் பாவம் இருந்தது. அவன் மேலேயும் பாவம் இருந்தது. Sin on him and sin in him.

இங்கு கிறிஸ்துவின் மேல் நம்பிக்கை கொண்ட ஒருவன் நித்திய ஜீவனை பெறுகிறான். கிறிஸ்துவின் மேல் நம்பிக்கையற்ற ஒருவன் நித்திய அழிவை பெறுகிறான். இதை நாம் கவனிக்கும் போது புரிந்து கொள்ள வேண்டியது என்னவென்றால், இரட்சிப்பு என்பது தனிப்பட்டதாகும். எவன் ஒருவன் கிறிஸ்துவை ஏற்றுக் கொள் கிறானோ, அவன் மட்டுமே இரட்சிக்கப்படுவான். ஒரு மனிதன் இன்னொருவனுக்காக இரட்சிக்கப்பட முடியாது.

D.L. மூடி என்னும் தேவ ஊழியர் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்ட கள்ளனை குறித்து பின்வருமாறு கூறியுள்ளார் :

* காலையில் அவன் சிலுவையில் ஆணிகளால் அறையப்பட்டான் மாலையில் ஜீவ கிரீடத்தை தரித்துக் கொண்டான்

* காலையில் ரோம சக்கரவர்த்தியின் எதிரியாயிருந்தான் மாலையில் தேவனுடைய நண்பனாய் மாறினான்

* காலையில் ஜனங்களால் வெறுப்புடன் உதைத்து தள்ளப்பட்டான் மாலையில் தூதர்களோடு உள்ள ஐக்கியத்தில் சேர்க்கப் பட்டான்

*காலையில் குற்றவாளியாக பூமியில் மரித்தான் மாலையில் பரலோக ராஜ்யத்தின் குடிமகனாய் வாழ்ந்தான்.

## 3. பாசத்தின் வார்த்தை (Word of Affection)

அப்பொழுது இயேசு தம்முடைய தாயையும் அருகே நின்ற தமக்கு அன்பாயிருந்த சீஷனையும் கண்டு, தம்முடைய தாயை நோக்கி : ஸ்திரீயே, அதோ, உன் மகன் என்றார். பின்பு அந்த சீஷனை நோக்கி : அதோ, உன் தாய் என்றார் (யோவா. 19:26, 27).

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சிலுவையில் வைத்து பேசிய மூன்றாவது வார்த்தை தான் இது. அதோ உன் மகன்; அதோ உன் தாய் என மிகவும் எளிமையாக தனது வார்த்தைகளை கூறியிருக்கிறார். இந்த வார்த்தையில் ஆழமான இரகசியங்கள் எதுவும் இல்லை. மாறாக இது ஒரு குடும்ப உறவை சார்ந்த வார்த்தையாய் இருக்கிறப்படியால், இயேசுவின் குடும்பத்தை குறித்தும், இங்கே குறிப்பிடப்பட்டுள்ள யோவான் மற்றும் சிலுவையின் அருகே நின்ற பெண்கள் கூட்டத்தை குறித்தும் நான் சற்று விளக்கமாக கூற விரும்புகிறேன்.

### இயேசுவின் தாயாகிய மரியாள்

நம்முடைய சொப்பனத்திலோ அல்லது தரிசனத்திலோ தேவன் வந்து பேசினால் எவ்வளவு மகிழ்சியாயிருக்கும்! ஆனால் மரியாளிடம் தேவதூதனாகிய காபிரியேல் வந்து பேசிய நேரத்திலிருந்து, அதாவது இயேசுவானவர் கருவாக மரியாளுடைய வயிற்றில் உருவான முதலே, திகிலும் பயமும் ஆரம்பித்து (லூக். 1:29). இயேசுவானவர் பரிசுத்த ஆவியானவராலே உற்பத்தியானார் (மத். 1:20), யோசேப்பு ஒரு வளர்ப்பு தந்தையாகவும், மரியாள் பெற்றெடுத்த தாயாகவுமே இருந்தார்கள். இயேசுவை தேவாலயத்தில் பிரதிஷ்டை செய்யும்படி சென்ற மரியாளுக்கு மேலும் ஒரு கசப்பின் வார்த்தை காத்திருந்தது. சிமியோன் என்ற தேவமனிதன் இயேசுவை கரங்களில் ஏந்தி வாழ்த்தி விட்டு, மரியாளிடம் : உன் ஆத்துமாவை ஒரு பட்டயம் உருவி போகும் என்றான் (லூக். 2:35).

பாலனாய் இருந்த இயேசுவை ஏரோது கொல்ல முயற்சித்த போது, மறுபடியும் மரியாளுடைய உள்ளம் உடைந்தது. ஆகவே அவர்களுக்கு முன் பின் தெரியாத எகிப்து தேசத்துக்கு அந்த இரவிலேயே தப்பி ஓடினார்கள் (மத். 2:13-15) ஏரோதுவின் மரணத்துக்கு பிறகு திரும்பி யூதேயாவில் வந்த போது, ஏரோதுவின் மகன் அர்கெலாயு தான் யூதேயாவை ஆளுகிறான் என்பதை அறிந்தபடியால், கலிலேயாவில் உள்ள நாசரேத் ஊருக்கு ஓடிப் போனார்கள் (மத்.2:22-23). அடேங்கப்பா! என்ன ஒரு வாழ்க்கை! பொதுவாக ஒரு குழந்தையை பெற்றெடுத்தால் பெற்றோர் மிகுந்த மகிழ்ச்சியாய் இருப்பார்கள். ஆனால் இந்த பெற்றோருக்கு இயேசுவை கருவில் சுமந்த உடனே பிரச்சனைகள் ஆரம்பித்தது. தேவ குமாரனாகிய கிறிஸ்துவுக்காக அவர்கள் அத்தனை பாடுகளையும் சுமந்தார்கள்.

இயேசுவை பெற்றெடுக்கும் வரை அவர்கள் ஒன்றாக வாழ்ந்திருந்தாலும், தாம்பத்ய உறவு கொள்ளவில்லை என காண்கிறோம் (மத்.1:25). அதன்பிறகு நாசரேத்தில் வைத்து, எல்லா தம்பதியினரையும் போன்று அவர்கள் கூடி வாழ்ந்து பல குழந்தைகளையும் பெற்றெடுத்தார்கள். அவர்களுக்கு பிறந்த பிள்ளைகளின் பெயர்கள் கூட வேதத்தில் பட்டியலிடப்பட்டுள்ளது. யாக்கோபு, யோசே, சீமோன், யூதா மற்றும் பல சகோதரிகளும் அடங்குவார்கள் (மத்.13:55-56). இயேசுவானவர் தமது 12 - ஆம் வயதில் எருசலேம் தேவாலயத்துக்கு அவரது பெற்றோரால் அழைத்து செல்லப்பட்டார். அப்பொழுதும் அவரை தொலைத்துவிட்டு மரியாளும் யோசேப்பும் கவலைப்பட்டார்கள் (லூக். 2:41-48). ஆகவே அவர்களுடைய கவலை தொடர்ந்து கொண்டே தான் இருந்தது!

இயேசுவின் வளர்ப்பு தகப்பனாகிய யோசேப்பை குறித்து பிறகு எதுவும் குறிப்பிடப்படாததால், அவர் இறந்து போயிருக்கலாம் என கருதப்படுகிறது. ஆகவே குடும்பத்தின் மூத்த மகன் என்ற நிலையில் தன்னுடைய தகப்பன் செய்து வந்த தச்சு தொழிலை இயேசுவும் செய்து, தனது குடும்பத்தை வழி நடத்தினார் என நம்பப்படுகிறது. இயேசு தமது 30 -வது வயது முதல் ஊழியத்தை செய்து வந்த போதும், மரியாள் இயேசுவின் மீதுள்ள மிகுந்த பாசத்தினால், அவரை பார்க்க வந்திருந்தார்கள் எனவும் (மத். 12:46), அந்த பாசம் தான் சிலுவை வரை வர உதவியாய் இருந்தது என்பதையும் காணலாம் (யோவா. 19:25).

**இயேசுவின் சீஷனான யோவான்**

யோவானுடைய தகப்பனார் பெயர் செபதேயு என்பதாகும். இவனுடைய சகோதரன் தான் இன்னொரு சீஷனாயிருந்த யாக்கோபு (மத். 10:2). இவர்கள் மீன் பிடித்தலை தொழிலாக கொண்டிருந்தனர். இவனுடைய தாயார் பெயர் சலோமே ஆகும் (மாற். 15:40; மத். 27:56). இயேசு கிறிஸ்துவின் தாயாகிய மரியாளின் சகோதரி தான், இந்த சலோமே (யோ. 19:25). இதை குறித்து தமிழ் வேதாகமத்தில் தெளிவாக கூறவில்லையென்றாலும், ஆங்கில வேதாகமம் தெளிவாக கூறுகிறது. அந்த தைரியத்தில் தான் தனது மகன்களாகிய யோவான் மற்றும் யாக்கோபை இயேசுவிடம் அவள் அழைத்து வந்து சிபாரிசு செய்தாள் (மத். 20:20, 21). இயேசுவின் சொந்த சகோதரர்கள், அவரது தெய்வீகத்தை விசுவாசிக்கவில்லை. ஆனால் தமது தாயின் சகோதரியின் குமாரர்கள் விசுவாசித்ததோடு நின்றுவிடாமல், அவருடைய சீஷர்களாகவும் மாறினார்கள் என்பது ஆச்சரியமானதே! இவர்கள் மிகவும் வைராக்கியம் உள்ளவர்களாய் இருந்த படியால் "இடி முழக்க மக்கள்" என்று அர்த்தம் கொள்ளும் விதத்தில் "பொவனெர் கேஸ்" என்று இயேசு இவர்களுக்கு பெயரிட்டார் (லூக். 9:49, 54; மாற். 3:17).

யோவான் 2-ம் அதிகாரத்தில் கூறப்படுவது யோவானுடைய திருமணம் தான் எனக்கருதப்படுகிறது. அநேகமாக அது உண்மையாக கூட இருக்கலாம். ஏனென்றால் சகோதரியின் மகனுடைய திருமணம் என்ற உரிமையில் தான் மரியாளும் அங்கு கலந்துக் கொண்டு திராட்சை ரசத்தின் குறைவை குறித்து கவலைபட்டிருக்க வேண்டும்! எப்படியாயினும் இந்த யோவான் இயேசுவோடு மிகுந்த அன்புள்ளவனாய் இருந்தான். இயேசுவின் மிக முக்கியமான சீடர்களில் இவனும் ஒருவனாயிருந்தான். ஆகவே சில முக்கியமான இடங்களில் போகும் போது இயேசு இந்த மூவரையும் அழைத்து செல்லுவது வழக்கமாயிருந்தது. இந்த யோவான் தான் இயேசுவின் மார்போடு சேர்ந்திருந்தான் (யோவா. 13:23). ஆகவே தான் இயேசு பிடிக்கப்பட்ட போது எல்லோரும் அவரை விட்டு ஓடிப் போன போதும் கூட, யோவான் அவரையே பின் தொடர்ந்து சென்று விசாரணையின் போதும் சிலுவை மரணத்தின் போதும் கூடவே இருந்தான் (யோவா. 18:15-16; 19:26).

## சிலுவையின் அடிவாரத்தில் பெண்கள்

பொதுவாக சிலுவையில் அறையப்படும் இடத்திற்கு பெண்கள் வருவதில்லை. ஏனென்றால் அது இழிவானதாக கருதப்பட்டது. ஆனால் இயேசுவின் ஊழியத்தின் போது அவருக்கு அநேக பெண்கள் உதவி செய்திருந்தார்கள். அவரும் அநேக பெண்களுக்கு உதவி செய்திருந்தார்.

**இயேசுவுக்கு உதவியவர்கள்:** மார்த்தாள், மகதலேனா மரியாள், தங்கள் ஆஸ்தியால் ஊழியம் செய்த பெண்கள், ஏரோதுவின் மாளிகையில் வேலை செய்து வந்த கூசானின் மனைவியான யோவன்னாள் போன்ற பலரும் அடங்குவார்கள் (லூக். 8:2-3).

**இயேசுவால் உதவி பெற்றவர்கள்:** பெரும்பாடுள்ள ஸ்திரீ, மார்த்தாள், மரியாள், மகதலேனா மரியாள், விபச்சாரத்தில் பிடிக்கப்பட்ட ஸ்திரீ, நாயீன் ஊர் விதவை, ஜெப ஆலய தலைவனாயிருந்த யவீருவின் மகள் என ஒரு பெருங்கூட்டமே இருந்தனர்.

இயேசு சிலுவையில் அறையப்பட்ட போது, மரித்தாலும் உம்மோடே இருப்பேன் என்று கூறிய சீஷர்கள் எல்லோரும் (யோவானை தவிர) ஓடிப் போனப்போது, அநேக பெண்கள் மட்டுமே அவரைத் தொடர்ந்து சென்றார்கள். மேற்கூறப்பட்ட அத்தனை பேருமே அந்த கொல்கொதா மேட்டிலே இருந்திருப்பார்கள் என நம்புகிறேன். ஏனென்றால், அவருக்கு அறிமுகமான எல்லோரும், கலிலேயாவிலிருந்தே அவருக்கு பின் சென்ற ஸ்திரீகளும் தூரத்தில் நின்று இவைகளைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள் என பார்க்கிறோம் (லூக். 23:49).

ஆனால் சிலுவையின் அருகே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள நான்கு பேர் மட்டுமே இருந்தார்கள் (யோவா. 19:25). தமிழ் வேதாகமத்தில் மூன்று பெயர்கள் குறிப்பிடப்படுகிறது. ஆனால் ஆங்கில வேதாகமத்தில் நான்கு பெயர்கள் கூறப்பட்டுள்ளது.

i) இயேசுவின் தாயாகிய மரியாள்

ii) அவருடைய தாயின் சகோதரியும் யோவானின் தாயுமான சலோமே

iii) கிலெயோப்பா என்பவரது மனைவியாகிய மரியாள். இந்த

கிலெயோப்பே என்பவர், 70 பேர் கொண்ட இயேசுவின் சீடர்களில் ஒருவர் என கருதப்படுகிறது. (லூக்.10:1;24:13, 18).

iv) மகதலேனா மரியாள். இவளிடமிருந்து தான் ஏழு பிசாசுகளை இயேசு துரத்தியிருந்தார் (லூக். 8:2)

இயேசுவோடு கூட இருந்த சீஷர்களெல்லாரும் ஏன் ஓடிப்போனார்கள்? யோவானை தவிர, ஏன் எந்த ஆண்களும் இயேசுவுக்கு பின்னே வரதுணியவில்லை? அதற்கு இரண்டு காரணங்கள் உண்டு.

i) மேய்பனை வெட்டுவேன், மந்தையின் ஆடுகள் சிதறடிக்கப்படும் என்று எழுதியிருக்கிறபடி, இந்த இராத்திரியிலே நீங்கள் எல்லோரும் என்னிமித்தம் இடறலடைவீர்கள் என்ற இயேசுவின் வார்த்தை நிறைவேறும்படி இப்படி நடந்தது (சகரி. 13:7; மத். 26:31).

ii) சிலுவையில் அறையும்படி கொண்டு செல்லப்படும் நபருடைய நண்பர்களையும், உறவினர்களையும் கூட தாக்குவது அவர்கள் வழக்கமாய் இருந்திருக்கும்! சும்மா போன சீமோனையே பலவந்தபடுத்தி சிலுவையை சுமக்க வைத்தார்கள் என்றால், அவருக்கு உதவி செய்யும்படி யாராவது சென்றால் என்ன நடந்திருக்கும் என நீங்களே சிந்தித்துக் கொள்ளுங்கள். ஆகவே உயிருக்கு பயந்து தான் எல்லோரும் ஓடியிருப்பார்கள்.

### பாசத்தில் மலர்ந்த வார்த்தை

அநேக ஸ்திரீகளோடு இயேசுவின் தாயாகிய மரியாள் கூட மிகுந்த வேதனையில் இருந்தார்கள். சிறு வயது முதலே எல்லா அம்மாவையும் போல கரம்பிடித்து நடக்க கற்றுக் கொடுத்து, உருவாக்கிய தனது அன்பு மகனை இந்த கோலத்தில் பார்க்கும் போது எந்த தாயால் தான் பொறுத்துக் கொள்ள முடியும்! கூடியிருந்த பொது ஜனங்களின் பரியாச வார்த்தைகளை கேட்ட போதும், தேவகுமாரனான இயேசு படும் கொடுமைகளை பார்த்தப் போதும், சிமியோன் கூறியப்படியே மரியாளுடைய ஆத்துமாவை ஒரு பட்டயம் ஊடுருவி சென்றது. என் வேளை இன்னும் வரவில்லை என இந்த வேளையைக்குறித்து தான் இயேசு ஏற்கனவே மரியாளிடம் கூறியிருந்தார் (யோவா. 2:4).

மரியாளுடைய ஆத்துமா பட்டயத்தால் குத்தப்பட்ட அனுபவத்தில் தான் இருக்கிறது என இயேசு அறிந்திருந்தார். ஏனென்றால், இருதயம் நொறுங்குண்டவர்களை அவர் குணமாக்கி, அவர்களுடைய காயங்களை கட்டுகிறார் (சங். 147:3). ஆகவே தான் இயேசு காயப்பட்டிருந்த மரியாளைப்பார்த்து, "ஸ்திரீயே, அதோ உன் மகன்" என்றும், தமக்கு அன்பாயிருந்த சீஷனைப் பார்த்து "அதோ உன் தாய்" என்றும் கூறினார். அதாவது உன் தாயைப் போல அவர்களை கவனித்துக் கொள் என்று புதிய ஒரு பொறுப்பை யோவானுக்கு கொடுத்தார். அவனும் அவ்வண்ணமாகவே அவளை ஏற்றுக் கொண்டான் (யோவா. 19:27).

தம்மிடத்தில் அன்பாயிருப்பவர்களிடம் மட்டுமே இயேசு பொறுப்புகளை கொடுக்கிறார். தன்னோடு அன்பாயிருந்த யோவானிடம் தாயை கவனிக்கும் பொறுப்பைக் கொடுத்தார். அவரிடத்தில் அன்பாய் இருப்பேன் எனக் கூறிய பேதுருவிடம், ஆடுகளை மேய்க்கும் (ஜனங்களை நடத்தும்) பொறுப்பைக் கொடுத்தார். நாம் அவரிடம் அன்பாய் இருக்கிறோமா?

**இயேசுவின் பொறுப்பான செயல்**

இயேசு எப்பொழுதும் குடும்பத்தில் பொறுப்புள்ளவராக இருந்து வந்தார். சிறு வயது முதலே பெற்றோருக்கு கீழ்படிந்திருந்தார் (லூக். 2:51). சிலர் சொல்லுவது போல, அவர் நாசரேத்தை விட்டு எங்கும் போகாமல், தமது தாயோடும், சகோதரர்களோடும் வளர்ந்து வந்தார் (லூக். 4:16). ஒரு தச்சனாகவே வாழ்ந்தார் (மாற்.6:3). ஜெப ஆலயத்துக்கு வழக்கமாக சென்று வந்தார் (லூக்.4:16). ஆகவே அவர் தமது ஊழியத்தை தொடங்கின போது, எல்லாராலும் அடையாளம் கண்டுக் கொள்ளப்பட்டார் (மாற். 6:1-3).

இவ்வாறு பொறுப்புள்ளவராய் இருந்த இயேசு, தமது தாய் மரியாளுக்கு உரிய மரியாதையையும் கொடுத்திருந்தார். மரியாளின் வயிற்றில் இயேசு பிறந்திருந்தாலும், அவர் மரியாளுடைய இரத்த சம்மந்தமான மகன் அல்ல. ஆனாலும் இயேசு கீழ்படிந்திருந்து வேத பிரமாணத்தை நிறைவேற்றினார் (யாத். 20:12; நீதி.23:22). சிலுவையில் இயேசு இருந்தபோது, தாயை கவனிக்கும் பொறுப்பை யோவானிடம் கொடுத்து விட்டு, தாய் - மகன் உறவை துண்டித்து விட்டு, தேவனும் அவரது சீஷி என்ற புதிய உறவை ஏற்படுத்தினார். அதிலிருந்து மரியாள் இயேசுவின் சீஷியாக மாறிவிட்டாள்.

**ஸ்திரீயே....**

இயேசு மரியாளை ஸ்திரீயே என்று அழைத்தாரா? அவளுக்கு மரியாதையை கொடுக்கவில்லையா? இது ஒரு வினோதமான வாதம் தான். ஏனென்றால் இயேசு மரியாளை ஒருபோதும் "ஸ்திரீயே" என்று அழைக்கவேயில்லை. யோவா. 2:4 - ல் கூட இந்த வார்த்தை வருகிறது. நம்முடைய பொது அறிவை பயன்படுத்தினால் கூட இதற்கான பதிலை காணமுடியும். தமிழில் தான் "ஸ்திரீயே" என மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. தமிழில் இயேசு அழைத்திருந்தால் தான் ஸ்திரீயே என்று அழைத்திருக்க முடியும். இயேசுவின் தாய் மொழியானது அரமேயு (Aramaic) ஆகும். அவர் பேசிய மொழியும் அது தான். அப்படியென்றால் அரமேயு மொழியில் அவர் எப்படிக் கூப்பிட்டார் என நமக்கு தெரியாது.

**சில மொழிப் பெயர்ப்புகளை கீழே காணலாம்:**

ஆங்கில வேதாகமம் - Dear Woman

தமிழ் பரிசுத்த வேதாகமம் - ஸ்திரீயே

தமிழ் பரிசுத்த பைபிள் - அன்பான பெண்ணே

தமிழ் திருவிவிலியம் (பொது மொழி பெயர்ப்பு) - அம்மா (இங்கு அம்மா என்னும் சொல் தாய் என்னும் பொருளில் அல்ல, பெண்களை மதிப்புடன் குறிப்பிடும் வகையில் கூறப்பட்டுள்ளது)

இயேசு பேசிய மொழி அரமேயுவாக இருந்த போதிலும், புதிய ஏற்பாடு எழுதப்பட்டது கிரேக்க மொழியில் ஆகும். கிரேக்க மொழியில் இதற்கு "Guna" என்ற பதம் பயன்படுத்தப்பட்டுள்ளது. Guna என்றால் பெண்களை எவ்வளவு மரியாதையாக கூறமுடியுமோ, அவ்வளவு மரியாதைக்குரிய சொல்லாயிருக்கிறது. அந்த பதத்திற்கு இணையான சொல் தமது மொழிகளில் இல்லாததே இந்த குழப்பத்திற்கு காரணம் ஆகும். ஆகவே, இயேசு மரியாளை ஒருப்போதும் மரியாதை குறைவான வார்த்தையை பயன்படுத்தி அழைக்கவில்லை என்பதை நாம் புரிந்துக் கொள்ள வேண்டும்.

**இயேசுவை தேவனாக ஏற்றுக் கொண்ட மரியாள்**

மரியாள் ஒரு போதும் கடவுளோ அல்லது தேவனிடம் பரிந்து பேசும் மத்தியஸ்தரோ அல்ல. மாறாக இயேசுவை பெற்றெடுக்கும்படி

தேவனால் பயன்படுத்தப்பட்ட ஒரு பாத்திரமே ஆவார். வேதாகமத்தில் மரியாள் வணக்கத்தை குறித்து எதுவும் கூறப்படவில்லை. அவைகள் எல்லாம் பிற்காலத்தில் சில தவறான உபதேசங்களை போதிக்கிறவர்களால் ஏற்படுத்தப்பட்டதாகும். ஆனால் இந்த மரியாள் நமது ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசுவை தொழுதுக் கொண்டதற்கான சான்றுகள் பல உள்ளன.

(i) லூக்கா 1:38 - மரியாள் "தேவனுடைய" சித்தத்திற்கு தன்னை ஒப்புக் கொடுத்திருந்தாள்

(ii) லூக்கா 1:46 - மரியாள் கர்த்தரை மகிமைப்படுத்தினாள்

(iii) லூக்கா 1:47 - இரட்சகராகிய தேவனில் (பிறக்கப்போகிற இரட்சகராகிய இயேசுவில்) களிக்கூர்ந்தாள்

(iv) லூக்கா 1:45 - தேவன் பேரில் உள்ள விசுவாசத்தால் பாக்கியவதி எனப்பட்டாள் (நாமும் கூட தேவனை விசுவாசித்தால் பாக்கியவான்களாவோம்) மத்.5:3-10

(v) லூக்கா 1:42, 43 - ஸ்திரீகளுக்குள்ளே ஆசீர்வதிக்கப்பட்டவள் என எலிசபெத் வாழ்த்தினாள் (இதை குறித்து கீழே காணலாம்)

✸ ஸ்திரீகளுக்குள்ளே தான்; ஸ்திரீகளுக்கு மேல் அல்ல (Among woman; not above woman)

✸ ஸ்திரீகளுக்குள்ளே நீ ஆசீர்வதிக்கப்பட்டவள் என வாழ்த்துவது இஸ்ரவேலில் வழக்கமாயிருந்த ஒரு செயல் தான். நியா. 5:24-25 - ல் கேனியனான ஏபேரின் மனைவியாகிய யாகேல் கூட "ஸ்திரீகளுக்குள்ளே ஆசீர்வதிக்கப்பட்டவள்" என அழைக்கப்பட்டுள்ளாள் (ஆகவே அவள் தேவனோ அல்லது மத்தியஸ்தரோ கிடையாது).

✸ "ஆசீர்வதிக்கப்பட்டவள்" தான் மரியாள், ஆசீர்வதித்தவள் அல்ல. ஆசீர்வதிக்கப்பட்டவளை விடவும் ஆசீர்வதிக்கிறவர் தான் பெரியவர்.

✸ "என் ஆண்டவருடைய தாயார் என்னிடத்தில் வந்தது எனக்கு எதினால் கிடைத்தது" என்று தான் எலிசபெத் சந்தோஷமடைந்தாள். இங்கு மரியாளை விடவும், ஆண்டவர் தான் பெரியவராக கருதப்படுகிறார். ஆண்டவர் என்பது இயேசுவை குறிக்கிறது.

(vi) அப்போஸ்தலர் 1:14 - இயேசு வாக்குதத்தம் பண்ணின பரிசுத்த ஆவியானவரை பெற்றுக் கொள்ளும்படி, இயேசுவின் தாயாகிய மரியாளும், அவருடைய சகோதரர்களுமாக 120 பேர் காத்திருந்தார்கள். இயேசுவின் தாய் இயேசுவை தேவனாக அங்கீகரித்திருந்ததை நாம் ஏற்கனவே பார்த்தோம். ஆனால் அவருடைய சகோதரர்கள் அவரை ஏற்றுக் கொள்ளாமல் இருந்து வந்தனர் (யோவா. 7:5). இயேசு உயிர்த்தெழுந்த பிறகு அவரை விசுவாசித்தார்கள். அவருடைய சகோதரனான யாக்கோபும் உயிர்தெழுந்த இயேசுவை தரிசித்திருந்தான் (Iகொரி. 15:7). பரிசுத்தாவியை பெற்ற பின் அவர்கள் எல்லாரும் இயேசுவின் சாட்சிகளாய் மாறினார்கள். யாக்கோபு சபையின் முக்கிய தலைவரானான் (அப். 15:13; கலா.1:19; 2:9). யாக்கோபு எழுதிய நிருபத்தை எழுதியவரும் இயேசுவின் சகோதரனாகிய யாக்கோபு தான். ஆனால் அவர் நிருபத்தை எழுதும் போது, இயேசுவின் சகோதரன் என குறிப்பிடாமல், தேவனுக்கும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கும் ஊழியக்காரன் என தன்னை அறிமுகபடுத்தியுள்ளார் (யாக்.1:1).

இவ்வாறு மரியாளும் அவளது பிள்ளைகளும் இயேசுவையே தேவனாக ஏற்றுக் கொண்டு அவரது வல்லமையை பெற்று அவரது சாட்சிகளாய் வாழ்ந்திருக்கிறார்கள் என்பது மகிழ்ச்சியான காரியமாகும்.

## 4. தவிப்பின் வார்த்தை
## (Word of Helplessness)

ஒன்பதாம் மணி நேரத்தில் இயேசு : ஏலீ! ஏலீ! லாமா சபக்தானி, என்று மிகுந்த சத்தமிட்டுக் கூப்பிட்டார், அதற்கு என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர் என்று அர்த்தமாம் (மத்.27:46).

இயேசு சிலுவையில் அறையப்பட்ட நேரம் முதல் மத்தியானம் 12 மணி வரை, முதல் மூன்று வார்த்தைகளையும் கூறி முடித்திருந்தார். நண்பகல் 12 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை (மூன்று மணி நேரம்) பூமியெங்கும் அந்தகாரம் ஏற்பட்டது (லூக். 23:44). இந்த காரிருள் சரியாக நண்பகலில் ஏற்பட்டதே ஒரு அற்புதம் தான். சூரியகிரகணம் போன்ற இயற்கையின் மாற்றத்தால் ஏற்பட்ட அந்தகாரம் என இதை

கூறமுடியாது. ஏனென்றால் முழு நிலவு (பௌர்ணமி) நாட்களில் தான் பஸ்கா பண்டிகையை கொண்டாடி வந்தனர். இந்த முழு நிலவு நாட்களில் சூரிய கிரகணம் ஏற்படுவதில்லை. அப்படியென்றால், இந்த அந்தகாரம் எப்படி ஏற்பட்டது? வேதமே பதில் கூறுகிறது: சூரியன் இருளடைந்தப்படியால் அப்படியாயிற்று (லூக். 23:45). தன்னை படைத்த தேவன் அணு அணுவாய் துடிதுடித்து மரிக்கும் காட்சியை பார்க்க முடியாமல் சூரியனும் தன் முகத்தை மூடிக் கொண்டதோ? இதன் மூலம், "அந்நாளிலே நான் மத்தியானத்திலே சூரியனை அஸ்தமிக்கப் பண்ணி, பட்டபகலிலே தேசத்தை அந்தகாரப் படுத்தி" (ஆமோ. 8:9) என்ற தீர்கதரிசனம் நிறைவேறியது.

**காரிருளில் நடந்தது என்ன?**

சில வேத பண்டிதர்களின் கருத்துப்படி, பிதாவாகிய தேவன் சிலுவையில் தொங்கிய குமாரனாகிய இயேசுவிடம் ஏதோ ஒன்றைக் குறித்து இடைப்பட்டிருக்கலாம். ஏதோ ஒரு விதத்தில் அந்த நேரத்தில் மனுக்குலத்தை தம்மோடு மீண்டும் ஒப்புரவாக்கியிருக்கலாம்! ஏனென்றால் கிறிஸ்து தம்மையே பாவநிவாரண பலியாக சிலுவையில் ஒப்புக் கொடுத்தார் என்றால், அந்த பலியை ஏற்றுக் கொள்ள பிதாவாகிய தேவன் அங்கு வந்திருக்க வேண்டும் அல்லவா? ஏனெனில் பிதாவாகிய தேவன் பிரகாசத்திலிருந்து மட்டுமல்ல, காரிருள் கார்மேகம் போன்றவற்றிலிருந்து கூட பேசியிருக்கிறார் (ஆதி. 15:12-13, 17; உபா.5:22; 1இராஜா.8:12; யாத்.19:16-19) என்பது குறிப்பிடதக்கது. எப்படியாயினும், அந்த மூன்று மணி நேர காரிருள் நேரத்தில் பாவத்திற்கான விலை கிரயத்தை இயேசு செலுத்தி விட்டார் என்பதை நாம் அறிந்துக் கொள்ள வேண்டும்.

இயேசு சிலுவையில் தொங்கிய அந்த காரிருள் நேரத்தில் இந்த மனுக்குலத்தின் பாவங்கள் முழுமையாக அவர் மேல் சுமத்தப்பட்டிருக்க வேண்டும். ஆகவே அவர் நமக்காக பாவமாக்கப் பட்டார் (2கொரி.5:21); மரத்திலே தூக்கப்பட்ட படியால் அவர் நமக்காக சாபமாக்கப்பட்டார் (உபா.21:23; கலா.3:13). தேவன் தீமையை (பாவத்தை) பார்க்க மாட்டாத சுத்தக் கண்ணனாக (ஆபகூ.1:13) இருப்பதால், தம்முடைய முகத்தை திருப்பிக் கொண்டார். இதனால், இயேசு தேவனிடத்திலிருந்து பிரிக்கப்பட்டதை முழுமையாக உணர்ந்தார். பிதாவோடு உள்ள உறவு துண்டிக்கப்பட்டதாலோ

என்னவோ இந்த முறை "பிதாவே" என்று அழைக்காமல் "என் தேவனே" என அழைக்கிறார். அநாதி காலமுதலே பிதாவோடு இருந்த ஐக்கியம் பிரிந்ததை அவரால் தாங்க முடியவில்லை. தேவனுடைய உக்கிர கோபாக்கினையிலிருந்து நம்மை விடுவிக்க இயேசு அனுபவித்த பாடுகளை பாருங்கள்! அவர் அநேகரை மீட்கும் பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்க வந்தார் (மாற்.10:45). கெத்செமனே தோட்டத்தில் வைத்து அவர் வியாகுலப்பட்ட போது, ஒரு தூதன் வந்து அவரை பெலப்படுத்தினான். ஆனால் சிலுவையில் அவரை தேற்றவோ, பெலப்படுத்தவோ யாரும் இல்லை. ஆகவே தம்மை முழுமையாக மனுக்குலத்தின் பாவத்திற்காக ஒப்புக் கொடுத்தார்.

ஏலீ! ஏலீ லாமா சபக்தானி

மூன்று மணி நேர காரிருள் முடிந்தவுடன், பிற்பகல் 3 மணிக்கு இயேசு மிகுந்த சத்தத்தோடு, ஏலீ! ஏலீ! லாமா சபக்தானி என்று கூறினார். "மிகுந்த சத்தமாய்" என்பதை நாம் கவனிக்க வேண்டும். இது அவர் மயங்கிய நிலையில் இருந்து பிதற்றவில்லை என்பதை நமக்கு காட்டுகிறது. நல்ல மனதிடனோடு தான் இதை கூறியுள்ளார். இயேசு தனது தாய் மொழியான அரமேயு பாஷையில் இப்படி கூப்பிட்டார். அதற்கு என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர் என்று அர்த்தம். "ஏலோயீ" (மாற். 15:34) என்பது எபிரேய வார்த்தையாகும். இந்த இரண்டுமே "என் தேவனே" என பொருள் படுகிறது. ஒருமுறை மார்டின் லூதர் கிங் இந்த வார்த்தையின் விளக்கத்தை அறிந்துக் கொள்ள ஜெபித்த போது "தேவன் தேவனால் கைவிடப்படுவதா? யாரால் அதை அறிந்துக் கொள்ள முடியும்" என்றாராம். இந்த வார்த்தையின் மூலம் சங்கீதம் 22:1 - வது வசனம் நிறைவேறியது. மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக் கொண்டு, நம்முடைய துக்கங்களை சுமந்தார். நாமோ, அவர் தேவனால் அடிப்பட்டு வாதிக்கப்பட்டு, சிறுமைப்பட்டவரென்று எண்ணினோம் (ஏசா. 53:4).

கைவிடப்படுதல் என்றால் என்ன?

நாம் ஏற்கனவே பார்த்தது போல தேவன் பரிசுத்தமானவர், நீதியுள்ளவர், பாவத்தை பார்க்காத சுத்த கண்ணன். தமது குமாரனேயானாலும் சரி, பாவத்தை சுமந்து நிற்கிற அவரை

பார்க்காமல் தமது முகத்தை மறைத்ததின் மூலம் தமது நீதியை நிலை நாட்டினார். அந்த நேரத்தில் அநாதிகாலம் முதல் பிதாவோடு இருந்து ஐக்கியத்தை இயேசு சற்று நேரம் இழந்து தவித்தார். இந்த ஐக்கியத்தில் வந்த இடைவெளியால் தான் தாம் கைவிடப்பட்டதாக உணர்ந்தார். அந்த பிரிவை அவரால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

இதை புரிந்துக் கொள்ள வேண்டுமானால் இரண்டு நிகழ்வுகளை நாம் கவனிக்க வேண்டும். முதலாவது, இறந்து போன சிறு பெண்ணை குறித்து நித்திரையாய் இருக்கிறாள் என இயேசு கூறினார் (மாற். 5:39). இரண்டாவதாக, தகப்பன் சமூகத்தை விட்டு விலகி சென்று, இன்னும் உயிரோடிருக்கிறவன் மரித்தான் எனக் கூறப்பட்டுள்ளது (லூக். 15:24). அப்படியென்றால், கிறிஸ்துவுக்குள் மரித்தால் கூட அது உண்மையான மரணம் அல்ல, நித்திரை தான் (இளைப்பாறுதல்); அதே நேரம் கிறிஸ்து இல்லாமல் உயிரோடு இருந்தால் கூட, அது ஒரு வாழ்வு அல்ல, மாறாக அது மரணம் தான். சுருங்ககூறின் தகப்பனுடைய ஐக்கியத்திலிருந்து விலகி செல்லுவது தான் உண்மையான மரணம் ஆகும். ஆகவே தான் இதை புசிக்கும் நாளிலே சாகவே சாவாய் என்று தேவன் கூறியிருந்தார் (ஆதி.2:17). புசித்த உடனடியாக தேவனுடைய ஐக்கியத்தை விட்டு ஆவிக்குரிய மரணத்தை தேடிக் கொண்டார்கள் (ஆதி.3:8). பாவத்தின் சம்பளம் மரணம் (ரோ. 6:23). இது சரீர மரணம் அல்ல, சரீர மரணம் எல்லோருக்கும் தான் வரும், ஆகவே இது ஆவிக்குரிய மரணத்தைக் காட்டுகிறது. பாவம் நம்மை தேவனிடமிருந்து பிரிக்கிறது. ஆகவே தேவனுடைய பிரசன்னம் அல்லது ஐக்கியம் இல்லாத ஒரு வாழ்வு செத்த வாழ்க்கையாயிருக்கிறது. அது தான் உண்மையான கைவிடப்படுதல் என்பதாகும்.

எலியா வந்தாரா?

இயேசு ஏலீ! ஏலீ! என கூப்பிட்டவுடனே சிலர், இவன் எலியாவை கூப்பிடுகிறான் என்றார்கள். மற்றவர்களோ, பொறு, எலியா இவனை இரட்சிக்க வருவானோ, பார்ப்போம் என்றார்கள். ஏனென்றால், நீதிமான்களுக்கு உதவி செய்ய, ஏற்ற நேரத்திலே எலியா ஓடிவருவார் என்பது யூதர்களுடைய பாரம்பரிய நம்பிக்கையாகும். அந்த நம்பிக்கை நிறைவேறுமா என பார்க்கும்படி காத்திருந்தார்கள். எலியா

வரவேயில்லை! ஏனெனில் இயேசு எலியாவை கூப்பிடவே இல்லையே!!

## 5) தாகத்தின் வார்த்தை (Word of Thirst)

அதன் பின்பு, எல்லாம் முடிந்தது என்று இயேசு அறிந்து, வேதவாக்கியம் நிறைவேறத்தக்கதாக : தாகமாயிருக்கிறேன் என்றார் (யோவா. 19:28).

இயேசு தமது சீஷர்களோடு மேல் வீட்டறையில் வைத்து பஸ்காவை புசித்தப்போது பானம் பண்ணினார். அதன் பிறகு அவர் அடிக்கப்பட்டார், விசாரிக்கப்பட்டார், தாடியை பிடித்து இழுத்தார்கள், வாரியினால் அடிக்கப்பட்டார், பாரமான சிலுவையை சுமந்தார், முள்முடி சூட்டப்பட்டு இரத்தம் வழிந்தது. முதுகு கிழிக்கப்பட்டது. கடைசியாக சிலுவையிலும் அறையப்பட்டார். ஆகவே தண்ணீர் தாகம் ஏற்படுவது இயல்பான செயல் தான். அந்த வேதனைகளின் நடுவிலும் இயேசு தனக்காக எதையுமே கேட்கவில்லை. ஆனால் காரிருள் ஏற்பட்டு பிதாவின் ஐக்கியத்திலிருந்து பிரிக்கப்பட்டவராய் இருந்த படியால், மிகவும் களைப்படைந்தார். தமது மீட்பின் கிரியையை முடித்து விட்ட செய்தியை கூறுவதற்கு கூட பெலன் இல்லாமல் அவதிப்பட்டார். ஆகவே தான் தாகமாயிருக்கிறேன் என்று கூறினாரா? அவர் அவ்வாறு கூறியதன் மூலம் மூன்று காரியங்களை வெளிப்படுத்துகிறார்.

### (i) வேதவாக்கியத்தை நிறைவேற்றுகிறார்

வேத வாக்கியம் நிறைவேறும்படியாக தாகமாயிருக்கிறேன் என்று கூறினார் (யோ.19:28). ஏனென்றால் பல நூறு வருடங்களுக்கு முன்னரே இதை குறித்து வேதம் கூறியிருக்கிறது ஆச்சரியமானது தான். தண்ணீரைப்போல ஊற்றுண்டேன், என் எலும்புகளெல்லாம் கட்டுவிட்டது, என் இருதயம் மெழுகு போலாகி, என் குடல்களின் நடுவே உருகிற்று. என் பெலன் ஓட்டைப் போல் காய்ந்தது, என் நாவு மேல்வாயோடே ஒட்டிக் கொண்டது, என்னை மரணத் துளிலே போடுகிறீர் (சங். 22:14, 15). மேலும் அவர் தாகமாயிருக்கிறேன் என கூறியப்படியால் தான் "என் ஆகாரத்தில் கசப்புக் கலந்து கொடுத்தார்கள், என் தாகத்துக்குக் காடியைக் குடிக்கக்

கொடுத்தார்கள்" (சங். 69:21) என்ற வசனமும் நிறைவேறியது. வேதவாக்கியத்தை தம்மில் நிறைவேற்றும் படியாகவே தமது தாகத்தை இயேசு அறிவித்தார்.

### (ii) தமது மனித தன்மையை வெளிப்படுத்துகிறார்

இயேசு மனிதனாய் அவதரித்த போது 100% தெய்வீக தன்மையோடும், 100% மனித தன்மையோடும் வாழ்ந்தார். அவரது மனித தன்மைகளை குறிப்பிடும் சில பகுதிகளை காணலாம்.

* மத். 4:2 - அவருக்கு பசி உண்டாயிற்று
* மாற். 3:5 - அவர் விசனமடைந்தார்
* மத். 14:14 - அவர் மனதுருகினார்
* மாற். 3:5 - அவர் கோபமடைந்தார்
* யோவா. 4:6 - அவர் இளைப்படைந்தார்
* மத். 15:32 - அவர் பரிதவித்தார்
* யோவா. 11:35- அவர் கண்ணீர் விட்டார்
* மாற். 14:33 - அவர் திகிலடைந்தார், வியாகுலப்பட்டார்
* யோவா. 19:28 - அவர் தாகமடைந்தார்

அவர் தாகமாயிருக்கிறேன் என்று கூறியதின் மூலம், இன்னும் ஒருமுறை தனது மனித தன்மையை வெளிப்படுத்தினார்.

### (iii) தமது ஆத்தும தாகத்தை பிரகடனம் செய்கிறார்

இயேசு தாகமாயிருக்கிறேன் என்றவுடன், அவருக்கு கசப்பு கலந்த காடி கொடுக்கப்பட்டது. இயேசு அதை பருகவில்லை. அப்படியானால் அவருடைய தாகம் என்பது என்ன? இயேசு சொன்னார்: இந்த தண்ணீரை குடிக்கிறவனுக்கு மறுபடியும் தாகம் உண்டாகும். நான் கொடுக்கும் தண்ணீரை குடிக்கிறவனுக்கோ, ஒருக்காலும் தாகமுண்டாகாது (யோவா. 4:13, 14; 7:37). இயேசுவின் ஆத்தும தாகம் தீர வேண்டுமானால், ஜனங்கள் இயேசுவை ஏற்றுக் கொள்ள வேண்டும். இயேசு தாகத்துக்கு தா என்று கேட்டார், ஆனால் அங்கேயும் தண்ணீர் குடித்ததாக கூறப்படவில்லை. மாறாக, நான் புசிப்பதற்கு நீங்கள் அறியாத போஜனம் எனக்கு உண்டு என்றார் (யோவா. 4:8, 32). பிதாவின் சித்தத்தை முடிப்பதே அந்த போஜனமாயிருந்தது (யோவா. 4:34). எல்லா மனுஷரும்

இரட்சிக்கப்பட வேண்டும் என்பதே அவருடைய சித்தமாய் இருக்கிறது (1 தீமோ. 2:4). அப்படியானால், நாம் ஜனங்களை இரட்சிப்புக்கு நேராக நடத்தும் போது, இயேசுவின் ஆத்தும தாகத்தை ஆற்றுகிறவர்களாய் மாற முடியும். அதை செய்ய வேண்டுமானால், நாம் தேவன் மேல் தாகம் (வாஞ்சை) உள்ளவர்களாய் இருக்க வேண்டும் (சங்.42:1); நீதியின் மேலும் தாகம் உள்ளவர்களாய் இருக்க வேண்டும் (மத். 5:6).

**கசப்பு கலந்த காடியா? கடற்காளாள் கலந்த காடியா?**

"தாகமாயிருக்கிறேன்" என இயேசு கூறியவுடன், அங்கிருந்த ஒருவன் செய்த செயலை கீழே காணலாம்.

(i) மத். 27:34 - ல் கசப்பு கலந்த காடியை அவருக்குக் குடிக்க கொடுத்தார்கள். அவர் அதை ருசிப் பார்த்து, குடிக்க மனதில்லாதிருந்தார் என பார்க்கிறோம். ஏன் குடிக்கவில்லை? ஏனென்றால் சிலுவையில் அறையப்படும் குற்றவாளிகளுக்கு வேதனையை குறைக்கும் படிக்கும், மயக்கம் அடையும் படிக்கும் கசப்பான வெள்ளை போளத்தை புளிப்பான திராட்சைரசக் காடியில் கலந்துக் கொடுப்பது வழக்கம். (தற்போது மருத்துவத்தில் பயன்படுத்தி வருகிற குளோரோபாமுக்கு பதிலாக இருந்திருக்கலாம்!?) அதை இயேசுவுக்கு கொடுத்த போது, அவர் அதை ருசி பார்த்து மயக்கத்தை கொடுக்கும் மருந்து என்பதை அறிந்துக் கொண்டு அதை குடிக்காமல் தவிர்த்தார். ஏனென்றால் அவர் மயக்கமடைய விரும்ப வில்லை. உண்மையிலே மனுக்குலத்துக்காக தமது சுய நினைவோடு பாடுகளை சகித்துக் கொண்டார். அந்நாட்களில் பணக்கார யூத பெண்கள் வெள்ளைப் போளத்தை தண்ணீரில் கலந்து விற்பனை செய்து வந்தார்கள். இதைக் குடித்தால் வலி நிவாரணியாக இருந்திருக்கும், ஆகவே இயேசு அதை தவிர்த்தார்.

(ii) யோவான் 19:29, 30 - ல் காடி நிறைந்த பாத்திரம் அங்கே வைக்கப்பட்டிருந்தது. அவர்கள் கடற்காளாளை அதில் தோய்த்து, ஈசோப்பு தண்டில் மாட்டி, அவர் வாயினிடத்தில் நீட்டிக் கொடுத்தார்கள். இயேசுவும் அதை வாங்கினார் என காண்கிறோம். இந்த புளிப்பான திராட்சைரசக் காடியில், மயக்கத்தை ஏற்படுத்தும் கசப்பைக் கலக்கவில்லை, மாறாக கடற்காளான் தான் கலக்கப்பட்டது

(தோய்க்கப்பட்டது) என பார்க்கிறோம். கடற்காளான் என்பது கடலில் உள்ள பாறைகளுக்கு கீழேயிருந்து பெறப்படுகிற ஒருவித கடற்பாசி என Easton's Bible Dictionary கூறுகிறது. இது ஒரு செடிவகையாக நமக்கு தோன்றியாலும், உண்மையிலே மிருக வகையை சேர்ந்தது என Smith's Bible Dictionary கூறுகிறது. எப்படியாயினும் இது மயக்கத்தை கொடுக்க பயன்படுத்தப்படுவது அல்ல என்பது தெளிவாகிறது.

இந்த கடற்காளானை ஒரு ஈசோப்பு தண்டில் மாட்டி, புளிப்பான திராட்சைரசக் காடியில் தோய்த்து, அவருடைய வாயில் நீட்டினார்கள். ஈசோப்பு என்பது பஸ்கா பண்டிகையின் போது இரத்தத்தை தெளிக்க பயன்படுத்தப்படும் ஒரு விதமான செடியின் இலை ஆகும் (யாத்.12:22). இயேசு அதை வாங்கிக் கொண்டார் என்பது, அவர் அதை அதிகமாக குடித்தார் என்று அல்ல, மாறாக அவருடைய நாவின் வறட்சியை போக்கி, அவருடைய உதடுகளை ஈரப்படுத்தி கொண்டு எஞ்சியிருந்த இரண்டு வார்த்தைகளையும் கூறுவதற்காகவே அதை வாங்கியிருப்பார் என கருதப்படுகிறது.

ஏனென்றால், "இது முதல் இந்த திராட்சப்பழ ரசத்தை நவமானதாய் உங்களோடு கூட என் பிதாவின் ராஜ்யத்திலே நான் பானம் பண்ணும் நாள் வரைக்கும் இதை பானம் பண்ணுகிறதில்லை என்று உங்களுக்கு சொல்லுகிறேன்" என இயேசு கூறியிருந்தார் (மத். 26:29).

## 6. வெற்றியின் வார்த்தை (Word of Victory)

இயேசு காடியை வாங்கின பின்பு, "முடிந்தது" என்று சொல்லி, தலையைச் சாய்த்து, ஆவியை ஒப்புக் கொடுத்தார். யோவா. 19:30.

இது ஒரு வெற்றியின் வார்த்தையாய் இருக்கிறது. இதற்கு முன்பு கூறிய இரண்டு வார்த்தைகளிலிருந்தும், இது மிகவும் வித்தியாசமாக உள்ளது. இதற்கு முன்பு கைவிடப்பட்டதாகவும், தாகமாயிருப்பதாகவும் கூறியிருந்தார். நான் முடிந்தேன் (I am finished) என்று இயேசு கூறவில்லை, மாறாக முடிந்தது (It is finished) என கூறியிருப்பதின் மூலம் தமது கிரியையை முடித்து விட்டதாக வெற்றியோடு கூறுகிறார். முடிந்தது என்பதற்கு கிரேக்க மொழியில் Tetelestai என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது. அதற்கு

"முடிக்கப்பட்டது" என்று அர்த்தமாகும். வேதத்தில் மூன்று இடங்களில் இந்த வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது.

* ஆதி. 2:1 - உண்டாக்கப்பட்டு தீர்ந்தன (Finished - KJV) படைப்பின் கிரியை முடிந்தது
* யோவா. 19:30 - முடிந்தது (Finished - KJV) மீட்பின் கிரியை முடிந்தது
* வெளி. 10:6, 7; 16:17 - நிறைவேறும் (Finished - KJV) தேவனுடைய அனைத்து வேலையும் முடிந்தது.

தமிழ் வேதாகமத்தில் தீர்ந்தன, முடிந்தது, நிறைவேறிற்று என மூன்று பதங்கள் பயன்படுத்தப்பட்டிருந்தாலும், மூலப்பாஷையில் மூன்றுக்கும் முடிந்தது என்ற ஒரே பதம் தான் பயன்படுத்தப்பட்டுள்ளது. தேவன் தமது படைப்பின் கிரியையை ஆறாவது நாளில் முடித்தது போல, இயேசுவும் தமது சிலுவையின் ஆறாவது வார்த்தையின் போது எல்லாவற்றையும் முடித்து விட்டதாக கூறுவது எவ்வளவு பொருத்தமானதாக உள்ளது!

### இயேசு எதை செய்து முடித்தார்?

நான் செய்யும்படி நீர் எனக்கு நியமித்த கிரியையைச் செய்து முடித்தேன் (யோவா. 17:4) என இயேசு ஏற்கனவே தமது ஜெபத்தில் கூறியிருந்தார். இப்போது அதை முழுமைப்படுத்தி விட்டார் என்பதை காணலாம். இயேசு முடித்த நான்கு காரியங்களை பார்க்கலாம்.

### (i) தேவனுடைய திட்டமான மீட்பின் கிரியையை முடித்தார்

மீட்பின் கிரியையை குமாரனாகிய இயேசு செய்ய வேண்டும் என்று தேவன் ஆதியிலே திட்டமிட்டிருந்தார் (ஆதி. 3:15).

* இழந்து போனதை தேடவும் இரட்சிக்கவும் அவர் வந்தார் (லூக். 19:10)
* பாவிகளை இரட்சிக்க வந்தார் (2 தீமோ. 1:15)
* நியாய பிரமாணத்திலிருந்து நம்மை மீட்க வந்தார் (கலா. 4:4)
* தமது ஜீவனை கொடுக்க வந்தார் (மாற். 10:45)
* நம்முடைய பாவத்தை சுமந்து தீர்க்க வந்தார் (1 யோவா. 3:5)
* பிதாவின் சித்தத்தை நிறைவேற்ற வந்தார் (லூக். 2:49)

இயேசுவானவர் நாசரேத்தில் தச்சு தொழிலில் ஈடுபட்டு வந்த போதே, இந்த உலகத்தை இரட்சிக்க வேண்டும் என்பதையும், பாடுபட்டு சிலுவையில் மரிப்பதே பிதாவின் சித்தம் என்பதையும் அறிந்திருந்தார் (லூக். 2:49). ஆகையால் எத்தனையோ தடைகள் வந்த போதிலும், பிதாவின் சித்தமான, மீட்பின் கிரியையை தமது இரத்தத்தையே விலைக்கிரயமாக கொடுத்து செய்து முடித்தார் (1 கொரி. 6:20; 7:23).

### (ii) சாத்தானின் கிரியைகளை அழித்து முடித்தார்

சாத்தானை முழுமையாக கட்டி அந்தகாரத்தில் போடவில்லை என்றாலும், அவனுடைய கிரியைகளை இயேசு சிலுவையில் அதமாக்கினார். இயேசுவின் இரண்டாவது வருகைக்கு பிறகு தான் அவனை நிரந்தரமாக கட்டி நரகத்தில் தள்ளுவார் எனவும் வேதம் கூறுகிறது. சிலுவை மரணத்தின் மூலம், இயேசு சாத்தானின் கிரியையை அழித்தார் என்பதற்கு இதோ சில வசன ஆதாரங்கள்

* கொலோ. 1:13 - இருளின் அதிகாரத்திலிருந்து நம்மை விடுதலையாக்கினார்
* கொலோ. 2:15 - அவனது துரைத்தனங்களையும், அதிகாரங்களையும், உரிந்துக் கொண்டு, அவனை வெளியரங்கமான கோலமாக்கினார்.
* எபி. 2:14 - பிசாசானவனை தமது மரணத்தினாலே அழித்தார்.

### (iii) பழைய ஏற்பாட்டு சடங்குகளை முடித்தார்

இயேசுவின் மரணத்தின் மூலம் பழைய ஏற்பாட்டு காலத்தில் நடைபெற்றுவந்த சடங்காசாரங்கள், ஆசாரியத்துவம், பலிகள் போன்ற பழைய சடங்குகளை முடித்து விட்டார் (கொலோ. 2:14; எபி. 10:12). ஆகவே தான் தேவாலயத்தின் திரைச்சீலை கிழிந்தது. பிரதான ஆசாரியன் தனது வஸ்திரங்களை கிழித்தான். இனி பாவ பரிகாரத்துக்காக, ஆட்டுக்குட்டியின் இரத்தத்தை பிரதான ஆசாரியன் மகா பரிசுத்த ஸ்தலத்துக்குள்ளே கொண்டு செல்ல வேண்டிய அவசியமில்லை. ஏனென்றால் மிருகங்களின் இரத்தத்தால் நமக்கு மீட்பு கிடைக்காது (எபி. 10:12-14). தற்போது இயேசுவே நமது பிரதான ஆசாரியனாய் இருக்கிறார் (எபி. 4:14).

### (iv) இயேசுவின் பாடுகள் முடிந்தது

இயேசு பாடுபட வேண்டும் என பலமுறை அவரே முன்னறிவித்திருந்தார்.

* மத். 16:21 - பாடுகள் பட்டு, கொலையுண்டு மூன்றாம் நாளில் எழுந்திருக்க வேண்டும்
* மத். 20:22 - நான் குடிக்கும் பாத்திரத்தில் (சிலுவை மரணத்தில்) நீங்கள் குடிக்க முடியுமா?
* லூக். 9:31 - எருசலேமில் அவரது மரணம் நடக்கும்

மேலும் ஏசாயா 53-ஆம் அதிகாரம் முழுவதும் அவரது பாடுகளையும் மரணத்தையும் குறித்து கூறுகிறது. இவை அனைத்தையுமே இயேசு சிலுவையில் முடித்து விட்டார்.

வேதத்தில் இரண்டு பேர் தான் தங்கள் கிரியையை முடித்ததாக கூறுகிறார்கள். முதலாவதாக, இயேசு அதை இரண்டு முறை கூறினார் (யோவா. 17:4; 19:30); இரண்டாவதாக பவுல் அதை கூறினார் (2தீமோ. 4:7). அனைத்து பரிசுத்தவான்களுமே வெற்றியோடு தான் தங்கள் ஆவிக்குரிய வாழ்க்கையை முடித்திருக்கிறார்கள். நாமும் கூட தேவன் நமக்குக் கொடுக்கிற பொறுப்புகளை செய்து முடிக்கிறவர்களாக இருக்க வேண்டும். கிறிஸ்தவ வாழ்க்கையை தொடங்குவது மிகவும் சுலபமான காரியம், ஆனால் அதை முடிப்பது கடினமானதாய் இருக்கிறது. ஏனென்றால் கிறிஸ்துவோடு உள்ள வாழ்க்கையை தொடங்குகிற எல்லோரும் அதை முடிப்பதில்லை. எவன் ஒருவன் கிறிஸ்துவில் தனது வாழ்க்கையை நிறைவு செய்கிறானோ அவன் பாக்கியவான். நமது மரணம் எப்படிப்பட்டதாக இருந்தாலும், அது விசுவாசம் உள்ள மரணமாய் இருக்க வேண்டும் (எபி. 11:13).

## 7. ஒப்புக் கொடுத்தலின் வார்த்தை (Word of Dedication)

இயேசு : பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புக் கொடுக்கிறேன் என்று மகா சத்தமாய்க் கூப்பிட்டுச் சொன்னார்; இப்படிச் சொல்லி, ஜீவனை விட்டார். லூக்கா. 23:46.

இயேசு சிலுவையில் வைத்து ஏழு வார்த்தைகளை கூறியுள்ளார். யூதர்களை பொருத்தமட்டில், ஏழு என்பது பூரண இலக்கமாக கருதப்படுகிறது. தேவன் ஆறு நாட்களில் தமது சிருஷ்டிப்பின் கிரியையை முடித்து விட்டு ஏழாம் நாளில் ஓய்ந்திருந்தது போல (ஆதி. 2:2); இயேசுவும் ஆறாவது வார்த்தையிலே தமது மீட்பின் கிரியை முடித்தேன் எனக் கூறிவிட்டு, ஏழாவது வார்த்தையை கூறிக் கொண்டு இவ்வுலக வாழ்வை முடிவுக்கு கொண்டு வருவதை காணலாம். இயேசு "மகா சத்தமாய்க் கூப்பிட்டு" அந்த வார்த்தையைக் கூறியுள்ளார். அதிலிருந்து நாம் தெரிந்துக் கொள்ள வேண்டியது என்னவென்றால், கடைசிவரை இயேசு மயக்க நிலைக்கு செல்லாமல், தெளிந்த ஞாபகத்தை உடையவராய் இருந்திருக்கிறார் என்பதாகும். இந்த ஏழாவது வார்த்தையிலிருந்து நாம் மூன்று காரியங்களை கற்றுக் கொள்ளலாம்.

**(i) பிதாவே**

இயேசு தமது சிலுவையின் வார்த்தையை தொடங்கும் போது "பிதாவே இவர்களை மன்னியும்" என்றார். இடைப்பட்ட நேரத்தில் பிதாவானவரை "என் தேவனே" என்று அழைத்தார். ஏனென்றால், தேவனோடு உள்ள ஐக்கியம் பிரிக்கப்பட்ட படியாலே அப்படியாயிற்று என்று நாம் ஏற்கனவே பார்த்தோம். கடைசியாக மறுபடியும், அந்த ஐக்கியத்துக்குள்ளாக இயேசு வந்திருப்பதை நாம் காணலாம். ஆகவே தான் "பிதாவே" என்று இறுதியாக அழைக்கிறார். இது இயேசுவுக்கும் பிதாவுக்கும் உள்ள நெருக்கத்தை காட்டுகிறது. இயேசுவும் பிதாவும் ஒன்றாய் இருக்கிறார்கள் (யோவா. 10:30). இயேசு எப்போதும் தமது பிதாவை குறித்து பேசியுள்ளார். தமது மலைபிரசங்கத்தில் மட்டுமே அதாவது மத்தேயு 5 முதல் 7 அதிகாரங்களில் மட்டுமே 17 முறை பிதா என்ற பதத்தை பயன்படுத்தியுள்ளார். அவர் சீஷர்களுக்கு போதித்த கடைசி போதனையில், அதாவது யோவா. 14 முதல் 16 வரை உள்ள அதிகாரங்களில் மட்டுமே 45 முறை பிதா என்ற வார்த்தையை பயன்படுத்தியுள்ளார். இயேசுவின் கடைசி ஜெபத்தில் அதாவது யோவான் 17 - ஆம் அதிகாரத்தில் மட்டுமே 6 முறை பிதா என்ற வார்த்தையை பயன்படுத்தியுள்ளார். இவை அனைத்துமே இயேசுவுக்கும் பிதாவுக்கும் உள்ள நெருக்கத்தையே காட்டுகிறது.

## (ii) இயேசுவே தமது ஜீவனை ஒப்புக் கொடுத்தார்

சிலுவையில் அறைந்த கொடியவர்களால் அவரது ஜீவனை பறிக்க முடியவில்லை. இயேசு தாமாகவே அவரது ஆவியை பிதாவின் கையில் ஒப்புக் கொடுத்தார். ஸ்தேவான் கூட இப்படிப்பட்ட ஜெபத்தை ஏறெடுத்ததாக சிலர் கூறுகிறார்கள். ஆனால் ஸ்தேவானுடைய ஜெபம் முற்றிலும் மாறுபட்டது என்பதே எனது கருத்து. ஏனென்றால் ஸ்தேவான் ஜெபிக்கும் போது, "கர்த்தராகிய இயேசுவே, என் ஆவியை ஏற்றுக் கொள்ளும்" என்றான் (அப். 7:59). ஆனால் இயேசுவோ "ஒப்புக் கொடுக்கிறேன்" என்றார். ஏற்றுக் கொள்ளும் என்பது "விண்ணப்பம்" (Request); ஒப்புக் கொடுக்கிறேன் என்பது "உரிமையோடு ஒப்படைப்பதாகும்" (Command).

இயேசு ஏன் சிலுவையில் மரித்து, பாவிகளை மீட்க வேண்டும்? பாவத்தில் விழுந்து போன மனுக்குலத்தை அழித்து விட்டு, புதிதாக மனிதர்களை படைத்திருக்கலாமே என ஒருவன் கூறியுள்ளான். எப்படி தான் இப்படிப்பட்ட யோசனைகள் வந்ததோ தெரியாது! இயேசு பாவத்தை வெறுத்தாலும், பாவியை நேசிக்கிறார், அதாவது அவரது சிருஷ்டிகளை நேசிக்கிறார் என்பதே இதன் பதிலாக உள்ளது. "நாம் பாவிகளாய் இருக்கையில், கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்க பண்ணுகிறார் (ரோம. 5:8). இன்றைக்கு கூட நாம் தேவனுடைய பிள்ளைகளாய் இருப்பது, நம்மிடம் பாவம் இல்லாத படியினால் அல்ல, மாறாக தேவ பிரசன்னம் நம்மோடு இருப்பதாலே என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

சிலுவையில் மரிப்பவர்கள் தங்கள் தலையை தூக்கி, மூச்சுக்காக ஏங்குவதுண்டு, ஆனால் இயேசு தமது தலையை சாய்த்து தைரியமாகவும், மன நிறைவோடும் தமது ஆவியை பிதாவிடம் ஒப்புக் கொடுத்தார். புனித அகஸ்டியன் என்பவர் இவ்வாறு கூறியுள்ளார்: கிறிஸ்து மரிக்கும் வேளையைக் காலம் நிர்ணயிக்கவில்லை, தான் மரிக்கும் வேளையை கிறிஸ்துவே நிர்ணயித்தார்.

## (iii) வேத வாக்கியங்கள் நிறைவேறியது

இயேசுவின் இந்த வார்த்தையாலும், ஜீவனை தாமே ஒப்புக் கொடுத்ததினாலும், வேதத்தில் கூறப்பட்ட பல வசனங்கள்

நிறைவேறியது. இயேசு கிறிஸ்துவின் முதலாம் வருகையின் போது 330 தீர்க தரிசனங்கள் அவரில் நிறைவேறியதாக கூறப்படுகிறது. அவருடைய சிலுவை மரண நாளில் மட்டுமே 50-க்கும் மேற்பட்ட வேத வசனங்கள் நிறைவேறியது. அவற்றில் சில கீழேக் கொடுக்கப் பட்டுள்ளது.

யோவா. 10:17, 18 - நானே எனது ஜீவனைக் கொடுக்கிறேன்
மாற். 10:45 - ஜீவனைக் கொடுக்கவே வந்தேன்
மத். 5:17 - நியாய பிரமாணத்தை நிறைவேற்றவே வந்தேன் (நியாய பிரமாணத்தில் கூறியப்படி இயேசு தமது இரத்தத்தையே சிந்தினார்)
ஏசா. 25:8 - அவர் மரணத்தை ஜெயமாக விழுங்குவார்.

■■■



# அத்தியாயம் - 9

## இயேசுவின் மரணத்தினால் நடந்த அற்புத நிகழ்வுகள்
## The Miraculous Events by the death of Jesus

(மத். 27:51-56; மாற். 15:38-41; லூக். 23:47-49)

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மரித்தவுடன் தேவாலயத்திலும், இயற்கையிலும், மனிதர்களுடைய மனசாட்சியிலும் மிகப் பெரிய மாற்றங்கள் ஏற்பட்டது. அப்போது நடந்த நிகழ்வுகளை நான் கீழே குறிப்பிட்டுள்ளேன்.

### 1. தேவாலயத்தின் திரைச்சீலை இரண்டாகக் கிழிந்தது
### The veil of the temple was torn in two

தேவாலயத்தின் திரைச்சீலை மேல் தொடங்கிக் கீழ் வரைக்கும் இரண்டாக கிழிந்தது (மத். 27:51). இயேசுவின் காலத்தில் இருந்த தேவாலயம் சாலமோனால் கட்டப்பட்டது அல்ல, ஏரோது ராஜாவால் புதுபித்துக் கட்டப்பட்டதாகும். வேதத்தின்படி பார்க்கும் போது தேவாலயத்தில் இரண்டு திரைச்சீலைகள் இருந்தன. முதலாவது திரைச்சீலை பிரகாரத்துக்கும், பரிசுத்த ஸ்தலத்துக்கும் இடையேக் கட்டப்பட்டிருந்தது. இரண்டாவது திரைச்சீலை பரிசுத்த ஸ்தலத்துக்கும், மகா பரிசுத்த ஸ்தலத்துக்கும் இடையே கட்டப்பட்டிருந்தது. இங்கு கிழிக்கப்பட்ட திரை எது எனக் குறிப்பிடப் படவில்லை என்றாலும், இரண்டாவது திரையே கிழிக்கப்பட்டது என

நாம் அறிவோம். இந்த மகா பரிசுத்த ஸ்தலத்துக்குள்ளே வருடத்தில் ஒரு முறை மட்டும் பிரதான ஆசாரியன் பிரவேசித்து, ஜனங்களின் பாவங்களுக்காக பலி செலுத்துவது வழக்கம் (லேவி. 16). ஆனால் இயேசு கிறிஸ்துவின் மரணத்தின் மூலம் அந்த பழக்கம் மாற்றியமைக்கப்பட்டு எல்லோருமே கிருபாசனத்தண்டை சேரும் வாய்பை பெற்றோம் (எபி. 7:27; 4:16; 10:19, 20). மகா பரிசுத்தஸ்தலத்தில் எப்போதும் தேவமகிமை இருந்து வந்தது குறிப்பிடதக்கது. பின் நாட்களில் கூட தேவ மகிமை அப்படியே இருந்தது என்பது யூதர்களின் நம்பிக்கையாயிருந்தது. இந்த திரைச்சீலை கிழிக்கப்பட்டதன் மூலம், தேவ பிரசன்னமும் அங்கிருந்து விலக்கிக் கொள்ளப்பட்டது. இப்போது தேவபிரசன்னம் நமது சரீரமாகிய ஆலயத்தில் தங்கியிருப்பது எவ்வளவு விசேஷமானதாக இருக்கிறதல்லவா? (1 கொரி. 3:16).

இந்த அற்புதத்தை கேள்விப்பட்ட ஆசாரியர்கள் பலரும் இரட்சிக்கப்பட்டார்கள் என்பது குறிப்பிடதக்கது (அப்.6:7). இந்த நிகழ்வு எடுத்துரைக்கிற இன்னொரு உண்மை என்னவென்றால், இனி பாவ பரிகாரத்துக்கு ஒரு பலியும் தேவையில்லை, கிறிஸ்துவே ஜீவபலியாக தன்னை ஒப்புக் கொடுத்து விட்டார் என்பதாகும். யூத வரலாற்று ஆசிரியரும், கி.பி. 60-ல் கலிலேயாவின் ஆளுநருமாக இருந்த ஜோசப்பஸ் என்பவர் இவ்வாறு கூறியுள்ளார். இந்த திரை 60 அடி உயரமும் 20 அடி அகலமும் 4 அங்குல பருமனும் கொண்டதாகும். மேலும் இந்த திரையின் வலிமையைக் குறித்து கூறும்போது, நான்கு குதிரைகளை கட்டி இழுத்தாலும் அறுந்து போகாத உறுதியாயிருந்தது என்றார். அப்படிப்பட்ட திரைச்சீலை எப்படி கிழிந்திருக்கும்? அதுவும் சாதாரணமாக கிழிக்க வேண்டுமானால், கீழிருந்து மேலோக்கி தான் கிழிக்க முடியும், ஆனால் இந்த திரைச்சீலை மேலிருந்து கீழ் நோக்கி கிழிக்கப்பட்டது. அது எப்படி சாத்தியமாயிற்று? சீலை என்பதால், காற்றில் ஆடக்கூடியது அல்ல. இது 4 அங்குல பருமன் உள்ளதாயிருந்தது. அப்படியென்றால் ஏறக்குறைய ஒரு கட்டிட சுவருக்கு ஒப்பானதாகும். தேவனே வந்து தமது வல்லமையினால் இதை கிழித்துப் போட்டிருப்பார் என நான் கருதுகிறேன். எப்படியாயினும் இயேசு என்ற புதிய வழி நமக்கு கிடைத்திருப்பதால் நாம் பாக்கியவான்களாய் இருக்கிறோம் (யோ. 14:6).

## 2. பூமி அதிர்ந்தது, கன்மலைகளும் பிளந்தன (The Earth quaked; The Rocks were split)

பூமியும் அதிர்ந்தது, கன்மலைகளும் பிளந்தது (மத். 27:51) என வேதம் கூறுகிறது. இயேசுவின் மரணத்தை தாங்கமுடியாமல், தாம் சிருஷ்டித்த சூரியன் தன் முகத்தை மூடிக் கொண்ட போது பூமியில் அந்தகாரம் ஏற்பட்டது போல, பூமியாலும் அதை ஏற்றுக் கொள்ள முடியாமல் அதிர்ந்த போது, கன்மலைகளும் பிளந்திருக்கலாம் என கருதுகிறேன். இது சிருஷ்டிகருக்கும், சிருஷ்டிகளுக்கும் உள்ள நெருக்கத்தைக் காட்டுகிறது. இந்த பூகம்பத்தினால் திரைச்சீலை கிழியவில்லை. இது இரண்டும் வேறு வேறு நிகழ்வுகளாய் உள்ளன. இயேசுவின் மரணத்தினால் தான் இந்த பூமியதிர்ச்சி ஏற்பட்டது என்பதை பிலாத்துவும், யூதர்களும் நம்பினார்கள் என கி.பி. 50-ல் வாழ்ந்த புகழ்பெற்ற சரித்திர ஆசிரியரான தாலஸ் என்பவர் குறிப்பிட்டுள்ளார்.

### இயேசுவின் இரத்தமும், உடன்படிக்கை பெட்டியும் (The Blood of Jesus & The ark of covenant)

பழைய ஏற்பாட்டு காலத்தில் ஆட்டுக்குட்டியின் இரத்தத்தை உடன்படிக்கை பெட்டியின் மேல் தெளித்து, பாவ நிவாரண பலிக்கான பலியை செய்வது வழக்கமாயிருந்தது. பின் நாட்களில் இந்த உடன்படிக்கை பெட்டி எங்கே போனது என்று தெரியாமலே இருந்து வந்தது. தற்போது அந்த பெட்டியை கண்டு பிடித்துள்ளார்கள். புதை பொருள் ஆராட்சியாளர் ஒருவர் கிறிஸ்துவை சிலுவையில் அறைந்த கல்வாரி மலைக்கு நேரே கீழாக புதைந்திருந்த இந்த பெட்டியை கண்டு பிடித்துள்ளார். யாத்திரையாகம புத்தகத்தில் சொல்லப்பட்ட அதே அளவுகளோடு இது காணப்படுகிறது. மேலும் அந்த கிருபாசனத்தின் மேல் உலர்ந்திருந்த இரத்த துளிகளை அவர் கண்டு பிடித்தார். பின்பு



கண்டுப்பிடிக்கப்பட்ட உடன்படிக்கை பெட்டி

அந்த குழியிலிருந்து வெளியே வந்து, கொல்கொதா மலையின் மேலே ஏறி சென்று இயேசுவின் சிலுவை நாட்டப்பட்ட இடத்தையும், உடன்படிக்கை பெட்டி இருந்த இடத்தையும் ஒப்பிட்டு பார்த்தார். அவருக்கு ஒரு பயங்கரமான ஆச்சரியம் காத்திருந்தது. நேரடியாக சிலுவைக்கு கீழ் தான் உடன்படிக்கை பெட்டி இருந்ததை உறுதி செய்தார்.

இயேசுவின் இரத்தம் எப்படி பூமிக்குள் புதைந்திருந்த இந்த உடன்படிக்கை பெட்டியின் மேல் வந்திருக்கும்? இயேசு ஜீவனை விட்டவுடன் ஏற்பட்ட பூமியதிர்சியின் போது அவருடைய இரத்த துளிகள் கீழேயிருந்த உடன்படிக்கை பெட்டியின் மீது தெளிக்கபட்டிருக்கும். தேவாட்டு குட்டியாம் இயேசுவின் இரத்தம் உடன்படிக்கை பெட்டியின் மேல் தெளிக்கப்பட்டது ஆச்சரியமானதே!

## 3. கல்லறைகள் திறந்தன, பரிசுத்தவான்கள் உயிர்த்தெழுந்தார்கள்

## (The graves were opened; saints were raised)

பரிசுத்தவான்களுடைய கல்லறைகள் திறந்தன, நித்திரையடைந்திருந்த அநேக பரிசுத்தவான்களுடைய சரீரங்கள் எழுந்திருந்தது. இவர்கள் மீண்டும் மரித்தார்களா? அல்லது இயேசுவோடு பரலோகத்துக்கு சென்றார்களா? என கூறப்படவில்லை. இந்த பரிசுத்தவான்கள் எல்லோரும் எழுந்து, காத்திருந்து, இயேசு உயிர்த்தெழுந்த பிறகு தான், கல்லறைகளை விட்டு புறப்பட்டார்கள் என காண்கிறோம். இதன் மூலம் இயேசுவே மரித்தோரிலிருந்து எழுந்த முதற் பலனாய் உள்ளார் (1 கொரி. 15:20; கொலோ. 1:18; வெளி. 1:5). இயேசு மறுபடியும் வரும் போது நடைபெற போகிற சகல விசுவாசிகளின் உயிர்தெழுதலுக்கு இது ஒரு அடையாளமாக உள்ளது என்பதையே நாம் இதிலிருந்து கற்றுக் கொள்கிறோம்.

உயிர்தெழுந்த பரிசுத்தவான்கள், பரிசுத்த நகரமாம் எருசலேமில் பிரவேசித்து, அநேகருக்கு காணப்பட்டார்கள் என வேதம் கூறுகிறது. அவர்கள் எருசலேமுக்கு போய் சிலருக்கு முன்பாக தோன்றியிருக்கிறார்கள். ஜனங்கள் எப்படி இந்த மரித்து போய் உயிரோடு வந்தவர்களை அடையாளம் கண்டுக் கொண்டார்கள்

என்பதும் கேள்விக்குரியதாகும். இயேசு 40 நாள் வரை பூமியில் இருந்து விட்டு பின்னர் வானத்துக்கு சென்றது போல, இவர்களும் சில நாட்கள் இங்கே சுற்றிதிரிந்த போது, சிலரால் அடையாளம் கண்டுக் கொள்ளப்பட்டார்கள் என நான் கருதுகிறேன். பின்னர் இயேசுவோடு சென்றார்களா? மீண்டும் மரித்தார்களா என்பது நமக்கு மறைவானதாகவே உள்ளது.

இதன் மூலம் நாம் இரண்டு விஷயங்களை அறிந்துக் கொள்ளலாம். முதலாவது மரித்தோருடைய உயிர்தெழுதல் என்பது ஒரு கட்டுகதையல்ல, இவர்களை போல கிறிஸ்துவுக்குள் மரித்த அனைவரும் ஒரு நாள் உயிரோடு வருவார்கள் என்பதே உண்மையாகும். கடைசி நாளில் நிகழக்கூடிய உயிர்தெழுதலுக்கு முன்னோடியாக இது நிகழ்ந்திருக்கலாம். இரண்டாவதாக, இயேசுவின் மரணம் மூலம் கல்லறையின் வல்லமைகளையும், மரணத்தின் அதிகாரங்களையும் இயேசு அழித்து விட்டார் என்பதேயாகும். ஆகவே தான் பவுல் கூறுகிறார்: மரணமே! உன் கூர் எங்கே? பாதாளமே! உன் ஜெயம் எங்கே? (1கொரி. 15:55). அவர் வாழ்கிறபடியால், நாமும் யுக யுகமாக அவரோடு வாழ்வோம்.

## 4. ஜனங்களின் உள்ளங்களில் ஏற்பட்ட மாற்றங்கள்
## The changes happened in the hearts of people

பூமியதிர்சியையும், சம்பவித்த காரியங்களையும் கண்டு மிகவும் பயந்து, பலரும் பலவிதங்களில் தங்கள் உணர்சிகளையும் நம்பிக்கைகளையும் வெளிப்படுத்தினார்கள்.


(i) நூற்றுக்கதிபதி : மெய்யாகவே இவர் தேவனுடைய குமாரன் என்று நுற்றுக்கதிபதி அறிக்கை செய்தான். இயேசுவின் மரணத்திற்கு பிறகு புறஜாதியிலிருந்து அவரை ஏற்றுக் கொண்ட முதல் விசுவாசி இவன் தான். இவனுடைய பெயர் வலீரியஸ் என்று சிலரும் லாங்கினஸ் என்று வேறு சிலரும் கூறுகிறார்கள். இயேசுவை ஈட்டியால் குத்திய நூற்றுக் கதிபதியின் பெயர் தான் லாங்கினஸ் என சரித்திரத்தில் பதிவாகியுள்ளது. ஆனால் அவன் தான் இந்த நூற்றுக்கதிபதியா என நமக்கு தெரியாது. எப்படியாயினும் பின் நாட்களில் இவனும் இயேசுவின் சீஷனாக மாறி, இரத்த சாட்சியாய் மரித்தான் என்று பாரம்பரியம் கூறுகிறது.

(ii) நூற்றுக்கதிபதியோடு கூட காவல் காத்த மற்ற அதிகாரிகளும் இயேசுவை தேவகுமாரன் எனஅறிக்கையிட்டார்கள்.

(iii) இயேசுவை பார்த்துக் கொண்டிருந்த ஜனங்கள் எல்லோரும் சம்பவித்தவைகளை பார்த்து, தங்கள் மார்பில் அடித்துக் கொண்டு திரும்பி போனார்கள்.

(iv) இயேசுவோடு கூட ஊழியத்தில் ஈடுபட்ட சகோதரிகள் பலரும் இதை பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

■■■



# அத்தியாயம் - 10

## கல்லறையின் நிகழ்வுகள்

## Events of the Tomb

(மத். 27:57-66; மாற். 15:42-47; லூக். 23:50-56; யோவா. 19:31-42)

இயேசு மரித்த பிறகு கூட அவரை சிலுவையில் அறைய காரணமாயிருந்த பலரும் பல இடையூறுகளை செய்துக் கொண்டேயிருந்தனர். அவர்களை பொறுத்தமட்டில், எல்லா சிறிய நியாயபிரமாணங்களுக்கும் (ஓய்வுநாள் கூட) மிகவும் முக்கியத்துவம் கொடுத்து விட்டு, தேவநீதியை விட்டு விட்டார்கள் என்பதை குறிக்கும் வண்ணமாக "கொசுவை வடிக்கட்டி ஒட்டகத்தை குடிக்கிறவர்கள்" என்று கூறப்பட்டுள்ளது.

### 1. அடக்கத்துக்கான ஆயத்தங்கள் (Preparation for burial)

இயேசுவின் சரீரத்தை பெற்றுக் கொள்ள வேண்டுமானால், பிலாத்துவிடம் போய் அனுமதி கேட்க வேண்டியிருந்தது. அதுமட்டுமல்ல, இயேசு ஏறக்குறை பிற்பகல் 3 மணியளவில் மரித்தார். ஆகவே சூரிய அஸ்தமனத்திற்குள்ளாக அடக்கம் செய்ய வேண்டிய கட்டாயத்தில் இருந்தார்கள். ஆகவே அப்போது நடந்த செயல்களை கீழேக்காணலாம்.

## i) ஓய்வுநாள் பிரமாணம்

இயேசு மரித்தது வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணி. அடுத்த நாள் யூதர்களுடைய பெரிய ஓய்வு நாளாய் இருந்தது. யூதர்களுடைய ஓய்வு நாளானது முந்தைய நாள் சாயங்காலம் சூரியன் அஸ்தமனமாகும் போது தொடங்குகிறது. ஆகவே 6 மணிக்குள்ளாக அடக்கம் செய்ய வேண்டும். இரவிலே பிரேதம் மரத்தில் தொங்குவது தீட்டாக கருதப்பட்டது (உபா. 21:23). ஓய்வு நாளில் எந்த வேலையும் செய்யக் கூடாது (யோவா. 5:8-10). ஆனால் ரோமர்கள் வழக்கப்படி சரீரம் எத்தனை நாட்கள் வேண்டுமானாலும் சிலுவையில் தொங்கலாம். அப்படி தொங்கும் சரீரங்களை பறவைகள் வந்து கொத்தி சாப்பிடுவது வழக்கம். கீழே விழுந்த மாம்சதுண்டுகளை மிருகங்களும் சாப்பிடும். மீதமுள்ள எலும்பு துண்டுகளை ரோமர்கள் அருகில் உள்ள குழியில் போட்டு முடிவிடுவார்கள்.

யூதர்கள் தங்கள் பிரமாணத்தின்படி இயேசுவின் உடலை அடக்கம் செய்ய விரும்பினார்கள். இந்த யூதர்கள் இயேசுவை சிலுவையில் அறைந்தவர்கள் அல்ல, மாறாக இயேசுவின் மேல் அன்புக் கொண்டு அவரை பின்பற்றினவர்கள் ஆவர். இவர்கள் பிலாத்துவிடம் போய் இயேசுவின் சரீரத்தை கேட்டார்கள். பொதுவாக சிலுவையில் அறையப்பட்டவர்கள் உடனடியாக மரிப்பதில்லை. சில நாட்கள் வரை மூச்சுவிட சிரமப்பட்டு அணு அணுவாக மரிப்பது தான் வழக்கம். ஆகவே இத்தனை சீக்கிரம் இயேசு மரித்தார் என்பதை நம்ப முடியாமல், உண்மையிலே அவர் மரித்தாரா என பார்க்கும்படி நூற்றுக்கதிபதியிடம் கூறினான். மரிக்கவில்லையென்றால் காலெலும்புகளை உடைக்கும்படியும் கூறினான்.

## ii) முறிக்கப்படாத காலெலும்புகள்

ஒரே ஒரு கால் எலும்பை முறித்தாலும் உடனே மரணம் வருவது கடினம் தான். ஆகவே இரண்டு கால் எலும்புகளையும் உடைத்து சிதைப்பது தான் ரோமர்கள் வழக்கம். பிலாத்துவால் அனுப்பப்பட்ட போர்ச்சேவகர் வந்து இயேசுவோடு கூட சிலுவையில் அறையப்பட்ட இரண்டு கள்ளர்களின் காலெலும்புகளையும் முதலில் முறித்தார்கள். அவர்கள் இயேசுவின் காலெலும்பை முறிப்பதற்கு வந்தப்போது ஏற்கனவே அவர் மரித்திருப்பதை பார்த்து ஆச்சரியப் பட்டார்கள். ஆகவே அவருடைய காலெலும்புகளை அவர்கள் முறிக்கவில்லை.

இந்த நிகழ்வின் மூலம் நாம் இரண்டு காரியங்களை கற்றுக் கொள்கிறோம். **முதலாவது**, பஸ்கா பண்டிகையை ஆசரிக்கும் போது, பஸ்கா ஆட்டுக் குட்டியின் ஒரு எலும்பையும் முறிக்கக் கூடாது (யாத். 12:46; எண்.9:12). இயேசுவும் பஸ்கா பலியாக இருந்த படியால் அவருடைய காலெலும்புகள் முறிக்கப்படவில்லை. **இரண்டாவதாக**, நீதிமானுக்கு வரும் துன்பங்கள் அநேகமாயிருக்கும், கர்த்தர் அவைகள் எல்லாவற்றிலும் நின்று அவனை விடுவிப்பார். அவனுடைய எலும்புகளையெல்லாம் காப்பாற்றுகிறார். அவைகளில் ஒன்றும் முறிக்கப்படுவதில்லை (சங். 34:19, 20) என்ற வேதவசனம் நிறைவேறும்படி இப்படி நடந்தது.

### (iii) ஈட்டியால் குத்தப்படுதல்

இயேசு ஏற்கனவே மரித்திருந்த படியால், அவருடைய கால் எலும்புகள் ஒன்றும் முறிக்கப்படவில்லை. ஆகிலும் போர்ச்சேவகரில் ஒருவன் வந்து ஈட்டியினாலே அவருடைய விலாவிலே குத்தினான். இந்த போர்ச்சேவகன் ஒரு நூற்றுக்கதிபதி எனவும் அவனுடைய பெயர் லாங்கினஸ் எனவும் பல குறிப்புகள் கூறுகின்றன. மரித்த பிறகும் கூட ஒருவருடைய சரீரத்தை குத்தி துன்பப்படுத்துவதை இங்கே மட்டும் தான் பார்க்கிறோம்! அதுவும் ஓங்கி அவரை குத்தினான். உண்மையிலே அவர் மரித்துவிட்டாரா? இல்லையா என்பதை சோதித்து பார்க்கும்படி இப்படி குத்தினான். ரோம போர்ச்சேவகர்கள் பயன்படுத்துகிற லோக்கே (Logkhe) என்ற 6 முதல் 8 அடி வரை நீளமுள்ள ஈட்டியால் தான் இயேசுவை குத்தினார்கள்.

**மருத்துவ சான்று Medical Proof**

ஈட்டியால் குத்தப்பட்டவுடன் இரத்தமும், தண்ணீரும் புறப்பட்டு வந்தது. இயேசு ஏற்கனவே வாரினால் அடிக்கப்பட்டு இருந்தபடியால் அவருடைய விலாப்பகுதியில் இரத்தகசிவு அதிகமாக இருந்தது. சற்று நேரம் சென்ற பிறகு இந்த இரத்தத்திலிருந்து நீர் விலகி, அது விலாப்பகுதியை நிரப்பி இருக்க வேண்டும். அப்படி விலாப்பகுதியில் நிறைந்திருந்த நீர் அவருடைய இதயத்தை அழுத்தியது, அந்த அழுத்தத்தின் வேதனையில் இருதயம் நொறுக்கப்பட்டிருக்க வேண்டும். இதை மருத்துவ ரீதியாக நிரூபித்திருக்கிறார்கள். இப்படி இதயத்தை சுற்றிலும் நிற்கிற நீருக்கு மருத்துவத்தில் Pericardial Effusion என்று பெயர். போர்ச்சேவகன் ஈட்டியால் குத்தியவுடன் இரத்தமும் தண்ணீரும் வருவதற்கு இதுவே காரணமாகும்.

இதிலிருந்து நாம் தெரிந்துக் கொள்ள வேண்டிய இரண்டு பாடங்கள் என்னவென்றால், முதலாவதாக, இயேசுவின் இருதயப் பகுதியில் மீதமிருந்த கடைசி சொட்டு இரத்தத்தையும் இந்த மனுகுலத்தின் மீட்புக்காக சிந்தினார். இரண்டாவதாக வேத வாக்கியங்களில் கூறப்பட்டபடி, தண்ணீரை போல ஊற்றுண்டேன், என் இருதயம் மெழுகு போலாகி, என் குடல்களில் நடுவே உருகிற்று (சங். 22:14); அவர்கள் தாங்கள் குத்தினவரை நோக்கிப்பார்ப்பார்கள் (சகரி. 12:10) போன்ற வசனங்கள் நிறைவேறும்படி இப்படி நடந்தது.

இவைகளையெல்லாம் நேரடியாக பார்த்துக் கொண்டிருந்த இயேசுவின் சீஷனான யோவானே இவைகளை குறித்து சாட்சியாக கூறியிருக்கிறார் (யோ. 19:35).

## 2. இயேசு அடக்கம் பண்ணப்படுதல (The Burial of Jesus)

இயேசுவின் உடலை எவ்வாறு யார் மூலம் பெற்றுக் கொண்டார்கள் என்றும் எப்படி அவரை அடக்கம் பண்ணினார்கள் என்றும் அடக்கத்துக்கு யார் எல்லாம் உதவினார்கள் என்றும் எங்கே அடக்கம் செய்தார்கள் என்றும் இந்த பகுதியில் தெளிவாக கூறியுள்ளேன். இயேசுவோடு இருந்த எல்லோரும் அவரை விட்டு ஓடிப்போனார்கள். அனேக பெண்கள் மட்டுமே சிலுவை மரணம் வரை கூட இருந்தார்கள். அந்த நேரத்தில் எதிர்பார்காத வண்ணம் இரண்டு செல்வந்தர்கள் வந்து அவர்களுக்கு உதவினார்கள். அதைக்குறித்து கீழே காணலாம்.

### (i) இயேசுவின் சரீரத்தை பிலாத்துவிடம் கேட்டு வாங்கினார்கள்

யூதர்கள் முதலில் போய் சரீரத்தை கேட்டப்போது, பிலாத்து சரீரத்தை கொடுக்காமல், அவர் மரித்தது உண்மையா என தெரிந்துவரும்படி நுற்றுக்கதிபதியை அனுப்பினான். பொதுவாக ரோமர்கள் குற்றவாளியின் சரீரத்தை யாருக்கும் கொடுப்பதில்லை. அந்த நேரத்தில் அரிமத்தியா ஊரான யோசேப்பு அங்கு வந்து, பிலாத்துவிடம் துணிந்து போய் இயேசுவின் சரீரத்தை கேட்டான். இவன் பெரிய செல்வந்தனாகவும், புகழ் பெற்றவனாகவும் சனகெரிப் சங்க உறுப்பினராய் இருந்தபடியாலும் பிலாத்து அவனுக்கு மரியாதையளித்து, இயேசு இறந்தது உண்மை தான் என நூற்றுக்திபதியின் மூலம் அறிந்துக் கொண்ட பிறகு சரீரத்தை எடுக்க அனுமதியளித்தான். மாற். 15:43- ல் சரீரத்தைக் கேட்டான் என்றும்,

மாற். 15:45 - ல் சரீரத்தை கொடுத்தான் என்றும் நமது தமிழ் மொழி பெயர்ப்பில் பார்க்கிறோம். ஆனால் கிரேக்க மொழியின் படி, யோசேப்பு சரீரத்தை கேட்டான் என்றும், பிலாத்து சவம் அல்லது பிரேதத்தை (Ptoma) கொடுத்தான் என்றும் கூறப்பட்டுள்ளது. சரீரத்தை கொடுத்தான் என்றால் சரீரத்தை எடுத்துக் கொள்ள அனுமதியளித்தான் என்று அர்த்தமாகும். இயேசு கிறிஸ்து மரித்து விட்டார், நீங்கள் போய் அடக்கம் பண்ணலாம் என இறப்பு சான்றிதழ் கொடுக்கப்பட்டது. உடனடியாக யோசேப்பு சென்று இயேசுவின் சரீரத்தை சிலுவையிலிருந்து இறக்கி, தனது கல்லறையண்டை கொண்டு வந்தான்.

### யார் இந்த அரிமத்தியா ஊர் யோசேப்பு?
### Who is this Joseph the Arimathea?

யோசேப்பு அரிமத்தியா ஊரை சேர்ந்தவன். இவன் இயேசுவின் அந்தரங்க சீஷனாயிருந்தான். எருசலேம் பட்டணத்திலுள்ள மூன்று முக்கியமான செல்வந்தர்களில் இவனும் ஒருவனாயிருந்தான். மிகவும் ஐசுவரியவானும், புகழ் மிக்க தலைவனுமாய் இருந்தான். இவன் சனகெரிப் சங்கத்தில் உறுப்பினராகவும் இருந்தான் (லூக். 23:51). இவன் உத்தமனும், நீதிமானும், தேவனுடைய ராஜ்யம் வர காத்திருந்தவனுமாவான். இயேசுவை சிலுவையில் அறைந்தது முதல் வெளியரங்கமான சீஷனாக மாறினான். நிக்கோதேமுவின் நற்செய்தி என்னும் நூலில் இவனைக்குறித்து வேறு அநேக செய்திகள் கூறப்பட்டுள்ளன.

இயேசு சிலுவையில் இருந்த போது கிழே சிந்திக் கொண்டிருந்த இரத்தத்தை, கடைசி பஸ்காவின் போது பயன்படுத்திய பாத்திரத்தில் பிடித்தான் என்றும், இவர் இயேசுவை பின்பற்றிய படியால் யூத சமுதாயத்தை விட்டும், சனகெரிப் சங்கத்தை விட்டும் வெளியேற்றப்பட்டார் என்றும் இவருடைய சொத்துக்களை அபகரித்துவிட்டு சிறையில் அடைத்தனர் எனவும் கூறப்படுகிறது. பின்னர் எப்படியோ இயேசுவின் இரத்தத்தை பிடித்த பாத்திரம் அவர் கையில் கிடைத்தது என்றும் சிறையில் இருந்த காலமெல்லாம் அந்த பாத்திரத்தில் தான் உணவருந்தினான் என்றும் கூறப்படுகிறது. பின் நாட்களில் இங்கிலாந்து தேசத்திற்கு சுவிசேஷகனாக போய் அங்கு ஊழியம் செய்து, திருச்சபையை கட்டி லிடியா என்றும் இடத்தில் மரித்துப் போனார் என்றும் கூறப்படுகிறது.

### (ii) இயேசுவின் சரீரத்தை வாசனை திரவியங்களால் சுற்றினார்கள்

அரிமத்தியா ஊரான யோசேப்பு, இயேசுவின் சரீரத்தை சிலுவையிலிருந்து இறக்கி கல்லறையிடம் கொண்டு வந்தபோது, அவனது நண்பனும், இயேசுவின் இன்னொரு அந்தரங்க சீஷனுமாய் இருந்த நிக்கொதேமு என்பவனும் யோசேப்போடு இணைந்து அடக்கத்துக்கான பணிகளை யூத முறையின் படி செய்தார்கள். யூத முறையில் அடக்கம் சிறப்பானதாகவே இருந்தது. அதைக் குறித்து சுருக்கமாக கீழே எழுதியுள்ளேன்.

* சரீரத்தை குளிப்பாட்டுவார்கள்
* சரீரத்தை மெல்லிய துணியில் சுற்றுவார்கள்
* தலையை வேறு துணியால் சுற்றுவது வழக்கம்
* அதிகமான வாசனை திரவியங்களை பயன்படுத்தி வந்தனர்
* பின்னர் கல்லறை குகையில் வைப்பது வழக்கம்
* ஒரு வருடம் தாண்டி, அந்த சரீரத்திலுள்ள எலும்புகளை எடுத்து, எலும்பு பெட்டியில் (Ossuary) வைத்து, முன்னோர்களோடு அடக்கம் செய்வார்கள்.

யோசேப்பு தான் வாங்கி கொண்டு வந்த துய்யதான மெல்லிய துப்பட்டியினாலே (Clean Line cloth) இயேசுவின் சரீரத்தை சுற்றினான். இது மிகவும் விலையேற பெற்ற துணியாகும். தலைக்கு தனியாகவும், உடம்புக்கு தனியாகவும் இரண்டு துணிகளால் யூதர்கள் சுற்றுவது வழக்கமாயிருந்தது. அவ்வண்ணமே இயேசுவின் சரீரத்தையும் சுற்றினார்கள். "சீலைகளிலே" என பன்மையில் கூறப்பட்டுள்ளதை கவனிக்கலாம் (யோவா. 19:40; 20:5-7). இந்த துணிகளால் சுற்றும் போது, விலையேற பெற்ற வாசனை திரவியங்களை போட்டு சுற்றுவது வழக்கமாயிருந்தது. இந்த துணி 14 அடி நீளமும் 4 அடி அகலமும் கொண்டதாய் இருந்தது. ஒவ்வொரு முறை சரீரத்தை சுற்றும் போதும் வாசனை திரவியங்களை போட்டு சுற்றினார்கள்.

நிக்கொதேமு ஏறக்குறைய 100 இராத்தல் அளவிலான வெள்ளை போளத்தையும், கரியப் போளத்தையும் கொண்டு வந்தான். கிரேக்க மொழியில் கூறப்பட்டுள்ள 100 இராத்தல் என்பது 75 பவுண்ட் என கூறப்படுகிறது. நமது அளவின்படி இது ஏறக்குறைய 35 கிலோ எடை கொண்டதாகும். அக்கால யூதர்கள் பொதுவாக இறந்த

நபருடைய எடையில் சரிபாதி எடைக்கு வாசனை திரவியங்களை போடுவது வழக்கம். அப்படியென்றால் 35 கிலோ வாசனை திரவியம் போட்டார்கள் என்றால் இயேசுவானவர் சுமார் 70 கிலோ எடையுள்ளவராய் இருந்திருப்பார். ஆனால் இயேசுவின் சரீரத்தை அடக்கம் செய்யும் போது இந்த முறை பின்பற்றபட்டதா என தெரியவில்லை. இந்த பொருட்கள் மிகவும் விலையேற பெற்றதாகும் (சங். 45:8). ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் பிறப்பின் போது, ஞானிகள் கொண்டு வந்த காணிக்கைகளில் வெள்ளைப் போளமும் ஒன்று (மத். 2:11).

ஒரு தலைவரை அல்லது செல்வந்தர்களை அடக்கம் பண்ணும் போது 100 இராத்தல் வாசனை திரவியங்களை பயன்படுத்துவது அந்நாட்களில் வழக்கமான ஒன்றாகவே இருந்தது. சவுல் கல்விக்கற்ற கிரேக்க ஆசிரியரான கமாலியேல் மரித்த போது 86 பவுண்ட் எடையுள்ள வாசனை திரவியங்கள் பயன்படுத்தப்பட்டது என கூறப்படுகிறது. ஏரோது மரித்த போது வாசனை திரவியங்களை சுமந்து செல்ல 500 வேலைக்காரர்கள் பயன்படுத்தப்பட்டார்கள் என ஜோசப்பஸ் என்ற யூத வரலாற்று ஆசிரியர் கூறியுள்ளார். கி.பி. 4-வது நூற்றாண்டில் வாழ்ந்த ஜான் கிறைஸ்டோஸ்டம் என்பவர் "வெள்ளைப்போளம் ஒரு பசையைப் போல ஒட்டிக் கொள்ளக் கூடியது, துணிகளின் மத்தியில் வைத்து சரீரத்தில் சுற்றினால், பின்னர் இந்த சீலைகளை எடுப்பதே கடினம். அந்த அளவு இறுக்கமாக ஒட்டிக் கொள்ளும்" என கூறியுள்ளார்.

### (iii) இயேசுவின் சரீரத்தை கல்லறையில் வைத்தார்கள்

இயேசுவானவர் சிலுவையில் அறையப்பட்ட கொல்கொதாவுக்கு பக்கத்திலேயே ஒரு தோட்டம் இருந்தது. அந்த தோட்டத்தில் இருந்த கன்மலையில் யோசேப்பால் வெட்டப்பட்டதும், ஒருவனும் ஒருக்காலும் வைக்கப்படாததுமான ஒரு புதிய கல்லறை இருந்தது. அந்த கல்லறையில் இயேசுவின் சரீரம் வைக்கப்பட்டது.

யூதர்கள் மரித்து போனவர்களின் சரீரங்களை வெட்டப்பட்ட கல்லறையில் வைப்பது வழக்கம். அது நமது கல்லறைகளை போல் இல்லாமல், பெரிய குகையை போன்ற தோற்றத்துடன் காணப்படும். ஒருவர் மரித்தப்பின்பு அவரது சரீரத்தை உள்ளே வைத்து விட்டு, பெரிய கல்லால் முடிவிடுவார்கள். மீண்டும் அடுத்த நபர் மரிக்கும் போது மறுபடியும் அந்த கல்லறையின் கல்லை எடுத்துவிட்டு உள்ளே

வைப்பார்கள். இவ்வாறு ஒரே கல்லறையில் அநேக சரீரங்களை வைக்கும் அளவிற்கு அந்த கல்லறை பெரிதாயிருக்கும். சிலர் தங்கள் குடும்பத்தில் உள்ளவர்களை மட்டுமே வைக்கும்படி குடும்ப கல்லறைகளையும் உடையவர்களாய் இருந்தார்கள். இயேசுவை ஒரு புதிய கல்லறையில் வைத்தார்கள். அவருக்காக யோசேப்பு தனது புதிய கல்லறையை விட்டுக் கொடுத்திருப்பது எவ்வளவு பெருந்தன்மையானது! துன்மார்கரோடே அவருடைய பிரேதக்குழியை நியமித்தார்கள். ஆனாலும் அவர் மரித்த போது ஐசுவரியவானோடே இருந்தார்" (ஏசா 53:9) என்ற வசனம் நிறைவேறும்படி இப்படியாயிற்று.

இயேசுவின் உடலை இன்னோம் பள்ளத்தாக்கில் எறிந்து விடுவதின் மூலம், அங்கு எப்பொழுதும் எரிந்துக் கொண்டிருக்கும் தீயில் அது சாம்பலாகட்டும் என்றும் அல்லது அங்குள்ள நரிகளுக்கு உணவாகட்டும் என்றும் அவரது எதிராளிகள் திட்டமிட்டிருந்தார்கள் என பாரம்பரியம் கூறுகிறது. ஆனால் தேவன் யோசேப்பு என்றும் செல்வந்தன் மூலம் அந்த திட்டங்களை முறியடித்தார்.

இயேசுவை வைத்த கல்லறைக்குள் பிரவேசிக்கும் வாசலின் உயரம் $4^1/_2$ முதல் 5 அடி வரையாக இருந்தது. ஆகவே தான் யோவான் கல்லறைக்குள் குனிந்து பார்த்தான் எனக் கூறப்படுகிறது (யோவா. 19:5). அந்த கல் மிகவும் பெரிதாயிருந்தது என மாற்கு கூறியுள்ளார் (மாற். 16:4). ஏறக்குறைய 5 அடி உயரமுள்ள இந்த வாசலை நிரப்ப வேண்டுமானால், கல்லும் பெரிதானதாக தானே இருந்ததாக வேண்டும்! யூத பாரம்பரியம் படி இந்த கல் $1^1/_2$ முதல் 2 டன் எடையுள்ளதாக இருந்தது எனவும் (1500 முதல் 2000 கிலோ), 20 பேரால் கூட புரட்டிப்போட முடியாததாய் இருந்தது எனவும் கூறப்பட்டுள்ளது. அப்படியென்றால் எப்படி இவர்கள் கல்லை புரட்டி வைத்திருப்பார்கள்? நிக்கொதேமு மற்றும் யோசேப்பு என்பவர்கள் சாதாரணமானவர்கள் அல்ல, அவர்கள் இருவரும் எருசலேமிலே மிக பெரிய செல்வந்தர்களாக இருந்தனர். ஆகவே அவர்களோடு கூட அவர்கள் நண்பர்கள், வேலையாட்கள் என அநேகர் அடக்கத்தில் பங்கெடுத்திருக்கலாம். அது மட்டுமல்ல ஓடிப்போன சீஷர்களும் திரும்பி வந்திருப்பார்கள் என நம்புகிறேன். அவர்களே இதை புரட்டிவைக்க உதவியிருப்பார்கள் என கருதுகிறேன். சீஷர்களுக்கும் அந்த கல்லறை இருக்கும் இடம் தெரிந்திருந்தபடியால் தான் உயிர்தெழுந்த காலை நேரத்தில் நேராக ஓடி கல்லறையில் வந்தார்கள் (யோவா.20:3-6).

## ஓய்வு நாளும் ஆரம்பமாயிற்று

யூதர்கள் வழக்கப்படி ஓய்வுநாளின் முந்தைய நாள் சாயங்காலம் சூரியன் அஸ்தமிக்கும்போது ஓய்வு நாளும் ஆரம்பித்துவிடும். பொதுவாக மாலை 6 மணியளவில் சூரிய அஸ்தமனம் நடைபெறும். ஆகவே வெள்ளிக்கிழமை சாயங்காலம் 6 மணிக்குள்ளாக இயேசுவின் சரீரம் அடக்கம் செய்யப்பட்டது. அந்த நேரத்தில் ஓய்வு நாளும் ஆரம்பமாயிற்று என காண்கிறோம். ஓய்வு நாளில் எந்த வேலையும் செய்யாமல் ஓய்ந்திருக்க வேண்டும் என்பது அவர்கள் பிரமாணமாகும். ஆகவே அங்கு வந்திருந்த மகதலேனா மரியாள், யோசேப்பின் தாயாகிய மரியாள், கலிலேயாவிலிருந்து வந்திருந்த பெண்கள் மற்றும் பல பெண்களால் இயேசுவுக்கு இறுதி மரியாதை செய்ய முடியவில்லை. ஆகவே அவர்கள் அந்த கல்லறை எங்கேயிருக்கிறது என்பதை நன்றாக பார்த்து நினைவில் வைத்துக்கொண்டு திரும்பி வீட்டிற்கு போய் வாசனைத் திரவியங்களை ஆயத்தம் பண்ணினார்கள். அதாவது ஓய்வுநாள் முடிந்தவுடன் திரும்பி கல்லறையில் வந்து இயேசுவின் சரீரத்துக்கு இறுதி மரியாதை செய்ய தீர்மானித்திருந்தார்கள் என்பதையே இது சுட்டிக்காட்டுகிறது. யோசேப்பும், நிக்கொதேமும் கூட திரும்பி சென்றார்கள்.

### யார் இந்த நிக்கொதேமு? Who is this Nicodemus?

நிக்கொதேமு யூத மதத்திலே மிகவும் பக்தியும் வைராக்கியமும் உள்ள பரிசேய சமுதாயத்தை சேர்ந்தவன். யூதர்களில் ஒரு தலைவனாகவும், சனகெரிப் சங்க உறுப்பினருமாவான். இவர் மிகவும் கல்வியறிவு பெற்ற போதகனாய் இருந்தான். யூதர்களுக்கு பயந்ததினால் இரவில் இயேசுவிடம் வந்து பேசினான், சனகெரிப் சங்கத்திலும் இயேசுவுக்கு ஆதரவாக பேசினான். இயேசுவின் அடக்கத்திலும் கலந்துக் கொண்டான். நிக்கொதேமுவும் எருசலேமில் இருந்த மூன்று முக்கிய செல்வந்தர்களில் ஒருவனாவான்.

புகழ்பெற்ற யூத வரலாற்று ஆசிரியரான ஜோசப்பஸ் (Josephus) என்பவரின் சகோதரன் தான் இந்த நிக்கொதேமு என சில வேத பண்டிதர்கள் கூறுகிறார்கள். எப்படியாயினும் இவர் இயேசுவின் அடக்கத்தில் கலந்துக்கொண்டு அவருடைய சரீரத்தில்

வைக்கும்படி விலையேற பெற்ற வாசனைத் திரவியங்களையும் கொண்டு வந்திருந்தார். ஆகவே பின்நாட்களில் அவர் யூத சனகெரிப் சங்கத்திலிருந்தும், எருசலேம் நகரிலிருந்தும் விரட்டியடிக்கப்பட்டார் என்றும், இவருடைய சொத்துக்கள் யாவும் பறிமுதல் செய்யப்பட்டது எனவும், பின்பு கொடிய வறுமை காரணமாக இவரது மகள் குதிரைத் தொழுவத்தில் சிந்தியிருந்த பார்லி மணிகளை பொறுக்கும் அவல நிலைக்கு தள்ளப்பட்டாள் என்பதை பாரம்பரியமும், நிக்கொதேமுவின் நற்செய்தி நூலும் கூறுகின்றன. இவர் மரித்தப்போது அவரது சடலம் எருசலேமில் சாதாரண குடிமக்கள் அடக்கம் செய்யப்படும் தோட்டத்திலே அடக்கம் செய்யப்பட்டது எனவும் பாரம்பரியம் கூறுகிறது.

## 3. இயேசுவுக்கு எதிரான யூதர்களின் கடைசி தந்திரம் (The Last Trick of Jews against Jesus)

இயேசுவை அடக்கம் செய்த அடுத்தநாளில் (சனிக்கிழமை) பிரதான ஆசாரியரும், பரிசேயரும் பிலாத்துவினிடத்தில் வந்து: அந்த எத்தன் (ஏமாற்றுக்காரன்) உயிரோடிருக்கும் போது, மூன்று நாளைக்குப்பின் எழுந்திருப்பேன் என்று சொன்னது எங்களுக்கு ஞாபகமிருக்கிறது. ஆகையால், அவனுடைய சீஷர்கள் இராத்திரியிலே வந்து, அவனைக் களவாய்க் கொண்டுபோய், மரித்தோரிலிருந்து எழுந்தாரென்று ஜனங்களுக்குச் சொல்லாதபடிக்கும், முந்தின எத்தை பார்க்கிலும் பிந்தின எத்து கொடியதாகாதபடிக்கும், நீர் மூன்று நாள் வரைக்கும் கல்லறையைப் பத்திரப்படுத்தும்படி கட்டளையிட வேண்டும் என்றார்கள் (மத்.27:62-64).

* இயேசுவோடு இருந்த சீஷர்களே, இயேசுவின் வார்த்தைகளை மறந்துபோய் கவலையாயிருந்த போது, இவர்கள் அவர் எழுந்திருப்பார் என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொண்டு திகிலடைவது ஆச்சரியமானதே!

* யூதர்கள் ஓய்வுநாளில் எந்த வேலையுமே செய்யக்கூடாது. ஆனால் கிறிஸ்துவுக்கு எதிரான சிந்தனைகள் மட்டுமே அவர்களை மூடியிருந்தபடியால், நியாயப்பிரமாணத்தையே விட்டுவிட்டு ஓய்வுநாளில் கல்லறையை பாதுகாக்கும் செயல்களில் இறங்கி விட்டார்கள்.

* முந்தின எத்து (பொய்) என்று இவர்கள் குறிப்பிடுவது, இயேசு தன்னை மேசியா என்னும் கிறிஸ்து என்று கூறியிருந்ததாகும். பிந்தின எத்து என்பது, ஒருவேளை அவரது சீஷர்கள் அவரை எடுத்துக்கொண்டு போய், உயிர்த்தெழுந்தார் என பிரகடனம் செய்தால் அவரே மேசியா என்று ஜனங்கள் நம்பிவிடுவார்கள் என்பதாகும்.

* மூன்று நாள் வரைக்கும் எதற்காக பாதுகாப்பு கேட்டார்கள் என்றால், இயேசு சொன்ன வார்த்தையின்படியினாலும், மற்றும் தங்களுடைய மூடநம்பிக்கையினாலுமே ஆகும். ஏனென்றால் மரித்துப்போனவர்கள் மூன்று நாள் வரையிலும் இந்த உலகிலே ஆவியாக இருப்பார்கள் என்று நம்பியிருந்தனர். ஆகவே தான் இயேசு லாசருவை உயிரோடு எழுப்ப நான்காவது நாள் வந்திருப்பார் என கருதுகிறேன்.

இவர்களுடைய வார்த்தைகளை கேட்டவுடனே, பிலாத்து அவர்களிடம்: உங்களுக்குக் காவற்சேவகர் உண்டே; போய், உங்களால் கூடியமட்டும் பத்திரப்படுத்திக் கொள்ளுங்கள் என்றான். அவர்கள் போய்க் கல்லுக்கு முத்திரைப்போட்டு, காவல்வைத்து, கல்லறையைப் பத்திரப்படுத்தினார்கள். இங்கு காவற் சேவகரைக்குறித்த இரண்டு விதமான கருத்துக்கள் உள்ளன. இவர்கள் யூதர்களின் தேவாலய காவற்சேவகரா? அல்லது ரோம காவற்சேவகரா? என்ற விவாதமும் உண்டு. இந்த இரண்டு பேருமே காவல் காத்திருப்பார்கள் என்று நான் கருதுகிறேன்.

## (a) தேவாலய காவற்சேவகர்கள் (Temple Guard)

(i) உங்களுக்கு காவற்சேவகர் உண்டே என்று பிலாத்து கூறியபடியால் இது தேவாலய காவற்சேவகர் என கருதப்படுகிறார்கள். ஆகவே தான் இயேசு உயிர்த்தெழுந்த பிறகு இவர்கள் நேரடியாக பிரதான ஆசாரியரிடம் போய் அறிவித்தார்கள் (மத்.28:11).

(ii) தேவாலய பாதுகாப்பு வீரர்களில் 27 குழுக்கள் இருந்து வந்தார்கள். ஒவ்வொரு குழுவிலும் 10 லேவியர்கள் இருந்தார்கள். ஆக மொத்தம் 270 காவற்சேவகர் இருந்தார்கள்.

(iii) இந்த காவற்சேவகர் இரவு பணியின்போது உட்காருவதோ, சாய்ந்து நிற்பதோ கடுமையான தண்டனைக்குரிய குற்றமாக

இருந்தது. ஒருவேளை தூங்கினால் இவர்களை அடித்து, ஆடைக ளோடு சேர்த்து எரித்து கொலை செய்வது வழக்கமாயிருந்தது. (நம்முடைய இரவு காவல் வீரர்கள் இவர்களை பார்த்து கற்றுக்கொள்ள வேண்டியது அவசியம்)

**(b) ரோம காவல்சேவகர்கள் (Roman Guard)**

இவர்கள் ரோம போர்ச்சேவகர்கள் அல்ல. காவல்சேவகர் என்கிற வேறொரு பிரிவினர் ஆவர்.

(i) "உங்களுக்கு காவல் சேவகர் உண்டே" என பிலாத்து கூறுவதை வேறு மொழி பெயர்ப்புகளில் Take a Guard என மொழிப் பெயர்க்கப்பட்டுள்ளது. அதற்கு காவல் சேவகரை எடுத்துக் கொள்ளுங்கள் என்று அர்த்தம் ஆகும். இதற்கு வோறொரு அர்த்தமும் உண்டு; உங்களிடமே அவர்கள் இருக்கிறார்களே என்று கூறுவதாகவும் காணலாம்; அதாவது முன்னமே இப்பணிக்கென அவர்களை உங்களுக்கு கொடுத்திருக்கிறோமே என்று பொருள் படுகிறது.

(ii) மத்.27:66-ல் கல்லுக்கு முத்திரைப்போட்டு காவல் காத்தார்கள் என பார்க்கிறோம். அந்நாட்களில் முத்திரை போட்டு பாதுகாக்க ரோமர்களுக்கு மட்டுமே அதிகாரம் இருந்தது. முத்திரை போடுவதற்கு ஒருவிதமான களிமண்ணை பயன்படுத்தி வந்தார்கள்.

(iii) ரோமர்களின் காவல் வீரர்கள் பாதுகாக்கும்போது வகுப்புக்கு நான்கு வீரர்களாக, நான்கு வகுப்புகள் ஒரு குழுவில் இருந்தனர். அப்படியென்றால் ஒரு குழுவில் 16 பேர் இடம் பெற்றிருந்தனர், ஒரு குழு நான்காக பிரிக்கப்பட்டிருந்தது (அப்போ.12:4). இந்த நான்கு பேர் கொண்ட வகுப்புக்கு Quaternion என்று பெயர்.

(iv) அவர்கள் பாதுகாக்கும் முறையாவது: ஒரு குழுவில் உள்ள ஒரு வகுப்பினர் (4 வீரர்கள்) பாதுகாப்பு பணியில் ஈடுபடும்போது, மீதமுள்ளவர்கள் சற்று ஓய்வெடுக்கலாம். சற்று நேரம் தாண்டி இந்த வகுப்பினர் ஓய்வெடுக்க போகும்போது, அடுத்த வகுப்பினர் (4 வீரர்கள்) பாதுகாப்பில் ஈடுபடுவார்கள். ஒரு வகுப்பில் உள்ள ஒவ்வொரு சேவகனும் 6 அடி நிலப்பரப்பில் தனது பணியை செய்ய வேண்டும். அதாவது ஒரு வகுப்பில் உள்ள நான்கு பேரும் ஒருவருக்கொருவர் 6

அடி இடைவெளிவிட்டு நின்று பாதுகாப்பது வழக்கம். அப்படியானால் ஒரு வகுப்பு காவல் வீரர்கள் 24 அடி பரப்பளவு கொண்ட பகுதியை மட்டுமே காத்து வந்தார்கள். இங்கு கல்லறையை பாதுகாக்க ஒரு குழுவினர் (4 வகுப்பு வீரர்கள்) அனுப்பப் பட்டிருக்கலாம் என கருதப்படுகிறது.

T.G. துக்கர் என்பவர் தனது புத்தகத்தில் ரோம சேவகர்கள் எப்படி பணியிலிருப்பார்கள் என்று எழுதியுள்ளார்: தங்கள் தலையில் உள்ள தலைசீரா முகத்தின் பெரும்பகுதியை மூடியிருக்கும் மார்பில் தோல், இரும்பு மற்றும் வெண்கலத்தால் ஆன மார்கவசம் இருந்தது கையில் 6 அடி நீளமுள்ள, இரும்பில் கூர்மையாக்கப்பட்ட ஒரு ஈட்டியும், இடது கையில் பாதுகாப்பு அம்சங்கள் நிரம்பிய கேடகமும், இடுப்பில் 3 அடி நீளமுள்ள கூர்மையான கத்தி போன்ற ஆயுதமும் இருக்கும்.

## 4. காவலில் உள்ள ஆவிகளுக்கு பிரசங்கித்தார் [Preached to the Spirits in Prison]

இயேசுகிறிஸ்துவின் பிறப்பிலும் (லூக்.1:35) ஞானஸ் நானத்திலும் (மத்.3:16) பரிசுத்தாவியானவரின் பங்கு இருந்தது. அவர் எப்போதும் ஆவியானவராலே நடத்தப்பட்டார். அவருடைய மரணத்திலும் உயிர்த்தெழுதலிலும் கூட ஆவியானவரின் பங்கு இருந்தது (எபி.9:14; ரோம.8:11). இயேசு சிலுவையில் மரித்தவுடன், ஆவியில் உயிர்ப்பிக்கப்பட்டவராய், அந்த ஆவியில் அவர் போய் காவலிலுள்ள ஆவிகளுக்கு பிரசங்கித்தார் என பேதுரு கூறியுள்ளார் (I பேதுரு 3:18-20).

**யார் இந்த காவலிலுள்ள ஆவிகள்?**

இதற்கு பலவிதமான கருத்துக்கள் உள்ளன. அவையாவன?

(i) பூர்வத்திலே நோவா பேழையில் காப்பாற்றப்பட்டபோது, தேவனுக்கு கீழ்படியாமல் அழிக்கப்பட்டவைகள் (I பேது.3:20).

(ii) நோவாவின் நாட்களில் தேவகுமாரர் மனுஷ குமாரத்திகளோடு, உறவு கொண்டதின் விளைவாக பலவான்கள் பிறந்தார்களென்றும், ஆகவே இந்த தேவகுமாரர்களை (தூதர்களை) தேவன் அந்தகார சங்கிலிகளினாலே கட்டி நியாயத்தீர்ப்புக்கு வைத்திருக்கிறார் என்றும், அவர்களிடம் பிரசங்கித்தார் என்றும்

கூறப்படுகிறது (ஆதி.6:1-4; 2பேது.2:4-5; யூதா:6). தூதர்கள் ஆவிகளாய் இருக்கும்போது எப்படி உறவுக் கொள்ள முடியும்?


(iii) ஜிம்மி ஸ்வாக்கர்ட் என்ற வேத அறிஞர், "கிறிஸ்துவின் மரணத்துக்கு முன்பு விசுவாசத்தில் மரித்தவர்களையும், சாத்தான் தனது பிடியில் வைத்திருந்தான்; ஏனென்றால் காளைகள் மற்றும் ஆடுகளின் இரத்தத்தால் அவர்களுக்கு மீட்பு கிடைக்கவில்லை. ஆனால் இயேசு சிலுவையில் மரித்ததின் விளைவாக சிந்தப்பட்ட இரத்தம், இதுவரை பிறந்த மற்றும் பிறக்க போகிறவர்களின் பாவபரிகாரத்துக்கு கிரயமாக செலுத்தப்பட்டபடியால், அந்த சிறைப்பட்டவர்களுக்கு தமது மரணத்தின் மூலம் வந்த மீட்பை எடுத்துக்கூறி, அவர்களை விடுவித்து, தமது கட்டுப்பாட்டில் வைத்து விட்டார்" என்று கூறியுள்ளார் (எபே.4:8-10) மரித்துப்போன ஆபிரகாம், லாசரு என்பவர்கள் இளைப்பாறும் இடத்தில் தானே இருந்தார்கள்? (லூக்.16:22-26).

இந்த மூன்று கருத்துக்களையும் ஆதரிப்பவர்களும் எதிர்ப்பவர்களும் இருக்கிறார்கள். ஏன் ஆதரிக்கிறார்கள்? ஏன் எதிர்க்கிறார்கள் என விரிவாக எழுத எனக்கு விருப்பமில்லை. இந்த புத்தகத்தின் நோக்கமும் அது அல்ல.

**என்ன பிரசங்கித்தார்?**

பிரசங்கித்தார் என்பதைவிட அறிவித்தார் என்ற வார்த்தை தான் சரியாக இருக்கும் என கருதப்படுகிறது. காவலில் உள்ள ஆவிகளிடம் தான் பாவத்தையும், பிசாசையும் ஜெயித்ததையும், அதற்கான கிரயத்தை முழுமையாக செலுத்தியாயிற்று என்பதையும் அறிவித்தார் என கருதப்படுகிறது. அவர் சுவிசேஷத்தை பிரசங்கித்தாரா? என நமக்கு தெரியாது. அதற்கு வாய்ப்பும் இல்லை என்றே கருதுகிறேன். ஏனென்றால், "அன்றியும், ஒரேதரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப் படைவதும் மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது" (எபி.9:27). ஆகவே மரணத்துக்கு பிறகு இரண்டாவது தருணம் கொடுக்கப்படுகிறது என்பது வேதத்துக்கு எதிரான உபதேசமாகும்.

■■■



# அத்தியாயம் - 11
# இயேசுவின் சிலுவை மரணத்தால் உண்டான ஆசீர்வாதங்கள்
# (The Blessings through the crucifixion of Jesus)

## சிலுவையைக் குறித்த ஒரு சிறப்பு கண்ணோட்டம்
## (An Exclusive view about the cross)

சிலுவையைப் பற்றிய உபதேசம் கெட்டுப்போகிறவர்களுக்குப் பைத்தியமாயிருக்கிறது, இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவபெலனாயிருக்கிறது (I கொரி. 1:18).

யூதர்கள் அடையாளத்தைக் கேட்கிறார்கள், கிரேக்கர் ஞானத்தைத் தேடுகிறார்கள்; நாங்களோ சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறோம்; அவர் யூதருக்கு இடறலாயும் கிரேக்கருக்குப் பைத்தியமாயும் இருக்கிறார். ஆகிலும் யூதரானாலும் கிரேக்கரானாலும் எவர்கள் அழைக்கப்பட்டிருக்கிறார்களோ அவர்களுக்குக் கிறிஸ்து தேவபெலனும் தேவ ஞானமுமாயிருக்கிறார் (I கொரி. 1:22-24).

சிலுவை என்பது அவமானத்தின் சின்னமாகவும், இழிவின் சின்னமாகவும் கருதப்பட்டு வந்தது. ஏனெனில் தேசத்துரோகிகளையும் கொடிய குற்றங்களில் ஈடுபடுபவர்களையும் தான் சிலுவையில் அறைவது வழக்கமாயிருந்தது. ஆகவே சிலுவையில் அறையப்படுபவர்கள் சமுதாயத்தினரால் வெறுக்கப்பட்டவர்களாய்

இருந்தார்கள். அவர்களுக்கு சாதகமாக செயல்படுபவர்களையும் கீழ்தரமாக நடத்தினார்கள். இந்த நிலையில் தான் இயேசுவின் சீஷர்களும் அவரை பின்பற்றியோரும், "சிலுவையில் அறையப்பட்ட இயேசுவை விசுவாசியுங்கள், அப்பொழுது இரட்சிக்கப்படுவீர்கள்" என்று பிரசங்கித்தார்கள். இதை யூதர்களாலும் கிரேக்கர்களாலும் அங்கீகரிக்க முடியவில்லை. சிலுவையில் அறையப்பட்ட ஒருவரை ஏன் ஏற்றுக்கொள்ள வேண்டும்? என்ற கேள்வி அவர்களுக்குள் இருந்தது. எனவே இந்த செயல் யூதர்களுக்கு இடறலாயும், கிரேக்கர்களுக்கு பைத்தியக்காரத்தனமாகவும் தெரிந்தது.

இயேசுவை விசுவாசியாதவன் கெட்டுப்போவான் என யோவா.3:16 கூறுகிறது. அப்படியெனில் அவரை விசுவாசிக்காமல் கெட்டுபோகிறவர்களுக்கு சிலுவையின் (இயேசுவின்) உபதேசம் பைத்தியமாகவும், இடறலாகவும் இருந்தது; இரட்சிக்கப்படுகிற (இயேசுவை விசுவாசிக்கிற) நமக்கோ அது தேவபெலனாயிருக்கிறது. அல்லேலூயா!

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் சிலுவை மரணத்திற்கு பிறகு இழிவின் சின்னமாக கருதப்பட்ட சிலுவை, தியாகத்தின் சின்னமாகவும் அன்பின் அடையாளமாகவும் மாறியது. ஆகவே பவுல் கூறுகிறார், "நானோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சிலுவையைக் குறித்தேயல்லாமல் வேறொன்றையுங் குறித்து மேன்மைபாராட்டாதிருப்பேனாக, அவரால் உலகம் எனக்குச் சிலுவையிலறையுண்டிருக்கிறது, நானும் உலகத்திற்குச் சிலுவையிலறையுண்டி ருக்கிறேன்" (கலா. 6:14).

## பத்து ஆசீர்வாதங்கள் (Ten Blessings)

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரணத்தால் எண்ணற்ற நன்மைகள் நமக்கு கிடைத்திருக்கிறது. அவைகளில் முக்கியமான பத்து ஆசீர்வாதங்களை இந்த பகுதியில் எழுதியுள்ளேன்.

### 1. பாவ மன்னிப்பு (எபே.1:7)

மனுக்குலத்துக்கு பாவமன்னிப்பைக் கொடுக்கும்படி, கிறிஸ்து நமக்காக பாவமானார் (2 கொரி.5:21). முதல் மனிதனாகிய ஆதாமின் கீழ்படியாமையின் மூலம் பாவமும், அந்த பாவத்தின் மூலம் மரணமும் இவ்வுலகில் வந்தது. இரண்டாம் ஆதாமாகிய கிறிஸ்துவின்

கீழ்படிதலின் மூலம் பாவத்திலிருந்து நமக்கு விடுதலையும் அதன் மூலம் நித்திய ஜீவனும் கிடைத்தது (ரோம.5:12-15; I கொரி. 15:22, 45-49). முதல் ஆதாம் மூலம் எப்படி பாவம் வந்ததோ, அந்த பிரகாரமாகவே இரண்டாம் ஆதாமாகிய கிறிஸ்து அதை நிவர்த்தி செய்தார் என்பது ஆச்சரியமாயிருக்கிறது. தோட்டத்தின் நடுவில் உள்ள மரத்தின் கனியை புசித்ததால் பாவம் பிரவேசித்தது போல, நடு மரத்தில் (நடுவில் உள்ள சிலுவையில்) தொங்கினவராய் அந்த பாவத்தை கிறிஸ்து நிவர்த்தி செய்தார்.

இரத்தம் சிந்துதல் இல்லாமல் பாவமன்னிப்பு இல்லை என்பது நாம் அறிந்த உண்மையாகும் (எபி. 9:22, 28; 13:12). ஏனெனில் இரத்தத்தில் தான் உயிர் அடங்கியிருக்கிறது (லேவி. 17:11; ஆதி.9:4). ஆகவே இரத்தம் சிந்துதல் மூலம் என்றால், உயிரைக் கொடுப்பதினால் தான் பாவமன்னிப்பு உண்டாகிறது என்று பொருள்.

மனிதனுடைய உயிர் அவனது இருதயத்தில் அடங்கியுள்ளது என ஒருகாலகட்டத்தில் விஞ்ஞானிகள் நம்பியிருந்தனர். 1967-ம் ஆண்டு முதல் முறையாக ஒரு மனிதனுடைய இருதயத்தை, இன்னொருவருக்கு பொருத்தி வெற்றிக்கண்டபோது தான் யார் உயிரோடிருப்பது என்ற குழப்பமும் ஆரம்பித்தது. இருதயத்தை கொடுத்தவரா? இருதயம் புதிதாக பொருத்தப்பட்டவரா? அப்பொழுது தான் மனிதனுடைய உயிர் இருதயத்தில் இல்லை என்ற முடிவுக்கு வந்தனர். பின்னர் மூளையில் தான் உயிர் அடங்கியுள்ளது என்று கூறத்தொடங்கினார்கள். ஆனால் மூளைக்கு போகிற தொடர்புகள் எல்லாம் செலிழந்தப் போதும் மனிதன் கோமா நிலையில் உயிரோடிருப்பதைக் கண்ட மருத்துவ உலகினர் அதிர்ச்சிய டைந்தனர். மூளையில் தான் உயிர் உள்ளது என்ற கருத்தும் பொய்யானது. கடைசியாக இரத்தம் இல்லாமல் ஒருவரால் உயிர்வாழ முடியாது என்பதை புரிந்துக்கொண்ட மருத்துவ விஞ்ஞானிகள், இரத்தத்தில் தான் உயிர் அடங்கியுள்ளது என்பதை பிரகடனம் செய்தார்கள். பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே நமது வேதம் இதை தெளிவாக கூறியிருப்பது எவ்வளவு அற்புதமானது!

மேலும் கிறிஸ்துவின் மூலம் மட்டுமே பாவமன்னிப்பை நாம் பெறமுடியும் எனவும் வேதம் கூறுகிறது (அப்.13:38, 39; I தீமோ.1:15; I யோவா.3:5; மத்.1:21). ஆகவே மிருகத்தின் இரத்தமோ, பறவையின்

இரத்தமோ நமது பாவபரிகாரத்துக்கு உதவாது. கிறிஸ்துவின் இரத்தத்தின் மூலமே பாவமன்னிப்பு உண்டாகிறது (I யோவா. 2:2; யோவா. 1:29; எபே.1:7; வெளி.1:6; I பேது.1:18, 19; கொலோ.2:13; மத்.20:28; 26:28). கிறிஸ்து இயேசுவின் இரத்தத்தின் மூலம் நாம் மன்னிக்கப்பட்ட பிறகு, நமது பாவங்களை நினைத்து வருந்தவேண்டிய தேவை இல்லை (ஏசா.43:25; சங்.103:12). தலைமுறை தலைமுறையாக வருகிற ஜென்ம பாவத்திலிருந்தும், நமது கிரியைகளின் மூலம் வருகிற கர்ம பாவத்திலிருந்தும் இயேசுவின் இரத்தத்தின் மூலம் நாம் மன்னிப்பை பெறமுடியும்.

ஏன் இயேசுவின் இரத்தம் மட்டுமே பாவமன்னிப்பை கொடுக்கிறதென்றால், அவர் ஒருவரே பாவம் இல்லாத பரிசுத்தராய் உள்ளார் (எபி.9:28; யோவா.8:46; I பேது.1:15). ஆகவே நமது பாவங்களை நாம் இயேசுகிறிஸ்துவிடம் அறிக்கை செய்து விட்டுவிட்டால் அவர் நம்மை தமது இரத்தத்தாலே சுத்திகரிப்பார் (I யோவா. 1:9). இந்த பாவமன்னிப்பு என்பது நமக்கு அருளப்பட்டிருக்கிற ஆசீர்வாதங்களில் மிகவும் முக்கியமானதாகும் (சங்.32:1).

2. சமாதானம் (கொலோ.1:20)

மனுக்குலத்துக்கு சமாதானத்தை கொடுக்கும்படி கிறிஸ்து நமக்காக ஆக்கினையை (தண்டனையை) ஏற்றுக் கொண்டார் (ஏசா.53:5). மனிதனின் கீழ்படியாமையின் நிமித்தம் பாவம் இவ்வுலகில் வந்தது என்பதை நாம் ஏற்கனவே பார்த்தோம். அந்த பாவத்திற்கு தண்டனை என்ன? பாவத்தின் சம்பளம் மரணம் (ரோம.6:23). ஆகவே நாம் அனுபவிக்க வேண்டிய தண்டனையை கிறிஸ்து தம் மேல் வரப்பண்ணி, நமக்கு சமாதானத்தை கொடுத்திருக்கிறார். அவரது அன்பு எவ்வளவு பெரியது! ஆகவே கிறிஸ்து இயேசுவுக்குள் வாழ்பவர்களுக்கு இனிமேல் தண்டனை இல்லை (ரோம.8:1). கிறிஸ்துவின் மூலம் மட்டுமே நாம் தேவ சமாதானத்தை பெற்றுக் கொள்ள முடியும் (எபே.2:14-15; ரோம.5:1; ஏசா.9:6; யோவா.14:27; 20:19; மாற்.5:34). சமாதானத்தை நாடி ஓடிக்கொண்டிருக்கும் நண்பனே, நீ இயேசுவிடம் வந்தால், அவர் சமாதானம் என்னும் ஆசீர்வாதத்தை உனக்கு கொடுத்து, உன்னையும் வாழவைப்பார்.

3. நித்திய ஜீவன் (ரோம.6:23)

மனுக்குலத்துக்கு நித்திய ஜீவனைக்கொடுக்கும்படி கிறிஸ்து நமக்காக மரணத்தை ஏற்றுக் கொண்டார். (ரோம.6:23).

ஆதாம் செய்த பாவத்தினிமித்தம் அவன் ஆவிக்குரிய மரணத்தை அடைந்தான். ஆகவே அவன் மூலம் வந்த மரணத்திலிருந்து கிறிஸ்து நமக்கு நித்திய ஜீவனைக்கொடுத்தார். எப்படி நித்திய ஜீவன் கொடுக்கப்பட்டது? வனாந்தரத்தில் விஷம் நிறைந்த கொள்ளிவாய்ச்சர்பங்கள் கடித்ததினால் இஸ்ரவேலரின் அநேகர் செத்துபோனார்கள். அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி: நீ வெண்கலத்தால் ஆன ஒரு கொள்ளிவாய்ச் சர்பத்தின் உருவத்தைச் செய்து, அதை ஒரு கம்பத்தின் மேல் தூக்கி வை; கடிக்கப்பட்டவன் எவனோ, அவன் அதை நோக்கிப்பார்த்தால் பிழைப்பான் என்றார் (எண்.21:6-9). விஷமுள்ள கொள்ளிவாய் சர்பத்தினால் பாதிக்கப்பட்டவர்கள், விஷமில்லாத வெண்கல கொள்ளிவாய் சர்ப்பத்தினால் காப்பாற்றப்பட்டார்கள். பின்நாட்களில் இந்த வெண்கல சர்பத்துக்கு நிகுஸ்தான் என்று பெயரிட்டு, இஸ்ரவேலர் அதற்கு தூபங்காட்டி தொழுது வந்தார்கள் என்பது குறிப்பிடதக்கது (2 இரா.18:4).

இந்த வெண்கல கொள்ளிவாய் சர்ப்பம் இயேசுகிறிஸ்துவுக்கு ஒப்பாக உள்ளது. இயேசு நிக்கொதேமுடன் பேசிய போது இதைக்குறித்து கூறியதை கவனியுங்கள்: சர்ப்பமானது மோசேயினால் வனாந்தரத்திலே உயர்த்தப்பட்டதுபோல மனுஷகுமாரனும், தன்னை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டு போகாமல் நித்திய ஜீவனை அடையும் படிக்கு, உயர்த்தப்படவேண்டும் (யோவா.3:14-15). இயேசு இதை மறுபடியும் ஜனங்களிடம் கூறியிருந்தார்: நான் பூமியிலிருந்து உயர்த்தப்பட்டிருக்கும் போது, எல்லாரையும் என்னிடத்தில் இழுத்துக் கொள்ளுவேன் என்றார். தாம் இன்னவிதமான மரணமாய் மரிக்கப்போகிறாரென்பதைக் குறிக்கும்படி இப்படிச் சொன்னார் (யோவா. 12:32-33).

ஆகவே வனாந்தரத்தில் வைத்து விஷமில்லாத வெண்கல சர்ப்பத்தை நோக்கிபார்த்தவர்கள் ஜீவனை பெற்றுக் கொண்டது போல, பாவமில்லாத இயேசுவை விசுவாசித்து அவரை நோக்கிப் பார்க்கிற எவனும் நித்திய ஜீவனை பெற்றுக் கொள்வான் (யோவா.3:16; ஏசா.45:22). இவ்வாறு சிலுவையில் மரித்த இயேசுகிறிஸ்துவின் மூலம் மட்டுமே நித்திய ஜீவன் என்கிற மாபெரும் ஆசீர்வாதத்தை நாம் பெற்றுக் கொள்ள முடியும். அவரை விசுவாசிக்கவில்லை என்றால் ஒருபோதும் நித்திய ஜீவனை (பரலோக வாழ்வை) பெற இயலாது

(யோவா.3:36). இவ்விதமாக கடைசி சத்துருவாய் இருந்த மரணத்தையும் இயேசு தமது மரணத்தினால் சிலுவையில் ஜெயித்துவிட்டார் (I கொரி. 15:26, 55; I தெச.5:10; எபி.2:9).

### 4. சரீர விடுதலை (I பேது. 2:24)

மனுக்குலத்துக்கு சரீரவிடுதலையை கொடுக்கும் படிக்கு கிறிஸ்து தமது சரீரத்தில் காயங்களை ஏற்றுக் கொண்டார் (ஏசா.53:5). நம்முடைய மீறுதல்களின் நிமித்தம் (Transgression) அவர் காயப்பட்டார்; நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் (Iniquities) அவர் நொறுக்கப்பட்டார். மீறுதல் என்பது செய்யவேண்டியதை செய்யாமல் இருப்பது (கீழ்படியாமை) ஆகும். அக்கிரமம் என்பது செய்யச்கூடாததை செய்வது (கலகம்) ஆகும். இந்த இரண்டு விதமான பாவங்களுக்காகவும் இயேசு தமது சரீரத்தில் நொறுக்கப்பட்டார். இயேசு நமது பெலவீனங்களை ஏற்றுக்கொண்டு, நம்முடைய நோய்களைச் சுமந்தார் என்று ஏசாயாவினால் கூறப்பட்டது கூட நிறைவேறியது (மத்.8:16, 17). ஏசாயா "குணமாகிறோம்" என்று கூறும்போது, பேதுரு "குணமானீர்கள்" என்று கூறியுள்ளார். அதாவது ஏசாயா கிறிஸ்துவின் சிலுவை மரணத்தை எதிர்நோக்கியவாறு கூறியுள்ளார். ஆனால் பேதுரு தான் கண்ட சிலுவை மரணத்தினால் வந்த பலனை கூறியுள்ளார்.

தேவன் மனிதனை படைத்தப்போது வியாதியுள்ளவனாக சிருஷ்டிக்கவில்லை. பாவத்தின் மூலம் வியாதியும் வந்தது. தற்காலத்தில் மனிதர்கள் ஈடுபடும் தவறான பழக்கவழக்கங்கள் மூலமாகவும், சுற்றுபுறத்தூய்மையின்மையின் மூலமாகவும், பெற்றோர் மூலமாகவும் மற்றும் பல காரணங்களாலும் வியாதிகள் வருகின்றன. சிருஷ்டிகள் எல்லாம் தேவனுடைய மீட்பின் தினத்துக்காக காத்திருப்பது போல, நாமும் நமது சரீரமீட்பாகிய புத்திரசுவிகாரம் வருகிறதற்கு காத்திருந்து, நமக்குள்ளே தவிக்கிறோம் (ரோம.8:23). ஏனெனில் நமது சரீரமீட்பு இயேசுவின் வருகையின் போது தான் நடைபெறும். அப்பொழுது நாம் புதிய சரீரம் உடையவர்களாய் மாறுவோம் (I கொரி.15:54; II கொரி.5:4). புதிய சரீரம் பெற்றவர்களாய் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசித்த பிறகு கண்ணீர், துக்கம், வியாதி, மரணம் போன்ற எதுவும் இல்லாத ஒரு புதுவாழ்வை நாம் பெற்றுக்கொள்வோம் (வெளி.21:4).

### 5. புத்திரசுவிகாரம் (கலா.4:4,5)

நாம் கிறிஸ்துவின் புத்திரராகும்படிக்கு அவர் தேவனுக்கு சமமாயிருந்ததை விட்டு அடிமையின் ரூபமானார் (பிலி.2:6-7). ஆகவே அடிமைகளாயிருந்த நாம் தேவனுடைய புத்திரர் என்னும் புத்திரசுவிகாரத்தை பெற்றுக்கொண்டோம். எல்லா அடிமைதனத் திலிருந்தும் நம்மை விடுவிக்கும்படி, ஒரே பலியாக தம்மையே செலுத்தினார் (எபி.7:23-27; 9:24-26; 10:10-12). "ஒரேதரம்" (எபி.10:10) என்பது "எந்த காலத்திற்கும் ஒருமுறை" என்று பொருள் படுகிறது.

நியாயப்பிரமாணத்தின் சாபத்திலிருந்து நம்மை தமது மரணத்தின் மூலம் விடுவித்தார் (கலா.3:13-14; 6:15; அப்.15:1-12; ரோம.3:19-21, 28; 4:15-16; 6:16-22; 7:4-6). யூதர்களுக்கு நியாயப்பிரமாணம் பாரமாயிருந்தது; புறஜாதியாரை தேவனிடம் நெருங்கவிடாத தடுப்புசுவராய் இருந்தது. ஆகவே நமக்கு எதிரான நியாயப்பிரமாணத்தின் கையெழுத்தைக் குலைத்து, அதை நம் நடுவில் இராதப்படி எடுத்து, சிலுவையின் மேல் ஆணியடித்தார் (கொலோ.2:13-15). அதாவது நியாயப்பிரமாணத்தை நிறைவேற்ற முடியாமல் கடனாளிகளாய் இருந்த ஜனங்களின் கடன்களை எல்லாம் நியாயப்பிரமாணத்தை முற்றிலுமாக தம்மில் நிறைவேற்றி (மத்.5:17) சிலுவையில் செலுத்திவிட்டார்.

ஏனெனில் எழுத்து (நியாயப்பிரமாணம்) கொல்லுகிறது ஆவியோ உயிர்பிக்கிறது (II கொரி.3:6). நியாயப்பிரமாணத்தை நிறைவேற்ற முடியாமல் செத்துக்கொண்டிருந்தவர்களை, அவர் மீட்டு அவர்களை உயிர்பித்து, அவருடைய புத்திரராய் மாற்றிவிட்டார் (கலா.4:7; 5:1). ஆகவே அடிமைகள் என்ற சாபத்தை மாற்றி புத்திரர் என்ற ஆசீர்வாதத்தை கொடுத்துள்ளார்.

### 6. நீதிமான்களாக்கப்பட்டோம் (ரோம.5:19)

நாம் நீதிமான்களாக்கபடுவதற்காக கிறிஸ்து நமது அநீதிகளையெல்லாம் சுமந்து இரத்தத்தை சிந்தினார் (ரோம.5:8, 9). அவர் மூலமாக நாம் நீதிமான்களாக்கப் படுகிறோம் (ஏசா.53:11; II கொரி. 5:21). இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தினால் நாம் கழுவப்படும் போது, நம்முடைய பாவங்கள் நமக்கு மன்னிக்கப்படுகின்றன. அதாவது நமது குற்றம் கணக்கில் எடுத்துக்கொள்ள படுவதில்லை

என்று பொருள். ஆனால் அதன் பிறகு நம்மிடம் பாவம் இல்லை என்று நிரூபிக்கப்பட்ட பிறகு தான் நீதிமான்களாகிறோம், அப்பொழுது தான் இவன் குற்றவாளி அல்ல என்ற தீர்ப்பு நீதிபதியிடமிருந்து வரும்.

அப்படியென்றால் எப்படி நீதிமான்களாக மாறமுடியும்? நீதிமான்களாக்கப்படுதல் என்பது சட்டபூர்வமான ஒரு செயல் ஆகும். நமது சொந்த நீதியினாலோ, குற்றமற்ற மனசாட்சியினாலோ நாம் நீதிமான்களாக்கப்பட முடியாது. ஆனால் கிறிஸ்து நமக்காக எல்லா நீதியையும் முழுமையாக நிறைவேற்றிவிட்டார் என்பதை நாம் பூரணமாக விசுவாசித்து, அவருக்குள் நிலைக்கொள்ளும் போது அந்த நீதி நம்முடைய நீதியாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது (ரோம.3:24, 25, 28; பிலி.3:9). இவ்வாறு தேவன் கிறிஸ்துவின் பரிபூரணமான நீதியை பார்த்து, அவருடைய நீதியுடன் நம்மையும் நீதிமான்களாக்குகிறார் (ரோம.5:19).

### 7. தேவனோடு ஒப்புரவாக்கப்பட்டோம் (ரோம.5:10)

நம்மை தேவனோடு ஒப்புரவாக்கும்படியாக, கிறிஸ்து எல்லாராலும் தள்ளப்பட்டார் (யோவா.1:11). தேவனோடு ஒன்றாக இருந்த மனுக்குலம் பாவத்தின் மூலமாக அவரிடமிருந்து பிரிக்கப்பட்டது. நியாயப்பிரமாணம் கூட மனிதன் தேவனோடு ஒப்புரவாவதற்கு ஒரு தடையாகவே இருந்தது (கலா.2:11-21). ஏனெனில் நியாயப் பிரமாணத்தின் படி ஒரு மனிதன் வாழ்ந்தாலும், அவனுக்குள் இருந்த மாம்சசிந்தனை தேவனுக்கு விரோதமான பகையாகவே இருந்தது (ரோம.8:7). ஆகவே கிறிஸ்து நியாயப்பிரமாணத்தை தம்மில் நிறைவேற்றி, நம்மை தேவனிடம் ஒப்புரவாக்கினார் (II கொரி.5:18-21; எபே.2:13-16). இவ்வாறு, கிறிஸ்துவின் மரணத்தின் மூலம் மட்டுமே, மறுபடியுமாக நாம் தேவனோடு ஒப்புரவாக்கப்பட்டோம் (கொலோ.1:21; I பேது.3:18). நமது சொந்த நீதியினாலும், கிரியைகளினாலும் தேவனோடு சேரமுடியாமல் இருந்த போது, இயேசுவின் இரத்தம் நம்மை அவரோடு சேரப்பண்ணியிருக்கிறது. இயேசுவினால் மட்டுமே இரண்டு மரத்துண்டுகளால் (சிலுவை) பரலோகத்திற்கு ஒரு பாலம் கட்ட முடிந்தது! அதன்மூலம் நாமும் தேவனிடம் சேர முடிந்தது.

### 8. ஐசுவரியவான்களாக்கப்பட்டோம் (II கொரி.8:9)

நம்மை ஐசுவரியவான்களாக மாற்றும் படிக்கு, அவர் நமக்காக தரித்திரரானார் (பிலி.2:7,8). யூதனென்றும், கிரேக்கனென்றும் வித்தியாசமே இல்லை; எல்லாருக்குங் கர்த்தரானவர் தம்மைத் தொழுதுகொள்கிற யாவருக்கும் ஐசுவரிய சம்பன்னராயிருக்கிறார் (ரோம.10:12). இது உலக ஐசுவரியமா? அல்லது பரலோக ஐசுவரியமா? நம்மை கிறிஸ்துவுக்குள் ஐசுவரிய வான்களாக்கும் படிக்கு, இந்த முழு உலகத்திற்கும் உரிமையாளரான இயேசு அந்த ஐசுவரியத்தையெல்லாம் விட்டு, நமக்காக தரித்திரரானார் (பிலி.2:6-8). அதன்மூலம் ஆவிக்குரிய ஆசீர்வாதமான நித்திய ஜீவனை நமக்குக் கொடுக்கிறார் (I யோவ.2:25). ஆசீர்வாதங்களிலே மிகபெரிய ஐசுவரிய ஆசீர்வாதமாய் இருப்பது அவர் நமக்கு கொடுக்கும் நித்திய ஜீவன் தானே! அந்த நித்திய ஜீவனோடு கூட வேறு சில ஐசுவரியங்களையும் தேவன் நமக்கு கொடுத்திருக்கிறார். அவைகளை கீழேக்காணலாம்.

- விசுவாசம் என்னும் ஐசுவரியம் (யாக்.2:5)
- தேவனுடைய வல்லமை என்னும் ஐசுவரியம் (II கொரி.4:7)
- இரட்சிப்பு என்னும் ஐசுவரியம் (ரோம.10:12, 13)
- தேவனுடைய உபதேசம் மற்றும் அறிவு என்னும் ஐசுவரியம் (I கொரி.1:5).

### 9. பரிசுத்தம் (எபி.10:10)

கிறிஸ்து நமக்காக பலியிடப்பட்டதினால் நாம் பரிசுத்தமாக் கப்பட்டிருக்கிறோம் (எபி.10:10; 13:12; கொலோ.1:21). பாவ அழுக்கில் வாழ்ந்த நம்மை அவருடைய இரத்தம் தான் கழுவி சுத்திகரித் திருக்கிறது, அதன் பின்பு நாமும் பரிசுத்தமுள்ளவர்களாய் மாறுகிறோம் (I பேது.1:15, 16; மத்.5:8). தேவனுடைய விருப்பமும் அதுதானே!

பழைய ஏற்பாட்டு காலத்தில் வருடத்துக்கு ஒருமுறை பிரதான ஆசாரியன் மட்டுமே மகாபரிசுத்த ஸ்தலத்தில் செல்ல முடிந்தது. ஆனால் கிறிஸ்துவின் மரணத்தின் மூலம் நாம் சுத்திகரிக்கப்பட்டு பரிசுத்தமாக்கப்பட்ட காரணத்தினால், நாமும் ஆவிக்குரிய ஆசாரியர்களாய் தைரியமாய் அந்த மகா பரிசுத்த ஸ்தலமாகிய கிருபாசனத்தண்டை சேருகிறோம் (I பேது.2:9; எபி.9:7; 10:19-20).

### 10. சாத்தான் மேல் வெற்றி (வெளி.12:11)

நாம் சாத்தான் மேல் வெற்றிக் கொண்டவர்களாய் இருக்கும்படிக்கு, இயேசு சிலுவையில் வைத்து அவனை ஜெயித்துவிட்டார் (எபி.2:14,15). நமக்கு எதிரிடையாக இருந்த துரைத்தனங்களையும், அதிகாரங்களையும் உரிந்துக்கொண்டு, வெளியரங்கமான கோலமாக்கி, அவைகளின் மேல் சிலுவையிலே வெற்றி சிறந்தார் (கொலோ.2:14, 15).

ரோமர்கள் எதிராளிகளை வீழ்த்தி வெற்றி பெறும் போது, தங்களுக்கு எதிராக போரிட்டவர்களின் கையில் இருக்கும் ஆயுதங்களையும் ஆடைகளையும் களைந்து போடுவது வழக்கமாய் இருந்தது. இவற்றையெல்லாம் பிடுங்கி விட்டு எல்லாருக்கும் முன்பாக அவர்களை நிறுத்தி, பாருங்கள், நமது எதிரிகளின் கையில் இப்போது ஒன்றுமே இல்லை என்று பிரகடனம் செய்வதும் வழக்கமாயிருந்தது. அதே பாணியில் தான் இயேசுவும் சிலுவையில் வைத்து சாத்தானை ஜெயித்தார். அவனது துரைத்தனங்களையும் (கொள்கைகளையும்) அதிகாரங்களையும் உரிந்துக் கொண்டு, வெளியரங்கமான (நிர்வாண) கோலமாக்கினார். இப்பொழுது அவனுடைய கையில் எதுவுமே கிடையாது. அந்த சிறப்புமிக்க வெற்றியையும் நமது கணக்கில் சேர்த்துவிட்டார்.

இவ்வாறு ஜீவக்காலமெல்லாம் மரணபயத்தினாலே, அடிமைத்தனத்திற்குள்ளானவர்கள் யாவரும் அவரது மரணம் மூலாக விடுவிக்கப்பட்டார்கள் (எபி.2:15). அந்த ஜெயக்கிறிஸ்துவை விசுவாசித்து, அவர் வழியில் நடப்பவர்களும் கூட சாத்தானை மேற்கொண்டு வெற்றி வாழ்வு வாழ்வார்கள் என்பது அவருடைய வாக்குதத்தமாகும் (ரோம.16:20). இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவருடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பினவர் உங்களில் வாசமாயிருக்கிற தம்முடைய ஆவியினாலே சாவுக்கேதுவான உங்கள் சரீரங்களையும் உயிர்ப்பிப்பார் (ரோம.8:11).

## இயேசுவின் சிலுவை மரணத்தின் முக்கியத்துவம் (The Importance of the death of Jesus)

மனுக்குலத்தின் மீது பாவக்கறைகள் விழுந்தவுடனே தேவன் மனுக்குலத்தை மீட்க சித்தமானார் (ஆதி.3:15). ஆதிமுதலே தமது

குமாரனை தியாகபலியாக ஒப்புக்கொடுத்தார். ஆகவே தான் அவர் உலக தோற்றமுதல் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டி என அழைக்கப் படுகிறார் (வெளி.13:8). பழைய ஏற்பாட்டிலும் கூட பலமுறை இயேசுவின் பாடுமரணம் மறைமுகமாக கூறப்பட்டுள்ளது.

- ஏதேன் தோட்டத்தில் மிருகம் அடிக்கப்பட்டபோது (ஆதி.3:21)
- மோரியா மலையில் ஆட்டுக்குட்டி பலியிடப்பட்டபோது (ஆதி.22:13; யோவா.8:56)
- வனாந்தரத்தில் சர்ப்பம் உயர்த்தப்பட்டபோது (எண்.21:5-9; யோவா.3:14-16; 12:32-33; 19:18)

தேவனுடைய அநாதி திட்டத்தின்படியே, அவர் மாம்சத்தில் வெளிப்பட்டார் (I தீமோ.3:16; யோவா.1:1, 14). மோசேயிடம் இருக்கிறவராகவே இருக்கிறேன் (I am Who I am) (யாத்.3:14) என தம்மை வெளிப்படுத்தியிருந்தார்; அதே போலவே புதிய ஏற்பாட்டில் "நானே" (I am) என்று பலமுறை தம்மை வெளிப்படுத்தினார் (யோ.8:58; 14:6; 15:1). நித்தியபிதாவாக இருந்தவர் மாம்சத்தில் வெளிப்பட்டார் (ஏசா.9:6). இயேசுவின் மரணத்தைக் குறித்து மறுரூபமலையில் வைத்து மோசேயும் எலியாவும் அவரோடு பேசினார்கள் (லூக்.9:29-31). இயேசுவே பலமுறைகளில் அவரது மரணத்தை குறித்து முன்னறிவித்திருந்தார். பழைய ஏற்பாட்டில் "தகனபலிக்கு ஆட்டுக்குட்டி எங்கே?" என்ற மிகப்பெரிய ஒரு கேள்வி இருந்தது. ஆனால் புதிய ஏற்பாடு "இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுகுட்டி" என பதில் கூறுகிறது (ஆதி.22:7; யோவா.1:29). ஆகவே ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரணம் ஒரு விபத்து அல்ல; அது தேவனுடைய அநாதி தீர்மானமாயிருந்தது. இயேசுகிறிஸ்துவின் சிலுவை மரணத்தின் முக்கியத்துவத்தை கீழே காணலாம்.

### 1. தேவனுடைய அன்பு (ரோம.5:8) God's love

மனிதன் பாவம் செய்தவுடன் இந்த மனுக்குலத்தையே அழித்துவிட்டு, புதிய மனிதர்களை அவரால் படைத்திருக்க முடியும். ஆனால் அவ்வாறு செய்யாமல், தன்னையே பலியாக கொடுத்து மனுகுலத்தை ஏன் மீட்க வேண்டும்? நம் மீது உள்ள தேவனுடைய அளவில்லாத அன்பைக் காட்டுகிறது.

"நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கபண்ணுகிறார்" (ரோம.5:8).

"தேவன், தம்முடைய ஒரேபேரான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்" (யோவா.3:16).

தேவனுடைய இந்த அன்பு எந்தவொரு நிபந்தனையும் இல்லாததாகும். இயேசுவின் மரணமே உண்மையான பலியாகும் (எபி.10:4-14)

2. தானே மனமுவந்து மரித்தார் (மாற்.10:45) **It is voluntary death**

தேவன் தம்மை தாமே நமக்காக ஒப்புக்கொடுத்தார். தேவனை யாரும் கட்டாயப்படுத்த முடியாது (யோவா.10:18; I தீமோ.2:6). "அப்படியே, மனுஷகுமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ்செய்யவும், அநேகரை மீட்கும் பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார்" (மாற்.10:45).

3. இது ஒரு பதிலான மரணம் (I பேது.3:18) **It is Vicarious death**

"கிறிஸ்துவும் நம்மை தேவனிடத்தில் சேர்க்கும்படி அநீதியுள்ளவர்களுக்குப் பதிலாக நீதியுள்ளவராய்ப் பாவங்களினிமித்தம் ஒருதரம் பாடுபட்டார்; அவர் மாம்சத்திலே கொலையுண்டு, ஆவியிலே உயிர்ப்பிக்கப்பட்டார்" (I பேது.3:18). கிறிஸ்து தம்முடைய பாவங்களுக்காக மரிக்கவில்லை (யோவா.8:46; எபி.4:15; I பேது.2:22). அவர் மனுக்குலத்தின் பாவத்திற்காக மரித்தார் (ஏசா.53:5; யோவா. 10:11; I கொரி.15:3; II கொரி.5:21; ரோம.5:8).

4. இது கிரயம் செலுத்தும் மரணம் (I கொரி.6:20) **It is a Ransom**

நீங்கள் கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்கள் (I கொரி.7:23) அந்த கிரயம் இயேசுவின் இரத்தமே (I பேது.1:19). இந்த கிரயம் யாருக்கு கொடுக்கப்பட்டது? இவ்வுலகம் தேவனால் சிருஷ்டிக்கப்பட்டது, அவருக்கு சொந்தமானதும் ஆகும். ஆனால் பிசாசு மனிதனை வஞ்சித்ததின் காரணமாக, மனிதன் அவனுடைய

பாவ வலையில் விழுந்துவிட்டான், எனவே மனுக்குலம் தன்னுடையது என அவன் உரிமைப்பாராட்டினான். ஆகவே இயேசுவே மனமுவந்து தமது ஜீவனையே விலைக்கிரயமாக செலுத்த முன் வந்தார். பிசாசின் வலையில் விழுந்து கெட்டுப்போன மனுக்குலத்தை சீர்படுத்தி தேவனோடு ஒப்புரவாக்கும்படி கிறிஸ்து செலவிட்ட தொகை தான் அவரது இரத்தம் (ஜீவன்) (அப்.20:28; கொலோ.1:14; தீத்.2:14).

### 5. கிறிஸ்துவின் மரணம் முழு உலகிற்கானது (யோ.1:29) Christ's death is for the whole world

(i) கிறிஸ்துவின் மரணம் தனிப்பட்ட ஒவ்வொரு பாவியான மனிதருக்குமானது (எபி.2:9; I தீமோ.1:15).

(ii) கிறிஸ்துவின் மரணம் முழு உலகிற்கானது (I யோவா.2:2; யோவா.1:12, 29; 3:16; ரோம.10:9; Iதீமோ.2:6).

- ஒரு மனிதனுக்காக ஒரு ஆட்டுக்குட்டி அடிக்கப்பட்டது (ஆதி.4:4)
- ஒரு வீட்டிற்காக (குடும்பத்திற்காக) ஒரு ஆட்டுக்குட்டி அடிக்கப்பட்டது (யாத்.12:3).
- ஒரு தேசத்துக்காக ஒரு ஆட்டுக்குட்டி அடிக்கப்பட்டது (லேவி.16:3-22)
- முழு உலகிற்காகவும் ஒரு ஆட்டுக்குட்டி (இயேசுகிறிஸ்து) அடிக்கப்பட்டது (யோ.1:29)

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]



# அத்தியாயம் - 12

# உயிர்த்தெழுதலின் நிகழ்வுகள்

# (Events of the Resurrection)

(மத். 28:1-20; மாற்: 16:1-20; லூக்: 24:1-53;
யோவா: 20:1-21:18; அப்.1:2-12; Iகொரி.15:1-58)

## மூன்று நாட்கள் பூமியின் இருதயத்தில்
## (Three days in the heart of earth)

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து மரித்து அடக்கம் பண்ணப்பட்டு மூன்று நாட்கள் கல்லறையில் இருந்தார். இயேசுவே இதை முன்னறிவித்திருந்தார்; "யோனா இரவும் பகலும் மூன்று நாள் ஒரு பெரிய மீனின் வயிற்றில் இருந்தது போல, மனுஷகுமாரனும் இரவும் பகலும் மூன்று நாள் பூமியின் இருதயத்தில் இருப்பார் (மத்.12:40). இங்கு கூறப்பட்டுள்ளபடி இரவும் பகலும் மூன்று நாள் கல்லறையில் இருந்தாரா? என்றால் இல்லை என்றே கூறமுடியும். இயேசுவானவர் வெள்ளிகிழமை, சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுகிழமைகளில் கல்லறையில் இருந்துள்ளார். அதாவது இரண்டு முழுமையான இரவுகளும், ஒரு முழுமையான பகலும், இரண்டு பாதிநேரமான பகல்களிலும் அவர் பூமியின் இருதயத்தில்

(கல்லறையில்) இருந்துள்ளார். ஆகவே 24 மணிநேரம் அடங்கிய மூன்று முழு நாட்கள் அல்ல என்பதை நாம் தெரிந்துக் கொள்ள வேண்டும்.

அப்படியென்றால் இயேசு கூறிய வார்த்தை தவறானதா? இல்லவே இல்லை. ஏனென்றால், "இந்த ஆலயத்தை (சரீரத்தை) இடித்துப் போடுங்கள், மூன்று நாளைக்குள்ளே இதை எழுப்புவேன்" (யோவா.2:19) என்று இயேசு கூறியிருந்தார். மேலும் "மூன்றாம் நாளில்" எழுந்திருக்க வேண்டும் என்பதைத் தம்முடைய சீஷர்களுக்கு இயேசு கூறியிருந்தார் (மத்.16:21). மேற்கூறப்பட்ட வசனங்களிலிருந்து "மூன்று நாளைக்குள்ளே" உயிர்த்தெழுவேன் என்று இயேசு கூறியிருந்ததை காணமுடிகிறது.

ஆகவே தான் பிரதான ஆசாரியரும், பரிசேயரும் பிலாத்துவிடம் வந்து, "மூன்று நாளைக்கு பின் எழுந்திருப்பேன்" என்று அவன் சொன்னது எங்களுக்கு ஞாபகமிருக்கிறது, ஆகவே நீங்கள் கல்லறைக்கு பாதுகாப்பு கொடுக்கவேண்டும் என்று, மூன்றாவது நாள் தொடங்கும் முன்னரே கேட்டுக் கொண்டார்கள். அவர்களுக்கு நாட்களை குறித்த எந்த சந்தேகமும் வரவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். மேலும், யூதர்களின் ஒருநாள் என்பது சூரிய அஸ்தமனத்திலிருந்தே தொடங்குகிறது, ஆகவே இரவும் பகலும் மூன்று நாள் என்பது, அந்த மொழியின் பேச்சு மரபாக உள்ளது.

இதேபோன்ற பேச்சு மரபுகளை வேறுபகுதிகளிலும் காணலாம். 1சாமு.30:12-ல் இராப்பகல் மூன்று நாள் என்றும், அடுத்தவசனத்தில் (13-ல்) மூன்று நாளைக்கு முன் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் ஆதி.42:17-ல் மூன்று நாள் காவலில் இருந்தார்கள் என்றும், அடுத்த வசனத்தில் (18-ல்) மூன்றாம் நாளிலே எனவும் கூறப்பட்டுள்ளது. ஆகவே "இரவும் பகலும் மூன்றுநாள்" அல்லது "மூன்று நாளைக்கு பிறகு" என்ற பதங்கள் அனைத்துமே "மூன்று நாட்களுக்குள்ளாக" என்று அர்த்தமாகும்.

உதாரணமாக 2015-ம் வருடம் டிசம்பர் 31-ம் தேதி இரவு 11:59-க்கு முதல் குழந்தையும், 12:02-க்கு இரண்டாவது குழந்தையுமாக இரட்டை குழந்தைகளை ஒரு தாய் பெற்றெடுத்தாள். அந்த குழந்தைகள் இரட்டைக் குழந்தைகளாக இருந்தாலும், மூன்று நிமிட இடைவெளியில் பிறந்த போதிலும்; முதல் குழந்தையின் பிறந்தநாள்

2015-லும், இரண்டாவது குழந்தையின் பிறந்த நாள் 2016 லுமாக மாறிவிட்டது. ஆகவே ஒருவருட இடைவெளி போன்ற தோற்றம் உருவானது. இந்த முறையில் பார்த்தால் வெள்ளி சாயங்காலத்தில் இயேசு அடக்கம் பண்ணப்பட்டிருந்தாலும், அந்த முழு வெள்ளிக்கிழமையையும் நாம் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும், ஞாயிறு காலையில் எழுந்திருந்தாலும் அந்த முழு தினத்தையும் நாம் கருத்தில் கொள்ள வேண்டும். இவ்வாறு இயேசுவானவர் மூன்று நாட்கள் பூமியின் இருதயத்தில் இருந்துள்ளார்.

## சொன்னப்படியே உயிர்த்தெழுந்தார்
## (He is risen, as He said)

கிறிஸ்து எழுந்திருக்கவில்லையென்றால், எங்கள் பிரசங்கமும் விருதா, உங்கள் விசுவாசமும் விருதா (I கொரி.15:14) என பவுல் கூறியுள்ளார். கிறிஸ்தவத்தின் அஸ்திபாரமே இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் தான். இயேசுவின் நாட்களில் இருந்த மத தலைவர்கள் ஒருமுறை அவரிடம் வந்து, நீர்தான் மேசியா என்றால் எங்களுக்கு ஒரு அடையாளத்தை கொடும் என்றார்கள். அப்பொழுது தான் இயேசு அவர்களிடம், யோனா மூன்று நாள் பூமியின் இருதயத்தில் (பூமியின் கீழ்) இருப்பார் என்று கூறியிருந்தார். அதாவது மூன்று நாளைக்கு பின் உயிரோடு எழுந்திருப்பதே மேசியா என்பதற்கு அடையாளம் என கூறியிருந்தார் (மத்.12:39,40). அவ்வண்ணமாகவே அவர் சென்னப்படி உயிர்த்தெழுந்தார்! அல்லேலூயா!! பின்னர் 40 நாள் வரை அநேகருக்கு தன்னை காண்பித்தார் (அப்.1:3). இயேசு உயிர்த்தெழுந்தார் என்பதற்கு நாங்கள் கண்களால் பார்த்த சாட்சிகளாய் இருக்கிறோம் என பேதுரும், யோவானும் கூறியுள்ளார்கள் (II பேது.1:16; Iயோவா.1:2). வேதத்தின் வசனங்களை தவிர, வரலாற்றிலும் கூட இயேசு உயிர்த்தெழுந்தார் என்பதற்கு பலமான ஆதாரங்கள் உள்ளன.

ஒருமுறை இங்கிலாந்து தேசத்தை சேர்ந்த பிராங்க்மோரிசன் (Frank Morrison) என்ற பிரபல எழுத்தாளர், இயேசுவையும் கிறிஸ்தவர்களையும் மிகவும் வெறுத்தப்படியால், "இயேசு உயிர்த்தெழவேயில்லை என்பதை நிருபித்துக் காட்டுவேன் என ஒரு நூலை எழுத தொடங்கினார். இதற்காக இரவும் பகலும் வேதத்தை

வாசித்து ஆராயத்தொடங்கினார். இதை கேள்விப்பட்ட கிறிஸ்தவர்கள் அவரது மனமாற்றத்திற்காக ஜெபிக்க ஆரம்பித்தனர். அந்த புத்தகத்தின் முதலாவது அத்தியாயத்தை எழுதிய சில தினங்களிலேயே அவர் இயேசுவின் சீஷனாக மாறினார். இறுதியில் இயேசு மெய்யாகவே உயிர்த்தெழுந்தார் என்பதை பலமான சாட்சிகளுடன் "Who moved the stone?" (யார் கல்லை புரட்டிப் போட்டது) என்ற புத்தகமாக வெளியிட்டார். இந்த புத்தகத்தின் இலட்சக்கணக்கான பிரதிகளும் விற்பனையாயின.

கிறிஸ்துவின் சரீரத்தை எல்லோருக்கும் முன்பதாக தான் வெள்ளிக்கிழமை கல்லறையில் வைத்தார்கள் எனவும், ஞாயிற்றுகிழமை காலையில் அவருடைய சரீரத்தை காணவில்லை எனவும் அந்த புத்தகத்தில் கூறியுள்ளார். அவர் உயிர்த்தெழ வில்லையென்றால், யார் அவரை எடுத்திருக்க கூடும்? ரோமர்களா, யூதர்களா அல்லது அவரது சீஷர்களா? ரோமர்கள் எடுத்திருக்க வேண்டிய அவசியமில்லை, ஏனென்றால் அவர்கள் எருசலேமில் சட்டம் ஒழுங்கை விரும்பினபடியால் அதை செய்திருக்க வாய்பே இல்லை. யூதர்களும் எடுத்திருக்க மாட்டார்கள், ஏனெனில் இயேசு உயிர்த்தெழுவதை தடுக்க அவர்கள் தான் பாதுகாப்பை பலப்படுத்தியிருந்தார்கள், மேலும் காணவில்லை அல்லது உயிர்த்தெழுந்தார் என்பது அவர்களுக்கு கசப்பான செய்தியாக தான் இருந்தது. சீஷர்களும் எடுக்கவில்லை என வேதம் கூறுகிறது, ஏனெனில் இயேசு உயிர்த்தெழுந்தார் என அவர்கள் தைரியமாக பிரசங்கித்தார்கள். அவர்கள் எடுத்திருந்தால் அரசு அவர்களை கைது செய்து விசாரித்திருந்திருக்கும் அல்லவா? அப்படியெனில் இயேசு எங்கே? அவர் சொன்னபடியே உயிர்த்தெழுந்தார். அல்லேலூயா.

## எப்படி உயிர்த்தெழுந்தார்?
## (How He resurrected?)

இயேசுவின் பிறப்பின் போதும், ஊழியத்தின் போதும் மரணத்திலும் எப்படி ஆவியானவரின் பங்கு இருந்ததோ (மத்.1:20, 4:1) அந்தபடியே அவருடைய உயிர்த்தெழுதலிலும் திரித்துவ தேவனின் பங்கு இருந்தது.

**(i) தேவன் அவரை எழுப்பினார்**

✹ அப். 2:24 - தேவன் அவருடைய மரண உபாதிகளின் கட்டை அவிழ்த்து, அவரை எழுப்பினார்

✹ அப்.3:15 - அவரை தேவன் மரித்தோரிலிருந்து எழுப்பினார்

✹ அப்.5:30 - நீங்கள் மரத்திலே தூக்கிக் கொலை செய்த இயேசுவை நம்முடைய பிதாக்களின் தேவன் எழுப்பி. . . . .

**(ii) இயேசுவே தம்மை எழுப்பினார்**

✹ யோவா.2:19 - இந்த ஆலயத்தை (சரீரத்தை) இடித்துப் போடுங்கள், மூன்று நாளைக்குள்ளே இதை எழுப்புவேன்.

✹ யோவா.10:18 - ஒருவனும் அதை என்னிடத்திலிருந்து எடுத்துக் கொள்ளமாட்டான். நானே அதைக் கொடுக்கிறேன், அதைக் கொடுக்கவும் எனக்கு அதிகாரம் உண்டு; அதை மறுபடியும் எடுத்துக் கொள்ளவும் எனக்கு அதிகாரம் உண்டு.

**(iii) பரிசுத்தாவியானவர் அவரை எழுப்பினார்**

✹ I பேது.3:18 - அவர் மாம்சத்திலே கொலையுண்டு, ஆவியிலே உயிர்பிக்கப்பட்டார். Made alive by the Spirit என ஆங்கில வேதாகமம் கூறுகிறது. அதற்கு ஆவியானவராலே உயிர்பிக்கப்பட்டார் என்று பொருள்.

## ஸ்திரீகள் இயேசுவின் கல்லறையில் [Women in the tomb of Jesus]

வாரத்தின் முதல் நாள் ஞாயிற்றுக்கிழமை அதிகாலையில் இருட்டோடே மகதலேனா மரியாள் கல்லறையை நோக்கி பயணமானாள். அவளோடு யாக்கோபின் தாயாகிய மரியாளும், சலோமே என்பவளும் கலிலேயாவிலிருந்து வந்த சகோதரிகளும் இணைந்து சூரியன் உதயமாகிறபோது கல்லறையை சென்றடைந்தார்கள். கல்லறையின் வாசலில் இருக்கிற கல்லை நமக்காக எவன் புரட்டித்தள்ளுவான் என்று தொடர்ந்து கேட்டுக்கொண்டே வந்தார்கள். எப்படியாவது தாங்கள் கொண்டுவந்த அந்த வாசனைத் திரவியங்களை இயேசுவின் சரீரத்தில் வைக்கவேண்டும் என்பதே அவர்களது நோக்கமாயிருந்தது. இயேசு உயிர்தெழுவார் என்ற அவரது வார்த்தைகளை முற்றிலுமாக மறந்து போயிருந்தார்கள். மகதலேனா மரியாள் தான் முதலில் கல்லறைக்கு வந்திருந்தாள் என யோவான் குறிப்பிட்டிருந்தாலும், அவள் பிற ஸ்திரீகளோடு தான் வந்திருந்தாள் என்பதை அடுத்த வசனத்திலிருந்து நாம் அறிந்துக்

கொள்ளலாம். அதாவது யோ.20:2-ல் அவரை வைத்த இடம் "எங்களுக்கு" தெரியவில்லை என பன்மையில் கூறினாள்.

## கல்லை புரட்டிப்போட்டது யார்? [Who moved the stone?]

சூரியன் உதயமாவதற்கு முன்பே இயேசு உயிர்த்தெழுந்தார். உடனே தூதர்கள் வந்து கல்லை புரட்டிப்போட்டு அதன் மேல் உட்கார்ந்தார்கள். இதைப்பார்த்த ஸ்திரீகள் ஓடிப்போய் சீஷர்களுக்கு அறிவித்தார்கள். அவர்களாலும் அதை நம்பமுடியவில்லை. ஒருவேளை நிக்கொதேமும், யோசேப்பும் அவருடைய சரீரத்தை வேறு கல்லறைக்கு மாற்றியிருப்பார்கள் என நினைத்திருப்பார்களோ? ஆனால் இயேசு உயிர்த்தெழுந்தார் என்பதை தூதர்களின் வாயிலிருந்து கேட்டவுடன் திகைத்துப் போனார்கள். தூதர்கள் வந்து கல்லை புரட்டிப்போட்ட பிறகு இயேசு உயிர்த்தெழவில்லை, மாறாக இயேசு உயிர்த்தெழுந்த பிறகே தூதர்கள் வந்து கல்லைப் புரட்டிப் போட்டார்கள் என்பது உண்மையாகும். அப்படியெனில், இயேசு எவ்விதம் கல்லறையை விட்டு வெளியே வந்திருப்பார்? எந்தவிதமாக பூட்டிய அறைக்குள் சென்று சீஷர்களிடம் "உங்களுக்கு சமாதானம்" என்று கூறினாரோ அவ்விதமே அடைக்கப்பட்ட கல்லறையிலிருந்தும் உயிர்த்தெழுந்தார்.

- மத்.28:2 - கர்த்தருடைய தூதன்
- மாற். 16:5 - வெள்ளையங்கி தரித்த ஒரு வாலிபன்
- லூக்.24:4 - பிரகாசமுள்ள வஸ்திரம் தரித்த இரண்டுபேர்
- யோவா.20:12 - வெள்ளாடை தரித்த இரண்டு தூதர்கள்

மத்தேயு ஒரு தூதன் எனவும், யோவான் இரண்டு தூதர்கள் எனவும் கூறியிருக்கும் போது; மாற்கு ஒரு வாலிபன் என்றும், லூக்கா இரண்டு பேர் என்றும் கூறியுள்ளது எவ்வாறு புரிந்து கொள்ளப்படுகிறது? அவர்கள் எத்தனை பேராய் இருந்தாலும் சரி, வஸ்திரம் பிரகாசமானதாய் இருந்தது எனவும், ரூபம் மின்னலை போன்றதாய் இருந்தது எனவும், அவர்கள் வந்த போது பூமி அதிரும் வகையில் இருந்தது எனவும் கூறப்பட்டுள்ளபடியால், அவர்கள் தூதர்களாய் இருப்பதற்கே அதிக வாய்புகள் உள்ளன. மேலும்,

பயப்படாதீர்கள் என கூறினபடியால் தூதர்கள் என்றே பலரும் கருதுகிறார்கள். ஏனெனில் இயேசுவின் பிறப்பை அறிவிக்க வந்த போது மரியாளிடமும், தூபம் காட்டிக் கொண்டிருந்த சகரியாவிடமும் தூதர்கள் பயப்படாதே எனக் கூறியிருந்தார்கள்.


இவர்கள் இருவரும் தூதர்கள் அல்ல; மறுரூபமலையில் வைத்து இயேசுவோடு பேசிய மோசேயும், எலியாவும் தான் என்று வேறு சிலர் கூறுகிறார்கள். ஏனென்றால் இவர்கள் இயேசுவின் மரணத்தைக்குறித்து அவரோடு பேசியிருந்தார்கள் என்றும் (லூக்.9:31), இங்கு இயேசுவின் உயிர்த்தெழுதலைக் குறித்து பெண்களுக்கு கூறினார்கள் என்றும் (லூக்.24:5, 6) இவர்கள் தான் இயேசுவின் வருகையின் போது வரப்போகிற இரண்டு சாட்சிகள் என்றும் கூறப்படுகிறது (வெளி.11:3). எப்படியாயினும் இயேசு உயிர்த்தெழுந்தார் என்பதே பிரதானமானதாகும்.

## இயேசு உயிர்த்தெழுந்தார் என்பதற்கான ஆதாரங்கள்
## (The Evidences for the Resurrection of Jesus)

இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்தார் என்பதற்கு பலமான வரலாற்று ஆதாரங்களும், வேத ஆதாரங்களும், கண்ணால் கண்ட சாட்சிகளும், கலாச்சார நிகழ்வுகளும் உள்ளன. ஆனால் இந்த பகுதியில் பத்து ஆதாரங்களை மட்டுமே மிகவும் எளிமையான நடையில் நான் எழுதியுள்ளேன்.

### 1. காலியான கல்லறை

சீஷர்கள் கல்லறையின் உள்ளே பிரவேசித்து, கர்த்தராகிய இயேசுவின் சரீரத்தைக் காணாமல் கலக்கமடைந்தார்கள் (லூக்.24:3, 4) என லூக்கா கூறியுள்ளார். சீஷர்கள் தான் அவரது உடலை எடுத்து மறைத்து வைத்தார்கள் என்றால், மறுபடியும் வந்து தேடி, கவலைக் கொள்ள வேண்டிய தேவையில்லையே!



இயேசுவின் கல்லறை

சுற்றப்பட்ட சீலையோடு வேகமாக கொண்டு சென்றிருப்பார்களே? அந்த சீலையை கழற்றி போட்டு நேரத்தை வீணடித்திருக்க மாட்டார்கள் அல்லவா? மேலும் அவர்கள் எங்கேயாவது ஓடி ஒளிந்திருப்பார்கள் அல்லவா? ஆனால் அவர்கள் வேறு எங்கும் ஓடிப்போகாமல் எருசலேமிலே இயேசு வின் உயிர்த்தெழு தலைக் குறித்து பிரசங் கித்தார்களே! ஏன் அரசாங்கம் அவர்களை கைது செய்யவில்லை?

அப்படியெனில் காலியான கல்லறை இயேசுவின் உயிர்த் தெழுதலை மட்டுமே பிரகடனம் செய்கிறது. எத்தனையோ அரசியல் தலைவர்களும், மதத்தலைவர்களும் செத்து போயிருக்கிறார்கள். நான் தான் கடவுள் என்றவர்கள் கூட மறைந்து போனார்கள். அவர்கள் கல்லறைகள் எல்லாமே இன்றும் கூட மூடப்பட்டிருக்கிறது. ஆனால் இயேசுவின் கல்லறை மட்டுமே இன்றும் திறக்கப்பட்டுள்ளது.

2. முத்திரை உடைக்கப்பட்ட கல்

ரோம அரசாங்கத்தின் முத்திரையை உடைப்பது பெரும் குற்றமாக இருந்து வந்தது. அப்படிப்பட்டவர்களை ரோம அரசாங்கத்தின் உளவு நிறுவனம் கண்டுபிடித்து அவர்களை சிலுவையில் தலைகீழாக அறைவது வழக்கமாயிருந்தது. ஆகவே ரோம அரசுக்கு எதிராக எழும்ப எல்லாருமே பயந்திருந்தார்கள். சீஷர்கள் ஏற்கனவே பயந்து ஓடினார்கள் என்றும், பேதுரு மறுதலித்தான் என்றும் நாம் பார்த்தோம். அப்படிபட்டவர்களுக்கு முத்திரையை உடைக்கும் தைரியம் ஒருப்போதும் வந்திருக்கவே முடியாது. வேதம் தெளிவாக கூறுகிறது: கர்த்தருடைய தூதன் வானத்திலிருந்து இறங்கி வந்து, வாசலிலிருந்த கல்லை புரட்டித்தள்ளினான் (மத்.28:2). தூதனை எப்படி கைது செய்வார்கள்? மனிதர்கள் தான் முத்திரையை உடைத்திருந்தார்கள் என்றால், அப்பொழுதே அவர்களை கைது செய்து சிறையில் அடைத்திருப்பார்கள் அல்லவா? தூதன் தான் இவைகளை செய்தான் என காவலர்கள் கண்டு, பயந்து கீழே செத்தவர்களை போல விழுந்தார்கள் (மத்.28:4). இவ்வாறு, ரோமர்களின் முத்திரை உடைந்து தரைமட்டமாக போகும்படி தூதன் கல்லை புரட்டிப்போட்டான்.

3. தூதர்களின் சாட்சி

தூதன் அந்த ஸ்திரீகளை நோக்கி: நீங்கள் பயப்படா திருங்கள்; சிலுவையில் அறையப்பட்ட இயேசுவைத் தேடுகிறீர்கள்

என்று அறிவேன். அவர் இங்கே இல்லை; தாம் சொன்னபடியே உயிர்த்தெழுந்தார்; கர்த்தரை வைத்த இடத்தை வந்து பாருங்கள். மனுஷகுமாரன் பாவிகளான மனுஷர் கைகளில் ஒப்புக்கொடுக்கப்படவும் மூன்றாம் நாளில் எழுந்திருக்கவும் வேண்டுமென்பதாக அவர் கலிலேயாவிலிருந்த காலத்தில் உங்களுக்கு சொன்னதை நினைவுக்கூருங்கள். சீக்கிரமாய் போய், அவர் மரித்தோலிருந்து எழுந்தார் என்று அவருடைய சீஷர்களுக்குச் சொல்லுங்கள். அவர் உங்களுக்கு முன்னே கலிலேயாவுக்குப் போகிறார்; அங்கே அவரை காண்பீர்கள் என்றான் (மத்.28:5-7; லூக்.24:5-7).

இயேசு பிறந்திருக்கிறார் (லூக்.2:10-12); இயேசு உயிரோடு எழுந்தார் (லூக்.24:6); இயேசு மீண்டும் வருவார் (அப்.1:10, 11) போன்ற முக்கியமான செய்திகளை தூதர்களே ஜனங்களிடம் அறிவித்திருந்தார்கள்.

4. காவலாளர்களின் வாக்குமூலம்

தூதன் வந்து கல்லைபுரட்டிப்போட்டதை பார்த்த காவலாளர்கள் நடந்த உண்மையை, பிரதான ஆசாரியருக்கு அறிவித்தார்கள். அப்பொழுது பிரதான ஆசாரியர் மூப்பர்களோடு ஆலோசனை பண்ணிவிட்டு, சேவகர்களுக்கு வேண்டிய பணத்தைக் கொடுத்து: நாங்கள் நித்திரை பண்ணுகையில் அவனுடைய சீஷர்கள் இராத்திரியிலே வந்து, அவனைக் களவாய்க்கொண்டு போய்விட்டார்கள் என்று சொல்லுங்கள். இது தேசாதிபதிக்குக் கேள்வியானால், நாங்கள் அவரைச் சம்மதப்படுத்தி உங்களை தப்புவிப்போம் என்றார்கள் (மத்.28:11-14). காவலாளர்கள் தூதனை பார்த்தது உண்மையாகும். ஆனால் பணத்தைக் கொடுத்து அந்த சாட்சிகளை மூடி மறைக்கப்பார்த்தார்கள், ஆனால் அதுவும் அவர்களுக்கு கைகூடவில்லை. ஏனெனில், பணம் கொடுக்கப்பட்டதால் தான் இவர்கள் இப்படி பேசுகிறார்கள் என்பதை யூதர்களே அறிந்து வைத்திருந்தார்கள் (மத்.28:15).

ஆகவே தான் பேதுருவின் ஒரு பிரசங்கத்தில் 3000 யூதர்கள் இயேசுவை ஏற்றுக்கொண்டார்கள். மேலும் காவலாளிகள் உண்மையிலே தூங்கிஇருந்தால், சீஷர்கள் தான் சரீரத்தை எடுத்துக் கொண்டு போனார்கள் என அவர்களால் எப்படி கூறமுடியும்? இந்த சாதாரணமான பொது அறிவுக்கூட அவர்களுக்கு இல்லாமல் போனது வருத்தமானதாகும். கல்லறையினாலேயோ, முத்திரை யிடப்பட்ட

கல்லினாலேயோ, பணத்தினாலேயோ, இயேசுவின் உயிர்த் தெழுதலை மறைக்க முடியவில்லை என்பதே உண்மையாகும்! ஆகவே தான் பவுல் கூறுகிறார்: மரணமே! உன் கூர் எங்கே? பாதாளமே! உன் ஜெயம் எங்கே? (I கொரி.15:55).

### 5. சுருட்டப்பட்ட சீலைகள் கூறும் உண்மைகள்

ஸ்திரீகள் போய் கல்லறை திறந்திருப்பதையும், இயேசுவின் சரீரம் காணாமல் போனதையும் குறித்து சீஷர்களிடம் கூறியவுடனே, பேதுருவும் யோவானும் ஒருமித்து கல்லறையை நோக்கி ஓடினார்கள். பேதுருவை பார்க்கிலும் யோவான் துரிதமாய் ஓடி, முந்திக்கல்லறை யினிடத்தில் வந்து, அதற்குள்ளே குனிந்து பார்த்து, சீலைகள் கிடக்கிறதைக் கண்டான்; ஆனாலும் அவன் உள்ளே போகவில்லை. சீமோன் பேதுரு அவனுக்குப் பின்னே வந்து, கல்லறைக்குள்ளே பிரவேசித்து, சீலைகள் கிடக்கிறதையும், அவருடைய தலையில் சுற்றியிருந்த சீலை மற்ற சீலைகளுடனே வைத்திராமல் தனியே ஒரு இடத்தில் சுருட்டி வைத்திருக்கிறதையும் கண்டான். அப்பொழுது யோவானும் உள்ளே பிரவேசித்து, கண்டு விசுவாசித்தான். பின்பு அவர்கள் தங்களுடைய இடத்திற்குத் திரும்பி போனார்கள் (யோவா.20:1-10).

### கலாச்சார உண்மை

அடக்கம் பண்ணப்படுகிற சரீரத்தில் தலையில் ஒன்றும், உடம்பில் ஒன்றுமாக சுற்றுவது வழக்கம் என ஏற்கனவே நாம் பார்த்தோம். இங்கு தலையில் சுற்றியிருந்த சீலை மற்றச்சீலை களுடனே வைக்கப்படாமல் தனியே ஒரு இடத்தில் சுருட்டி வைக்கப்பட்டிருந்தது என காண்கிறோம் (யோவா.20:7). ஆங்கிலத்தில் folded என கூறப்பட்டுள்ளது. அதற்கு மடித்து வைக்கப்பட்டிருந்தது என்று பொருள். இயேசு எழுந்தவுடன் அவசரமாக எங்கும் போய்விடவில்லை; அமைதியாக சீலையை மடித்து வைத்துவிட்டு போயுள்ளார். இந்த நிகழ்வு நமக்கு ஒரு உண்மையைக் கற்றுக் கொடுக்கிறது.


யூதர்கள் கலாச்சாரத்தின்படி, சாப்பிடும் மேஜையில் ஒரு துண்டு எப்போதும் வைக்கப்பட்டிருக்கும். அந்த குறிப்பிட்ட வீட்டு வேலைகாரன் அதை மடித்து வைத்திருந்தால், எஜமானனுக்கு

சாப்பாடு ஆயத்தம் பண்ணிவிட்டு காத்திருக்கிறான் என்று அர்த்தம். எஜமானன் வந்து சாப்பிட்டு கைகளை துடைத்துவிட்டு அந்த துண்டை அப்படியே போட்டு செல்வாரென்றால், அவர் மீண்டும் உடனடியாக வருவதில்லை என்று அர்த்தம். ஆனால் அவர் சாப்பிட்ட பிறகு அந்த துண்டை மறுபடியும் மடித்து அந்த மேஜையின் மீது வைத்துப் போனால், மீண்டும் உடனடியாக வருவேன் என்பதை குறிக்கும். இவ்வாறு செய்தால் வேலைகாரன் மறுபடியும் எஜமானனுக்காக ஆயத்தமாய் காத்திருக்க வேண்டியது அவசியம்.

அப்படியெனில், இந்த துண்டை இயேசு மடித்து வைத்து சென்றாரெனில், அவர் மீண்டும் வருவேன் என்பதை உணர்த்தி சென்றிருக்கிறார். ஆகவே அவர் வரும் போது நடக்கவிருக்கும் கல்லியாண விருந்தில் கலந்துக்கொள்ள நாமும் ஆயத்தமாய் காத்திருக்க வேண்டியது அவசியமானதாகும்.

## சுருட்டப்பட்ட சீலையைக் குறித்த வரலாற்று உண்மை

இயேசுவின் சரீரத்தில் சுற்றப்பட்டிருந்த நீளத்துணியானது இத்தாலி நாட்டிலுள்ள தூதரின் நகர தேவாலயத்தில் வைக்கப்பட்டுள்ளது. இது இயேசுவை அடக்கம் செய்ய பயன்படுத்தப்பட்டது என ஆராட்சியாளர்கள் கருதுகிறார்கள். 14 அடி நீளமும் 4 அடி அகலமும் கொண்ட இந்த துணியில் ஒருவருடைய முகத்தின் முன்பகுதியும் பின் பகுதியும் பதிந்துள்ளது. ஈட்டியால் குத்தியதின் விளைவாக ஏற்பட்ட விலாபகுதியில் உள்ள காயமும் பதிந்துள்ளது. 19-ம் நூற்றாண்டில் இந்த துணியை ஆய்வு செய்த அமெரிக்கா விஞ்ஞானிகள், இது 13-ம் நூற்றாண்டில் போலியாக தயாரிக்கப்பட்ட ஓவியமாக இருக்கலாம் என தெரிவித்துள்ளனர். சீலையில் இருந்த முக அடையாளத்தைக்




இயேசுவின் உருவம் பதிந்திருந்த சீலை

குறித்து வேதம் எதையுமே கூறாதபடியால் சிலர் இதை ஆமோதிக்கிறார்கள்.

இந்நிலையில் இத்தாலியின் பதுலா பல்கலைகழக விஞ்ஞானிகள் செய்த ஆய்வின் முடிவில், இது கி.மு.280-க்கும் கி.பி.220-க்கும் இடைப்பட்டது என்று கூறியுள்ளார்கள். முந்தைய ஆய்வில் பயன்படுத்தப்பட்ட துணி, இந்த பழைய ஆடையின் கிழிந்த பகுதியில் போடப்பட் டிருந்த ஓட்டுத்துணியாக இருந்திருக்க வேண்டும் என இந்த ஆராட்சியில் ஈடுபட்ட பேராசிரியர் ஜூலியோ கூறியுள்ளார். மேலும் 1978-ல் செய்யப் பட்ட பரிசோதனையில், இந்த துணியில் பதிந் திருப்பது மனித இரத்தம் தான் என்பது உறுதி செய்யப்பட்டது. திடீரென ஏற்பட்ட மின்னல் போன்ற ஒளியினால் இந்த இரத்தம் துணியில் படிந்திருக்க வேண்டும் எனவும் கூறப்படுகிறது. இயேசு உயிரோடு எழுந்த போது ஏற்பட்ட பேரொளியின் மூலம் (X-ray போல) இது துணியில் படிந்திருக்க வேண்டும் எனவும், சுவிசேஷ எழுத்தாளர்கள் இதை எழுதாமல் விட்டிருக்கலாம் எனவும் கிறிஸ்தவ அறிஞர்கள் கூறியுள்ளார்கள்.

மேலும் இந்த துணியில் பதிந்திருந்த முகத்தின் வலது கண்ணின் அருகே ஒரு நாணயம் இருந்ததும் கண்டுப்பிடிக்கப்பட்டது. ஒருவேளை அடக்கம் செய்யும் போது வைக்கப்பட்டதா? அல்லது அடக்கம் செய்தவர்களின் பாக்கெட்டிலிருந்து தவறி விழுந்ததா? என தெரியவில்லை. ஆனால் சிகாகோவில் உள்ள லயாலோ கல்லூரியில் இறையியல் பேராசிரியராக உள்ள Rev. பிரான்சிஸ். L. பிலஸ் என்பவர் கூறும் போது, அந்த நாணயத்தில் UCAI என்ற நான்கு எழுத்துக்கள் உள்ளன என்றும், இது திபேரியு ராயனை குறிக்கிறது என்றும் கூறியுள்ளார். மேலும் இயேசுவை அடக்கம் செய்யும் போது அவரை குளிப்பாட்டியதாக வேதம் கூறவில்லை; ஆகவே அவரது இரத்தம் கழுவப்படாமலே இருந்தபடியால் தான், உயிர்த்தெழுந்த போது ஏற்பட்ட பேரொளியால், அந்த இரத்தக்கறைகள் இந்த துணியில் பதிந்திருக்க வேண்டும் என்பது அறிஞர்களின் வாதம்.

### 6. இயேசுவே சாட்சியாயிருக்கிறார்

நான் உயிர்த்தெழுந்த பின்பு, உங்களுக்கு முன்னே கலிலேயாவுக்கு போவேன் என இயேசு கூறியிருந்தார் (மத்.26:32). அதை தேவதூதன் உறுதிப்படுத்தினான் (மாற்.16:7). சீஷர்கள்

கலிலேயாவில் வைத்து உயிர்த்தெழுந்த இயேசுவை கண்டு பணிந்துக் கொண்டார்கள் (மத்.28:16-17). மேலும் தமது உயிர்த்தெழுதலை குறித்து இயேசு அநேக முறை கூறியிருந்தார் அவைகளில் சிலவற்றை கீழே காணலாம்.

மத்.12:38-40; 16:21; 17:9, 22-23; 20:18-19; 27:63.

மாற்.8:31; 9:9-10, 31; 10:32-34; 14:28, 57

லூக். 9:22; 24:39

யோவா.2:19-22; 12:32-34; 14 முதல் 16 அதிகாரங்கள்

## 7. இயேசுகிறிஸ்துவை கண்ணால் கண்ட சாட்சிகள்

இயேசு உயிர்த்தெழுந்த பின்னர் 40 நாள் வரையிலும் இந்த உலகத்திலேயே இருந்து, அநேகருக்கு தம்மை காண்பித்தார். இதை குறித்து விரிவாக "உயிர்த்தெழுந்த இயேசுவின் தரிசனங்கள்" என்ற தலைப்பின் கீழ் கூறியுள்ளேன்.

## 8. புதிய ஏற்பாடு கூறும் உண்மை

இயேசு கிறிஸ்து உயிர்த்தெழவில்லை என்றால், நாம் நமது விசுவாசத்தின் ஆதாரமாக கொண்டுள்ள புதிய ஏற்பாடு எழுதப்பட்டிருக்க முடியாது. ஏனென்றால் கிறிஸ்துவின் உயிர்த் தெழுதலை மையமாக வைத்து தான் புதிய ஏற்பாடு எழுதப்பட்டுள்ளது. அப்போஸ்தலர்களின் பிரசங்கத்திலும் (அப்.3:15), பவுலின் எழுத்துக்களிலும் (I கொரி.15), பேதுருவின் நிருபத்திலும் (I பேது.1:4), யோவானின் எழுத்துக்களிலும் (வெளி.1:18) இயேசுவின் உயிர்த்தெழுதலைக் குறித்து எழுதப்பட்டுள்ளது. மேலும் இதர புதிய ஏற்பாட்டு பகுதிகளிலும் இயேசுவின் உயிர்த்தெழுதலைக் குறித்து அதிகமாக நாம் காணலாம்.

## 9. திருச்சபையும், ஞாயிறு ஆராதனையும்

இயேசுவின் உயிர்த்தெழுதலை மையமாக வைத்து தான் திருச்சபை தொடங்கப்பட்டது. இயேசு உயிர்த்தெழுந்த நாளான வாரத்தின் முதல்நாளை (ஞாயிறு) தான், "கர்த்தருடைய நாள்" எனக்கூறி அந்நாளில் விசுவாசிகள் தேவனை ஆராதித்து வந்தார்கள். யூதர்கள் சனிக்கிழமையில் (ஓய்வுநாள்) தான் தேவனை தொழுது வந்தார்கள்; ஆனால் கிறிஸ்தவர்கள் ஆரம்பம் முதலே ஞாயிற்றுக்கிழமையில் (கர்த்தருடைய நாள்) தான் தேவனை

ஆராதித்து வந்தார்கள் (வெளி.1:10). கர்த்தருடைய நாள் என்பது கர்த்தர் உயிர்த்தெழுந்த நாளை குறிக்கிறது. ஒரு கட்டுக்கதையின் பின்னணியத்தில் ஒருபோதும் இந்த மாற்றம் நடந்திருக்க சாத்தியமே இல்லை. இன்றைக்கும் கூட கிறிஸ்தவர்கள் ஞாயிறு ஆராதனைக்கு மிகவும் முக்கியத்துவம் கொடுக்கிறார்கள்.

எருசலேமில் உள்ள யூதர்கள் கூட இயேசு உயிர்த்தெழுந்தார் என்ற உண்மையை அறிந்திருந்தபடியால் தான், பேதுருவின் முதல் பிரசங்கத்திலேயே 3000 பேர் அதை விசுவாசித்து இயேசுவை ஏற்றுக் கொண்டார்கள் (அப்.2:41). பின்பு 5000 பேர் அவரை ஏற்றுக் கொண்டார்கள் (அப்.4:4). அநேக ஆசாரியர்கள் கூட இயேசுவை ஏற்றுக்கொண்டார்கள் (அப்.6:7).

### 10. "நாம்" அவருடைய சாட்சிகள்

இயேசுவை விசுவாசித்து அவரை ஆண்டவராகவும் இரட்சகராகவும் ஏற்றுக் கொண்டிருக்கிற நாம் அனைவருமே அவரது உயிர்த்தெழுதலுக்கு சாட்சிகளாய் இருக்கிறோம். இந்த உலகில் உள்ள கோடிக்கணக்கான கிறிஸ்தவர்களின் நம்பிக்கையே மிக பெரிய ஆதாரமாக உள்ளது. உயிர்த்தெழுதலை காணாதிருந்தும் விசுவாசிக்கிறவர்கள் பாக்கியவான்கள் என இயேசுவே கூறியுள்ளார் (யோவா.20:29). அப்படியென்றால் அவரை விசுவாசிக்கிற நாம் அனைவரும் பாக்கியசாலிகளாய் உள்ளோம். மேலும் ஒவ்வொரு விசுவாசியும் ஞானஸ்நானம் எடுக்கும் போது கிறிஸ்துவின் மரணத்தையும் அவரது உயிர்த்தெழுதலையும் பறைசாற்றுகிறார்கள் (ரோம.6:3-11).

## உயிர்த்தெழுந்த இயேசுவின் தரிசனங்கள் (Appearararances of Resurrected Jesus)

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்த பின்பு நாற்பது நாள் இந்த உலகத்தில் இருந்த போது தம்மை பலருக்கும் காண்பித்தார். அவர் பரமேறுவதற்கு முன்பு 11 வித்தியாசமான முறைகளில் தம்மை வெளிப்படுத்தியிருந்தார். அவைகளை கீழேக் காணலாம்.

### 1. மகதலேனா மரியாள் (மாற்.16:9-11; யோவா.20:11-18)

வாரத்தின் முதல் நாள் அதிகாலையிலே மரியாள் கல்லறையினருகே நின்று அழுதுக் கொண்டிருந்தப் போது,

கல்லறையின் உள்ளே வெள்ளுடை தரித்திருந்த இரண்டு தூதர்களை கண்டாள். அவர்கள் அவளிடம்: ஸ்திரீயே ஏன் அழுகிறாய் என்று கேட்டபோது, என் ஆண்டவரை எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள், அவரை வைத்த இடம் எனக்கு தெரியவில்லை என்றாள். எப்படியாவது இயேசுவின் சரீரத்தையாவது பார்க்க வேண்டும் என்று மரியாள் மிகுந்த ஏக்கத்தோடு இருந்தாள். பின்னர் அவள் திரும்பி பார்த்தபோது, இயேசு நிற்கிறதைக்கண்டும், அவர் இயேசு என்பதை அறியாதிருந்தாள். ஏனென்றால் அது மங்கலான அதிகாலை நேரமாயிருந்தது, மேலும் அது புதிய உயிர்த்தெழுந்த சரீரமாகவும் இருந்தபடியால் எளிதாக அடையாளம் கண்டுக்கொள்ள இயலவில்லை.

ஏற்கனவே தூதர்கள் அவளிடம் கேட்டது போல, இப்பொழுது இயேசுவும் அவளிடம்: ஸ்திரீயே ஏன் அழுகிறாய்? யாரைத் தேடுகிறாய்? என்று கேட்டார். அவள் அவரைத் தோட்டக்காரன் என்று எண்ணினாள். அந்த தோட்டம் அரிமத்தியா ஊரான யோசேப்புடையதாயிருந்தது. ஆகவே இந்த தோட்டக்காரர் தான் அவரை எடுத்திருக்க வேண்டும் என எண்ணி: ஐயா, நீர் அவரை எடுத்துக்கொண்டு போனதுண்டானால், அவரை வைத்த இடத்தை எனக்கு சொல்லும், நான் போய் அவரை எடுத்துக் கொள்ளுவேன் என்றாள். அவளுடைய இந்த பாசத்திற்கு காரணம் என்னவென்றால், இயேசு அவளிடம் இருந்து ஏழு பிசாசுகளை துரத்தியிருந்தார். பிசாசின் பிடியில் இருந்தபோது எத்தகைய பாடுகளை அனுபவித் திருந்திருப்பாள் என நமக்கு தெரியும். அவ்வளவு பாடுகளிலிருந்தும் விடுதலைக் கொடுத்து, சமுதாயத்தில் தன்னையும் தலைநிமிர்ந்து வாழ வழிசெய்த இயேசுவின் மேல் பாசம் இல்லாமல் எப்படி இருக்க முடியும்?

இயேசு அவளுடைய கண்ணீரையும் வேதனையையும் அகற்றும்படியாக, அவளை பார்த்து: மரியாளே என்றார். உடனடியாக அவள் திரும்பி பார்த்து: ரபூனி என்றாள். ரபூனி என்ற அரமேயு வார்த்தையின் அர்த்தம் "என் போதகரே" என்பதாகும். அவள் உடனடியாக தனது இயேசுவின் குரலை அடையாளம் கண்டுக் கொண்டாள். உண்மையான ஆடுகள் மேய்பனின் குரலை அடையாளம் கண்டுக்கொள்ளும் (யோவா.10:3, 4). அவள் இயேசுவின் அருகில் வந்த உடனடியாக அவர்: என்னைத்தொடாதே, நான் இன்னும் என் பிதாவினிடத்திற்கு ஏறிப்போகவில்லை; நீ என் சகோதரரிடத்திற்கு

போய் நான் என் பிதாவினடத்திற்கும் உங்கள் பிதாவினிடத்திற்கும், என் தேவனிடத்திற்கும் உங்கள் தேவனிடத்திற்கும் ஏறிப்போகிறேன் என்று அவர்களுக்கு சொல் என்றார். என்ன ஒரு விசாரிப்பு! இயேசு தனக்கு காட்சியளித்ததை அவள் போய் சீஷரிடம் கூறின போது அவர்கள் அதை நம்பவில்லை.

பிரதான ஆசாரியன் பாவநிவாரண பலியின் இரத்தத்தை தேவனுடைய சமூகத்தில் தெளித்து, பாவநிவிர்த்தி செய்வது போல; கிறிஸ்துவும் சிலுவையில் நிறைவேற்றிய பாவநிவாரண பலியினால், பாவ நிவிர்த்தியை செய்யும்படி பிதாவின் சமூகத்தில் சென்றார் என வேத பண்டிதர்கள் கூறுகிறார்கள். அப்பொழுது தான் மரியாளின் கண்ணீரைக் கண்டு, அவர் திரும்பி வந்து அவளிடம் தாம் உயிரோடிருப்பதை காண்பித்துவிட்டு, மறுபடியும் பிதாவிடம் திரும்பி சென்று தன்னை அவர் சமூகத்தில் பாவபலியின் நிறைவேறுதலாக ஒப்புவித்தார். ஆகவே தான் பிதாவிடம் செல்வதற்கு முன்பு தன்னை தொட அவர் அனுமதியளிக்கவில்லை. அதன் பிறகு பிதாவிடம் சென்று, மறுபடியும் திரும்பி வந்து அநேகருக்கு தம்மை வெளிப்படுத்தின போது அவரை தொட அனுமதியளித்தார் (யோவா.20:27).

இந்த மரியாள் கலிலேயாவில் உள்ள "மக்தலே" என்ற ஊரை சேர்ந்தவளானபடியால் மகதலேனா மரியாள் என அழைக்கப்பட்டாள். இந்த ஊர் கப்பர்நகூம் அருகே அமைந்திருந்தது. அவளிடமிருந்து இயேசு ஏழு பிசாசுகளை துரத்தின நாள் முதல் அவள் இயேசுவை பின்பற்றத் தொடங்கினாள் (லூக்.8:2; மாற்.16:10). அன்று முதல் இயேசுவின் மரணத்தின் போது கூட அவரை விட்டு பிரியாமல் சிலுவையின் அடிவாரத்தில் இருந்தாள்; அடக்கத்தின் போதும் அவர்களோடு இருந்தாள் (லூக்.23:49, 55-56); மாற்.15:47; யோவா.19:25). அடக்கத்திற்கு பிறகு எல்லோரும் தங்கள் இருப்பிடத்திற்கு திரும்பி போனபோதும், மரியாள் மட்டுமே கண்ணீரோடு அவரைத் தேடிக் கொண்டிருந்தாள். ஆகவே உயிர்த்தெழுந்த இயேசுவின் முதல் தரிசனத்தையும் பெற்றாள். இயேசுவின் உயிர்த்தெழுந்த செய்தியை முதலில் அறிவித்த சுவிசேஷ பணியாளரும் ஆனாள் (யோவா.20:18; மாற்.16:9).

நாமும் கூட இயேசுவை கண்ணீரோடு தேடுவோம் என்றால், நிச்சயமாக அவர் நமக்கு உதவி செய்வார் என்பதில் சந்தேகமேயில்லை.

## 2. பெண்கள் (மத்.28:1-10; லூக்.24:10)

இயேசு கிறிஸ்துவின் இரண்டாவது தரிசனத்தையும் பெண்களே கண்டார்கள் என்பது ஆச்சரியமானது தான்! இந்த பெண்கள் எல்லாரும் மரியாளை போல அவரை ஆவலுடன் தேடினார்கள்.

இந்தக்கூட்டத்தில் மகதலேனா மரியாள், யோவன்னாள், யாக்கோபின் தாயாகிய மரியாள் மற்றும் வேறு அநேக ஸ்திரீகளும் இருந்தார்கள் (லூக்.23:10). தூதர்கள் கூறிய உயிர்த்தெழுதலின் வார்த்தைகளை சீஷர்களுக்கு அறிவிக்க இவர்கள் போய்க்கொண்டிருந்த வேளையில், இயேசு தாமே அவர்களுக்கு எதிர்ப்பட்டு: வாழ்க என்றார். அவர்கள் கிட்ட வந்து, அவர் பாதங்களை தழுவி அவரைப் பணிந்துக் கொண்டார்கள். மகதலேனா மரியாள் முதலில் இயேசுவை தரிசித்தப் போது, அவர் அவளை தொட அனுமதிக்கவில்லை. ஆனால் இப்போது அவர்கள் பாதங்களை தொட்டு பணிந்துக் கொண்டார்கள் என்று பார்க்கிறோம். அப்படியென்றால் பிதாவிடம் தம்மை காண்பித்துவிட்டு இயேசு மறுபடியும் இவ்வுலகில் வந்தார் என்பதை நாம் தெரிந்துக் கொள்ள வேண்டும்.

தூதர்கள் அந்த பெண்களிடம் கூறிய அதே வார்த்தையை தான் இயேசுவும் அவர்களிடம் கூறினார்: பயப்படாதிருங்கள், நீங்கள் போய், என் சகோதரர் கலிலேயாவுக்குப் போகும்படி அவர்களுக்கு சொல்லுங்கள்; அங்கே அவர்கள் என்னைக் காண்பார்கள் என்றார். இயேசு உயிர்த்தெழுந்த பிறகு தமது சீடர்களை "சகோதரர்கள்" என்று அழைப்பது குறிப்பிடத்தக்கதாகும். பெண்கள் போய் இயேசுவின் உயிர்தெழுதலை குறித்து அவர்களிடம் கூறினபோதும் அவர்கள் அதை நம்பவில்லை.

## 3. எம்மாவு சீஷர்கள் (மாற்.16:12-13; லூக்.24:13-35)

இயேசு உயிர்த்தெழுந்த அன்றையதினமே பிற்பகல் வேளையில், இயேசுவின் சீஷர்களில் இரண்டு பேர் எருசலேமிலிருந்து 7 அல்லது 8 மைல் (12 கிலோமீட்டர்) தொலைவில் உள்ள எம்மாவு என்னும் தங்கள் கிராமத்துக்கு போனார்கள். இவர்கள் இயேசுவின் 12 சீஷர்களின் இருவர் அல்ல; அவரது 70 பேர்கொண்ட சீஷர்களில் இரண்டு பேர் என கருதுகிறேன். இந்த இருவரில் ஒருவர் பெயர்

கிலெயோப்பா; இன்னொருவர் அவரது மனைவியாக இருக்கலாம் என சிலர் கருதுகிறார்கள். ஏனெனில் இவரது மனைவியும் இயேசு சிலுவையில் அறையப்பட்ட போது உடனிருந்தார் (யோவா.19:25). இவர்கள் எம்மாவுலிருந்து பண்டிகைக்காக எருசலேம் வந்திருக்கலாம் என நம்பப்படுகிறது. ஆனால் வேறு சிலர் கூறுவது என்னவெனில், இன்னொருவர் என்பது அவரது மனைவியல்ல; வேறு ஒரு சீஷனாக இருக்கலாம் என்கிறார்கள்.

எப்படியாயினும் இந்த இருவரும் இயேசுவின் மிக முக்கியமான சீடர்களாய் இருந்துள்ளார்கள். இயேசுவின் 12 சீஷர்களோடு இவர்களும் நல்ல ஒரு ஐக்கியம் உள்ளவர்களாய் இருந்து இயேசுவின் சேவையை செய்திருக்க வேண்டும். ஏனெனில் எங்கள் கூட்டத்தை சேர்ந்த சில ஸ்திரீகள் அதிகாலமே கல்லறையினிடத்திற்குப்போய், இயேசுவின் சரீரத்தை காணாமல் திரும்பி வந்து, தேவதூதரைத் தரிசித்த விதத்தை சொல்லி எங்களைப் பிரமிக்கப்பண்ணினார்கள் என இயேசுவிடமே இவர்கள் கூறினார்கள் (லூக்.24:22-23). ஆகவே ஸ்திரீகள் வந்து இயேசு உயிர்த்தெழுந்த செய்தியை சீஷர்களிடம் கூறியப்போது இவர்களும் அவர்களோடு இருந்திருந்தார்கள் என்பது புலப்படுகிறது. மேலும், எங்களில் சிலர் (பேதுருவும், யோவானும்) கல்லறையினிடத்திற்குப் போய், ஸ்திரீகள் சொன்னப்படியே திறந்த கல்லறையை கண்டார்கள். இயேசுவையோ காணவில்லை என்றார்கள் (லூக்.24:24). ஆகவே இவர்கள் இயேசுவோடும் அவரது சீடர்களோடும் நெருங்கிய கூட்டாளிகளாய் இருந்துள்ளார்கள்.

இயேசுவை குறித்த அறிவும் அவர்களுக்கு இருந்தது. அவர்கள் இயேசுவிடமே அதை கூறியிருந்தார்கள். அவர் தேவனுக்கு முன்பாகவும் ஜனங்களுக்கு முன்பாகவும், செய்கையிலும் வாக்கிலும் வல்லமையுள்ள தீர்க்கதரிசியாய் இருந்தார் என்றும், அவரே இஸ்ரவேலை மீட்டு இரட்சிக்கும் மேசியா என்றும் நம்பியிருந்தார்கள். ஆனால் அவர் சிலுவையில் அறையப்பட்டு மரித்தப்படியாலும், இப்பொழுது அவரை காணாதபடியாலும் அந்த நம்பிக்கையை இழந்துப்போனார்கள். பழைய ஏற்பாட்டில் கூறப்பட்டுள்ள பாடுபடும் தாசன் (Suffering Servant) என்பவரை குறித்து நன்கு

அறிந்திருந்தார்கள் (சங்.22, 69; ஏசா.52, 53 அதிகாரங்கள்). ஆனால் அவரும் மேசியாவும் ஒரே நபர் என்பதை அறியாமல் போனார்கள். மேசியாவும் பாடுபடும் தாசனும் ஒருவர் தான் என்பதை இயேசு ஏற்கனவே அவர்களுக்கு போதித்திருந்தார் (மாற்.8:31-32; 9:31-32; லூக்.18:31-34). பாடுபட்ட பிறகு தான் முடிவில்லாத அவருடைய நித்திய ராஜ்யத்தை ஸ்தாபிப்பார் என்பதை அறியாமல் போனார்கள்.

இயேசு அவர்களை கடிந்துக்கொண்டு, மேசியாவாகிய கிறிஸ்து இவ்விதமாகப்பாடுபடவும் தமது மகிமையில் பிரவேசிக்கவும் வேண்டியதில்லையா? என சொல்லி, மோசே எழுதிய நியாயப்பிரமா ணத்திலிருந்தும், தீர்கதரிசிகள் எழுதிய புத்தகங்களிலிருந்தும் அவர்களுக்கு விவரித்து கூறினார். ஆம் இயேசு தம்மை நேரடியாக பெண்களிடம் வெளிப்படுத்தினது போல இவர்களுக்கு வெளிப்படுத் தாமல், அவர்களை வேத வசனத்தில் உறுதிப்படுத்தினார். வசனத்தை புரிந்துக்கொண்டு அதை விசுவாசிக்கும் படி துணை செய்தார்.

அவர்கள் வீட்டை அடைந்தபோது சாயங்காலமாயிற்று. அப்பொழுது அவர்கள் அவரை வருந்தி அழைத்துக் கொண்டபடியால் இயேசு அவர்களோடு சென்றார். அங்கு சாப்பிடும்படி பந்தியிருக் கும்போது இயேசு அப்பத்தை எடுத்து வழக்கம்போல ஆசீர்வதித்து, அதை பிட்டு அவர்களுக்கு கொடுத்தார். அப்பொழுது அவர்கள் அவரை அறிந்துக்கொண்டார்கள், இயேசுவும் மறைந்து போனார். இயேசு வேதவாக்கியங்களை விளக்கிகாட்டின போது, அவர்கள் இருதயம் கொழுந்து விட்டு எரிந்ததை நினைவுக் கூர்ந்தார்கள். உடனடியாக அந்த மாலைநேரத்திலே அவர்கள் எழுந்திருந்து, எருசலேமுக்கு திரும்பி போய் மேல் வீட்டறையில் கூடியிருந்த அவர்கள் சக சீஷர்களிடம் அதை அறிவித்தார்கள்.

### 4. சீமோன் பேதுரு (லூக்.24:34; I கொரி.15:5)

எம்மாவு சீஷர்கள் பிற்பகலில் தங்கள் கிராமத்துக்கு போகிற வரையிலும் இயேசு பெண்களை தவிர எந்த சீஷனுக்கும் தம்மை காண்பிக்கவில்லை என இவர்களே கூறியிருந்தார்கள் (லூக்.24:23, 24). ஆனால் அவர்கள் மாலை நேரத்தில் திரும்பி வந்து இயேசுவின் தரிசனத்தை சீஷர்களிடம் கூறிய போது, சீமோனுக்கும் இயேசு காட்சியளித்ததை தெரிந்துக் கொண்டார்கள் (லூக்.24:34). ஆகவே பிற்பகலுக்கும் மாலை நேரத்துக்கும் இடைப்பட்ட நேரத்தில் தான்

இயேசு சீமோன் பேதுருவுக்கு தம்மை காண்பித்திருக்க வேண்டும். ஆனால் அந்த தரிசனத்தின் விபரம் கூறப்படவில்லை.

**5. பத்து அப்போஸ்தலர்கள் (லூக்.24:36-48; யோவா.20:19-23)**

வாரத்தின் முதல் நாளான ஞாயிற்றுக்கிழமை சாயங்காலத்திலே, சீஷர்கள் யூதர்களுக்கு பயந்ததினால் கதவுகளை பூட்டிக்கொண்டு உள்ளே இருந்தார்கள். ஏனெனில் இயேசுவின் சரீரத்தை சீஷர்கள் தான் திருடி சென்றார்கள் என யூதர்கள் பொய்குற்றசாட்டை கூறிவந்தப்படியால், எந்த நேரத்திலும் அவர்கள் சீஷர்களை தேடி வந்து கைது செய்யக்கூடும் என்ற அச்சத்தில் கதவை பூட்டியிருந்தார்கள் என கருதுகிறேன். அந்த நேரத்தில் தோமா அங்கேயில்லை. மற்ற 10 சீஷர்களும் வேறு சிலரும் அதாவது எம்மாவு சீஷர்களும், பல ஸ்திரீகளும் கூட இருந்தார்கள்.

அப்பொழுது இயேசு வந்து அவர்கள் நடுவே நின்று: உங்களுக்கு சமாதானம் என்றார். அவர்கள் பயந்து, ஒரு ஆவியைக் காண்கிறதாக நினைத்தார்கள். ஏனென்றால் பூட்டப்பட்ட அறைக்குள் ஆவியால் தானே பிரவேசிக்க முடியும்? இயேசு அவர்களை நோக்கி: நீங்கள் ஏன் கலங்குகிறீர்கள்; உங்கள் இருதயங்களில் சந்தேகங்கள் எழும்புகிறதென்ன? நான் தான் என்று அறியும்படி, என் கைகளையும், என் கால்களையும் பாருங்கள்; என் விலாவையும் தொட்டு பாருங்கள்; நீங்கள் காண்கிறப்படி, எனக்கு மாம்சமும் எலும்புகளும் உண்டாயிருக்கிறது போல ஒரு ஆவிக்கு இராதே என்று சொல்லி அவர்களை தேற்றினார், சீஷர்களும் சந்தோஷப்பட்டார்கள்.

இங்கு நான் தோமாவை பாராட்ட விரும்புகிறேன். ஏனென்றால் இந்த சீஷர்கள் இயேசுவை முகமுகமாக பார்த்தபிறகு கூட சிரமத்தோடு தான் நம்பினார்கள். அப்படியென்றால் காணாமல் நம்புவது கடினம் தானே? தோமா மட்டும் அவிசுவாசி அல்ல, எல்லா சீஷர்களுமே முதலில் நம்பாமல் சந்தேகப்பட்டார்கள் என்பதை இங்கு பதிவு செய்கிறேன். அவர்கள் சந்தோஷப்பட்டாலும் கூட விசுவாசியாமல் இருந்தப்படியால்: புசிக்கிறதற்கு ஏதாகிலும் இங்கே உண்டா? என்றுக்கேட்டார். அப்பொழுது அவர்கள் பொரித்த மீன் கண்டத்தையும் தேன் கூட்டுத்துணிக்கையையும் அவருக்கு கொடுத்தார்கள். அவைகளை அவர் வாங்கி அவர்களுக்கு முன்பாக புசித்தார். இங்கே சீஷர்கள் ஏற்கனவே ஆகாரம் உடையவர்களாய்

இருந்தபடியால், தோமா போஜனம் வாங்கும்படி வெளியே சென்றிருக்க மாட்டார் என கருதுகிறேன். ஒருவேளை வெளியே என்னன்ன நடக்கிறது என்பதை அறிந்து வரும்படி போயிருப்பாரோ? எப்படியாயினும் சீஷர்களிடையே அவர்தான் கொஞ்சம் தைரியசாலியாய் இருந்திருப்பார்!

இயேசு அவைகளை புசித்துவிட்டு, மோசேயின் நியாயப்பிரமாணத்திலும், தீர்க்கதரிசிகளின் நூல்களிலும், சங்கீதங்களிலும் எழுதியிருக்கிறபடி தாம் பாடுபட்டு மரித்து பின்னர் தான் மகிமையடைய வேண்டியதாயிருந்தது என்பதை விளக்கமாக கூறினார். அவர்கள் அதை புரிந்துக் கொள்ளும்படி அவர்கள் மனக்கண்களையும் திறந்தார். இங்கும் கூட இயேசு தமது சீஷர்களை வசன அறிவில் காலூன்றி நிற்க உதவி செய்தார். ஏனென்றால் விசுவாசிப்பது மட்டும் போதாது; போதுமான வசன அறிவும் இருந்தால் தான் உபத்திரவ நேரங்களில் இயேசுவுக்காய் உறுதியுடன் நிற்க முடியும். ஆகவே தான் நாம் அழிவில்லாத வித்தாகிய வசனத்தினாலே மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறோம் என பேதுரு கூறியுள்ளார் (I பேது.1:23).

பின்னர் இயேசு அவர்கள் மேல் ஊதி: பரிசுத்தாவியை பெற்றுக்கொள்ளுங்கள் என்றார் (யோவா.20:22). இது பரிசுத்தாவியின் அபிஷேகத்தின் நிறைவு அல்ல, ஏனெனில் அந்த நிறைவை பெறும்படி போய் எருசலேமில் காத்திருங்கள் என இயேசுவே அவர்களுக்கு கூறியிருந்தார். அதன்படி சீஷர்கள் போய் 10 நாட்கள் காத்திருந்து பெந்தேகொஸ்தே நாளின் போது தான் அந்த அபிஷேகத்தின் நிறைவை பெற்றுக் கொண்டார்கள். "ஊதி" (Breathed) என்ற வார்த்தையை மூன்று முறை காணலாம்.

- ஆதி. 2:7 → தேவன் ஊதினபோது மனிதனுக்குள் ஜீவன் வந்தது
- எசே. 37:9, 10 → ஊதினப்போது எலும்புகளுக்குள் ஜீவன் வந்தது
- II தீமோ.3:16 → வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது என தமிழ் வேதாகமம் கூறும்போது, ஆங்கில வேதாகமத்தில் (NIV) All Scripture is God - breathed என கூறப்பட்டுள்ளது. அதற்கு வேதவாக்கியங்கள் எல்லாம் தேவனால் ஊதப்பட்டிருக்கிறது என்று பொருள். அப்படியானால் வேதவசனம் தேவ

ஆவியினால் ஊதப்பட்டுள்ளதால் அதற்குள் ஜீவன் உள்ளது என்று அர்த்தம்.

ஆகவே, ஊதி பரிசுத்தாவியை பெற்றுக்கொள்ளுங்கள் என்று கூறியதின் மூலம், ஜீவனும், பெலனும், தைரியமும் இல்லாமல் இருந்த சீஷர்களை தேவன் பெலப்படுத்தி புது ஜீவனை கொடுத்தார் என்று அறிய முடிகிறது. இங்கு தேவனுடைய படைப்பின் வல்லமையை மீண்டுமாக விளக்கியுள்ளார். ஊதுவதின் மூலம் ஆதாமுக்குள்ளும் எலும்புகளுக்குள்ளும் வேத வாக்கியத்துக்குள்ளும் எப்படி ஜீவன் வந்ததோ, அந்த ஜீவனை சீஷர்களுக்கும் கொடுத்தார். ஆகவே அதே பாணியில் மனிதர்கள் ஊதுவதின் மூலம் எதையும் யாருக்கும் கொடுக்க முடியாது என்பதையும் அறிந்துக் கொள்ள வேண்டும். கிறிஸ்துவுக்குள் நித்திய ஜீவன் அடங்கியிருந்தபடியால் (யோ.1:4) அவர் மட்டுமே அதை கொடுக்க முடியும்.

மேலும் இயேசு அவர்களை நோக்கி: எவர்களுடைய பாவங்களை மன்னிக்கிறீர்களோ அவைகள் அவர்களுக்கு மன்னிக்கப்படும், எவர்களுடைய பாவங்களை மன்னியாதிருக் கிறீர்களோ அவைகள் அவர்களுக்கு மன்னிக்கப்படாதிருக்கும் என்றார் (யோவா.20:23). அப்படியென்றால் சீஷர்களுக்கு பாவத்தை மன்னிக்கும் அதிகாரம் கொடுக்கப்பட்டதா? இல்லவே இல்லை. அதாவது அவர்களுக்கு கொடுக்கப்பட்ட ஊழியமானது, ஜனங்களை ஜீவனுக்குள்ளாக அழைத்து வருவது மட்டுமல்ல, தேவனுடைய மன்னிப்புக்குள்ளாகவும் அவர்களை கொண்டுவர வேண்டும் என்பதாகும். ஒரு மனிதன் இன்னொரு மனிதனுக்கு எதிராக செய்த பாவத்தை அவனிடம் வந்து கூறி என்னை மன்னியுங்கள் என்று கூறும் போது முரட்டாட்டம் பண்ணாமல் மன்னித்துவிடுங்கள் என்பதாகும். ஏனெனில் நாம் பிறரை மன்னித்தால் தான், தேவனிடமிருந்து மன்னிப்பை பெற்றுக்கொள்ள முடியும் (மாற்.11:26). ஆகவே பாவத்திலிருந்து மன்னிப்பை கொடுப்பவர் இயேசு ஒருவரே (I யோவா.1:9; I தீமோ.1:15). தேவன் ஒருவருக்கே பாவங்களை மன்னித்து நம்மை இரட்சிக்க அதிகாரம் உண்டு, ஏனெனில் அவர் ஒருவரே பாவமில்லாதவர் (யோவா. 8:46).

### 6. பதினொரு அப்போஸ்தலர்கள் (யோவா.20:26-29)

ஏற்கனவே பத்து அப்போஸ்தலர்களுக்கு இயேசு தரிசனமான போது, தோமா இல்லாதிருந்தான். ஆகவே அவன் திரும்பி வந்த போது

இயேசு காட்சியளித்தார் என்ற சீஷருடைய வார்த்தையை நம்பவில்லை. மேலும், அவருடைய கைகளில் ஆணிகளினாலுண்டான காயத்தை நான் கண்டு, என் கையை அவருடைய விலாவிலே போட்டாலொழிய விசுவாசிக்க மாட்டேன் என்றான் (யோவா.20:25). இந்த தோமாவின் மறுபெயர் திதிமு என்பதாகும்.

எட்டு நாட்களுக்கு பின்பு சீஷர்கள் அனைவரும், தோமாவோடு கூட பூட்டப்பட்ட வீட்டிற்குள்ளே இருந்தபோது, இயேசு வந்து நடுவே நின்று: உங்களுக்கு சமாதானம் என்றார் (யோவா.19:26). இயேசு உயிர்த்தெழுந்த அன்றையத்தினமே ஐந்து முறை தன்னை வெளிப்படுத்தியிருந்தார். இப்போது மறுபடியும் 8 நாட்களுக்கு பிறகு வரும்போது கூட சீஷர்கள் பயந்தவர்களாய் இருந்தார்கள். இயேசு தோமாவை நோக்கி: நீ உன் விரலை இங்கே நீட்டி, என் விலாவிலே போடு, அவிசுவாசியாயிராமல் விசுவாசியாயிரு என்றார். தோமாவும் அவருக்கு பிரதியுத்தரமாக: என் ஆண்டவரே! என் தேவனே! என்று கதறினான். ஒரே நாளில் ஐந்து முறை இயேசு தம்மை சீஷர்களுக்கு வெளிப்படுத்தியிருந்தார். ஆனால் தோமாவுக்கு தம்மை காண்பிப்பதற்கு ஒரு வாரம் சென்றது. இதன் மூலம் தோமா மறுபடியும் அவிசுவாசத்தின் உச்சத்துக்கு சென்றிருப்பான், எல்லோரும் இயேசுவை கண்டோம் எனக்கூறும் போது தோமா மட்டும், அவரை பார்க்க முடியாத ஏக்கத்திலும், அவிசுவாசத்திலும் அந்த எட்டு நாட்கள் வாழ்ந்திருந்தான். அந்த நாட்கள் அவனுக்கு மிகவும் கொடிய நாட்களாயிருந்திருக்கும்.

இயேசுவின் மிகுந்த இரக்கத்தை கவனியுங்கள்! கண்ணீரோடு நின்றவளுக்கும், பதட்டத்தோடு சென்ற பெண்களுக்கும், நம்பிக்கை இழந்துப்போன சீடர்களுக்கும், சோர்ந்துப்போன சீமோனுக்கும், பயந்து போன அப்போஸ்தலர்களுக்கு மட்டுமல்ல, விசுவாசத்தில் குன்றிபோயிருந்த தோமாவுக்கும் தம்மை வெளிப்படுத்தினார். அதன் பிறகு இயேசு தோமாவிடம்: நீ என்னைக் கண்டதினாலே விசுவாசித்தாய், காணாதிருந்தும் விசுவாசிக்கிறவர்கள் பாக்கியவான்கள் என்றார். அப்படியென்றால், இயேசுவை கண்ணாரக் காணாமல், அவருடைய வார்த்தைகளை மட்டுமே நம்பி அவரை விசுவாசிக்கிற இக்காலத்து விசுவாசிகள் எத்தனை பாக்கியம் பெற்றவர்கள் என்பதை எண்ணிப்பாருங்கள்!

தோமாவின் பிற்கால ஊழியத்தைக் குறித்து அநேக மாறுப்பட்ட கருத்துக்கள் இருந்தாலும் கூட, அநேகரால் நம்பபடுவது

என்னவென்றால், இவர் இந்தியாவின் மேற்கு கடற்கரையிலுள்ள, கேரளாவில் வாழ்ந்த யூதர்களுக்கு கிறிஸ்துவின் நற்செய்தியை அறிவிக்க கி.பி.52-ல் கிரங்கனூர் வந்தார் என்பதாகும். அங்கு பல உயர்க்குல பிராமண குடும்பத்தினரும் இரட்சிக்கப்பட்டார்கள். பின்பு பல சபைகளை நிறுவினார், அந்த சபைகள் இன்னும் கூட உள்ளன. பின்னர் பல பகுதிகளில் சுவிசேஷம் அறிவித்துவிட்டு, இறுதியாக தமிழ்நாட்டில் சென்னையில் வந்து சேர்ந்தார். அங்குள்ள ஒரு குன்றின் மீது இருந்த ஒரு குகையை இருப்பிடமாகக் கொண்டு சுவிசேஷ பணியாற்றினார். பின்னர் அந்த குகையிலேயே சமய விரோத மனிதர்களால் கி.பி.72-ல் ஈட்டியால் குத்திக் கொல்லப்பட்டார். அவருடைய உடலின் பாகம் புதைக்கப்பட்டுள்ள சாந்தோம் என்னும் இடத்தில் இன்றும் கூட பிரபலமான ஒரு கத்தோலிக்க ஆலயம் உள்ளதை காணலாம். இயேசுவை முதலில் விசுவாசியாத படியினால், அதற்குரிய பிராயசித்தமாக பிற சீஷர்களால் கூட வரமுடியாத தொலைவில் வந்து சுவிசேஷ பணியில் ஈடுப்பட்டிருப்பாரோ?

### 7. ஏழு சீஷர்கள் (யோவா.21:1-18)

இயேசு திபேரியா கடற்கரையில் (கலிலேயா) மறுபடியும் தம்மை சீஷருக்கு வெளிப்படுத்தினார். அப்பொழுது சீமோன் பேதுரு, தோமா, நாத்தான்வேல், யாக்கோபு, யோவான் மற்றும் வேறு இருவர் ஆக ஏழு பேர் இருந்தார்கள். பேதுரு தான் அவர்கள் எல்லோரையும் மீன்பிடிக்கும்படி அழைத்து சென்றிருந்தான். அந்த இரவிலே அவர்களால் ஒரு மீனையும் பிடிக்க முடியவில்லை. விடியற்காலமான போது, இயேசு வந்து, பிள்ளைகளே புசிக்கிறதற்கு ஏதாகிலும் உங்களிடத்தில் உண்டா என்று கேட்டார். அவர்கள் ஒன்றுமில்லை என்றார்கள். அதற்கு இயேசு: நீங்கள் படவுக்கு வலதுபுறமாக வலையை போடுங்கள் என்றார். அப்படியே அவர்கள் போட்டபோது 153 பெரிய மீன்கள் கிடைத்தது. இதைப் போன்ற ஒரு அற்புதத்தை ஏற்கனவே இயேசு பேதுருவின் வாழ்வில் செய்திருந்தார் (லூக்.5:1-10). ஆனால் இயேசு உயிர்த்தெழுந்த பிறகு செய்த முதல் அற்புதம் இதுவே ஆகும்.

அவர் இயேசு என்பதை அறிந்தவுடன், பேதுரு வஸ்திரம் இல்லாமல் இருந்தப்படியால், தன் மேற்சட்டையைக் கட்டிக் கொண்டு கடலில் குதித்தான். அவர்கள் கரையில் வந்தப்போது, கரி நெருப்புப்

போட்டிருக்கிறதையும், அதின்மேல் மீன் வைத்திருக்கிறதையும், அப்பத்தையும் கண்டார்கள். இயேசு அவர்களை எவ்வளவாய் விசாரிக்கிறார் என்பதை கவனியுங்கள். பின்னர் இப்பொழுது பிடித்த மீன்களில் சிலவற்றையும் கொண்டு வாருங்கள் என்று கூறினார். பின்பு அவர் அவர்களை நோக்கி: வாருங்கள் போஜனம் பண்ணுங்கள் என்று கூறி, அப்பத்தையும் மீனையும் எடுத்து அவர்களுக்கு கொடுத்தார். இயேசு சிறந்த சமையற்கலையை தெரிந்து வைத்திருந்தார்? இயேசுவின் அன்பை பாருங்கள்! இவ்வாறு சீஷர்களுக்கு தம்மை மூன்றாவது முறையாக வெளிப்படுத்தினார்.

ஏற்கனவே ஒருமுறை இரண்டு படவுகள் நிறைய மீன்களை சீமோனுக்கு கொடுத்தவுடன், நான் உன்னை மனிதர்களை பிடிக்கிறவனாக்குவேன் என கூறியிருந்தார் (லூக்.5:10). இப்போது மறுபடியும் 153 பெரிய மீன்களை கொடுத்துவிட்டு அந்த பணிக்காக இயேசு அவனை உறுதிப்படுத்தினார். நீ என்னை நேசிப்பது உண்மையானால் என் ஆடுகளை (ஜனங்களை) நடத்த வேண்டும் என்ற புதிய பொறுப்பை அவனுக்கு கொடுத்தார். ஆம் நண்பர்களே, நாமும் கூட இயேசுவை நேசிப்பது உண்மையென்றால், அவரது ஊழியத்தில் நம்மையும் ஈடுபடுத்திக் கொள்ள வேண்டியது அவசியமானதாகும்.

### 8. பதினொரு அப்போஸ்தலர்கள் (மத்.28:16-20; மாற்.16:15-18)

இயேசு மரிப்பதற்கு முன்பும் (மத்.26:32); உயிரோடு எழுந்த பிறகு தூதர்கள் மூலமாகவும், அதன்பிறகு அவரும் கூட கலிலேயா தரிசனத்தை குறித்து சீஷர்களுக்கு அறிவித்திருந்தார் (மத்.28:7, 10). ஆனால் சீஷர்கள் முழுமையாக அவரை விசுவாசியாதபடியால் அங்கு போகாமலே இருந்தார்கள். அதன்பிறகு பலமுறை இயேசு அவர்களுக்கு காட்சியளித்து, அவர்களை வேதவசனத்தில் உறுதிப்படுத்திய பிறகு அவர்களின் விசுவாசமும் பெருகியது. ஆகவே இயேசுவின் வார்த்தைக்கு கீழ்படிந்து, கலிலேயாவிலே அவர் தங்களுக்கு குறித்திருந்த மலைக்கு போனார்கள். இந்த மலையின் பெயர் தாபோர் மலை ஆகும். சிலர் சந்தேகப்பட்டாலும் கூட, அப்போஸ்தலர்கள் அவரை விழுந்து பணிந்துக் கொண்டார்கள்.

இயேசு அவர்களிடம்: நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின்

நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுத்து, நான் உங்களுக்கு கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன் என்றார் (மத்.28:19, 20, மாற்.16:15). மூன்று கருத்துக்களை இயேசு சீஷர்களிடம் தெளிவாக கூறியுள்ளார்.

(i) பிரசங்கம் செய்யும்படி அல்ல; உபதேசம் செய்யும்படி கூறினார் (Not to preach, But to teach). உபதேசம் செய்வதின் மூலம் ஒருவன் ஆழமான வசன அறிவைப்பெற்று கிறிஸ்துவுக்குள் வளர முடியும்.

(ii) மதமாற்றம் செய்யும்படி அல்ல; சீஷராக்கும்படி கூறினார். (Not to convert; But to make disciples). நாம் யாரையும் மதமாற்றம் செய்ய முடியாது. ஆனால் அவர்களுக்கு உபதேசம் செய்வதின் மூலமாக அவர்களின் மனதில் ஒரு மாற்றத்தை கொண்டுவந்து சீஷராக்கலாம்.

(iii) குறுகிய வட்டத்துக்குள் அல்ல; உலகமெங்கிலும் போகும்படி கூறினார் (Not to limited area; But to all nations). இந்த உலகில் உள்ள அத்தனை ஜனங்களும் இயேசுவை விசுவாசித்து, அவருக்காய் வாழவேண்டும் என்பதே தேவனுடைய விருப்பமாகும்.

**9. 500 பேருக்கும் அதிகமானோர் (I கொரி.15:6)**

இந்த தரிசனம் எப்போது அவர்களுக்கு அருளப்பட்டது என தெரியவில்லை. இரண்டு விதமான கருத்துக்கள் கூறப்படுகிறது. ஒருவேளை தாபோர் மலையில் வைத்து அப்போஸ்தலர்களிடம் உலகமெங்கிலும் போய் சுவிசேஷத்தை அறிவியுங்கள் என்று கூறினபோது இந்த ஜனங்களுக்கும் தரிசனம் அளித்திருக்கலாம், அல்லது இயேசு கடைசியில் பரலோகத்திற்கு பரமேறுவதற்கு முன்பு ஒலிவமலையில் வைத்து சீஷர்களுக்கு தம்மை வெளிப்படுத்தியபோது, இவர்களுக்கும் காட்சியளித்திருக்கலாம் என நம்பப்படுகிறது. எப்படியாயினும் 500 பேருக்கும் அதிகமானோருக்கு இயேசு காட்சியளித்தது உண்மையே.

**10. யாக்கோபு (II கொரி.15:7)**

இந்த யாக்கோபு என்பவர் யோசேப்புக்கும் மரியாளுக்கும் பிறந்த, இயேசுவின் ஒன்றுவிட்ட சகோதரன் ஆவார். இவர் முதலில்

இயேசுவின் தெய்வீகத்தை நம்பவில்லை (யோவா.7:5). ஆனால் இயேசு உயிர்த்தெழுந்த பிறகு அவரை நம்பி தேவனாக ஏற்றுக்கொண்டான். அவருடைய தரிசனத்தையும் பெற்றான். பிறகு ஆதிசபையில் ஒரு தலைவரானார் (அப்.15:13; கலா.1:19; 2:9) இயேசுவுக்காக வல்லமையாக ஊழியம் செய்தார். யாக்கோபு எழுதிய நிருபத்தை எழுதியவரும் இவரே ஆவர் (யாக்.1:1).

### 11. சீஷர்களுக்கும், பொது ஜனங்களுக்கும் (அப்.1:4-9)

கடைசியாக ஒலிவமலையில் வைத்து இயேசு தம்முடைய சீஷர்களுக்கும், தம்மை பின்பற்றிய திரள் கூட்டமான ஜனங்களுக்கும் தம்மை வெளிப்படுத்தினார். ஏற்கனவே இயேசு கலிலேயாவில் உள்ள தாபோர் மலையில் வைத்து தமது சீஷர்களிடம் ஊழியத்தை குறித்த கட்டளையை கொடுத்திருந்தார். ஆனால் அந்த ஊழியத்தை சிறப்பாக செய்யவேண்டுமானால், காத்திருந்து பரிசுத்த ஆவியை பெற்றுக்கொள்ள வேண்டும் என இந்த ஒலிவமலையில் வைத்து கூறினார் (அப்.1:5, 8). இவைகளை கூறியபின்னர் தமது கைகளை உயர்த்தி அவர்களை ஆசீர்வதித்தார் (லூக்.24:50, 51). அதன் பிறகு அவர்கள் எல்லோரும் பார்த்துக் கொண்டிருக்கும் போது, ஒரு மேகம் அவரை எடுத்துக் கொண்டது (அப்.1:9). சீஷர்கள் எல்லோரும் பரிசுத்தாவியை பெற்றுக் கொள்ளும்படி ஒலிவமலையிலிருந்து எருசலேமுக்கு திரும்பி சென்றார்கள் (அப்.1:12).

## உயிர்த்தெழுந்த இயேசு செய்த ஊழியங்கள் (The Ministries of Resurrected Jesus)

1. அழுதுக் கொண்டிருந்த மரியாளின் கண்ணீரை துடைத்தார் (யோவா.20:11-18)
2. ஏமாற்றத்தோடிருந்த பெண்களுக்கு ஆறுதல் அளித்தார் (மத்.28:1-10)
3. எம்மாவு சீடர்களின் அவநம்பிக்கையை அகற்றி, வசனத்தில் அவர்களை உறுதிப்படுத்தினார் (லூக்.24:13-35)
4. பயந்து போயிருந்த சீஷர்களின் பயத்தை போக்கி அவர்களோடு ஆகாரம் புசித்தார் (லூக்.24:36-48; யோவா.20:19).
5. அவிசுவாசியாயிருந்த தோமாவை விசுவாசத்தில் உறுதிப் படுத்தினார் (யோவா.20:26-27)

6. பேதுருவுக்கு ஒரு அற்புதத்தை செய்து ஊழியத்தின் பொறுப்பை அளித்தார் (யோவா.21:1-17).
7. பசியாயிருந்த சீஷர்களுக்கு உணவளித்தார் (யோவா.21:5-13).
8. உலகமெங்கும் போய் எல்லாரையும் சீஷராக்குங்கள் என்ற புதிய கட்டளையை எல்லா சீஷருக்கும் கொடுத்தார் (மத்.28:19, 20).
9. தனிப்பட்ட முறையில் சிலரை சந்தித்து அவர்களை பெலப்படுத்தினார் (I கொரி.15:5, 7).
10. பரிசுத்தாவியை பெற்றுக் கொள்ளும்படி எருசலேமில் காத்திருங்கள் என்று அவர்களை உற்சாகப்படுத்தினார் (அப்.1:4-8).
11. தம்முடைய கைகளை உயர்த்தி அவர்களை ஆசீர்வதித்தார் (லூக்.24:50).

## உயிர்த்தெழுந்த சரீரத்தின் தன்மைகள்
## (The Characteristics of the Resurrected body)

1. மாம்சமும் எலும்பும் உள்ள, தொட்டு உணரத்தக்க சரீரம் (லூக். 24:39)
2. போஜனம் சாப்பிட வல்ல சரீரம் (லூக்.24:41-43)
3. முகமுகமாய் பார்த்து பேசவல்ல சரீரம் (யோவா.20:19)
4. எங்கேயும் எப்போதும் பயணம் செய்யத்தக்க சரீரம் (யோவா.20:17-19)
5. பார்த்து புரிந்துக்கொள்ளக்கூடிய சரீரம் (யோவா.20:16; மத்.17:3)
6. வானத்துக்குரிய சரீரம் (I கொரி.15:40)
7. அழிவில்லா அல்லது மரணம் இல்லாத சரீரம் (I கொரி.15:42; ரோம.6:9)
8. மகிமையான சரீரம் (I கொரி.15:43)
9. பலமுள்ள சரீரம் (I கொரி.15:43)
10. ஆவிக்குரிய சரீரம் (I கொரி.15:44)
11. பாவம் நுழைய முடியாத சரீரம் (ரோம.6:10)
12. கிறிஸ்துவின் சாயலுக்கொத்த சரீரம் (I கொரி.15:49)

இப்படிப்பட்ட தன்மைகளோடு உள்ள ஒரு மகிமையான சரீரம் நமக்கும் ஒருநாளில் தேவன் தந்தருளுவார் என்பதை நினைக்கும் போது நமது உள்ளம் மகிழுகிறதல்லவா?

## உயிர்த்தெழுதலின் முக்கியத்துவம் (The Importance of the Resurrection)

1. இயேசுவின் உயிர்த்தெழுதல் கிறிஸ்தவத்தின் அஸ்திபார உபதேசமாயிற்று (I கொரி.15:12-19).
2. நமக்கு இரட்சிப்பு ஏற்பட்டது (ரோம.5:8-10; அப்.4:12; I பேது.2:4; 3:21).
3. கிறிஸ்துவின் தெய்வீகம் உறுதிப்படுத்தப்பட்டது (ரோம.1:4,5)
4. கிறிஸ்து நமது ஒரே பிரதான ஆசாரியரானார் (எபி.4:15; I தீமோ.2:5, 6; ரோம.8:34; I யோ.2:1).
5. பரிசுத்தாவியானவர் அருளப்படுவதற்கு காரணமாயிற்று (யோவா.16:7; அப்.2:33).
6. மரித்தோரின் உயிர்த்தெழுதல் உறுதிப்படுத்தப்பட்டது (I கொரி.15:17-23).
7. நியாயத்தீர்ப்பு உறுதியானது (அப்.10:42; 17:31; யோவா.5:22).
8. தீர்க்கதரிசன வார்த்தைகள் நிறைவேறியது (I கொரி.15:3, 4, 14)
9. பரலோகத்தில் நமக்கு ஒரு இடம் கிடைத்தது (யோவா.14:1-3; வெளி.21:10-27).
10. கிறிஸ்துவின் இரண்டாவது வருகை உறுதிப்படுத்தப்பட்டது (I தெச.4:14-17; எபி.10:37; அப்.1:11; வெளி.22:7,12,20).

## இயேசுகிறிஸ்துவின் இரண்டாவது வருகை (The Second coming of Jesus Christ)

ஒலிவமலையில் வைத்து இயேசு சீஷர்களை ஆசீர்வதித்தவுடன் ஒரு மேகம் அவரை எடுத்துக்கொண்டது. அவர் எல்லோருக்கும் முன்பாக பரமேறினார். அவர் போகிறபோது அவர்கள் வானத்தை அண்ணாந்து பார்த்துக்கொண்டிருக்கையில், வெண் வஸ்திரம் தரித்த இரண்டு பேர் அவர்கள் அருகில் வந்து:

கலிலேயராகிய மனுஷரே, நீங்கள் ஏன் வானத்தை அண்ணாந்து பார்த்து நிற்கிறீர்கள்? உங்களிடத்தினின்று வானத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப் போனாரோ, அப்படியே மறுபடியும் வருவார் என்றார்கள் (அப்.1:9-11).

இயேசு கிறிஸ்து மறுபடியும் தம்முடையவர்களை சேர்த்துக் கொள்ளும் படி மீண்டும் வருவார் என்பதற்கு பல சாட்சிகள் உள்ளன. அவற்றில் சிலவற்றை கீழே காணலாம்.

1. பழைய ஏற்பாட்டு தீர்கதரிசனங்கள் (ஏசா.32:1; தானி.7:9; சகரி.14:5, 9; மல்கி.3:2; யூதா.14, 15).
2. இயேசுவே கூறியுள்ளார் (யோவா.14:1-3; வெளி.1:18; 22:7, 12, 20).
3. தூதர்கள் அறிவித்தார்கள் (அப்.1:11).
4. அப்போஸ்தலர்கள் கூறியுள்ளார்கள் (I தெச.4:14-18; யாக்.5:8; II பேது.3:9,10; I யோவா.3:2).
5. வேத வசனங்கள் சாட்சியிடுகிறது. புதிய ஏற்பாட்டில் மட்டுமே ஏறக்குறை 318 முறை அவர் வருவார் என கூறப்பட்டுள்ளது.
6. கர்த்தருடைய பந்தி சாட்சியாயிருக்கிறது. நாம் ஆசரித்து வருகிற, சபையின் ஒரு சடங்காயிருக்கிற திருவிருந்து, இயேசுவின் வருகையை எடுத்துக் கூறுகிறது (I கொரி.11:26).
7. நம்முடைய மகிமையின் நம்பிக்கை சாட்சியாயிருக்கிறது. உலகமெங்கிலும் உள்ள கோடான கோடி விசுவாசிகளோடு நாமும் அவருடைய வருகையை எதிர்நோக்கி காத்திருந்து, அந்த வருகைக்கு சாட்சிகளாய் இருக்கிறோம் (தீத்.2:13; ரோம.8:23).

**ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும் (வெளி.22:20).**

■■■



# அத்தியாயம் - 13

# உயிர்த்தெழுதலைக்குறித்த தவறான கொள்கைகள்

# (False Theories about the Resurrection)

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து மரணத்தை வென்று, உயிர்த்தெழுந்தார் என சென்ற அத்தியாயத்தில் மிகவும் தெளிவாக ஆதாரங்களோடு கற்றுக் கொண்டோம். ஆனால் சில வேதபுரட்டர்கள் அவர் உயிர்த்தெழவில்லை எனவும் வேறு சில வேதபுரட்டர்கள் அவர் மரிக்கவே இல்லை எனவும் கூறுகிறார்கள். அவற்றையெல்லாம் என்னால் எழுத முடியாது; ஆனாலும் சில வேதபுரட்டர்களின் கொள்கைகளை இங்கே எழுதியுள்ளேன். இந்த அத்தியாயத்தின் நோக்கமே அவர்களின் தவறான உபதேசங்களை அடையாளம் கண்டுக்கொண்டு நம்மை ஆரோக்கியமான உபதேசத்தில் நிலைநிறுத்துவதேயாகும். சரி, வாங்க, நாம் அவர்களுடைய வேடிக்கையான கருத்துக்களை கீழே பார்க்கலாம்.

## 1. தவறான கல்லறைக்கொள்கை [Wrong Tomb Theory]

கிறிஸ்சோப் லேக் (Kirsopp Lake) என்பவரால் இந்த கொள்கை உருவாக்கப்பட்டது. இந்த கொள்கை கூறுவது என்னவெனில்: ஸ்திரீகள் அதிகாலையில் இருள்சூழ்ந்த நேரத்தில்

வந்திருந்தபடியால், இயேசுவின் கல்லறையை சரியாக அடையாளம் காணமுடியாமல் தவறாக வேறு கல்லறைக்கு போய் இயேசுவை தேடினார்கள் என்பதாகும். அவ்வாறு அவர்கள் தவறான கல்லறையில் தேடினப்படியால் தான் ஒரு வாலிபன் வந்து அவர்களிடம்: அவர் இங்கேயில்லை (இந்த கல்லறையில் அல்ல), அவரை வைத்த இடத்தை வந்து பாருங்கள் (அவர் வைக்கப்பட்ட கல்லறையில் தேடுங்கள்) என்றான்.

நமது பதில்

மேற்கூறப்பட்ட கொள்கையை படிப்பதற்கே வேடிக்கையாக இருக்கிறதல்லவா? ஸ்திரீகள் அதிகாலையில் சரியான கல்லறையில் தான் போயிருந்தார்கள். ஏனெனில் அவரை அடக்கம் பண்ணும்போது அவர்களும் கூட இருந்து, அந்த கல்லறையை நன்றாக நினைவில் வைத்திருந்தனர் (மாற்.15:47; லூக்.23:55, 56). மேலும் ஸ்திரீகளால் அறிவிக்கப்பட்ட பிறகு, பேதுருவும் யோவானும் சூரிய உதயத்திற்கு பிறகு இயேசுவின் கல்லறையில் வந்து சுருட்டப்பட்ட சீலைகளையும் பார்த்தார்கள் (யோவா.20:3-8). தவறான கல்லறையென்றால் சுருட்டப்பட்ட சீலைகள் போடப்பட்டிருக்குமா? மேலும் தவறான கல்லறையில் போய் தேடிவிட்டு அவர் உயிர்த்தெழுந்தார் என கூறியிருந்தால், அன்றைய ரோம அரசாங்கமும் யூத மத தலைவர்களும் சேர்ந்து சரியான கல்லறையில் போய் இயேசுவின் சரீரத்தை காண்பித்து விட்டு, சீஷர்களுக்கு தண்டனையையும் அளித்திருப்பார்களே! ஏன் அவர்களால் தண்டனையளிக்க கூடாமல்போனது?

மேலும் வாலிபனுடைய ரூபத்தில் வந்த தூதன் அவர்களிடம்: அவர் இங்கே இல்லை, தாம் சொன்னப்படியே உயிர்த்தெழுந்தார் என கூறிவிட்டு, அவரை வைத்த இடத்தை வந்து பாருங்கள் என்று தெளிவாக கூறினான். அதை அந்த பெண்கள் சரியாக புரிந்துக் கொண்டபடியால் தான், வேறு கல்லறைக்கு போகாமல் உயிர்த்தெழுந்த செய்தியை சீஷருக்கு அறிவித்தார்கள். உடனே சீஷர்களும் ஓடிவந்து அவர் வைத்த இடத்திலிருந்த சீலைகளைப் பார்த்தார்கள்; சீஷர்களும் சரியான கல்லறையில் தான் வந்தார்கள். பிறகு அவர்கள் அனைவரும் உயிர்த்தெழுந்த இயேசுவை கண்ணார கண்டார்கள். அல்லேலூயா! (மத்.28:1-9).

## 2. திருட்டு (அல்லது) ஏமாற்றுக் கொள்கை [Theft (or) Fraud Theory]

இந்த கொள்கைக்கு சொந்தகாரனான J.N.D. ஆண்டர்சன் என்பவன் தமது புத்தகத்தில்: காவலாளர்கள் தூங்கிக் கொண்டிருந்தபோது, சீஷர்கள் வந்து இயேசுவின் சரீரத்தை திருடி விட்டு, அவர் உயிரோடிருப்பதாக ஏமாற்றுகிறார்கள் என்று கூறியுள்ளான்.

நமது பதில்

- இயேசுவை பிடித்தவுடனே பயந்து ஓடி போன சீஷர்களுக்கு, திரும்பி வந்து திருடும் தைரியம் எப்போது வந்தது? (யோவா.20:19).

- அவ்வாறு திருடியிருந்தால், "நீங்கள் கொலை செய்த இயேசுவை தேவன் எழுப்பினார்" என எப்படி தைரியமாக பிரசங்கித்திருக்க முடியும்? (அப்.3:15).

- திருடர்களின் பிரசங்கத்தை கேட்டு தான் யூதர்கள், ஆசாரியர்கள் உட்பட ஆயிரக்கணக்கானோர் இயேசுவை விசுவாசித்து சபையோடு சேர்க்கப்பட்டார்களா? (அப்.2:41; 4:4; 6:7).

- காவலாளர்கள் தூங்கினார்கள் என்றால், சீஷர்கள் தான் திருடினார்கள் என எப்படி கூறமுடியும்? (மத்.28:3, 11-13).

- கல்லறையின் மேல் மூடப்பட்டிருந்த மிகபெரிய கல்லை நகர்த்தும் போது வந்த சத்தத்தினால் கூட காவலாளர்கள் எழும்பவில்லையா? (மத்.28:2).

- அவ்வாறு திருடியிருப்பார்களென்றால் கூட, அவரது சரீரத்தில் சுற்றப்பட்டிருந்த சீலைகளை நிதானமாக பிரித்து, மடித்து வைத்துவிட்டு போனார்களோ? அவ்வாறு பிரிப்பது மிகவும் கடினம். ஏனென்றால் யூத முறையின் படியே அவரது சரீரத்தை அடக்கம் செய்யும் போது ஒட்டுகிற பசைபோன்ற வெள்ளைப்போளம் அதிகமாக பயன்படுத்தப்பட்டது (யோவா.20:5-8). பிரித்திருந்தாலும் ஒரு நாள் தேவைப்பட்டிருக்குமே? சரீரத்தை எடுத்துக் கொண்டு ஓடாமல், சீலையை பிரித்துக் கொண்டு இருந்தார்களோ? இந்த கொள்கை எவ்வளவு முட்டாள் தனமானது என்பதை பாருங்கள்!

✹ சீஷர்கள் திருடவில்லை என்றும், தேவதூதன் தான் கல்லை புரட்டிப் போட்டான் என்றும், கண்களால் பார்த்த காவலாளர்கள் போய் பிரதான ஆசாரியருக்கு சொன்னபோது, அவர்கள் பணம் கொடுத்து, சீஷர்கள் திருடியதாக பொய் சொல்ல கூறினார்கள் (மத்.28:11-14).

✹ பணம் கொடுத்து பொய் சொல்ல சொன்ன காரியம், அங்குள்ள பெரும்பாலான யூதர்களும் அறிந்திருந்தார்கள் (மத்.28:15).

## 3. மாயக்காட்சி கொள்கை (Hallucination Theory)

இயேசு எப்படியாவது உயிரோடு வருவார் என சீஷர்கள் மிகுந்த வாஞ்சையோடு எதிர்பார்த்திருந்தனர். அந்த எதிர்பார்ப்பு அவர்கள் எண்ணங்களுக்குள்ளாக சென்றபடியால், கற்பனையில் இயேசு உயிர்த்தெழுந்ததை தரிசித்தார்கள் என்பதே இந்த கொள்கையாகும்.

நமது பதில்

✹ இயேசு உயிரோடு வருவார் என்ற நம்பிக்கை சீஷர்களிடம் சிறிதளவும் இருக்கவில்லை; இருந்த கொஞ்சம் நம்பிக்கையையும் இழந்து போயிருந்தார்கள் என்பது தான் உண்மை (லூக்.24:21).

✹ காலியான கல்லறைக்குள் போய் பார்த்தபிறகு கூட அவர்கள் அதை நம்பவில்லை (யோவானை தவிர) (மாற்.16:13; லூக்.24:11, 25, 41; யோவா.20:25).

✹ கற்பனையில் வந்து போகிற ஒருவரை தொட்டு பார்க்க முடியுமா? ஆனால் சீஷர்கள் இயேசுவை தொட்டு விசுவாசித்தார்கள் (யோவா.20:27; மத்.28:9).

✹ சீஷர்களோடு இயேசு நடந்து சென்றார் (லூக்.24:15) அவர்களோடு ஆகாரம் புசித்தார் (லூக்.24:30, 41-43).

✹ எந்தவொரு கற்பனைக்கும் எல்லை உண்டு. அவைகளை போய் பிறரிடம் ஆதாரமாக சொல்லமுடியாது. அதையும் மீறி சொன்னால் ஓட ஓட விரட்டுவார்கள்! ஆனால் சீஷர்கள் கண்ணார கண்டவைகளையும், தொட்டு பார்த்த இயேசுவையும் பிறருக்கு பிரசங்கித்தார்கள் (அப்.2:24; 3:15; I யோவா.1:1).

✸ அப்படியே கற்பனையென்றால் கூட 500 பேருக்கும் அதிகமானோர் ஒரே சொப்பனத்தை பார்த்தார்களா என்ன? (I கொரி.15:6). அப்படியென்றால் உலக வரலாற்றில் அவர்கள் இடம் பிடித்திருப்பார்களே?

## 4. மயக்கமடைதல் கொள்கை (Swoon Theory)

இயேசு சிலுவையில் மரிக்கவில்லை; அவர் அதிகமாக அடிக்கப்பட்டதாலும், அதிகமான இரத்தம் சிந்தியிருந்தபடியாலும் மயக்கமடைந்திருந்தார். அதை சீஷர்கள் தவறாக புரிந்துக் கொண்டு அடக்கம் செய்தார்கள். அதன்பிறகு கல்லறை மிகவும் குளிர்ச்சியாய் இருந்தப்படியால், மயக்கம் தெளிந்து எழுந்து வந்தார். அதை சீஷர்கள் உயிர்த்தெழுதல் என நம்பினார்கள் என்று இந்த கொள்கை கூறுகிறது. இந்த கொள்கையை பிரபலமடைய செய்தவர் வென்டூரினி (Venturini) என்பவர் ஆவர்.

**நமது பதில்**

✸ இயேசுவின் மரணத்தை நூற்றுக்கதிபதியும் பிலாத்துவும் உறுதி செய்திருந்தனர் (யோவா.19:32-34, 38).

✸ அவருடைய சரீரத்துக்கு ஒட்டக்கூடிய வாசனை திரவியங்கள் போடப்பட்டு, சீலைகளினால் சுற்றப்பட்டிருந்த காரணத்தினால், பலவான்களாலே கூட பிரிக்க கூடாததாயிருந்தது. அவ்வாறு இருக்கும் போது மயக்கநிலையில் இருப்பவரால் எப்படி இதை பிரிக்க முடிந்தது? துணியின் வெளியே இருப்பவர்களால் கூட முடியாத ஒன்றை, துணியின் உள்ளே இருப்பவரால் செய்ய முடிந்ததா?

✸ இயேசு அதிகமான இரத்தத்தை இழந்தப்படியால் மயக்க நிலைக்கு செல்லவில்லை; மாறாக கடைசி சொட்டு இரத்தத்தையும் சிந்தி மரித்தார் என்பதே உண்மையாகும்.

✸ மயக்கமடைந்த ஒருவர் எழுந்தவுடன், சோர்பாக தானே இருப்பது வழக்கம்? அப்படியிருக்கும் போது 1500 முதல் 2000 கிலோ எடையுள்ள கல்லை எவ்வாறு தள்ளி திறந்திருப்பார்?

✸ அவ்வாறு தள்ளி திறந்திருந்தாலும் கூட, சீஷர்களிடம் தனது இயலாமையை கூறியிருக்க வேண்டும் அல்லவா? அவர்களிடம் கூறாமல், எம்மாவு வரை சுமார் 12 கிலோ மீட்டர் நடந்து செல்ல எப்படி பெலன் வந்தது?

✸ ஆனால் உண்மையிலே அவர் சோர்புடையவராக இருக்கவில்லை. பல இடங்களில் சென்று அநேகரை பெலப்படுத்தினாரே!

**காஷ்மீரில் இயேசுவின் கல்லறையா?**

மயக்கமடைதல் கொள்கையை பின்பற்றுவோர் கிளப்பிவிட்ட இன்னொரு புரளி என்னவென்றால்: இயேசு இளைப்படைந்த நிலையில் கல்லறையிலிருந்து வெளியே வந்தவுடன், மறுபடியும் தம்மை கொலை செய்துவிடுவார்களோ என்று பயந்து, அங்கிருந்து தப்பியோடி இந்தியாவின் இமயமலை பகுதியில் வாழ்ந்து வந்தார் எனவும், பின்னர் அங்கேயே மரித்து காஷ்மீரில் அடக்கம் பண்ணப்பட்டார் என்றும் கூறுகிறார்கள்.

காஷ்மீரில் இருப்பது இயேசுவின் கல்லறை தான் என ஒரு சுற்றுலா வழிகாட்டி கிளப்பிய புரளியால், மேற்கத்திய நாடுகளை சேர்ந்த சுற்றுலா பயணிகள் வந்து குவியத்தொடங்கினார்கள். காஷ்மீரில் இருக்கும் "யூஸா ஆசா.ஃ.ப்" என்பவரின் ரோஸபல் (Rozabal) என்ற அந்த புனிதஸ்தலம் தற்போது யாரும் வரக்கூடாது என்று தடைசெய்யப்பட்டுள்ளது. ஏனெனில் அங்கு வருபவர்கள், அந்த சமாதியில் எஞ்சியிருப்பதை எடுத்து DNA சோதனை செய்ய விரும்பினார்கள். அங்கிருக்கும் எலும்புகளை எடுத்து கார்பன் தேதி குறிப்பீடு செய்யவும் கோரிக்கை விடுத்தார்கள்.

ஆனால் ரியூட்டர்ஸ் (Reuters) என்ற செய்தி நிறுவனத்துக்கு முகமது அமின் நிங்ஷால் என்பவர் கூறும்போது: நாங்கள் அப்படிப்பட்ட வேண்டுதலை நிராகரித்து விட்டோம் என்றார். மேலும் இப்படி ரோஸபல் சமாதியை, இயேசுவின் கல்லறை என்று அழைக்கும் வெளிநாட்டினரின் செயல்பாடுகள் இஸ்லாமியர்களின் புனித உணர்வுகளை புண்படுத்துகின்றன. எனவே இந்த தொந்தரவுகளை எல்லாம் தவிர்க்கவே நாங்கள் இந்த ஸ்தலத்தை பூட்டிவிட்டோம் என்றார்.

1973-ம் வருடம் ஒரு உள்ளூர் பத்திரிக்கையாளரான அஸிஸ் காஷ்மீரி என்பவர் கிறிஸ்து சிலுவையில் உயிர்பிழைத்து காஷ்மீருக்கு வந்தார் எனவும், பின்னர் அங்கேயே புதைக்கப்பட்டார் எனவும் வாதம் செய்தார். அவருடைய புத்தகத்தில்: "யூஸா ஆஸா.ஃ.ப்" என்பவர் இஸ்ரவேலிலிருந்து வந்த ஒரு தூதுவர் எனவும் தனது

கொள்கைகளை பரப்பும்படி வந்து, அங்கேயே மரித்தார் எனவும் கூறியுள்ளார். யூஸா ஆசா.ஃ.ப் என்பவர் தான் ஈசா என்னும் இயேசு எனவும், யூஸா ஆசா.ஃ.ப் என்றால் குணமாக்குகிற போதகர் என்றும் அர்த்தம் என்கிறார்.

இது வேதத்துக்கு முரண்பாடாக உள்ளது. இயேசு என்றால் ஜனங்களை பாவத்திலிருந்து விடுதலையாக்கி இரட்சிப்பவர் என்று பொருள். மேலும் சிலுவையில் மரித்து உயிர்த்தெழுந்த பின்பு, 40 நாட்கள் வரை இஸ்ரவேலிலே அநேகருக்கு தம்மை வெளிப்படுத்தினார் எனவும், திரள்கூட்டமான ஜனங்களுக்கு முன்பாக அவர் வானத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டார் எனவும் காண்கிறோம் (அப்.1:9-11).

உள்ளூர் வாசிகளான இஸ்லாமியர்களிடம் விசாரித்தப்போது ரோஸபல் என்னும் புனிதஸ்தலமானது உண்மையிலே சில நூற்றாண்டுகளுக்கு முன்பு ஸ்ரீநகருக்கு வந்த இரண்டு புகழ்பெற்ற இஸ்லாமியர்களாகிய யூஸா ஆஸா.ஃ.ப் (Youza Asaf) மற்றும் சையத் நஸீர் உத்தின் (Syed Naseer ud din) என்பவர்களின் கல்லறையையே என உறுதியாய் கூறுகிறார்கள். சில நூற்றாண்டுகள் எங்கே? 2000 வருடங்கள் எங்கே? நாளைக்கு வேறொரு முட்டாள் வந்து சுற்றுலா பயணிகளை இழுக்கும்படி, தாஜ்மகாலில் தான் முகமது நபி புதைக்கப்பட்டார் என்றோ, இயேசுவின் கல்லறை எகிப்தின் பிரமிடு தான் என்று புரளியை கிளப்பினாலும் ஆச்சரியமில்லை.

இயேசுவின் மரணத்தை ரோம அரசாங்கம் உறுதி செய்திருந்தது குறிப்பிடதக்கதாகும். அவரது உயிர்த்தெழுதலைக்கூட கண்ணால் கண்ட அநேக சாட்சிகள் உள்ளனர். மரித்தேன், ஆனாலும், இதோ சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன் என்று இயேசு சொன்னார். ஆகவே இயேசுவின் கல்லறை இன்றைக்கும் எருசலேமில் திறக்கப்பட்ட நிலையிலே உள்ளது என்பதையும் நாம் அறிந்துக் கொள்ள வேண்டும்.

## 5. இஸ்லாமியர்களின் கொள்கை [Theory of Islam]

இஸ்லாமியர்கள் கூறுவது என்னவென்றால்: இயேசுவுக்கு பதிலாக யூதாஸ் தான் சிலுவையில் அறையப்பட்டார் என்பதாகும்.

நமது பதில்

கிறிஸ்தவம் முதல் நூற்றாண்டில் தோன்றியது. ஆனால் இஸ்லாம் கி.பி.ஏழாம் நூற்றாண்டில் தான் தோன்றியது. இயேசு இந்த உலகில் பிறந்து 600 ஆண்டுகளுக்கு பிறகு பிறந்த முகமது இயேசுவை பார்த்திராதவர். அப்படியிருக்க இயேசு சிலுவையில் அறையப்படவில்லை என எவ்வாறு கூறமுடியும்? இயேசுவுக்கு பதிலாக வேறொருவர் சிலுவையில் அறையப்பட்டார் என்பதிலேயே இஸ்லாமியர்களுக்குள் பல மாறுபட்ட கருத்துக்கள் உள்ளன. அவைகளாவன:

(i) இயேசுவுக்கு பதிலாக யூதாஸ்காரியோத்தை சிலுவையில் அறைந்தார்கள்

(ii) இயேசுவுக்கு பதிலாக ஆடுமேய்த்தவனை சிலுவையில் அறைந்தார்கள்

(iii) இயேசுவுக்கு பதிலாக ஒரு தோட்டக்காரனை சிலுவையில் அறைந்தார்கள்

(iv) இயேசுவுக்கு பதிலாக அவரது அறையில் தங்கியிருந்த வேறொருவனை சிலுவையில் அறைந்தார்கள்.

இயேசுவுக்கு பதிலாக சிலுவையில் அறையப்பட்டவன் யார் என்பதிலே அவர்களுக்குள் ஒருமித்த கருத்து இல்லை என்பது குறிப்பிடதக்கதாகும்.

இயேசுவுக்கு பதிலாக யூதாஸ் தான் அறையப்பட்டார் என ஒரு வாதத்துக்கு எடுத்துக் கொண்டால் கூட, சிலுவையில் அறையப்படும் போது, "நான் இயேசு அல்ல" என கூறியிருப்பான் அல்லவா? மேலும் பிதாவே இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே என கூறியிருக்கமாட்டான் அல்லவா? சிலுவையில் இருந்து சொல்லப்பட்ட ஏழு வார்த்தைகளிலுமிருந்து அதை கூறியவர் இயேசுதான் என மிக தெளிவாக அறிந்துக்கொள்ள முடிகிறதல்லவா?


கி.பி.4-வது நூற்றாண்டில் ரோம சாம்ராஜ்யம் விழுந்தப்போது, பிலாத்து திபேரியு ராயனுக்கு எழுதிய கடிதம் கண்டெடுக்கப்பட்டது. அந்த கடிதத்தில் இயேசுவை சிலுவையில் அறைந்த நாளில் நடந்த அத்தனை நிகழ்வுகளும் குறிப்பிடப்பட்டிருந்தது. இரக்கமே இல்லாமல்

இயேசு தண்டிக்கப்பட்டார் என்றும், அவரோடு கூட இரண்டு கள்ளர்கள் திஸ்மாஸ் மற்றும் கெஸ்டாஸ் என்பவர்களும் சிலுவையில் அறையப்பட்டனர் எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது. இந்த கடிதத்தை குறித்து கி.பி.150-ல் வாழ்ந்த ஜஸ்டின் மார்டர் என்பவரும் கி.பி.220-ல் வாழ்ந்த தெர்துல்லியன் என்பவர்களும் கூட எழுதியுள்ளார்கள். ஆகவே இது முதல் நூற்றாண்டில் பிலாத்துவினால் எழுதப்பட்ட கடிதம் தான் என்பதையும் யாராலும் மறுக்க முடியாது.

அதுமட்டுமல்ல, இயேசு சிலுவையில் அறையப்படுவதற்கு முன்னரே யூதாஸ் தற்கொலை செய்துக் கொண்டான் என வேதம் தெளிவாக கூறுகிறது. யூத வரலாற்றிலும் அது பதிவாகியுள்ளது. ஆகவே இயேசுவே சிலுவையில் அறையப்பட்டார், அவரே உயிர்த்தெழுந்தார், அவரே மீண்டும் வரப்போகிறார். அல்லேலூயா!

**ஆமென், கர்த்தராகிய இயேசுவே வாரும் (வெளி.22:20).**

■■■



# BIBLIOGRAPHY


1. Answer to tough Questions -*Josh McDowell & Don Stewart*
2. Evidence that demands a verdict -*Josh McDowell*
3. Fifty Reasons why Jesus Came to die -*John Piper*
4. One Hundred Bible lessons -*Alban Douglas*
5. Peoples of the New Testament world -*William A. Simmons*
6. South Asia Bible Commentary -*Brian Wintle*
7. The Expositor's Study Bible - *Jimmy Swaggart*
8. The Holy Bible
9. The Resurrection factor -*Josh McDowell*
10. Willmington's Guide to the Bible -*H.L. Willmington*

## குறிப்புகள்

## குறிப்புகள்

# THE DEATH AND RESURRECTION OF JESUS CHRIST

SELVIN JINI

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் ஊழியத்தின் கடைசி நான்கு நாட்களும் நடந்த அத்தனை நிகழ்வுகளையும் ஆசிரியர் தொகுத்து வழங்கியுள்ளார். மேல்வீட்டறையில் நடந்த பஸ்கா முதல் இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் வரை நடந்த சம்பவங்கள் அனைத்தும் ஆழமாகவும் எல்லாராலும் புரிந்துக் கொள்ளும் வகையிலும் எளியநடையில் எழுதப்பட்டுள்ளது.

- யார் இந்த மாற்கு
- யார் இந்த ஏரோது
- யார் இந்த அன்னா
- யார் இந்த பரபாஸ்
- யார் இந்த பிலாத்து
- யார் இந்த காய்பா
- யார் இந்த நிக்கொதேமு
- யார் இந்த யூதாஸ்காரியோத்து
- யார் இந்த சிரேனா ஊர் சீமோன்
- யார் இந்த அரிமத்தியா ஊர் யோசேப்பு

போன்ற பலவிதமான தொகுப்புகளும் இப்புத்தகத்தில் அடங்கியுள்ளன. இயேசு கிறிஸ்துவை குறித்து மேலும் அறிய விரும்புகிறவர்களுக்கும், வேத அறிவை பெருக்கிக்கொள்ள விரும்பும் மாணவர்களுக்கும் இப்புத்தகம் பாதுக்காக்கப்படவேண்டிய ஒரு அரிய பொக்கிஷமாக உள்ளது.



The Word of Truth Publication
Bangalore INDIA
+91 9448928667
Rev. C. Selvin Jini
selvinjinioffice@gmail.com